தெய்வீகக் காதல்

(நாரத பக்தி சூத்திரங்கள்)

குருதேவர் சிவானந்தருக்கு இணங்கியது

ஆக்கியோர் :

சிவபாத ரேணு

சுவாமி வெங்கடேசானந்தர்

தமிழாக்கம் :

கிருபானந்தா

வெளியிட்டோர் :

யோக வேதாந்த ஆரண்ய கலா நிலையம்,

ஆனந்த குடீர்,

சிவானந்த நகர், ரிஷீகேசம்,

இமயம்.

விலை] 1963. [ரூபாய் 2.

யோக வேதாந்த ஆரண்ய கலா நிலையத்தின் சார்பாக
சுவாமி கிருஷ்ணனந்தரால்
வெளியிடப்பெற்றது.

முதற் பதிப்பு: 1963.

மொழிபெயர்த்தவரின் நன்கொடையைக் கொண்டு
வெளியிடப்பெற்றது.

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.

தெய்வீகக் காதல்

—☀—

இறைவா ! உன் பாதத்திற்கு ஒரு மலர்

1960-ஆவது வருஷத் துவக்கத்தில் குரு தேவரின் சிறந்த பக்தர்களான ஸ்ரீ சங்கரானந்தரும் ஸ்ரீசுவாமி நாராயணுனந்தரும் இன்னும் தென்னுப்பிரிக்காவி லுள்ள சில அன்பர்களும், யோக வேதாந்த ஆரண்ய கலாசாலையில் 'பக்தியோகம்' கற்றுக்கொள்ள ஆசை கொண்டனர். குரு தேவருடையவும் பூஜ்ய ஸ்ரீ கிருஷ்ணுனந்த மஹராஜ் அவர்களுடையவும் கட்ட ளைக்கு இணங்கி, அவ்வகுப்பில் 'நாரத பக்தி சூத்திரங் கள்' என்னும் அரிய நூலைப்பாட புத்தகமாக எடுத் துக் கொண்டேன்.

அது எனக்குப்புது அனுபவமாக இருந்தது. அங்கே நாங்கள் எல்லோரும் குரு தேவரின் சிடர் களாக, இம் மேன்மையான நூலைக்கற்றுக் கொண் டோம். ஒவ்வொரு சூத்திரமும், குரு தேவ்ரையும், வாழ்க்கையை மாற்றி அமைக்கக்கூடிய அவருடைய போதனைகளையும் எங்கள் மனக்கண் முன்பு நிறுத் தியது. ஏதாவது ஒரு சிக்கலான கருத்து இருந்தால், குரு தேவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில நிகழ்ச்சி கள் அதை நன்ருக விளக்கி உணர்த்துவதற்குப் பயன் பட்டன. நாங்கள் படிக்கும்போது குரு தேவரின் தெய்வீகமும் பிரசித்திபெற்ற வாழ்க்கையும் 'நாரத

பக்தி சூத்திரங்கள்’ மட்டுமல்லாமல், உலகத்தில் முக்கியமான நூல்களினுடைய கருத்துக்களும் மேன்மையான விளக்கங்களாக அமைந்தன. இவ்வனுபவத்திற்குத் தென்னுப்பிரிக்கப் பெரியோர்களுக்கு மிகவும் நன்றியுடையவனுய் இருக்கிறேன்.

நான் பேசும்போது, நான் ஒரு மாணுக்கன் என்பதாகவே உணர்ந்தேன். ஆசிரியருக்குப்பதிலாக, குரு தேவரின் உயர்ந்த வாழ்க்கையும் போதனைகளுமே ஆசிரியராக அமைந்தன.

இந்நூலில் காணும் கருத்து எதுவும் என்னுடையது அல்ல. இங்கே கூறிய ஒவ்வொரு நல்ல கருத்தும் குரு தேவரின் பாதகமலத்திலுள்ள ஒரு தூசு. அவருடைய ஒளிமிக்க பாததூளி நமக்கு வழி காட்டுவதாகுக!



SRI SWAMI SIVANANDA

முன்னுரை

ஓம் நம சிவானந்தாய
ஓம் ஸ்ரீ ஸத்குரு பரமாத்மனே நமः
ஓம் நமோ பகவதே வாஸுதேவாய
நமः பரமரிஷிப்யோ நமः பரதரிஷிப்யः

இப் புத்தகத்தின் பெயரான 'நாரத பக்தி சூத்திரங்கள்' என்பதைப் படிப்பதற்கு முன், அம் மூன்று வார்த்தைகளின் பொருளை ஆராய்வோம்.

அச்செழுத்து கண்டு பிடிப்பதற்கு முன், அரிய பெரிய நூல்களை வாய்ச்சொற்கள் மூலமாகத்தான் சிடர்களுக்கு குரு உபதேசம் செய்ய வேண்டியதாயிருந்தது. இவைகளை ஓலைச்சுவடிகளில் தான் பதிய வைக்கவும் முடிந்தது. ஒவ்வொரு நூலும் அனேக நாட்கள் கடினமாக உழைத்த பின்புதான் முடிவு பெற்றது. அதனால் குருவும் சிடர்களும் சூத்திரங்களை பயன்படுத்திக் கொண்டனர். நீளமான சொற்பொழிவின் சாரம் குறுக்கி அமையப்பெறுவது 'சூத்திரம்.' நினைவில் வைத்துக்கொள்ள இச் சூத்திரங்கள் சுலபமாகவும் இருந்தன. உபதேசம் பெற்றவர்களுக்கு, ஒவ்வொரு சூத்திரமும் அனேக எண்ணங்களையும் கருத்துக்களையும் ஊட்டின. வேத சாஸ்திரங்களின் வெவ்வேறு பிரிவுகளுக்கும் தனித்தனியான சூத்திரங்கள் உண்டு. அவைகளே அப்பிரிவுகளுக்கு மூலாதாரமாகக் கருதப்பட்டன. சூத்திரங்கள் சுருக்கமாகவும் புரிந்து கொள்ள முடியாமலும் இருந்ததால், அவைகளுக்கு விளக்கவுரை தேவையாயிற்று.

பக்தி எனும் வார்த்தை 'பஜ்' என்ற சொல்லிலிருந்து தோன்றியது. இதன் பொருள் 'அன்பாக

இருத்தல்.' 'பக்தி' என்ருல் 'பேரன்பு' அல்லது 'தெய்வீகக் காதல்.' இது எல்லாவற்றிற்கும் பொது. ஒவ்வொருவருக்கும் தன் இதயத்தில் அன்பு உண்டு. யாருக்கு இதயம் உண்டோ அங்கே அன்பும் உறையும். மிகக்கொடுமையானவனும் ஏதாவது ஒரு பொருளிடம், அல்லது மனிதனிடம் அன்பு வைத்திருக்கிருன். இது மனித வர்க்கத்திற்கு மட்டுமல்ல, மிருகங்களுக்கும் செடி கொடிகளுக்கும் உண்டு. சூரிய காந்தியும் தாமரை மலரும் சூரியனிடம் அன்பு கொண்டுள்ளன.

தற்கால மனிதன், புத்தியைவிட இதயத்திற்கு வசமாகிருன் என்பது உண்மையே. உணர்ச்சிகளே, அவன் செய்கைகளைத் தாண்டி ஆட்சி நடத்துகின்றன. அது ஒரு நல்ல அறிகுறிதான். ஏனென்ருல், எவன் உணர்ச்சிக்கு வசமாகிருனே அவன் பக்தியையும் வளர்த்துக் கொள்ளமுடியும். அதனுல்தான் இக்கலியுகத்தில் பக்தியோகமே ஞானஅனுபூதி அடைய சுலபமானதும், துன்பமில்லாததும், நிச்சயமானதுமான ஒரு மார்க்கம் என்று குருதேவர் கூறுகிருர்.

ஆனுல் தற்கால மனிதனுடைய உணர்ச்சிகள், அறிவினுல் அல்லது சுபாவத்தினுல் உந்தித்தள்ளப் படுகின்றன. அதனுல் ஒரு சிறு காற்று அடித்தாலும் அவன் சாய்ந்து விடுவான். அவ்வாறு சாயும்போது, அவன் சாய்கிற பக்கம் சரியா இல்லையா என்று சிந்திக்காமல், உணர்ச்சி எங்கே உந்தித்தள்ளுகிறதோ அவ்வழியிலேதான் இவனும் செல்வான். 'பக்தி' என்பது உணர்ச்சியும் ஆராய்ந்து அறியும் இயல்பும் சேர்ந்தது,

அல்லது அன்பு (தெய்வீகக் காதல்). ஆனால் எல்லா அன்பு (காதலும்) பக்தி ஆகாது. இதைப் பின்பு கவனிப்போம்.

நாரதர்:—ஒரு புத்தகத்தைப் படிக்கத் துவங்குவதற்கு முன், அதன் ஆசிரியர் பெயரைப் பார்ப்பது நல்லது. அப்போது, அப்புத்தகம் நம்பத்தக்கதா? நமக்கு நல்ல வழிகாட்டியாக இருக்குமா? இருக்காதா? என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இல்லை என்றால் ஒரு குருடன் வேறு ஒரு குருடன் வழியே சென்ற நிலை வந்து சேரும்.

நாரதர் பக்தர்களில் சிறந்தவர். எப்போதும் கடவுள் சிந்தனையில் இருப்பவர். பகவன் நாம மகிமையைப்பாடி எல்லோருக்கும் இறைவனிடம் உயர்ந்த பக்தியை ஊட்டி மூவுலகும் திரிகின்றவர். அதனால் பக்திக்குப் பிரமாணம் அவரேயாகும். நாரதரைக் குறித்துத் தெரியவேண்டிய மூன்று கதைகள் உண்டு. அவை 'பக்தியோகம்' கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு சீடனும் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய உட்கருத்துக்கள் நிறைந்தவை.

நல்லோர் இணக்கத்தின் மகிமை:— ஒரு கதை நாரதரின் முற்பிறப்பைக் குறித்தது. அப்போது அவர், மழைக்காலத்தில், ஒரு கிராமத்தில் தங்கின மஹாத்மாக்களுக்குத் தொண்டு செய்த பிராமணரல்லாத விதவையின் மகனாக இருந்தார். இச்சிறுவன், அவர்கள் சம்பாஷணைகளைக் கேட்பதும், அவர்கள் சாப்பிட்டு மிகுந்ததை (உச்சிஷ்டத்தை) உண்பதும் வழக்கம். அவை இவனைத் தூயவனாகச் செய்து, கடவுளைக்

காண்பதற்கு ஒரு பேரவாவையும் உண்டு பண்ணின. ஒரு நாள் நல்ல பாம்பு ஒன்று, இவனுடைய தாயாரான கிழவியைக் கடிக்கவும், அவள் இறந்துவிட்டாள். இச்சிறுவன் சந்தோஷமாக இருந்தான்! நல்லோர் இணக்கத்தின் மகிமை இப்படிப்பட்டது. ஸம்ஸாரத்தில் அவனைக் கட்டுப்படுத்திய ஒரு முடிச்சு கடவுளால் அறுக்கப்பட்டது என்பதை உணர்ந்தான். அம்மகான்கள் கிராமத்தை விட்டுப் போகும்போது, அவர்கள் ஆசியைப் பெறுவதற்காக இச்சிறுவன் அவர்களை அணுகினன். அவர்களும் அவனை ஆசீர்வதித்து 'பக்தி மார்க்கத்தை' உபதேசம் செய்தனர். பிறகு இவனும் தீவிரமாக ஸாதனை செய்தான். கடவுள் அவன் முன்னிலையில் தோன்றி, மறு பிறப்பில் அவன் ஒரு பெரிய பக்தனுகப் பிறப்பான் என்ற வரத்தைக் கொடுத்தார்.

ஒருவருக்கு பக்தி வளர வேண்டுமானல் நல்லோருடைய இணக்கம் இன்றியமையாதது.

பழக்கமும் அனுபவமும்:—நாரதருக்கு ஒரு நாள் மனக் குழப்பம் ஏற்பட்டபோது, ஸநத்குமாரரிடம் சென்று அது நீங்குவதற்கு என்ன வழி என்று கேட்டார். தாம் கற்றறிந்த எல்லா நூல்களையும் சாஸ்திரங்களையும் அவரிடம் சொன்னர். ஸநத்குமாரர் அவரை நோக்கி "இவை எல்லாம் பொருளில்லாத வெறும் வார்த்தைகள்; புத்திக்கு ஒரு சுமை; பிரயோஜனம் இல்லாதவை". என்று கூறி பிரம்ம வித்தையை அவருக்கு உபதேசம் செய்து, அழிவில்லாத வஸ்துவை அறிந்து அனுபவிக்கும்படி கட்டளையிட்டார். நாம் எந்த வழியைத் தேர்ந்தெடுத்தாலும், அதை நடை

முறையில் கொண்டு வந்தால்தான் அந்த லக்ஷியத்தை அடைய முடியும். செயல் முறையில் காட்ட முடியாத எவ்வளவு நல்ல தத்துவமும் பயன்படாது.

சிறந்த பக்தர் :—நாரதரைக் குறித்து வேறு ஒரு கதையும் சொல்வதுண்டு. ஒரு சமயம் இந்த மேன்மையான பக்தருக்கும் "என்னைவிட பக்தியில் சிறந்தவர் எவருமில்லை" என்ற எண்ணம் தோன்றிற்று. அந்தர்யாமியாக இருக்கும் கடவுள் இதை அறிந்து, நாரதரின் மனோகர்வத்தை நீக்க வேண்டுமென்று எண்ணினார். ஒரு நாள் நாரதரைக் கூப்பிட்டு, இல்லறத்தில் ஈடுபட்டிருந்த ஒரு எளியவரின் பெயரைக் குறிப்பிட்டு, "உலகத்திலுள்ள என் பக்தர்களில் பெரியவன் ஒருவன் இருக்கிறான். அவன் க்ஷேமத்தை விசாரித்து வா" என்று சொன்னார். நாரதர் ஏமாற்றமும் தயக்கமும் அடைந்து, என்னை (நாரதரை) விட மேலான அந்தப் புண்ணிய புருஷர் யாராகஇருக்கலாம் என்று நினைத்து இறைவன் கட்டளைப்படி அவ்விடத்திற்குச் சென்றார். ஒரு நாளெல்லாம் அந்த பக்தன் செயல்களை கவனித்தார். அவன் இறைவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டே தூக்கத்தை விட்டு எழுந்து, தூங்கப் போகும் போதும் ஒரு தடவை பகவன் நாமத்தை உச்சரித்தான். பகல் வேளையில் மீதி நேரத்தில், தன் பெற்றோர்க்கும் யஜமானருக்கும் நாராயண பாவத்துடன் பணி செய்வதில் ஈடுபட்டான். நாரதர் இறைவன் உறைவிடம் வந்ததும், அவருடைய வருத்தமான முகக்குறி, தன்னைவிட இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் அந்த பக்தனை இறைவன் மேன்மையாகப் பேசுவதை ஒப்புக்கொள்ள வில்லை என்பதை தெரிவித்தது.

வேறு ஒரு சமயத்தில், இறைவன் நாரதரை அழைத்து அவரிடம் எண்ணெய் நிரம்பின குடமொன்றைக் கொடுத்து அதை லக்ஷ்மி தேவியிடம்கொண்டு கொடுக்கச் சொன்னார். அதில் ஒரு நிபந்தனை வைத்தார். அது என்னவென்றால், எண்ணெய் ஒரு துளிகூட கீழே விழக்கூடாது என்பதாம். பெரிய யோகீச்வரரான நாரதர் அப்படியே கொடுத்து விட்டுத் திரும்பினார். அப்போது ஸ்ரீ நாரயண பகவான் "நாரதரே நீங்கள் அந்தக் குடத்தைத் தூக்கிச் செல்லும்போது எனது நாமத்தை எத்தனை தடவை ஜபம் செய்தீர்கள்?" என்று கேட்டார். நாரதர், தான் செய்த வேலையில் முழுதும் ஈடுபட்டிருந்ததால் இறைவன் நாமத்தை ஒரு தடவைகூடச் சொல்லவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். அப்போது ஸ்ரீமன் நாராயணன் "உன்னுடைய பக்தி நிலை இவ்விதமாக இருந்தால், நாளெல்லாம் உழைத்து தன் பெற்றோருக்கும் யஜமானருக்கும் பணி செய்வதில் ஈடுபட்டிருந்தாலும், என் நாமத்தை நாளொன்றுக்கு இரண்டு தரம் உச்சரிப்பவன் பெரிய பக்தன் அல்லவா?" என்று சொன்னார். நாரதர் இதை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

நாம் எல்லோரும் இறைவன் பொருட்டுத் தன்னலமின்றி ஒவ்வொரு நாளும் நமது கடமைகளைச் செய்வோமாக! அப்படியே கடவுளை நினைத்து, எப்போது முடியுமோ அப்போதும், நாளடைவில் பழக்கத்தின் காரணமாக எப்போதுமே இறைவன் நாமத்தை உச்சரிப்போமாக!

அணிந்துரை

—⁂—

அன்பு பற்றிய அருள் மொழிகளைக் கொண்ட இந்நூல், படிப்பவர்க்குக் கடவுட் பற்றையும் கடவுள் நெறியையும் நல்ல முறையில் எடுத்துக் கூறுவதாகும். முதல் முறையாகப் படிப்பவர் சில இடங்களில் இடர்ப்படுவர்; கருத்தூன்றி மேலும் ஒரு முறை அல்லது இரண்டு முறை படிப்பாராயின் தெளிவு பெறுவர்.

ஆணவம், மலம், மாயை முதலியவற்றால் தலைகால் தெரியாமல் தமக்குத் தாமே அழிவைத் தேடிக் கொள்ளும் மக்களது இருண்ட வாழ்க்கைக்கு இந்நூல் ஒளி விளக்காக விளங்கும் என்று கூறலாம். பயனுள்ள இந் நன்னூலைப் படித்துத் தம் வாழ்க்கையை தூய்மை செய்து கொள்ளுதல் அறிவுடைய மக்கள் கடமையாகும்.

திருவருள் துணை செய்வதாகுக!

(ஒப்.) மா. இராசமாணிக்கம்,
M.A.L.T., M.O.L., Ph.D.
Reader in Tamil University of Madras.
15—6—1963.

PREFACE TO THE TAMIL EDITION

A few weeks ago I witnessed an extraordinary phenomenon: a church-full of people of Madagascar singing



hymns and shedding tears of God-love. For a few minutes I felt I was in India, among the devout devotees of the Lord.

God-Love is universal. That is one reason why our Guru Bhgavan once remarked that through Bhakti and Sankirtan we can unite humanity, better and more easily than through politics or commerce.

The Gospel of God-Love must spread. It is the Lord Himself and our Guru Bhagavan who have inspired Sri S. R. Balakrishnan (Swami Kripananda) to translate this book into Tamil for the benefit of the people of Madras. This silent and inspired devotee of the Lord and our Gurudev is a saint, and his unostentatious service and true humility which avoids the limelight only raise him higher in our esteem. His discipleship of Gurudev is reflected in his dynamism: in addition to his official duties as a Station Master, he has been able to complete this transalation in record time. His munificence has born the cost of the publication, too. It is wonderful to be associated with such saintly people. May God bless him!

Tananarive,
Madagascar.
6th June 1963

VENKATESANANDA.

தெய்வீகக் காதல்

(குருதேவ் சிவானந்தருக்கு இணங்கியது.)

சூத்திரம் 1.

"அதாதோ பக்திம் வ்யாக்யாஸ்யாமஹ:"

கருத்து :—இப்போது பக்தி என்பதை விரித்துரைப்போம்.

முதல் வார்த்தை 'அதா' என்பது மேன்மை பொருந்தியது. 'ஓம்', 'அதா' என்ற இரு சொற்களும் பிரம்மத்தினிடம் உதித்த முதல் சப்தங்கள் எனக் கூறப்படும். அதனுல் இவ்விரண்டு சொற்களும் மேன்மை வாய்ந்தன.

"ஓங்காரச்ச அதசப்தாச்ச
த்வாவிதௌ ப்ரம்மணப் புரா
காந்தம் பித்வா வினிர்யாதௌ
தஸ்மாத் மங்களீகா உபௌ."

அதனுல் 'அதா' என்ற வார்த்தை பொருள் நிறைந்தது. குருதேவர் ஒரு பெரிய உண்மையை உணர்த்த, சிரிப் பூட்டும் ஒரு கதை சொல்வது உண்டு. வயதான விறகு வெட்டி ஒருவன் காட்டில் மரத்தைப் பிளந்து கொண்டிருந்தான். அவ்வழியே சென்ற ஒரு மஹா புருஷர் கிழவனைப் பார்த்து "நண்பனே நீ ஏன் விறகு வெட்டுகிருய்?" என்று கேட்டார். அதற்கு அவன் "சுவாமி! நான் வயிறு பிழைக்க வேண்டும்" என்ருன். "நீ எதற்காக சாப்பிட வேண்டும்" என்று

திரும்பவும் கேட்டார். "சுவாமீ நான் விறகு வெட்ட வேண்டும்", என்று பதிலுரைத்தான். இந்நாட்களில் இதே நிலைமை தான் நமக்கும்.

உயர்ந்த மனிதப் பிறப்பு ஏதோ தற்செயலாக அமைந்ததென்றும், ஓர் சுமை என்றும் நினைத்து குறிக்கோள் ஒன்றுமில்லாமல் வாழுளை வீணுக்கு கின்றோம். "உண்பதும், குடிப்பதும், உறங்குவதுமே யல்லாது, உயர்ந்த நோக்கம் வேறென்றுமில்லையா?" என்று குருதேவர் கடவுளை அறிந்து உணர நம்மை அறை கூவி அழைக்கின்றார். நாமும் அவ்வாறே இந்த 'பக்தி சூத்திரங்களை'க் கற்றுக்கொள்கிறோம்.

'அதா' (இப்போது) என்ற வார்த்தைக்கு ஒரு உட்கருத்தும் உண்டு. இது குருவும் சீடனும் தயாராக இருப்பதைக் குறிக்கின்றது. நாரதர் அனேக நூல்களைப் படித்தும் மூவுலகையும் சுற்றி, இறைவன் பெருமையைப் பாடியும் வருவதனால், 'இப்போது' பக்தி மார்க்கத்தைப் போதிக்கத் தயாராக இருக்கிறார்.

ஒரு முமுக்ஷுவானவன், பக்தியின் ஒளியைப் பெறுவதற்குத் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும். முதலாவதாக இதயமாகிய பாத்திரத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொண்டு தீய ஒழுக்கங்களை விட்டு, நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு இல்லை யென்றால், பிரம்மதேவர் கூறியதை விரோசனன் எவ்வாறு தவறாகப் புரிந்து கொண்டானோ அதைப் போல் கற்றவைகளையும் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடும்.

சாஸ்திரங்களின் ஞானமும், நெறிகளும் கெட்டவர்கள் வசம் வந்து விட்டால், அவை ராவணனுக்கு நேர்ந்ததைப் போல் கெடுதலை விளைவிக்கும்.

எல்லா யோக மார்க்கங்களுக்கும், முக்கிய நிபந்தனைகள் பொதுவானவை. விவேகம், வைராக்யம், ஷட்ஸம்பத்து, (தன்னடக்கமும், மற்ற நற்பழக்கங்களும்) முமுக்ஷுத்வம் (விடுதலைபெற தீவிரமான ஆசை) இவை ஆத்மீகப் பாதையில் செல்லும் ஒவ்வொரு சீடனுக்கும் இன்றியமையாதவை.

பக்தன், விருப்பு வெறுப்பு இல்லாதவனாய், வசீகரிக்கும் சக்திகள் எவ்வளவு இருந்தாலும், தன்னுடைய பாதையிலிருந்து தவறக் கூடாது. இறைவன் ஊர்வலம் வரும்போது, அவரைத் தரிசிக்கப் போகும் வேளையில் நாம் வாண வேடிக்கை பார்ப்பதிலும் சங்கீதம் கேட்பதிலும் ஆழ்ந்து விட்டால், அவருடைய தரிசனம் கிடைக்காமல் போய்விடும். அதனால் நாம் பகுத்தறிவோடும், பற்றுதல் இல்லாமலும் இருக்க வேண்டும். இதயத்திலிருந்து வெறுப்பையும் விரோதத்தையும் அகற்ற வேண்டும். கடவுள் எந்த உருவத்தையும் எடுத்து, பக்தனுக்குத் தரிசனம் கொடுக்க முடியும். ஒரு பெரிய பக்தனுக்கு, அவனுடைய குரு ஒரு நாள் ஸ்ரீராமர் தரிசனம் கொடுப்பார் என்று சொன்னார். அந்த பக்தன், இறைவன் பூஜைக்கு வேண்டிய நல்ல உணவு, படுக்கை, பால், சந்தனம், முதலியவை தயாரித்து வைத்தான். இறைவன் வருகையை எதிர்நோக்கி இருந்தபோது, எருமை ஒன்று வீட்டிற்குள் நுழைந்து பூஜைக்கு வைத்திருந்த சாமான்களைக் காலால் சிதறி உணவைப் புசித்து படுக்

கையிலும் படுத்துப் புரண்டு விட்டது. இதைப் பார்த்து அவன் ஒரு தடியால் அதை அடித்தான். இறைவன் வராததால் அந்த பக்தன் குருவிடம் சென்று முறையிட்டான். அப்போது அவர் "ஸ்ரீராம பிரான் வந்தார். நீ அவரைக் கண்டு கொள்ள வில்லை. அவரே அந்த பிரஸாதத்தைப் புசித்து பூஜைக்கு வைத்திருந்த சாமான்களை ஏற்றுக்கொண்டார். ஆனால் நீ அவரை அடித்துத் துரத்தி விட்டாய். இதோ பார்! என் முதுகிலும் அடையாளம் காணப்படுகிறது. எவ்வளவு கொடூரமாக அடித்து விட்டாய்!" என்றார். இறைவன் எருமை ரூபத்தில் தோன்றினார்.

நாம் தெய்வீகமான நல்லொழுக்கங்களை, முக்கியமாக பணிவை வளர்க்க வேண்டும். சைதன்ய மஹாப்பிரபு, இறைவன் நாமத்தை உச்சரிக்கும் அவாவுடையவன் தகுதியைக் குறித்துச் சொல்கிறார்.

"புல்லைவிட எளிமையாகவும், தன்னை வெட்டி வீழ்த்தும் மனிதனுக்கும் பழங்களைக் கொடுக்கும் மரத்தைப் போல் பொறுமையுடனும், மரியாதைக்கு ஆசைப்படாதவனுமாக எவன் மற்றவரை மரியாதை செய்து புகழ்கின்றானோ அவன் இறைவன் நாமத்தை ஜபிக்கலாம்."

கர்வம் ஒருவனைக் கீழே தள்ளிவிடும். வைகுண்டத்துக் காவலாளர்களான ஜயா-விஜயா என்ற இருவருக்கும் அந்த கதி நேர்ந்தது. இவர்கள் சாரூப்ய நிலை அடைந்தவர்கள். அதாவது ஸ்ரீமந் நாராயணன் போன்ற உருவம் பெற்றனர். பகவானைத் தரிசனம் செய்ய ஸநத்குமாரர்கள் வைகுண்டத்திற்கு வந்து

போது, ஜயா-விஜயா என்ற இருவரும் அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டனர். அதனால் அவர்கள் பூமியில் பிறக்கும்படி சாபம் பெற்றனர்.

நுட்பமான தெய்வீக அகந்தையும் மிகவும் சக்தியுள்ளது. அதையும் நெருங்க வொட்டாமல் தடுக்க வேண்டும்.

பக்திம் வ்யாக்யாஸ்யாமஹ:—இதன் ஆசிரியரான நாரதர், இறைவனைச் சேரும் மார்க்கமான பக்தியை ஒரு தனி 'யோக'மாகக் கருதவில்லை. அவர் 'பக்தியை விரித்துரைப்போம்' என்று கூறுகிறார். பக்தி எல்லா மார்க்கங்களுக்கும் பொது. வேதாந்தி பிரம்மனிடத்திலும், ராஜயோகி ஈசுவரனிடத்திலும் பக்தியாக இருந்து அவனை நினைத்து தியானம் செய்கிறான். கர்மயோகி எல்லோரையும் இறைவனாக நினைத்து, எல்லோரிடத்திலும் அந்தர்யாமியாகிய இறைவனுக்குத் தொண்டு செய்கிறான். பக்தி எவர்க்கும் பொதுவானதும் தகுந்ததும் ஆகும். அதனால் தான் பக்தி மிகவும் முக்கியமானது.

சூத்திரம் 2.

"ஸாத்வஸ்மின் பரப்ரேமரூபா"

கருத்து :—(ஆனால்) அது, மிக உயர்ந்த அன்பே உருவானது. 'ஆனால்' என்பது கடவுளிடம் செலுத்தும் அன்புக்கும், உலகப் பொருள்களிலும் உறவினர்களிடத்திலும் காட்டும் அன்புக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறிக்கும்.

இறைவனிடம் செலுத்தும் மிக உயர்ந்த அன்பு, நாம் ஏதாவது ஒரு பொருளிடத்து அல்லது வேறு ஒருவரிடம் வைத்த அன்பிற்கு முற்றும் வேருனது. பின் சொன்னது மாறுதல் அடையவும் குறையவும் செய்யும். உலகத்தில் இரண்டு பேருக்கு இருக்கும் ஆழ்ந்த அன்பும் நாளடைவில் தளர்ந்து அலட்சியமாகி வெறுப்பாக மாறி விடுகிறது! ஆனுல் 'பக்தி' மாறுதலே இல்லாத உயர்ந்த அன்பு. அதற்கு ஒரு நல்ல காரணம் உண்டு. பக்தி தன்னலம் அற்றது. மனிதருக்கு இருக்கும் அன்பு சுயநலம் உள்ளது. நாம் எவரிடத்தில் அன்பு செலுத்துகிருேமோ அவரிடம் பதில் அன்பை எதிர்பார்க்கிருேம். அவ்வாறு பதில் அன்பு தகுந்த அளவு இல்லையென்ருல் அது குறைந்து விடுகிறது. அதுமட்டுமல்ல, அதன் காரணம், அப்பொருள் இயல்பாக ஒரு அளவிற்கு உட்பட்டு, குறையுள்ள தன்மை வாய்ந்ததனுல், நமக்கு நீண்ட காலம் திருப்தி அளிப்பதில்லை. அதனுல் அன்பு தேய்ந்து விடுகிறது. பக்தி அப்படிப்பட்டதில்லை. எல்லையற்றதும், நிலையானதும், குற்றமற்றதும், பூரணமாகவும் இருக்கும் கடவுளே அன்பு செலுத்தப்படும் பொருள். அதனுல் பக்தியும் கூட நிலையான, குற்றமற்ற, மாறுதல் இல்லாத் தன்மை அடைந்து விடுகிறது. அது தான் குறிக்கோள். (லக்ஷியம்) ஆனுல் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவ்வாறு ஒப்புக்கொள்கிருர்.

"சதுர்விதா பஜந்தேமாம் ஜனு ஸுக்ருதினோர் ஜுனு ஆர்த்தோ ஜிக்ஞாஸு: அர்த்தார்த்தி ஞானீச பரதர்ஷப தேஷாம் ஞானி நித்யயுக்த ஏகபக்திர் விசிஷ்யதே." (என பக்தர்கள் நான்கு விதம். துன்பம்

நீங்க கடவுளை நாடுபவன், செல்வத்திற்காக அவரிடம் பிரார்த்தனை செய்பவன், இறைவனையும், அவர் பேரன்பைக் குறித்து எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள அவா உடையவன் (வேதாந்தி), கடைசியாக, கடவுளை அறிந்த ஞானி. இவர்களில் ஞானியே மேலானவன்.

ஞானிக்குத் தனது ஆத்மாவே கடவுள் என்பது தெரியும். அதனால் அவனுக்குக் கடவுளிடம் பக்தியாக இருப்பதைத் தவிர்க்க முடியாது. அவன் இறைவனிடம் கொண்ட அன்பு வேறு உள் எண்ணத்தோடு செய்வதல்ல. அதை எதிர்க்கவும் முடியாது. ஞானியின் அன்பு, ஒருவனுக்கு மூச்சு விடுவதிலுள்ள ஆசையைப் போன்றது. தண்ணீரில் ஒருவனை அமுக்கி வைத்தால், அவனுக்கு மூச்சு விடுவதற்கு எவ்வளவு விருப்பம் உண்டாகிறது! ஏன் என்று நினைப்பதில்லை. மூச்சு விட வேண்டும் என்ற விருப்பம் தடுக்க முடியாதது. பரப்ரேமையின் இயற்கை குணமும் அவ்விதமானது தான்.

பரப்ரேமை :—இந்த வார்த்தை, மைத்ரேயியினிடத்தில் யாக்ஞவல்கியர் கூறும் புத்திமதியை நினைவூட்டுகிறது.

(1) "நவா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ஆத்மானஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி.' (உண்மையாக இவைகளெல்லாம் பிரியமாக இருப்பது. இவைகளுக்காக அல்ல, ஆனால் ஆத்மாவின் பொருட்டு பிரியமாக இருக்கின்றன).

ஆத்மா ஒன்றே எல்லோரிடத்திலும் உறைகின்றது. ஒற்றுமையே முடிவான உண்மை. அந்தக்

காரணத்தால் தான் எல்லாப் பொருள்களிடத்திலும் அன்பு காட்டப்படுகிறது. இந்த ஆத்மா, எல்லாவற்றிலும் எங்கும் பரவி யிருந்து, தன்னையே தான் உணர்ந்து அறிய முயற்சி செய்கிறது. உண்மையில், அதனால் தான் இங்கு பேரன்பு, தடுக்கவும் தவிர்க்கவும் முடியாத ஒரு பொருளாக இருக்கின்றது. அன்பே கடவுள். கடவுளே அன்பு. இவ்வுலகை எல்லாம் சேர வைத்துப் பிடித்துத் தாங்கி நிறுத்துவது இறைவனின் பேரன்பு தான். கிரகங்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் உள்ள ஆகர்ஷண சக்தி, உயிர் ஊட்டுவதற்கான மூலப்பொருள்கள், மனிதருக்கு இருக்கும் கருணை தயை, இவற்றின் உயர்ந்த மன உணர்ச்சிகள், மிருகங்களிடம் காணப்படும் இயற்கையான பற்றுதல், இவை எல்லாமும் அளவில் வித்தியாசப்பட்டும் பூர்த்தி இல்லாமல் இருந்த போதும், கடவுளின் பேரன்பின் உருவமேயாகும். அதனாலும் பேரன்பு, தடுக்கவும், தவிர்க்கவும் முடியாத ஒரு சக்தி. இதை நாம் எப்போது உணர்வோமோ அப்போதுதான் நமக்கு இறைவனிடத்தில் உயர்ந்த அன்பை வளர்க்க முடியும்.

'அஸ்மின்' என்ற வார்த்தை, நம்முடைய இஷ்ட தெய்வத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை நமக்குக் கொடுத்து, ஆசிரியரின் தாராள மனப்பான்மையையும், எம்மதத்தையும் மதப்பிரிவினரையும் நிபந்தனைக்கு உட்படுத்தாமல், பக்தியை எல்லோருக்கும் தகுந்த தெய்வீக அனுஷ்டானமாக இவ்வாசிரியர் குறிப்பிடுகிறார் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

சூத்திரம் 3.

"அம்ருதஸ்வரூபாச"

கருத்து :—அதன் குணம் அமிருதத்திற்கு ஒப்பாகும். 'அம்ருதம்' என்றால் மரணமற்ற நிலை. அமிருதம் அமர வாழ்வைத் தரும். மரணமே இல்லாத நிலையும், நம்மை மரண மற்றவராகச் செய்வதும் அமிருதம் தான். உபநிஷத்து ரிஷிகளுக்கு இது ஒரு பிரியமான வார்த்தை. அவர்கள், நம்மை சிரஞ்சீவித் தன்மை அடையத் திரும்பத் திரும்ப ஊக்கம் ஊட்டுகின்றனர். எதற்காக என்றால், ஆத்மன் அல்லது பிரம்மனுடைய முக்கியமான தன்மை மரண மற்ற நிலை.

பக்தியும் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்தது. இவ் விதம் சொல்வது, அன்பே கடவுள் என்பதையும், கடவுளே அன்புஎன்பதையும் உறுதிப்படுத்துகின்றது. அன்பு இறைவனுக்கு முற்றிலும் ஒன்றானது. அதனால் கடவுளின் இயல்பான இறவாத் தன்மை இறைவனிடத்தில் செலுத்தும் பேரன்புக்கும் உண்டு என்று கூறப்படுகிறது.

இன்னும் பக்தி என்னும்போது அவ்வன்பு செலுத்தப்படும் பொருள். நிலையான எல்லையற்ற தன்மையுடையதாயும் சிரஞ்சீவியாகவும் இருக்கின்றது. இது இரு விதமான உறுதி மொழிகள் அளிக்கும். (1) இறைவனிடம் செலுத்தும் பேரன்பும் அழியாத நிலைக்கு வந்து விடும். (2) அழிவில்லாத பொருளிடத்தில் அன்பு செலுத்துபவனையும் அந்த மரணமற்ற நிலையில் சேர்த்து விடும். சூரியனையே பார்த்துக் கொண்டிருப்பவனுக்கு நிழலும் இருட்டும் தெரியாது. நிலை

யானதும் சச்சிதானந்த சொரூபமாகவும் இருக்கும் கடவுளிடம் பக்தியாக இருப்பவனுக்கு அந்த அழி வற்ற நிலையும் எல்லையற்ற பேரானந்தத்தையும் தவிர வேறு ஒன்றும் தெரிவதில்லை.

உபநிஷத்துக்களில் கூறியுள்ள உண்மையை நாடிச்செல்பவன், வேறு பொருளையும் வாழ்க்கை நிலையையும் வெறுத்து விடுகிருன். இதற்குச் சிறந்த உதாரணங்கள் நாசிகேதன், மைத்ரேயி என்ற இருவரும் ஆகும். யாக்ஞவல்கியரின் மனைவி மைத்ரேயி. யாக்ஞவல்கியர், வன்வாழ்க்கையையும் துறந்து தேசயாத்திரை செய்யும் ஆண்டியாக வாழவிரும்பினர். அதனல் தனது இருமனைவியரையும் கூப்பிட்டு "என் செல்வத்தை உங்கள் இருவருக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டு சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறேன்" என்ருர். அப்போது மைத்ரேயி "பிரபுவே! அது எனக்கு முக்தியைக் கொடுக்குமா?" என்று கேட்டாள். யாக்ஞவல்கியரின் பதில் தெளிவானது. "செல்வம் உனக்கு முக்தியைக் கொடுக்காது." என்று உரைத்தார். மைத்ரேயி செல்வத்திற்கு ஆசைப்படாததைக் கண்டு அவர் சந்தோஷம் அடைந்து, மைத்ரேயிக்கு "பிரம்ம வித்தை"யில் தீக்ஷை அளிக்கிருர். இறவாத் தன்மையே 'அம்ருதம்' அதுவே லக்ஷியமும் ஆகும். அவன் தந்தை நாசிகேதனை, யமதர்மராஜனிடம் அனுப்பிய போது, அவன் யமனிடம் மரணமற்ற நிலையை அடையும் வழி எது என்று கேட்கவே, யமதர்மராஜன் இச்சிறுவனிடம் நீண்ட நாள் ஆயுளும் இன்பத்தையும் போகத்தையும் கொடுப்பதாகக் கூறி மயக்கினன். ஆனல் நாசிகேதன் புத்தியுள்ளவன்.

சிற்றின்பங்கள் ஜீவாதாரமான சக்தியை இழக்கச் செய்கின்றன என்றும், நீண்ட நாட்கள் வாழ்ந்தாலும் முடிவில் யமதர்மராஜனிடம் வந்து சேர வேண்டு மென்றும் இவனுக்குத் தெரியும். வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை நினைக்கும்போது இன்ப போகங் கள் அர்த்த மற்றவை. யமதர்மராஜன் சந்தோஷம் அடைந்து நாசிகேதனுக்கு 'ஆத்மவித்தை'யை உப தேசித்தான். நாம் எல்லோரும் கடைப்பிடிக்க இது ஒரு மேலான உதாரணம் அல்லவா?

'அம்ருதம்' மிக இனிமையான ஒரு பொருள் என்றும் கருதப்படும். இந்த சூத்திரத்தில் இப் பொருள் கொண்டால் நமக்கு மூன்று ஆனந்தமான பாதைகளின் தோற்றம் உண்டாகும்.

(1) ஆத்ம ஞானம் பெறும் வழி (சிரேயோ மார்க் கம்), சிற்றின்ப வழி (பிரேயோமார்க்கம்)யிலிருந்து முற்றும் வேறானது என்று உப நிஷதம் கூறுகின்றது. மெய்ஞான அநுபூதி அடையக் கூடியவன், சிற்றின் பங்களில் செல்லும் ஆசைகளை அறவே ஒழிக்க வேண் டும். ஆனால் நாம் இந்த உலக ஆசைகளை உதறித் தள்ளி விட்டாலும் நமக்கு நஷ்டமே இல்லை என்று இந்த சூத்திரத்தில் நாரதர் நிச்சயமாகக் கூறுகிறார். அதன் காரணம், பக்தி ஒன்றே எல்லா இனிமையும், மகிழ்ச்சியும், பேரானந்தத்தையும் கொடுக்கும். பக்திப் பாதையில் ஒரு அடி வைத்தால், நாம் துறந்து விட்ட உலக இன்பங்கள், உண்மையாக மறைந்து கிடக்கும் துன்பங்கள் என்பதை அறியலாம். உலக இன்பங் களுக்கு ஆசைப்பட்டு கஷ்டத்திலும் துன்பத்திலும்

உழலுகின்றவர், அனுபவிக்க வேண்டியதாகிய பேரானந்தத்தைத் கொடுக்கும் பக்தியைத் துறந்து விடுகின்றனர். ஒரு வகையில் கீதையில் கூறியுள்ளதைப் போல் முதலில் கசப்பாகவும், முடிவில் அமிருதத்தைப் போலுள்ள ‘ஸத்வகுண இன்பத்தையும்’ தாண்டிச் செல்கிறது பக்தி. ஆதியிலும், நடுவிலும், முடிவிலும் பக்தியானது அமிருதமாக இருக்கும் என்று நாரதர் உறுதி யளிக்கிருர்.

(2) அது அவ்வளவு இனிமையாக இருப்பதன் காரணம், நம் உறவினரிடமும் மற்றவரிடத்தும் செலுத்தும் அன்பு விட்டுப் போனாலும், பக்தியால் உண்டாகும் சந்தோஷம் குறையவும் செய்யாது, மாறுதலும் அடையாது. அதே உணர்ச்சியும் அன்பும் தூய்மை பெற்று, வேறு உருவாக மாறி இறைவனிடம் செலுத்தப்படுகின்றது. சந்தோஷம் பேரின்பநிலைக்கு வந்துவிடும். நம்மை ஏமாற்றும் பற்றுதலால் வரும் துன்பம், தந்திரமாகத் தவிர்க்கப் படுகின்றது.

(3) இதுவும் ஒரு முக்கிய விளக்கமாகக் கருதலாம். பக்தி முற்றும் இனிமையாகவுள்ளது. அது பக்தன் இதயத்தில் உயர்ந்த இடம் பெற்று விட்டால், அவனும் முற்றும் இனிமையாக இருப்பான் என்பதை வற்புறுத்திக் கூறவும் வேண்டுமோ? அவனுடைய வார்த்தைகள், எண்ணங்கள், செயல்கள் எல்லாம் இனிமையாகவே இருக்கும். ஒரு கெட்ட எண்ணமோ கொடூரமான வார்த்தையோ செயலோ அவனிடம் தோன்ருது. ஒரு உண்மையான பக்தனிடம் காணும் தவறில்லாத இந்த அறிகுறியை மறக்கவே கூடாது.

ஸூத்திரம் 4.

"யல்லப்த்வா புமான் ஸித்தோ பவதி,
அம்ருதோ பவதி, த்ருப்தோ பவதி."

கருத்து:—மனிதன் இதை (பேரன்பை)ப் பெற்றதும், பூரண நிலையையும் அமர நிலையையும் அனுபவித்துத் திருப்தி அடைகிறுன்.

முதல் இரண்டு வார்த்தைகளும் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியிருப்பதை நினைவூட்டுகிறது.

"யம்லப்த்வா சாஅபரம் லாபம் மன்யதேநா அதிகம்ததா
யஸ்மின் ஸ்திதோந துக்கேன குருணுபி விசால்யதே."

அங்கே "துக்க ஸம்யோக வியோக" (துன்பத்தை நீக்கும்) யோகம் என்ற கூறப்படுகிறது. இங்கே நாரதர் இதை 'பக்தி' என்றுர். யாக்ஞவல்கியர் ஞானமே நமக்கு அமர நிலை கொடுக்க வல்லது என்றுரைத்தார். பக்தி, யோகம், ஞானம், என்பவை முடிவில் ஒரே பொருளுடைய வெவ்வேறு வார்த்தைகள் என்று குருதேவர் சொல்லுவார். ஆனால் இந்த இடத்தில் முக்கியமான விசேஷம் என்னவென்றுல் பக்தியை கடவுளுக்குச் சமமாகவே நாரதர் கூறுகிறுர். இறைவன் அன்பை ஒருவன் வளர்த்து, இறைவன் தரிசனம் பெற்று அமர வாழ்வையும் அனுபவிக்கிறுன் என்பது மட்டுமல்ல நாரதர் கருத்து, பக்தியைப் பெற்ற நிலையே முக்தி என்பது. பக்தியே லக்ஷியம். அதனுல் இதை 'அம்ருதம்' என்று விவரித்து இந்த ஸூத்திரத்தில் உறுதிப்படுத்துகிறுர்.

ஸித்தோ பவதி:—ஸாதனையினுல் அடையக் கூடியது. 'ஸித்தி' அது பூரணத்தன்மை பெற்றது. வெறும் மனோ தத்துவப் பயிற்சியினுல் வருவதன்று. ஒரு பக்தனும், உபாஸனை செய்யும் காலங்களில் தானுகவே ஸித்திகள் பெறக்கூடும். மந்திர ஜபம் அந்த ஸித்தியைக் கொடுக்கும். ஆனுல் அவன், அந்த ஸித்திகளும் இடையூறுகள் தான் என்றெண்ணி அவைகளை உபயோகிக்க மாட்டான். எல்லோருடைய நன்மையையும் கருதி பிரார்த்தனை செய்வான். கடவுள் இச்சைக்குத் தகுந்தபடி நடக்கும் சம்பவங்களில் தலையிட மாட்டான். அதனுல் இந்த சூத்திரத்தில் 'ஸித்தி' என்பது பரிபூரண நிலையைத் தான் குறிக்கும். பக்தன், உடலுக்கும் மனதுக்கும் பற்றுதல் இல்லாதவன். எல்லாத் துன்பங்களுக்கும் காரணமான 'நான்' என்ற எண்ணமில்லாதவன். கடவுளிடத்தில் சரணம் அடைந்ததால் இறைவனோடு ஒன்ருகி விடுகிருன். 'ஸித்தி' என்னும் போது, ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் அழகாய் கூறியிருப்பது நினைவுக்கு வருகின்றது.

"ஸ்வகர்மணு தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:"

(எவன் தன் கருமங்களால் இறைவனைப் பிரார்த்தனை செய்கிருனே, அவன் பூரண நிலையை அடைகிருன்.) இப்போது உங்கள் மனக்கண் முன்பு உண்மையான பக்தனுடைய சித்திரம் தோன்றுகிறது.

"அஹம் ஆத்மா குடாகேச ஸர்வபூதாசய ஸ்திதः"

எல்லா உயிர்களிடத்தும் கடவுளைப் பார்க்கிருன், அவனையே வணங்குகிருன். ஆனுல் மலர்கள் எவை? இவன் ஒவ்வொரு நாளும் செய்யும் கருமங்கள் மலராக

அமைகின்றன. இவ்வாறு அவன் ஸித்தி (பூரணத் தன்மை) அடைகிருன். இரவும் பகலும் இதே பாவனையுடன் இருந்தால், பரந்த உணர்வைப் பெறுவான் என்பதில் ஐயமும் உண்டோ? குருதேவர் இதை "செயல்முறை வேதாந்தம்" என்றும் சக்தி வாய்ந்த யோக மார்க்கம் என்றும் புகழ்ந்துரைப்பார். இதுவே நமக்கு பரிபூரணத் தன்மைக்கு வழிகாட்டும்.

"யோவை பூமா தத்ஸுகம் நாஅல்பே ஸுக மஸ்தி"

(எல்லையற்ற பொருளே பேரானந்தம், ஆனால் இது நிலையற்ற பொருள்களால் பெறமுடியாது.) என்பது உப நிஷத்து வாக்கியம். குருதேவருக்கு மிகவும் இஷ்டமான ஒரு மந்திரம். "பூமா" என்ருல் பூரணத்தன்மை.

"யத்ரா நஅன்யத் பச்யதிந அன்யத் ச்ருணேதி."

(எங்கு வேறென்றையும் பார்க்கவும் கேட்கவும் இல்லையோ) அதாவது, எவன் எல்லாவற்றையும் "ஆத்மா" என்றும் ஆத்மா ஒன்றே இவை எல்லாமாகவும் காண்கிருனே, எவன் கடவுளை எங்கும் பரவியிருக்கும் பொருளாக உணர்ந்து, அவனுக்குத்தொண்டு செய்கிருனே, அவனுல் தான் இந்த நிலையை அடைய முடியும்.

அம்ருதோ பவதி:—முன் உரைத்தபடி, பக்தியின் தன்மையும் அமிருதமாகவே இருப்பதால், எப்போது பக்தி நிலை வரப்பெற்றதோ அப்போது, அமர நிலையும் வந்தெய்தும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் உறுதியாகச் சொல்வது "நமேபக்த ப்ரணச்யதி." (என்னுடைய பக்தன் அழிவடைய மாட்டான்.) நமக்கு மோக்ஷத்தைக் கொடுப்பது மன்றி,

"அனன்யாஃ சிந்தயந்தோமாம் ஏஜனுஃபர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தானும் யோக க்ஷேமம் வஹாம்யஹம்"

(எப்போதும் என்னையே நினைத்துக்கொண்டிருக்கும் பக்தனுடைய யோக க்ஷேமங்களை நானே கவனிக்கிறேன்.) எனவும் உறுதி கூறுகிருர்.

வாழ்க்கையில் பக்தர்கள் செய்ய வேண்டிய கடமைகளை, இறைவனே நிறைவேற்றிய அனேக சம்பவங்கள் உண்டு. வட இந்தியாவில், ஒரு புண்ணிய புருஷரான பள்ளி ஆசிரியர், ஒரு நாள் பஜனையிலும் கீர்த்தனையிலும் ஈடுபட்டு, வேலைக்குப் போகாமல் நின்று விட்டார். அப்போது, இறைவனே அந்த ஆசிரியர் போல் மாறு வேஷத்துடன் பள்ளிக்கூடம் சென்று பக்தனுடைய வேலையை அவரே செய்து முடித்தார். பக்தனுகிய ஆசிரியர் பள்ளிக்கூடம் வந்து அவருடைய கையெழுத்தைப் புத்தகத்தில் பார்த்ததும், மனம் மகிழ்ந்து அப்போதே உலக வாழ்வை வெறுத்துத் துறவியானுர். இதைப் போன்ற நிகழ்ச்சிகள் நம் நாட்டில் எவ்வளவோ நடந்துள்ளன. நாம் கடவுளை நோக்கி ஒரு அடி முன் வைத்தால் நம்மை எதிர் கொண்டு அழைக்க இறைவன் பத்து அடி முன் வருகிருன் என்பது மட்டும் தெரிந்து கொள்ளலாம்.

த்ருப்தோ பவதி:—பக்தி இதயத்தில் பேரின்பத்தையும் சாந்தியையும் நிரப்புகின்றது. முன்பு உரைத்தது போல், பக்தியின் பேரின்பத்தை ருசி பார்த்தவன், வேறென்றிற்கும் ஆசைப்படவே மாட்டான். அதனுல் பக்தனுடைய இதயத்தில் நித்ய திருப்தி நீடித்து நிற்கும். ஆசைகள் எழுவதில்லை. கடல் போன்ற

இறை அன்பில் அவை கலந்து விடுகின்றன. இதை ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஒரு தெய்வீகக்கலையாக அமைத்துக் காண்பிக்கும் தோற்றத்தைப் பாருங்கள்.

"ஆபூர்ய மாணம் அசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரம்ஆப ப்ரவிசந்தியத்வத்
தத்வத் காமாயம் ப்ரவிசந்தி ஸர்வே
ஸசாந்திம் ஆப்னோதி நகாமகாமீ."

இதுவே பக்திப் பெருங்கடல் இது சாந்தியே உருவானது. ஆசைகளான கணக்கற்ற நதிகள் அங்கே பாய்ந்து, கடலில் சேர்ந்ததும் அவை காணாமல் போய் விடுகின்றன. அதனால் கடல் மாறுவதில்லை. உலக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் சாதாரண மனிதனுடைய இதயத்தைத் துன்புறுத்தும் ஆசைகள், பக்தனுடைய மனதைக் குலைக்க சக்தியற்றவை. பக்தன் தன்னுடைய இதயத்திலேயே பேரானந்தம் அடைந்து விட்டான். அங்கே ஆசைகள் எழாமல் பேரானந்தக் கடலில் கரைந்து விடுகின்றன. அதனால் உப நிஷத்துகள், பக்தனை 'ஆப்தகாமா' என்று கூறுகின்றன.

சூத்திரம் 5.

"யத் ப்ராப்ய நகிஞ்சித் வாஞ்சதி, நசோசதி,
நத்வேஷ்டி, நரமதே, நோத்ஸாஹிபவதி."

கருத்து :—இதை யடைந்தபின், இவன் எதற்கும் ஆசைப்படாமலும், வருத்தப்படாமலும், வெறுக்காமலும், இந்திரிய சுகங்களில் ஈடுபடாமலும் இருப்பான். வேறு ஏதாவது பொருளைக் கைப்பற்றுவதற்கு ஆர்வமும் இருக்காது.

முன் சூத்திரத்தில், பக்தியைப் பெற்ருல், பூர்ணத் தன்மை அடைவோம் என்று சொல்லப்பட்டது. இப்போது, பக்தி இருந்தால் வேறென்றிலும் ஆசையே இருக்காது என்று கூறப்படுகிறது. "லப்த்வா" என்னும்போது, சுயமுயற்சியாலேயே அடையப்பெற்ற பொருள் என்பதல்ல. "ப்ராப்ய" என்ருல் தன் முயற்சியால் கிடைக்கப் பெற்றது. முதல் வார்த்தை கிருபையையும் இரண்டாவது வார்த்தை சுய முயற்சியையும் குறிக்கும். இதன் உட் கருத்து என்னவென்ருல், பக்தனுக்கு இரண்டும் (கிருபையும் சுய முயற்சியும்) தேவை தான். எவ்வளவு சுயமுயற்சி இருந்தாலும், கிருபை* இல்லாவிட்டால் பயன் படாது. ஏனென்ருல் மூல அஞ்ஞானத்தை கடவுள் கிருபையால்தான் கடந்து செல்லவேண்டும். எவனொருவன், கிருபைமேலே யிருந்து கீழே இறங்கி வந்து தனக்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் என்ற நம்பிக்கை கொண்டு நாட்களை வீணுக்குகிருனே, அவன் அதற்குத் தகுதியற்றவன். அவன் அதைப் பெறவும் மாட்டான். அதனுல் இரண்டும் தேவைதான்.

---

* "சுயமுயற்சி முடிவு பெற்று, கிருபை என்பது எப்போது வேலை செய்யத் தொடங்கும்?" என்று அடிக்கடி கேட்கப் படுகிறது. ஒரு கனமான காகித அட்டையை எடுத்துக் கொள்வோம். கனமான பக்கத்தில், இரண்டாகப் பிரிக்கும் கோடு எது? நமக்கு ஒரே பக்கம் தான் தேவை என்ருல், அந்த காகித அட்டையை இரண்டாகப் பிரித்தாலும் நமக்கு தேவையானது கை கூடுமா? அப்படியும் வெவ்வேருகப் பிரித்த ஒவ்வொரு துண்டுக்கும் இரண்டு பக்கங்கள் காணப்படும்.

அதைப் போல, கிருபையும் சுயமுயற்சியும் ஒன்றேதான். கிருபை யில்லாமல் சுய முயற்சி இருக்காது. கிருபையே சுய முயற்சியாகத் திகழும்! சுய முயற்சி யில்லாமல் ஒருவனுக்குக் கிருபையும் கிடைக்காது. சுய முயற்சி, கிருபை வந்ததற்கு ஓர் அடையாளம் ஆகும்.

"நகிஞ்சித் வாஞ்சதி" மறுபடியும் இந்த முக்கிய மான விஷயத்தை ஞாபகப்படுத்துகிறது.

'ஆசாஹி பரமம் துக்கம் நிராசா பரமம் சுகம்.'

(ஆசையே பெருந்துன்பம், ஆசையற்றிருப்பதே பேரின்பம்).

பக்தனிடம் உனக்கு என்ன வேண்டும்? என்று இறைவன் கேட்கும்போது, அவன் பதில் ஆச்சரியப் படக்கூடியது. குசேலர்,

"நாஸ்தாதர்ம நவாஸு நிசயே நைவ காமோப போகே
யத்யத் பவ்யம் பவது பகவான் பூர்வகர்மானு ரூபம்
ஏதத் ப்ரார்த்யம் மம பஹுமதாம் ஜன்ம ஜன்மாந்தரேபி
த்வத் பாதாம் போருஹயுகளா நிச்சல பக்தி ரஸ்து."

எனக்கு ஒன்றும் தேவையில்லை. நான் முன் செய்த கர்மத்தினால் வரவேண்டியது வரட்டும். இறைவனே! என் பிரார்த்தனை இது ஒன்றுதான், உன் பாத கமலங்களில் நீங்காத பக்தியைக் கொடுத்தருள். என்று கூறுகிறார்.

வேறெல்லாம் அநித்ய மென்றும், அவை நித்திய திருப்தியைக் கொடுக்காதவை என்றும் பக்தன் தெரிந்து கொள்கிறான். அதனால், வாழ் நாட்களில் எப்போதும் கடவுளையே நினைத்துக் கொண்டிருக்கும் நிலையே அவனுக்குப் பேரானந்தமாகத் தோன்றும். பாண்டவர்கள் அன்னை குந்திதேவி பிறப்பிலிருந்து துன்பத்தைத் தவிர வேறொன்றும் அறியாதவள். இது அவளுக்குக் கடவுளையே நினைத்துக் கொண்டிருக்கச் செய்தது. துன்பம் இறைவன் கொடுத்த வரம்! ஏனெனில், அது நம்மைக் கடவுள் சிந்தனையில் ஆழ்த்துகின்றது. பாரத யுத்தம் முடிந்ததும், குந்தி

தேவியிடம் ஸ்ரீ கிருஷ்ண பகவான், அவளுக்கு விருப்பமானது ஏதாகிலும் வேண்டுமா என்று கேட்டார். அவளுடைய கோரிக்கை நம்மைத் திகைக்க வைக்கின்றது. "கிருஷ்ணா! மேன்மேலும் துன்பத்தையே கொடு. அப்போதுதான் நான் உன்னை ஒருபோதும் மறவாதிருக்க முடியும்." என்று குந்திதேவி கேட்டாள்.

இல்லற வாழ்க்கை நடத்தும் மக்கள் எதற்காகப் பயப்படுகிறார்களோ அதே துன்பத்தை பக்தன் வரவேற்கிறான். புத்தியுள்ளவன் வறுமையையும் துன்பத்தையும் வரவேற்பான். இதில் ஒரு நுட்பமான கருத்து உண்டு. எது வரவேற்கப்படுகிறதோ அது துன்பமுள்ளதாகவோ, விரும்பத்தகாத பொருளாகவோ தோன்றாது. அதனால் பக்தன் எந்த நிலையிலும் சந்தோஷமாகவே இருப்பான். குசேலருடைய சிக்கலான நிலை நமக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. வறுமையும் துன்பமும் அவதாரமான இவருக்கு ஒரு பெரிய குடும்பத்தைக் காப்பாற்றவேண்டியிருந்த போது, தன் மனைவி சொல்லுக்கு இணங்கி, ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் உதவியை நாடிச்சென்றார். முதலில் குசேலர் மறுத்தபோதும், பிறகு பகவானுடைய தரிசனம்காண இதுவும் ஒரு சந்தர்ப்பம் என்று நினைத்து ஸ்ரீ கிருஷ்ணனிடம் சென்றார். துவாரகைக்குப் போனதும் ஸ்ரீ கிருஷ்ணன் இவரை ஆடம்பரமாக வரவேற்றார். மறுநாள் பகவானிடம் விடை பெற்றுக் கொண்டு தன் வீட்டுக்குப் புறப்பட்டார். திரும்பி வரும்போதுதான், அங்குச் சென்ற காரணம் இவருக்கு நினைவு வந்தது. இறைவன் முன்னிலையில் இவருடைய

கஷ்டங்களைப்பற்றிய நினைவு மனதில் எப்படித்தோன்றும்? "ஸ்ரீ பகவானிடம் என்னுடைய வறுமை நிலையைத் தெரிவித்து, அவருடைய உதவியை யாசிப்பது முடியாது. எல்லா உயிர்களிலும் வீற்றிருக்கும் இறைவனே என் மனதிலிருக்கும் எண்ணத்தை அறிந்து, எனக்கு ஒரு பைநிறையப் பொற்காசுகளைக் கொடுத்து அனுப்பி யிருக்க வேண்டும்". என்று சிறிது நேரம் சிந்திக்கலானார். இந்த அபசாரமான எண்ணம் ஒரு நிமிஷம் கூட நிற்கவில்லை. "என்னிடம் அவருக்குப் பெரும் தயை இருப்பதால்தான் அப்படிச் செய்யவில்லை. எனக்கு செல்வத்தைக் கொடுத்து விட்டால், நான் அவரை மறந்து விடுவேன் என எண்ணி யிருக்கலாம். இறைவனே! உன் அன்பு என்னே! நான் உன்னை மறக்கலாகாது. அதனால் வெறும் கையுடன் என் இதயத்தில் உன்னிடம் மிகுந்த அன்பை நிரப்பி வைத்து அனுப்பி விட்டாய்." என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டார்.

நசோசதி:-இப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய புத்திமதி நினைவுக்கு வருகிறது. இதை கீதோபதேசத்தில் ஆரம்பத்திலும் முடிவிலும் கூறுகின்றார்.

"அசோச்யான் அன்வசோசஸ்த்வம்"

(எவைகளைக் குறித்து வருந்தக்கூடாதோ அவைகளுக்காக வருத்தப்படுகிறாய்) என்றும்,

"மோக்ஷ யிக்ஷ்யாமி மாசுசா."

(வருந்ாதே—நான் உனக்கு மோக்ஷத்தைக் கொடுப்பேன்) என்று உரைத்தார். உலகத்தில் நாம் அனுபவிக்கவேண்டிய உத்தமமான பொருள், இறைவன்

பொற்பாதங்களில் பக்தி ஒன்றுதான். மற்றவை எல்லாம் உபயோகமற்றவை. உண்மையை நாடும் ஒருவன் பக்தியைக் கடைப்பிடிக்கும் போது, வேறெதற்கும் வருத்தப்படவோ, கவலை கொள்ளவோ மாட்டான் ஈசாவாஸ்ய உபநிஷத்தில் கேட்கப்படுவது என்னவென்றால்,

"யஸ்மின் ஸர்வாணி பூதானி ஆத்மை வாபூத்விஜானதா
தத்ர கா மோஹ கா சோகா ஏகத்வ மனுபச்யதঃ

(ஆத்ம தரிசனம் பெற்றவனுக்கு மோஹமும் துக்கமும் ஏது?)

நமக்கு அன்பாயிருந்தவர்கள் நம்மை விட்டுப் பிரியும்போது துக்கப்படுகிறோம். பரபக்தியே அமிர்தம். பக்தர்களும் இறவாத நிலை அடைந்தவர். இறைவனும் அழியாதவர். நாம் பராபக்தி அடைந்து விட்டால் எதற்காகத் துயரப்பட வேண்டும்?

நத்வேஷ்டி :—(வெறுப்பதில்லை) பதஞ்சலி மஹாரிஷி, தனது யோக சூத்திரங்களில் மனிதனுக்கு ஐந்து விதமான துன்பங்கள் உண்டு என்று உரைத்தார். இவ்வைந்து துன்பங்களால் அவன் ஸம்ஸாரத்தில் கட்டுபடுகிறான். அவை அவித்யா, அஸ்மிதா, ராக, த்வேஷ, அபிநிவேச என்பவை. 'அவித்யா என்பது, நமது உண்மையான நிலை எது என்று தெரியாத மூல அஞ்ஞானம். அதிலிருந்து தோன்றுவது 'அஸ்மிதா' (நான் வேறு தனிமையானவன் என்ற உணர்ச்சி). பிறகு வருவது ராக-த்வேஷம்.

(விருப்பு - வெறுப்பு) 'அபிநிவேச' என்பது, இயற்கையான வாழ்வில் பற்றுக்கொள்வது. ராக—

த்வேஷம் என்ற இரண்டுமே உண்மை ஸம்ஸாரம் என்று குருதேவர் அடிக்கடி கூறுவது உண்டு. இவ்வுலகம், ஆண்களும், பெண்களும், மோட்டார்களும் நிறைந்தது மட்டுமல்ல. 'ஸம்ஸாரம்' என்ருல் உலகத்திலுள்ள பந்துக்களையும் விரோதிகளையும் மற்ற பொருள்களையும் குறிக்கும் என்பதன்று. விருப்பும் வெறுப்புமே உலகமும் ஸம்ஸாரமும் ஆகும். உண்மையைச் சிந்திப்பவன் ராக த்வேஷங்களைத் தாண்டிச் சென்ருல் ஸம்ஸாரக் கடலைக் கடந்தவனுகிருன். இந்த சூத்திரத்திரத்தில் நாரதர் வற்புறுத்திக் கூறுவது இதுவே. "நகிஞ்சித் வாஞ்சதி" "நத்வேஷ்டி" என்பவை முறையே ராகத்தையும் துவேஷத்தையும் தாண்டிச் செல்வதைக் குறிக்கும். இன்னும் ஈசாவாஸ்ய உபநிஷதம்

"யஸ்து ஸர்வாணி பூதானி ஆத்மன்யே வானுபச்யதி
ஸர்வ பூதேஷு சாத்மானம் ததோந விஜுகுப்ஸதே."

(எவன் தன்னிடம் உறையும் ஆத்மாவை எல்லாவற்றிலும், எல்லாவற்றிலும் உறையும் ஆத்மாவைத் தன்னிடத்திலும் காண்கிருனே அவன் எதையும் வெறுக்க மாட்டான்.) அவன் எவரிடத்தும் அன்பாக இருப்பான்.

நரமதே:—இந்த வார்த்தை, ஒரு பக்தனுக்கு எப்பொருளிடத்தும் அளவு மீறிய பற்றுதல் கிடையாது என்பதை உறுதிப்படுத்துகின்றது. அதனுல் அவன் எது கிடைக்கப் பெற்ருலும் இறுமாப்புக் கொள்ள மாட்டான். அவன் எப்போதும் உற்சாகமில்லாத முகத்துடன் இருப்பான் என்று இதை

தவருக எண்ணிவிடக் கூடாது. ஆனால் அதற்கு மாருக, இவனும் ஆனந்தமாயிருந்து மற்றவருக்கும் ஆனந்தத்தைப் பரவச் செய்வான். இந்த ஆனந்தம் விஷய நுகர்ச்சியால் வந்ததன்று. ஆனால் இது எப் போதும் கடவுள் சிந்தனையில் ஆழ்ந்திருப்பதனால் வரும் பயன். அவன் 'ஆத்மாராமனாக' ஆகி விட்டான். அதாவது அவன் ஆத்ம நிலையில் இன்புற்றிருப்பான். இது அடுத்த சூத்திரத்தில் தெரிவிக்கப்படும்.

நோத் ஸாஹி பவதி ;—இறைவனிடம் பேரன்பு செலுத்துவதற்குத் துணையாகாத கருமங்கள் எதுவும் செய்ய விருப்பம் கொள்ளமாட்டான். இவன் உலகப் பற்றிலிருந்தும் உலகரீதியான கருமங்களிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்கிருன் என்பது பின்னால் கூறப்படுகின்றது. தன் கடமை எப்போதும் இறை வனையே சிந்திப்பது என்று எண்ணி பக்தியுடனிருக்க விரும்புவான். அவன் அகநோக்கு உடையவன். உலகப்பொருள்களுக்காக வருந்தி உழைக்கமாட்டான். தன்னுடைய நலங்களை இறைவனே கவனித்துக் கொள்வான் என்பது இவனுக்குத் தெரியும். இந்த நம்பிக்கையும் தகுந்தவாறு பயனளிக்கும். ஜடபரதர் சரித்திரம் இதை நமக்கு உணர்த்துகின்றது.

ஒரு சமயம் காளிக்குப் பலி கொடுக்க, மலைவாசி கள் இவரைப் பிடித்து பலி பீடத்திற்கு அருகில் இவ ருடைய தலையை வெட்டுவதற்காகக்கொண்டு போனார் கள். இவர், 'நான் அழியாப் பரம்பொருள்' என்ற உணர்ச்சியுடன் இருந்தார். இந்த ரிஷியை சாதாரண மனிதரென்று கருதக்கூடாது. அவர் கழுத்தில் கத்தி விழுவதற்குமுன், காளிதேவி சிலையிலிருந்து வெளியே

தோன்றி வெறியாட்டத்தில் கலந்து கொண்டவர்களைக் கொன்று விட்டாள். ஜடபரதரும் காப்பாற்றப் பட்டார்.

பக்தன், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் மாட்டான். இது இறைவன் பொறுப்பு. பக்தன் துன்பப்படும்போது, இது வினைப்பயன் அல்லது இறைவன் இச்சை என்றெண்ணி பொறுத்துக் கொள்வான். இல்லையென்றால், கடவுள் எவ்விதமாகிலும் காப்பாற்றுவார் என்று இவனுக்கு நன்றாகத் தெரியும். திரௌபதி, தன் முயற்சியில் நம்பியிருந்த வரையிலும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் உதவிக்கு வரவில்லை. இவளுடைய இரு கைகளையும் விட்டு ஸ்ரீகிருஷ்ணனைக் கூப்பிட்டதும் ஓடிவந்து காப்பாற்றினார். இதிலிருந்து சுயமுயற்சி பக்திக்கு முரணானது என்று கருதக்கூடும். கடவுள் உண்டா? என்றும், அவருடைய கிருபையைப் பற்றியும் சுயமுயற்சி உடையவன் சந்தேகப்படுவானோ? அல்லது பக்தன் ஊமையைப் போலவும் உலகநினைவு இல்லாமலும் இருக்க வேண்டுமா? ஆம். ஆனால் அவன் எப்போது இறைவனிடம் சரண் புகுந்தானோ, அப்போது அவன் செய்ய வேண்டியதை எல்லாம் முடித்து சுயமுயற்சியின் சிகரத்தையே எட்டிவிட்டான் என்று கருதலாம். அதன் பிறகு அவன் செய்யும் சுயமுயற்சி, எப்போதும் கடவுள் சிந்தனையில் ஈடுபட்டிருப்பது ஒன்றுதான். இவன் வேலை இதுவே. பக்தனைக் காப்பது இறைவன் செயல்.

இது ஒரு உயர்ந்த நிலை. நாம் இந்த நிலைக்கு வரும் வரையில், கீதையில் 12-ஆவது அதிகாரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் கூறியுள்ள அனேக வழிகளில் ஏதாவது

ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன், ஆசையில்லாமலும் திருப்தியுடனும் இருக்கவேண்டும். "யத்ருச்சா லாப ஸந்துஷ்ட:". இந்த ஸம்ஸாரத்தி லிருந்து விடுதலை பெற ஒரு வழி என்ன வென்றால் கிடைத்ததைக்கொண்டு திருப்தி அடைவது.

சூத்திரம் 6

"யத்ஞாத்வா மத்தோபவதி, ஸ்தப்தோபவதி, ஆத்மா ராமோபவதி."

கருத்து :—இதை அறிந்து கொண்டால், மனிதன் பித்தனுகி சாந்தி நிறைந்து, ஆத்ம ஞானத்தால் வரும் பேரானந் தத்தில் மூழ்கி விடுவான்.

கடவுளை நன்ருகத் தெரிந்து கொள்ளும் அள வுக்கு, நாம் இறைவன் அருகே வந்து விட்டோம். 'தெரிந்து கொள்ளுதல்' அல்லது 'அறிதல்' என்ருல், ஜீவனுக்கும் பிரம்மனுக்கும் உள்ள ஒரே தன்மையை அறிதல் என்ற கருத்தைக் குறிக்கும்.

"ப்ரம்மவித் ப்ரம்மைவ பவதி"

(பிரம்மனைத் தெரிந்து கொண்டவன் பிரம்மனுவான்.)

இந்த மெய்ஞானத்தைப் பெற்றதனுல் என்ன பயன்? கடவுளைக்கண்டு கொண்டவன் எப்படி நடந்து கொள்வான்?

அவனுக்குப் பகவத்பித்து ஏறி விடுகிறது. அந்த நிலையில் எதுவும் விளங்காதவன் போல் திகைக்கின் ருன். ஆனுல் அமைதியாக இருப்பான். அவன் புத்தி யும் மனமும் அசைவற்று நின்று விட்டதுபோல் தோன்றும். முழுதும் உள் நோக்கம் உடையவனுய் ஆத்மானந்தத்தை அனுபவிக்கிருன். அது எவ்வா

றெனில், எல்லாவற்றிற்கும் மேலான உண்மைப் பொருள் முன்னிலையில் நேருக்கு நேராக வந்து விட்டான்.

"யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மானஸாஸஹ".

(பேச்சும் மனமும் அறிந்துரைக்க முடியாமல் எந்த இடத்திலிருந்து திரும்பி விடுகின்றதோ) அதுவே உண்மை. மனதுக்கும் புத்திக்கும் எட்டாத வஸ்து. இவனுடைய பக்தி, உள்ளுருவாகிய கண்ணால், இறைவனைக்காணும் சக்தியைக் கொடுத்து விடுகிறது. உள்ளுருவானது, மனத்தையும் புத்தியையும் சாம்பலாக்கி அவைகளைக் கடந்து நிற்கும்.

புத்தி, தானாகவே, மறைந்து விட்டது. உப்பு-பொம்மை கடலின் ஆழத்தை அளந்த கதை!

இக்காரணத்தைக் கொண்டே புத்த பகவான், மனக்கோட்டை கட்டும் சோம்பேறிகளுக்கு "அளக்க முடியாத வஸ்துவை வெறும் வார்த்தையால் அளந்து பார்க்க வேண்டாம்" என உரைத்தார். யாக்ஞவல்கியர்.

"விக்ஞாதாரம் அரே கேனம் விக்ஞானீயது."

(அறிபவனை அறிவது எதைக்கொண்டு?) எனவும் கேட்கிறார்.

"ஜ்யோதிஷாமபி தத் ஜோதிதமஸஃ பரமுச்யதே
ஞானம் ஞேயம் ஞானகம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய திஷ்டிதம்."

விளக்குகளில் பிரகாசிக்கும் ஒளி இறைவனே. அது இருளைக் கடந்து நிற்கும் பொருள். பேரறிவும் அவரே. அவரை அறிந்து உணர வேண்டும். லக்ஷிய

மாகிய மெய்ஞான அநுபூதியும், எல்லா உயிர்களின் இதயத்தில் உறைந்திருப்பவரும் இறைவனேதான்.

கடவுளை நேரில் பார்த்தவன் ஆச்சரியத்தால் வாய் புதைத்து நிற்பான். பேரானந்த நிலையை எவ்வாறு அவனால் தெரிவிக்க முடியும். வார்த்தைகளால் விவரிக்க முடியாத வஸ்துவை எந்த வார்த்தைகளைக் கொண்டு அல்லது எந்த உவமையைக் காட்டிப்பேச முடியும்? தித்திப்பான சிற்றுண்டி சாப்பிட்ட ஊமையானவன், அதன் சுவையை எவ்வாறு பிறருக்கு எடுத்துரைப்பான். இறைவன் தரிசனம் பெற்றபக்தன் நிலையும் அவ்வகையானது.

பரபக்தன் இறைபித்தனாகி, தனக்கே உரிமையான மகிழ்ச்சியுடன் விளங்குவான். கடவுளைக் குறித்து பேசாமலும், பிரசங்கம் செய்யாமலும், வேறு வேலை எதுவும் செய்யாமலும் இருக்கக்கூடும். ஆனாலும் அவர் சமூகத்திற்குப் பெரும் உதவி செய்பவர்தான். பூமியில் அவர் நம்மிடையே வாழ்வதே மனிதவர்க்கத்திற்கு ஒரு பெரும் பாக்கியம். எந்த வித்தியாசமின்றியும் உலகெங்கும் ஒளி வீசும் சூரியனைப் போன்றவர். மின்சார விளக்கை உபயோகிக்க, எவ்வாறு அனேக கருவிகள் தேவையோ அதைப்போலவே, பிரசாரம் செய்யும் துறவிக்கும், இறைபணி இயற்ற வேண்டி, அவர் சொற்படி நடக்கும் நம்பிக்கை மிகுந்த சிஷ்யர்களும் தேவைதான்.

வேதத்தை அறிந்த ஞானிகள், தங்கள் அனுபவத்தைத் தெரிவிக்க "ஹா! ஊ! ஹா! ஊ!" என்ற வார்த்தைகளை உச்சரித்து ஸாமவேதத்திலுள்ள துதிப்

பாடல்களைப் பாடினார்கள். உபநிஷத்தில் யாக்ஞ வல்கியர் கூறும் உறுதி மொழி என்னவென்றால், இந்த ஆத்மாவை "நேதி, நேதி" என்ற எதிர் மறை வார்த்தைகளாலேயே விவரித்துக் கூற முடியும் என்பது. மிகச்சிலருக்கேதான் இந்த முறையில் லக்ஷியத்தை அடைய முடியும்.

இதயம் தூய்மை பெற்றவருக்கே, இந்த ஆத்மா வுக்கும், அனாத்மாவுக்கும் (ஆத்மா அல்லாத பொரு ளுக்கும்) உள்ள மாறுபாட்டைத் தெரிந்து கொண்டு ஞானத்தைப்பெற முடியும். பெரும்பான்மை மக்க ளுக்கு, தியானிக்கத் தக்கதும், புரிந்து கொள்ளக் கூடியதுமான வார்த்தைகள் அவசியம். இவர்களுக் காகவே, தனிப்பரம் பொருளைக் குறித்தும் "ஸச்சி தானந்தம் ஸத்யம்—சிவம்—சுந்தரம்" என்ற சொற் களும், அழகான விக்ரஹங்களும் அமைத்தனர்.

இன்றும் அனேக முக்கியமான கருத்துக்கள் இந்த சூத்திரத்தில் காணப்படுகின்றன.

(1) ஞானிகளின் பெருமையைத் தெரிந்து கொள்ள உலக ரீதியான அளவு கோலைக்கொண்டு அளவிடக் கூடாது. சில ஞானிகள் குழந்தைகளைப் போலவும், பைத்தியக்காரனைப் போலவும், பிசாசு போலவும் நடிக்கக்கூடும், இதனால் தவறான அபிப் பிராயம் கொள்ளக்கூடாது. ஞானிகள் பயித்தியம் பிடித்தவர்போல் காணப்படலாம். ஆனால் பயித்தியம் பிடித்தவர்கள் ஞானிகள் அல்ல.

(2) இந்த ஞானிகள் செய்வதைப்போல் நாமும் நடிக்கக்கூடாது. இந்த ஜன்மத்திலும் முற்பிறப்பு

களிலும் அவர்கள் செய்த ஸாதனைகளை நாம் அறிய மாட்டோம்.

(3) குறுக்கு வழியைப்பின் பற்றி, தியானத்தில் அமர்ந்திருக்க, மயக்கத்தைக் கொடுக்கும் ஒயின், கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்களை உப யோகிக்கவே கூடாது. பெரிய சிந்தனையாளர்களும் "தியானத்துக்கு உதவும் என்று எண்ணி, இந்த லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கலாம் என்று பரிந்து பேசு வது வருந்தத்தக்கது. அவை தற்காலிகமாக உற்சாகம் ஊட்டினுலும், நமக்கு மனத்தூய்மையைத் தராது. நமது உள்ளம் தூய்மை அடையும் வரை, நமக்கு இறைவன் தரிசனம் கிடைப்பதும் அரிது. குருதேவர் சொற்படி, நாம் சுயநலமற்ற சேவை, பிராணுயாமம், கீர்த்தனம், ஜபம் முதலானவைகளைச் செய்து கஷ்டப் பட்டு உழைத்து ஊக்கத்துடன் நம்மை பக்குவப்படுத் திக் கொள்ள வேண்டும்.

சூத்திரம் 7

''ஸாநகாமயமாணு நிரோத ரூபத்வாத்''

கருத்து :—பக்தி ஆசையைப் போன்றதல்ல. ஏனென்ருல் அது தியாகத்தைப் போன்றது.

இது பக்தியின் தன்மையை மேலும் விவரித்துக் கூறுவதனுல், இதை மூன்ருவது சூத்திரத்திற்குப் பிறகு கூறியிருக்கலாம். ஆனுல் பாரத தேசத்து ரிஷிகள் மனோதத்துவ நிபுணர்கள். விளம்பரம் செய் வதிலும் சிறந்தவர்கள். பக்தியின் விரிவுரைகள் இரண்டு கூறிய பின்பு, இந்த விஷயத்தை வீட்டு வேறு

பேச்சைத் துவக்கி வைத்து, அதனுல் விளையும் மேன்மையான பலன்களை நாரதர் கூறுகின்ருர்.

உலக மக்களே! வாருங்கள்! வாருங்கள்! பக்தியைப் பெற்று விட்டால், நீங்கள் துன்பத்தைக் கடந்து அமர வாழ்வு வாழ்வீர்கள்! என்று நாரதர் அழைக்கிருர். இதைக் கேட்டதும், மக்கள் மிகுந்த ஆசையுடன் அவரைச்சுற்றிக்கூடி விட்டார்கள். அப்போது நாரதர், கண்டிப்பான ஒரு எச்சரிக்கையை மெதுவாக அவர்கள் உள்ளத்தில் பதிய வைக்கிருர்.—"நீங்கள் வைராக்கியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆசையை அகற்ற வேண்டும்." இன்னும் இவை போன்றவை.—குருதேவரும் இதே வழியைப் பின்பற்றுகிருர். ஜனங்களை எவ்விதத்திலும் பயமுறுத்தாமல், வெகு சீக்கிரத்தில் இறைவன் தரிசனம் பெற முடியும் என்று ஆசை காட்டி சன்மார்க்க வாழ்க்கை நடத்தும்படித் தூண்டி விடுகிருர். உண்மையை அறிய ஆசையுள்ளவன், தன் வலையில் அகப்பட்டதும், தட்டான் வைரக் கல்லை சீர்படுத்த எவ்வாறு துண்டிக்கவும் தேய்க்கவும் செய்கிருனே அவ்வழி கையாளப்படுகிறது.

"ஸாந காமயமாறு" காமம் இருக்குமிடத்தில் ராமன் இருப்பதில்லை. ராமன் இருக்குமிடத்தில் காமம் இருப்பதில்லை.' என்று துளசிதாஸர் சொல்கிருர்.

அவித்தை, காமம், கர்மம்—இவைகளே, கடவுள் நம்மை ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்தும் உலகத்துக்குப் பொதுவான மூன்று பிரிவுகள். முதலாவது அவித்தை என்னும் அஞ்ஞானத்திரை. இந்த அஞ்ஞானத்தின் காரணமாக ஜீவன், தன்னைக் குறைபாடு உள்ளது

என்றும், ஓர் அளவுக்கு உட்பட்டது, துக்கப்பட்டு மடியக்கூடியது என்னும் கற்பனை செய்கிறது. தன்னிடத்திலேயே இயற்கையாக அமைந்திருக்கும் பேரானந்தத்தையும், சாந்தியையும் வெளிப்பொருள்களில் தேடுகின்றது. அப்போது காமம் (பொருள்களின் மீது ஆசை) உண்டாகிறது. காமத்தை நிறைவேற்ற கருமங்களில் ஈடுபடுகின்றது. இம் மூன்று சுவருள்ள ஒரு சிறையில் ஜீவன் அகப்பட்டுக்கொண்டது.

இந்த அறையில் திறக்கும் வழிகள் மூன்றே உள்ளன. இம் மூன்று வழிகளும் நரகத்துக்கே அழைத்துச் செல்லுகின்றன. இதில் அடைப்பட்டவன் அம்மூன்று வழிகளையும் தாண்டிச் செல்வது மிகவும் கடினம். ஏனென்றால், அவை மனிதனை ஆசை காட்டி, மயக்க வைத்து, வாழ்வைக் கெடுத்து விடும். அவை, காமம், குரோதம், லோபம் என்பவை. புத்தியுள்ளவன் இவைகளில் சிக்காமல் இம்மூன்று சுவர்களையும் உடைத்தெறிந்து வெளியே வருவான். இதற்குத் தன்னடக்கம் மிகவும் அவசியம்.

பக்தி, தியாகத்தன்மையைப் போன்றது. 'நிரோத' என்பது, பதஞ்சலி மஹாரிஷி ராஜயோகத்தில் குறிப்பிடும் அடிப்படையான வார்த்தைகளில் ஒன்று. 'யோகம்' என்பதை 'சித்தவ்ருத்தி நிரோத' (மனதில் எழும் எண்ணங்களைக் கட்டுப்படுத்தல்) என்று விவரித்துக் கூறுகிறார். மேலும்,

"அப்யாஸ வைராக்யாப்யாம் தன்நிரோதஃ"

(அவைகளை அப்யாஸத்தினாலும், வைராக்யத்தினாலும் கட்டுப்படுத்த முடியும்) என்று உரைத்தார்.

மனம் இரண்டு வேலைகள்தான் செய்யும். விக்ஷேப சக்தியினால் வெவ்வேறு பொருள்களைச் சிந்திப்பது, அல்லது ஆவரண சக்தியினால் தூங்குவது. விக்ஷேப சக்தி, வெளிப்புறம்பாக விழித்துக்கொண்டிருக்கும் நிலையிலாவது, அல்லது உட்புறமாக கனவு நிலையிலாவது இருக்கும். அதனால் சாதாரணமாக நான்காவது ஒரு உணர்வு நிலைக்கு வருவது முடியாது. இது, மனதில் எழும் எண்ணங்களை அடக்க முயற்சி செய்பவனுக்கு ஏற்படும் ஒரு பிரச்னை. மனது நினைக்கும் அல்லது தூங்கும். இதைத் தவிர வேறு நிலை ஒன்றும் தெரியாது. இதற்காகவே, முதலாவதாகக் கற்றுக்கொள்ளும் மாணவர்களைப் போன்றவர்களுக்கு ஒரு சிலை அல்லது மந்திரம் மிகவும் அவசியமாக ஏற்பட்டது.

மனம் ஏன் வெளிப் பொருள்களை நாடிச் செல்கிறது? இது ஆசையினால் ஏற்படுவது என்பதை முன்பே தெரிந்து கொண்டோம். இதை வைராக்கியத்தால் அடக்கவேண்டும் அல்லது தூயதாக மாற்ற வேண்டும். மடத்தனமாக, உபயோகமற்ற வைராக்யம் கொண்டு பலவந்தமான அடக்கு முறைகளைக் கையாளுவதால் எதிரிடையான பலன் விளையக்கூடும். அதனால் குருதேவர் விவேகபூர்வ வைராக்யம் (விவேகத்தினால் ஏற்படும் வைராக்யம்) பயிற்சி செய்ய வேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறார்.

ஆவரணம் (அஞ்ஞானத்திரை) விடாப் பயிற்சியினால் கிழித்து எறியப்படும். ஸ்ரீ கிருஷ்ண பகவானும் பதஞ்சலி மஹாரிஷியும், இந்த மனதை அடக்குவது கடினம் என்பதை அறிவார்கள். அதனால் விடாப்

பயிற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். நிரோத ஸம்ஸ்காரங்களை பயிற்சி செய்ய வேண்டு மென்று பதஞ்சலி கூறுவர். தன்னடக்கம் நமது வழக்கம் ஆகவேண்டும். நினைவுக்கு எட்டாத காலத்தி லிருந்து, ஒவ்வொரு பிறப்பிலும் நமது கருத்துக் களுடையவும் ஆசைகளுடையவும் நுட்பமான காம ஸம்ஸ்காரங்கள் இம்மனத்தில் குவிந்திருக்கின்றன. இப்பேராசையை ஒழிக்க வேண்டுமானால், இதை எதிர்க்கத் தகுந்த சக்தியுள்ள ‘நிரோத—ஸம்ஸ்காரங் களை’ வளர்க்க வேண்டும்.

நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் மெய் யுணர்வு (இறைவன் தரிசனம்) பெறுவதற்கு முன், இந்த ஆசையை முற்றும் ஒழித்துவிட முடியாது. இதை ஸ்ரீ கிருஷ்ண பகவான்,

‘‘விஷயாவி நிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹினஃ
ரஸவர்ஜ்யம் ரஸோப்யஸ்ய பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே.

(இந்திரியங்களை அடக்கினால் மனம் விஷயங்களில் செல்லாமலிருக்கும். ஆனால் பரம்பொருளைக் கண்ட பிறகுதான் பொருள்களின் ருசியும் ஒழிவடைகிறது.)

‘தன்னடக்கம்’ என்னும் பாதையில் செல்லும் போது, நாம் ‘ஆயுள் முடியும் வரை’ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று குருதேவர் சொல்வது நினை வுக்கு வருகிறது.

சூத்திரம் 8.

"நிரோதஸ்து லோகவேத வ்யாபாரான்யாஸஃ"

கருத்து:—'ஆசைகளை அடக்குதல்' என்றால் உலக சம்பந்தமான வேலைகளையும் கருமங்களையும் கடவுளுக்கே அர்ப்பணம் செய்வது.

துக்கமும் சாவும் நிறைந்த இவ்வுலகில் நாம் தள்ளப்படுகிறோம். அவர் படைத்த இவ்வுலகத்தை இறைவனே "துக்காலயம்—அசாச்வதம்". (துன்பம் மிகுந்த நிலையில்லா வீடு) என்று உரைக்கின்றார்.

இறைவனே இந்த வீட்டைக்கட்டி யிருப்பதால், அவர் சொன்ன வர்ணனை சரி எனக்கருத வேண்டும். வெளியே செல்லும் சுபாவமுடைய மனதை சிருஷ்டி கர்த்தா நமக்குக் கொடுத்தான், என்று கதோபநிஷதில் யமதர்ம ராஜன் கூறியிருக்கிறார். கீதையில்

'அநித்யம் அஸுகம் லோகம் இமம்ப்ராம்ய பஜஸ்வமாம்'

(துக்கமுள்ளதும், நிலையற்றதுமான உலகில் பிறந்தால் என்னையே வணங்கு) என்று உரைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மனது இறைவனை நாடுவதில்லை. வெளிப்பொருள்களில் ஆனந்தத்தைத் தேடுகிறது.

இக்காரணத்தால் தன்னடக்கம் (நிரோதம்) மிகவும் அவசியம் எனப்படும். எவன் தன்னுடைய பார்வையை, தன்னுள்ளே திருப்பப் பிரயத்தனம் செய்கிறானோ அவனை யமதர்மராஜன் ஒரு தீரன் என்று அழைக்கிறான். நாம் ஒவ்வொருவரும் தீரன் ஆவதற்குப் பாடுபட வேண்டும். மனது வெளிப்பொருள்

களில் எந்த ஆனந்தத்தைத் தேடிச் செல்லுகின்றதோ அந்த ஆனந்தத்தை நம் முள்ளே உறையும் ஆத்மா வில் காணவேண்டும்.

'ந்யாஸ' எனும் வார்த்தைக்குப் பல பொருள்கள் கூறலாம். தியாகம், சகிப்புத்தன்மை, சரியாக நிர் ணயம் செய்தல், அர்ப்பணம் செய்தல், இவை எல்லாம் 'ந்யாஸ' எனும் வார்த்தையால் குறிக்கப்படுகின்றன. பரபக்தன், இவ்வுலகிலும் வானுலகிலும் அடையக் கூடிய பலன்களைக் கொடுக்கும் எல்லா தருமங்களையும் உதறித்தள்ளிவிட்டு இறைவனோடு ஒன்ருன நிலை யாகிய பேரானந்தத்தில் எப்போதும் மூழ்கியிருப்பான்.

உலக நன்மைக்கான கர்மங்கள் செய்வதற் காகவோ, மக்கள் நன்னெறியைக் கடைப்பிடிக்க உதவி செய்யவோ, அல்லது தன்னுடைய பிராரப்த கர்மம் முடிவடைவதற்காகவோ, இந்த பரபக்த னுடைய உடல் நலன்களைக் கடவுளே கவனித்துக் கொள்கிருர். இது தன்னடக்கத்தின் எல்லை. (பூர்ண மான நிரோதம்).

உலக சம்பந்தமான அல்லது மத சம்பந்தமான சூழ்நிலையில் வாழ்வதால் தவிர்க்க முடியாத கர்மங் களில் ஈடுபட்ட ஒரு புண்ணிய புருஷன் இதற்கு ஒரு படி கீழே நிற்கிருன். இவன் கடவுள் இச்சைக்குக் கீழ்ப்படிந்தும், அவரையே சரண மடைந்தும் "நான் உன்னுடையவன், எல்லாம் உனது, இறைவா! உன் இச்சைப்படி நடக்கட்டும்" என்று பிரார்த்தனை செய் வான். அவன் வேலை செய்தாலும் கடவுளின் ஒரு

கருவியாகவே நினைப்பான். இவனிடத்திலும் தன்ன டக்கம் (நிரோதம்) முயற்சியில்லாமல் ஏற்படுகின்றது.

இந்நிலைக்கு வராத மனிதனும், ராகத்-வேஷம் என்ற இரு சக்திகளுக்கு வசமானவனும், உலக விஷ யங்களில் ஈடுபட்டிருப்பான். இவன் தன்னடக்கம் பழக வேண்டுமானால் எது முக்கியம் எது முக்கியம் அல்ல என்பதை பகுத்தறிவோடு ஒவ்வொரு காரியங் களையும் உணர்ந்து அதற்குத்தக்க மதிப்பைக்கொடுக்க வேண்டும். மெய்ஞான வளர்சிக்கு உதவும் செய்கை களே முக்கியம் என்றெண்ணி அவைகளுக்கு முதன் மையான இடம் கொடுத்து, மற்ற வேலைகளை வாழ் வில் தவிர்க்க முடியாதவை என்று எண்ணி செய்ய வேண்டும். தவறான வழியில் செல்லாமல் காத்துக் கொள்ளவும், தன்னடக்க முறையைக் கடைப் பிடிக் கவும் இவர்கள் சிறிது முயற்சி செய்தாக வேண்டும்.

இன்னும் சிலர் ரஜோ குணத்துக்கும் தமோ குணத்துக்கும் கட்டுப்பட்டிருந்தாலும், பக்தி மார்க் கத்தில் ஈடுபட்டிருப்பார்கள். இவர்கள் என்ன செய்ய வேண்டும்?

இவர்கள் கருமங்களைச் செய்த பின் அவைகளை இறைவனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். அதா வது "கிருஷ்ணார்ப்பணமஸ்து" கருமங்களையும் கரும பலன்களையும் இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

இதுவும் 'தன்னடக்கம்' கைகூடுவதற்கு வழிகாட் டும். கடவுளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டிய

கருமங்கள் புனிதமானவையும் மேன்மையாகவும் இருக்க வேண்டும் என்ற உணர்ச்சி மெதுவாக வளரும்.

“லோகவ்யாபாரம்—வேதவ்யாபாரம்” என்ற இரண்டுக்கும் வித்தியாசம் இருப்பதாக நாரதர் கூற வில்லை. ‘வ்யாபாரம்’ என்ற வார்த்தைக்கு விசேஷ அர்த்தம் உண்டு. அது பலனை எதிர்பார்த்து சுயநலத் தோடு செய்யும் கிரியைகள் என்பதைக் குறிக்கும். ‘லோகவ்யாபாரம்’ என்றால் உலகப்பொருள்களுக்கு ஆசைப்பட்டுச் செய்யும் கிரியைகள். ‘வேதவ்யா பாரம்’ என்றால் சுவர்க்கத்திற்குப் போகவும் அந்த இன்பங்களை அனுபவிக்கவும் ஆசைப்பட்டுச் செய்யும் கிரியைகள். இறைவன் கீதையில் சொன்னபடி, நல்ல கருமங்களைச் செய்து சுவர்க்கத்திற்குப் போனவர் களும் இன்பத்தை அனுபவித்து, புண்ணிய பலன் தீர்ந்ததும், திரும்பவும் இவ்வுலகத்திற்கு வந்து விடு வார்கள். நாம் வேதத்தையும் தாண்டிச் செல்ல வேண்டும் என்பது நாரதர் கருத்து.

(த்ரைகுண்ய விஷயா வேத நிஸ்த்ரை குண்யோ பவார் ஜுனு.) சுவர்க்கத்தில் வாழும் தேவர்களாகப் பிறப்பதைவிட மானிட ஜன்மமே சாலச் சிறந்தது என்று ரிஷிகளும் ஞானிகளும் உரைப்பர். ஏனென்றால், தேவலோகத் தில் இன்பங்களை அனுபவிக்கும்போது வைராக்கிய மும் விடுதலைபெற வேண்டுமென்ற ஆசையையும் விருத்தி செய்ய முடியாது! இறுதியான விடுதலை பெற வேண்டுமானால் இவ்வுலகில் திரும்பி வந்து மனி தனாகப் பிறந்தே ஆகவேண்டும்.

ஸூத்திரம் 9.

"தஸ்மின் அனன்யதா தத்விரோதிஷு உதாஸீனதாச"

கருத்து :—'விரோதம்' என்றால், இறைவனிடம் ஒரு மனப்பட்ட பக்தியும் அவனுக்கு எதிரான பொருள்களிடம் அலக்ஷியமும், என்று பொருள்படும்.

அனன்ய பக்தி ஒன்றுதான் தன்னடக்கம் பெற உதவி செய்யும். இறைவன் ஒருவனே நமக்குத் தேவையாக வேண்டும். அப்போதுதான் வெளிப் பொருள்களில் செல்லும் மனதைத் தடுக்க முடியும்.

அனன்ய பக்தியை விருத்தி செய்ய ஸ்ரீ கிருஷ்ண பகவான், கீதையில் சில யோகமார்க்கங்கள் கூறியிருக்கிறார். இவை ஸாதகனை உயர்த்தி கடவுளை அருகில் வரச்செய்யக் கூடியவை.

கீதையில் 'விபூதி யோகத்தில்' இதைக் குறித்துச் சொல்லப்படுகிறது. நாம் எப்போதும் இறைவனை நினைத்து தியானம் செய்ய, நம்மைச் சுற்றிலும உள்ள நல்ல பொருள்களை எல்லாம் அவருடைய உருவமாகப் பார்க்க வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகின்றார். இவைகளுடன் கெட்டவனும் சேர்க்கப்படுகிறான். வாழும் பொருள்களுக்கெல்லாம் அடிப்படையான வஸ்து கடவுள் ஒருவர்தான். அதனால் கெட்டவனும் தன் இதயத்தில் கடவுள் உருவமே ஆவான்.

"யத்யத் விபூதி மத்ஸத்வம் ஸ்ரீமதூர் ஜிதமேவவா
தத்ததேவ கச்சத்வம் மமதேஜோம்ச ஸம்பவம்."

என்று கீதையில் சொல்லப்படுகிறது.

ஸத்வகுண முடையவர்கள், பண்க்காரர், (மனோ பலம், சரீரபலம், இச்சை) பலம் உள்ளவர்களையும் கடவுளின் உருவமாகவே கருதவேண்டும். படிப்படியாக, எல்லாவற்றிலும் இறைவனே உறைபவன் என்பதை நாம் உணர்வோம். எவரிடத்தும் கடவுளைக் காண்பது என்றால், எல்லாவற்றிலும் எப்போதும் கடவுள் உறைவதை, உணரவேண்டும். இதுவே "அனன்ய பக்தி".

கீதையில் 12-ஆவது அத்தியாயத்தில், இறைவனை நம் அருகில் வரவழைக்கும் வழிகள் வகுத்துக் கூறப் படுகின்றன.

"ஏது ஸர்வாணி கர்மாணி மயிஸன்யஸ்ய மத்பராஃ
அனன்யேனைவ யோகேன மாம் த்யாயந்த உபாஸதே."

இவ்விதமான அனன்ய யோக முறையில் இறைவனிடம் மனதைச் செலுத்தியவர்களை அழிவுள்ள ஸம்ஸார க்கடலில் இருந்து விரைவாக இவர் கரையேற்றுகிறார். அதனால்,

"மையேவ மன ஆதஸ்வா மயிபுத்திம் நிவேசய
நிவஸிஷ்யஸி மய்யேவ அதோ ஊர்த்வம் நஸம்சயஃ"

"மனதையும் புத்தியையும் என்னிடம் இருத்து." என்றுரைத்தார். மனதை அடக்குவது எவ்வளவு கடினம்! உண்மையில் நம் இச்சையினால் எதுவும் செய்யவில்லை. கிரியைகளைச் செய்வதற்கு நாம் உந்தித் தள்ளப்படுகிறோம். நம் எண்ணங்களே நமக்குத் தெரிவதில்லை. மனதில் தோன்றும் ஒவ்வொரு நினைவாகிய அலையுடன் ஒன்றாகி விடுகிறோம். மனதையும், மனதில் தோன்றும் எண்ணங்களையும் வேறாக

நினைத்து, அவைகளுடன் சேராமல் விலகி நிற்கவேண்டும். அப்போது தான் மனதை சரியாக அடக்க முடியும். மனம், நம் கையில் அகப்பட்டு நம் இச்சைப்படி ஆடும் பொருள் அல்ல! ஆனால் அது நாம் அடைபட்டுக் கிடக்கும் ஒரு சிறை போன்றது.

அதனால், இது கடினமா யிருந்தால், அடுத்த படியாக,

"அத்சித்தம் ஸமாதாதும் நசக்னேஷி மயிஸ்திரம்
அப்யாஸ யோகனே ததோ மாமிச்சாப்தும் தனஞ்சய."

(உன்னால் இது முடியவில்லையானால் என்மேல் ஆசை வைத்துக்கொள்ள பழகிக்கொள்.) என்று சொல்கிறார். இப்பாடல் நம்மை உருக வைக்கிறது இறைவனிடம் பேரன்பு கொள்ள வேண்டுகிறார் போலும். "தயவு செய்து என்னிடம் அன்புகொள்ள முயற்சி செய்யுங்கள்" என்று கூறுகிறார்.

இதுவும் அவ்வளவு சுலபமானதல்ல. நமது மனதில் இருக்கும் வாசனைகளும் ஸம்ஸ்காரங்களும் மனதை மறைத்து, திரும்பத் திரும்ப இந்திரிய சுகங்களை அனுபவிக்கத் தூண்டுகின்றன. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாமல் தடுத்து விடுகின்றன. பக்தியாகிய பூஞ்செடி வளருவதற்கும் இடம்கொடுப்பதில்லை. இறைவன் இன்னும் ஒருபடி கீழே வந்து,

"அப்யாஸே அப்ய ஸமர்த்தோஸி மத்கர்ம பரமோ பவ
மதர்த்தமபி கர்மாணி குர்வன் ஸித்திமவாப்ஸ்யஸி"

"இதுவும் உன்னால் முடியாது போனால் எல்லாக் கருமங்களையும் எனக்காகச் செய், இம்முறையிலும் நீ பூர்ணத்தன்மை பெறலாம்."

"ரஜோ குணத்திற்கும் தமோகுணத்திற்கும் வசமாய் எப்போதும் கருமங்கள் செய்பவனுக இருந்தால் நீ செய்பவை 'என் பொருட்டாக என்றும், என்னுடைய வேலைகளை நீ செய்கிருய் என்றும், எண்ண வேண்டும்." என்பதாக ஸ்ரீ கிருஷ்ண பகவான் உரைத்தார். இதுவும் அடிக்கடி கடவுள் சிந்தனையில் ஆழ்த்தி முடிவில் கெட்ட ஸம்ஸ்காரங்களை அகற்றி மனதை ஸத்வகுணம் உடையதாகச் செய்யும். சரியான மனோபாவனை வரவொட்டாமல் தடுத்து, சுயநலமான காரியங்களைச் செய்ய வற்புறுத்தக்கூடிய அளவுக்கு இந்த ஸம்ஸ்காரங்கள் பலமுள்ளதாக இருக்கும். அப்போது,

"அதைததப்ய சக்தோஸி கர்த்தும் மத்யோக மாச்ரிதஃ
ஸர்வகர்ம பலத்யாகம் ததஃகுரு யதாத்மவான்"

"இதுவும் உன்ருல் இயலாது என்ருல் கருமங்களைச் செய்தபின், அவைகளையும் பயனையும் எனக்கு அர்ப்பணம் செய்வாய்." எனவும் கூறினுர். சிற்றின்பங்களில் ஆசையை நிறைவேற்றினதும், ஒரு சிறிது நேரம் திருப்தி ஏற்படும். அந்நேரத்தில் மனச்சாந்தியுடனும் ஆசையாகிய அலைகள் (அதாவது அதற்கு அடுத்த வேருெரு ஆசை) எழுவதற்கும் முன்பாக இறைவனை நினைத்து நமது கருமங்களையும் பயன்களையும் அவனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும். இது எவருக்கும் செய்ய முடியும். சாதாரண மனிதன் நிலைக்குக் கடவுள் இறங்கி வந்து இங்கே இருந்து நம்மைத் தூக்கி விட முயற்சி செய்கின்ருர். அவருடைய கையைப்பற்றிக் கொண்டால் நம்மை ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றி அவர் மடியின் மேல் வைத்துக்

கொள்வார். படிப்படியாக பக்தி வளரும்போது தன்னடக்கமும் கூட வளரும்.

"தத்விரோதிஷு—உதாஸினதா".

'தத்விரோதி' என்பதற்கு பக்தியின் எதிரிகள் அல்லது கடவுளின் விரோதிகள் என்ற கருத்துக் கொள்ளலாம்.

இந்த விரோதிகள், உட்புறமாகவோ வெளிப் படையாகவோ இருப்பவை. உட்புறத்திலுள்ள எதிரி கள் அசுத்த மனதின் இயற்கை குணங்கள். பக்தி மார்க்கத்திலிருந்து வேறு வழியாகத் திருப்பும் சக்தி யுள்ளவர்களும் கெட்டவர்களும் வெளி விரோதிகள் ஆவர்.

இவர்களை நாம் நேராக எதிர்த்துப் போர் செய் யும்படி இறைவன் சொல்லவில்லை. காமம், குரோதம், லோபம், மோகம், மதம் முதலிய உட்புறமான எதிரி களை நேராக எதிர்த்து வெல்வது கடினம். ராமா யணத்தில், வாலியின் கதையிலிருந்து ஒருநீதி தெரிந்து கொள்ள வேண்டும். சில தீய சக்திகளுக்கு அதிசய மான ஒரு திறமை உண்டு. அவைகளை எதிர்க்கும் போது, விரோதியின் பலத்தில் பாதி அவைகளுக்குக் கிடைத்து விடுகின்றது. (வாலி அனுபவித்த வரமும் இதுவேதான்.)

நமது உட்புறமான எதிரிகளும் இத்தன்மை வாய்ந்தவை. இவைகளை நினைக்கும்போது இவை களுடைய பலம் அதிகமாகி விடும். நாம் எதிர்க்கும் போது இவை மறைந்திருந்து, நாம் சிறிது தளர்ந் திருக்கும்போது அதிக பலத்துடன் நம்மை எதிர்த்து வருகின்றன. இவ்வெதிரிகளை வெல்வதற்கு அவை

களுக்கு நேரிடையான நற்குணம் பழகவேண்டும் என்று கூறுகிறர். குருதேவர் வேறு ஒரு வழியும் சொல்லுவார். மனதில் கெட்ட எண்ணங்களே தோன்ருமலிருக்க, எப்போதும் பொதுமக்கள் நலனைக் கருதி சுயநலமற்ற சேவை செய்ய வேண்டும் என்பர். அவ்வாறு செய்தால் அவை தாஞகவே மறைந்து விடும்.

வெளியே காணப்படும் எதிரிகளை நீக்கி, நல்லோர் இணக்கம் நாடவேண்டும். நாஸ்திகர்களோடு நாம் வீண் வாதங்களில் ஈடுபடக்கூடாது. பிரார்த்தனை யினலும், நமது வாழ்க்கையை நேர்மையாக அமைப்ப தனுலும் அவர்களை மாற்ற முடியும்.

இவ்விதமாக நாம் தன்னடக்கம் பெறலாம். ஒன்று நேர் வழியைக் கடைப்பிடித்து, எப்போதும் இறைவனை சிந்தித்து இருப்பதும், வேருென்று பக்தியில்லாதவரிடம் அசிரத்தையாக இருப்பதும் ஆகும்.

சூத்திரம் 10.

"அன்யாச்ரயாணும் த்யாகோ அனன்யதா"

கருத்து:—வேறு ஆதாரங்களைத் துறப்பதே ஒருமை பக்தி.

நமது மனம் ஏதாவது ஒன்றை பற்றிக்கொண்டு தான் இருக்கும். ஒரு இன்ப மூட்டும் பொருளிலிருந்து மற்ருென்றுக்குத்தாவும். அடுத்த பொருள் கையில் எட்டினுல் தான் இன்பம் பெற முடியும் என்ற உணர் வோடு இருக்கும். இதிலிருந்து ஆத்மாவின் நமது இயற்கையான குணம் பேரின்பம் என்பது தெரிய

லாகும். அதனுல் பூர்ண இன்பம் பெறும் வரையில் மனதுக்கு ஓய்வு கிடையாது. சாசுவதமான திருப்தியும், நிலையான இன்பமும் எப்பொருளும் கொடுக்காது. பொருள்களிடம் (விஷயங்களில்) இன்பம் இல்லை. இந்திரிய விஷயங்களில் பெறும் இன்பம் உண்மையாக அப்பொருள்களிலிருந்து கிடைப்பதன்று. ஆனுல் நம் அகத்தே உறையும் ஆத்மாவிலிருந்து கிடைப்பது. நாம் ஆசைப்பட்ட பொருள் கிடைக்கப்பெற்று அவ்வின்பம் தீர்ந்த பிறகும், மனதில் வேறு ஒரு இச்சை தோன்றுவதற்கு முன்னும், ஒரு இடை நேரம் உண்டு. அத்தருணத்தில் மனம் களைத்து உள்ளே ஒடுங்குகிறது. நாம் சாந்தியையும் சந்தோஷத்தையும் அடைகிருேம். வேறு ஒரு பொருளுக்கு ஆசை எழும்போது திரும்பவும் மனம் அமைதியற்று விடும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது சாந்தியும் சந்தோஷமும் ஆத்மாவில் கிடைப்பதே யல்லாது, பொருள்களில் (விஷயங்களில்) கிடைப்பதன்று என்பதாகும்.

நேர்மையான ஒரு பக்தன் தன் மனதுக்கு இவ்வுண்மையை எடுத்துரைப்பான். அப்போது இயற்கையாகவே மனம் பொருள்களில் இன்பத்தை நாடிச் செல்லாது.

"ஆதாரங்களைத் துறத்தல்" என்ருல் நாம் பக்தி மார்க்கத்தில் செல்வதற்கு உதவி செய்தவர்களைத் துறப்பது என்று நினைத்துவிடக் கூடாது. "குருவும் ஒரு துணை அல்லவா? அவரையும் துறந்து விட வேண்டும் என்று நாரதர் சொல்லவில்லையா?" என்று

கேட்கலாம். அது தவறு. மெய்ஞானப் பாதையில் குருவின்றி நம்மால் ஒன்றும் இயலாது.

உணவு உடை இருப்பதற்கு ஓர் இடம் இவையெல்லாம் நமக்கு அவசியமாக இருக்கிறது. இவை முடவனுக்கு நடக்க ஆதாரமான கொம்புகளைப்போலாகும். திடீரென்று இவைகளை நம்மால் துறந்துவிட முடியாது. உணவு கிடைத்தபோது புசித்தும் மரத்தின் நிழலில் ஓய்வு எடுத்தும், அரை நிர்வாணமாகத் தோன்றும் உடையும் பெற்று திருப்தியுடன் வாழ்வதற்கு, நமக்குத் தீவிர வைராக்யமும் மன உறுதியும் வேண்டும். இவைகள் எல்லாம் முடவனுக்கு உதவும் கொம்புகளைப்போல் அமைவதாக கருதினால், குருவின் துணை நமக்கு வழி காட்டி விளக்கு ஆகும். நமக்குத் துணையாக இருக்கும் கருவிகளைத் துறந்து விட்டாலும் நாம் நடக்கும் பாதையிலிருக்கும் விளக்கு இல்லாமல் நடக்க முடியாது. மிகவும் இருட்டான பாதைகளில் சென்று முன்பின் தெரியாத இடங்களுக்குப் போக வேண்டியிருக்கும். அப்போது குருவின் துணையே நமக்குத் துணை செய்யும். நாம் பக்தியில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்த போதும் குருவைத் துறப்பது சரியன்று. தவறி விழுந்து விடுவோம் என்றபயம் இறுதிவரையிலும் இருக்கும். இறைவன் தரிசனம் கிடைத்து அவருடன் ஒன்றான நிலையில் இருந்தாலும் இவ்வுடல் நீங்கும் வரை நாம் அதே நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் தவறி விழுந்து விடக்கூடும். மேலும் இறைவன் தரிசனம் கிடைத்து விட்டது என்பதையே ஒருவன் உணர மாட்டான்.

"உண்மையில் கடவுள் தரிசனம் பெற்றவனுக்கு அது கிடைத்ததாகவே தெரியாது. கடவுள் தரிசனம் கிடைத்தது என்ற உணர்வோடு எவன் இருக்கிருனே அவன் உண்மையில் அதை அறிந்தவன் இல்லை" என்று கேனோப நிஷதம் கூறும். ஆகவே எந்த நிலையில் இருந்தாலும் நாம் குருவைத் துறக்கலாகாது. பக்தனுக்குக் குருவும் கடவுளும் ஒன்று. அதனுல் நமக்குத் துணையான குருவைத் துறந்து விடக்கூடாது.

சூத்திரம் 11.

"லோகவேதேஷு ததனுகூலாசரணம்
தத்விரோதிஷு தாஸீனதாச"

கருத்து :—"பக்திக்கு விரோதமானவைகளை அலக்ஷியம் செய்தல் என்ருல் பக்திக்கு உகந்த லௌகிக கர்மங்களையும் வைதீக கர்மங்களையும் இயற்றுதல்."

'அலக்ஷியம் செய்தல்' என்பதன் பொருளை இன்னும் தெளிவாகச் சொல்லப்படுகிறது. இறை அன்பும் பக்தி யோகமும் பழகுவதற்கு எவை அனுகூலமாக இருக்கும் என்று நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். நல்லோர் இணக்கம் (ஸத்ஸங்கம்) பெற்று, கெட்டவர்களை விட்டு விலக வேண்டும். நம் இதயத்தில் பக்தி வளருவதற்கு இதுவே உகந்ததா யிருக்கும்.

துணை செய்வது எது என்று கருதுமிடத்து வெவ்வேறு யோகங்களுக்கும் வித்தியாசம் உள்ளது. ராஜ யோகி தனிமையை விரும்புவான். துணையாளர் குறையக் குறைய மனதை ஒருமைப்படுத்துதல் அவனுக்குச் சுலபமாயிருக்கும். ஆனுல் இதற்கு மாருக, கர்மயோகி

அதிக ஜனக் கூட்டத்தை நாடுகிறுன். அங்கே நோயாளிக்கும் ஏழை எளியவர்களுக்கும் துஷ்டர்களுக்கும் துன்புற்றவர்க்கும் நடுவே உழைக்கிறுன். அங்கே தான், கர்மயோகத்தின் அடிப்படையான சுயநலமும் அகம்பாவமும் இல்லாத தன்மையும், சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நடந்து கொள்ளும் திறமையும் பணிவு முதலான நற்குணங்களும் பழகுவதற்கு வசதியாக இருக்கும். ஒருவன் வீட்டில் இருந்து கொண்டே தன்னுடைய வீட்டு வேலைகளையும் உத்யோக சம்பந்தமான வேலைகளையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்யும் கர்மயோகியாக இருக்கலாம். ஆனல் ஏழை எளியவர்க்கும் துன்புற்றவர்க்கும் பணிவிடை செய்வதில் நிஷ்காம்ய கர்மயோகி தனக்கு வேண்டிய இன்பத்தை அடைகிறுன். ஞான யோகியும் பக்தனும் அவரவருக்குத் தகுந்த ஸத்ஸங்கத்தை நாடிச்செல்கின்றனர்.

இவ்வாறு பக்தனும் சாஸ்திர ரீதியாக கர்மங்களையும் உலக சம்பந்தமான வேலைகளையும் செய்யும்போது இறைவனிடம் பேரன்பு கொள்ள எவை உதவுகின்றனவோ அவைகளைச் செய்வான். தனக்கு இறைவனிடம் இருக்கும் நம்பிக்கையை அதிகமாக்கும் சந்தியா வந்தனம், ஹோமம் (ஆரிய சமாஜத்தார் ஒவ்வொரு நாளும் செய்வது) இவை போன்ற வேறு கிரியைகளையும் விட்டுவிட மாட்டான். "யக்ஞோ தானம் தப கர்மா நத்யாஜ்யம் கார்யமேவ தத்"—யக்ஞம், தானம், தபசு, இவைகளை விட்டு விடக்கூடாது, செய்தாக வேண்டும். என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகின்ருர். ஆனல் 'யக்ஞம்' எனும்போது 'ஞான யக்ஞம்' எல்லாவற்றிலும் மேலானது. என்று சிறப்பித்துக்

கூறுகிறார். ஞான தானம் சாலச்சிறந்தது. அதனால் இதை எப்போது எந்த இடத்தில் வசதியுள்ளதோ அங்கே அப்போது இந்த ஞானத்தை மற்றவரோடு சேர்ந்து பங்குகொள்ள வேண்டும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் 'தபசு' என்பதற்கும் வேறு புதிய கருத்துக் கூறுவர். உடலையும் அதனுள் உறைபவனையும் துன்புறுத்தும் முட்டாள் தனமான செய்கைகளைக் கண்டிக்கிறார். பேரன்பு வளருவதற்கு மூன்று விதமான தபசுகள் செய்யும்படி உத்தரவு விடுத்துள்ளார்.

"தேவத்விஜ குருப்ராக்ஞ பூஜனம் சௌசம் ஆர்ஜவம்
பிரம்மசர்ய மஹிம்ஸாச சரீரம் தபஉச்யதே"

நாம் கடவுளையும், அந்தணர்களையும், (பிறவியிலோ அல்லது ஸத்கர்மங்களைச் செய்வதால் அந்தணர்களாயிருக்கலாம். உதாரணமாக, வேதம் ஓதுதல், ஜபம், த்யானம், கீர்த்தனம், முதலான கர்மங்களைச் செய்பவர்) குருவையும், ஞானிகளையும் பூஜிக்கவேண்டும். இப்போது ஞானிகளைக் குறித்து ஒரு வார்த்தை. அறிவு எந்த வழியாக நமக்குக் கிடைத்தாலும் அதை வரவேற்கவேண்டும். அறிவாளிகளிடம் சில குணதோஷங்களைக் காண்பதால் அவர் சொல்லும் நல்லுரைகளை நம் அகங்காரம் தக்கவாறு ஏற்றுக்கொள்வதில்லை. நம்முடைய கர்வம் அவ்வுரைகளுக்கு மாசுகற்பித்து அவைகளில் காணும் ஞானத்தின் மேன்மையை உணராமல் செய்து விடுகிறது. அது நமக்குத்தான் நஷ்டம்.

காடுகள் வழியாக இருட்டு வேளையில் போகும் போது, விளக்கு வைத்திருப்பவன் நீசனாக இருந்தால், அவன் கையில் பிடித்திருக்கும் விளக்கின் ஒளியினால்

நன்மை அடையாமல் நமது கர்வம் தடுத்து விடுகின்றது. நாம் அந்த விளக்கின் ஒளியை நன்ருகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விளக்கை வைத்திருப்பவன் சூதாடும் இடத்திற்குப் போகக்கூடும். ஆனல் அங்கே அவனை விட்டுப் பிரிந்து நம்முடைய நல்வழியில் நாம் செல்ல வேண்டும். 'சௌசம்'—புறத்தூய்மையும் அவசியம். ஒரு நாள், தூங்கி எழுந்ததும் முகம் கழுவாமல் தியானம் செய்தும், மறு நாள் கை கால் முகம் சுத்தம் செய்த பின்பு தியானம் செய்தும் பார்த்தால் நமக்குப்புறத் தூய்மையும் எவ்வளவு அவசியம் என்பதை நன்ருகத் தெரிந்து கொள்ளலாம் அகத்தூய்மையைப்போல் புறத்தூய்மையையும் அவசியம் தான். கபட மற்ற ஒழுக்கம், புலனடக்கம், அஹிம்ஸை இவைகள் எல்லாம் சரீர சம்பந்தமான அனுஷ்டானங்கள்.

> "அனுத்வேக கரம் வாக்யம் ஸத்யம் பிரியஹிதம்சயத்
> ஸ்வாத்யா யாப்யஸனம் சைவவாங்மயம் தபஉச்யதே."

நாம் பேசும் வார்த்தை கோபமற்றதாக இருந்தால் மட்டும் போதாது. மற்றவர்களுக்குக் கோபம் வருவதாகவோ துன்புறுத்தக் கூடியதாகவோ இருக்கலாகாது. நமது வார்த்தைகள் பிறருக்குப் கோபமூட்டுவதாக இருந்தால் அந்த பாபத்தில் பங்கு கொள்கிரும். ஒருவருக்குக் கோபம் வரும்படிப் பேசுவதும் பாவமான செயல் நாம் பேசுவது உண்மையாகவும், இனிமையாகவும் நல்வார்த்தைகளாகவும் இருக்க வேண்டும். இம் மூன்றும் சேர்ந்தால்தான் உண்மை என்று சொல்லலாம். இதில் ஏதாவது ஒன்று குறைந்

தால் மௌனமாக இருப்பது நல்லது. ஜபமும், வேத நூல்களைப் படிப்பதும் "ஸ்வாத்யாயம்" ஆகும்.

"மனப்ரஸாத ஸௌம்யத்வம்மௌன மாத்ம விநிக்ருஹ:
பாவஸம் சுத்திரித்யேதத் தபோமான ஸமுச்யதே."

மன அமைதி, நல்லொழுக்கம், மௌனம், தன்னடக்கம், அகத்தூய்மை, இவை எல்லாம் மனதைச் சேர்ந்த அனுஷ்டானங்கள். மனம் அடங்கினால், வாக்கும் செயலும் அடங்கும்.

மனோபாவம் சரியாக இருந்தால், வார்த்தைகளும் செயல்களும் சரியாக இருக்கும். இதனால்தான் குருதேவர் "நல்லவனாக இரு, நல்லதைச் செய்" என்று வற்புறுத்திக் கூறுவர். இரண்டும் ஒன்றோடு ஒன்றை தழுவி நிற்பது. நாம் நல்லவனாக இல்லா விட்டால் நம்மால் நல்லதைச் செய்ய முடியாது. வெளி வேஷத்தோடு மட்டும் இருந்தால் எவருக்கும் பயனில்லை. நல்லவன் என்ற செயற்கையான வெளித்தோற்றம் நிலையாக நில்லாது. நம் இயற்கை குணம் நல்லதாக இருக்கவேண்டும். அப்போது தன்னடக்கம் தானாகவே அமையும்.

சாஸ்திரங்கள் வேறு விதமான அனேக அனுஷ்டானங்களை அனுமதிக்கின்றன. தபசு, ஸ்வாத்யாயம் ஈச்வரப்ரணிதானம் இவை எல்லாம் 'க்ரியாயோக' என்பர் பதஞ்சலி மஹாரிஷி. மெய்ஞானம் பெற அவாவுடையவன், யக்ஞம், தானம், தவம், இவைகளைத் துறந்து விடக்கூடாது என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகிறார்.

தபசு நம்மைத் தூய தன்மை பெறச்செய்யும். உபவாஸம் (உண்ணுவிரதம்) தபசின் ஒரு அங்கமாகக் கருதப்படுகிறது. உண்ணுவிரதம் எவ்வளவு நன்மை செய்ய வல்லது என்பதை வைத்தியர்களும் இயற்கை மருத்துவ நிபுணர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

நாம் உண்ணும் உணவை ஜீரணம் செய்ய உதவும் பிராண சக்தி, உண்ணுவிரதம் இருப்பதால் அவ் வேலையை விட்டு, முற்றும் ஒன்ருகத் திரண்டு நம் உடலை சீர்படுத்தி வைப்பதற்கு உதவுகின்றது. நோய்களைக் குணப்படுத்தவும் துணை செய்கின்றது. முமுக்ஷுக்கள் புலனடக்கத்தின் பொருட்டு உண்ணுவிரதம் இருக்கின்றனர். இரண்டு நாள் உபவாசம் இருந்த பின் கஷ்டமான பிரச்னைகளைத் தீர்க்க முடியும். மேலும் நரம்புகளுக்கும் நாடிகளுக்கும் அது நன்மை செய்கின்றது.

நாடிகளையும் நரம்புகளையும் தடை செய்யும் கண்ணுக்குத் தெரியாத சில இடையூறுகள் நீக்கப்பட்டு, பிராணசக்தி அவைகளில் சரியாகப் பாய்கிறது. புத்தியும் தெளிவாக இருக்கும். உணவை ஜீரணம் செய்யும் சக்தி வேறு முக்கியமான வேலைகள் செய்யப் பயன் படுகிறது.

உண்மை விரதம் இருப்பதை, "உபவாஸம்" என்பார்கள். 'உப-வாஸ' என்ருல் 'அருகில் வசிப்பது' என்பது பொருள். உண்ணுவிரதம் நம்மை இறைவன் அருகில் வசிக்கச் செய்யும். மனத்தின் ஸத்வகுணமும் வளரும்.

இஷ்ட தேவதைக்குப் பிரியமான நாட்களில் உபவாஸம் இருந்தால், வேறு அனேக நன்மைகளோடு

எப்போதும் இறைவனையே சிந்தித்து இருப்பதற்கும் அனுகூலமாக இருக்கும்.

இதைப் போலவே புலனடக்கம் பழகுவதற்கு இரவில் விழித்திருப்பதும் நல்லது. தூக்கம், உடலும் மனமும் செய்யவேண்டிய இயற்கையான ஒரு வேலை. தூக்கம் கட்டுப்பட்டால் உடலும் மனமும் கட்டுப் படும். பக்தன் இரவில் கண் விழித்திருந்து பஜனையும் கீர்த்தனையும் செய்து காலம் கழிப்பான். இதனால் அனேக நன்மைகள் உண்டு.

சூத்திரம் 12.

“பவது நிச்சயதார்ட்யா தூர்த்வம் சாஸ்த்ர ரக்ஷணம்”

கருத்து:—பக்தன் மெய்ஞ்ஞானத்தை அடைந்து அதில் நிலைத்து நின்றாலும், சாஸ்திரங்களை பாதுகாக்க வேண்டும்.

‘ரக்ஷணம்’:—இந்த வார்த்தை கவனிக்கத்தக்கது. நாம் அவைகளை அனுசரித்து வாழ்ந்தால் அவை நிலைத் திருக்கும். நாம் தர்மத்தைக் காப்பாற்றினால் தர்மம் நம்மைக் காப்பாற்றும். நாம் நல்லவனாக இருந்தால் உலக மெல்லாம் நமக்கு நல்லதாகத் தோன்றும். இதனால் தான் ஸ்ரீ குருதேவர் “நல்லவனாக இரு, நன்மையைச் செய்” என்று உபதேசம் செய்கிறார். இவை இரண்டுமே சாஸ்திரங்களை பாதுகாக்கின்றன. இவ்விரண்டு சொற்களிலும் “நன்மையைச் செய்” என்பதைவிட “நல்லவனாக இரு” என்பது மிகவும் முக்கியமானது. முதலாவதாக நாம் நல்லவனாக இருந் தால், நாம் செய்யும் கர்மங்களும் நல்லவைகளாக

இருக்கும். அவ்வாறு இல்லை யென்றால், போலியாக இருந்த நல்ல குணம் விரைவில் மாறுதல் அடைந்து அதற்குப் பதிலாக இதுவரை மறைந்து இருந்த கபடமும் கெட்ட குணமும் வெளியே தோன்றும். நம் இயற்கை குணம் நன்றாக யிருக்கவேண்டும். இதை விளக்கமாக அறிவிக்க ஒரு சிறு கதையை குருதேவர் சொல்வது உண்டு.

கங்கைக் கரையில் ஓர் சந்நியாசி ஸ்னானம் செய்து கொண்டிருந்தார். தேள் ஒன்று தற்செயலாக கங்கையில் விழுந்து மூழ்கும் தறுவாயில் இருந்தது. இந்த சந்நியாசி அதை வலது கையால் எடுத்தார். உடனே அது கொட்டிற்று. அப்போது அதை ஜலத்தில் போட்டு விட்டார். திரும்பவும் தன் இடது கையால் அதைத் தூக்கினார். அப்போதும் அது கொட்டியது. திரும்பவும் ஜலத்தில் போட்டு விட்டார். மறுபடியும் அவர் தனது இருகைகளாலும் தண்ணீருடன் தேளை எடுத்து கரையில் எறிந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நகைத்தார்கள். அதற்கு அந்த சந்நியாசி "இதைப் பார்த்து சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. என்னுடைய. இயற்கை குணம் இப்படிச் செய்தேன். அதன் இயற்கை குணம், அது அவ்வாறு செய்தது." என்றார். இதுவே லக்ஷியம்.

மெய்ஞானிகள் இவ்வாறு நடந்து கொள்வது இயற்கை. ஸாதகனுக்கு, நற்குணம் இன்றியமையாததும் மிகவும் தேவையானதும் ஆகும். சாஸ்திர விதிகளை அனுசரிக்காமலும், தெய்வீக வாழ்க்கையும் நேர்மையான ஒழுக்கமும் இல்லாதிருந்தால் நாம் இறைவனைக் காண முடியாது. சோதனை காலத்தை எல்

லாம் உண்மையாகவே தெய்வீக வாழ்க்கையாக அமைத்து சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தால், சகல விதமான ஐச்வர்யங்களும் நிறைந்து பிரகாசமாக விளங்குவோம். நாம் பூர்ண ஞானம் பெற்றுலும், சாஸ்திரங்களை அனுசரித்தும் தர்மத்தின் சின்னங்களாகவும் இருக்கவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். நாம் எப்படி இருக்கவேண்டும் என்று குருதேவர் பிரியப்படுகிருரோ, அதைப்போல சாஸ்திரங்களை ஒட்டி வாழ்ந்தும், தெய்வீக வாழ்க்கையின் அசையும் கோயில்களாகவும் இருக்கவேண்டும்.

சாஸ்திரங்களைக் குறித்து நாம் அனுவசியமாகத் தவருன அபிப்ராயம் கொள்கிறோம். மற்றவர்களை சுரண்டிப் பிழைப்பதற்கு உதவும் ஆசார்யர்களின் கருவிகளே சாஸ்திரங்கள் என்று அனேகர் கருதுகின்றனர். இது சரியல்ல. மக்களின் தேவைக்குத் தக்கவாறு சனுதன தர்மத்தில் திருத்தி அமைக்கப்பெறும் கருத்துக்களே சாஸ்திரங்கள். நம் நன்மையின் பொருட்டே அவை இருக்கின்றன. அவைகளை அசட்டை செய்தால் நாம் நஷ்டம் அடைவோம். சாஸ்திர விதிகளை நம் முன்னேர்கள் எவ்விதமான கேள்விகளும் கேட்காமல் அனுசரித்து வந்தனர். அதனுல் இவ்விதிகளை நிரூபிக்க, காரணங்களோடு கூடிய வாதங்களோ விஞ்ஞான ரீதியான வாதங்களோ எதுவும் காணப்படவில்லை. ஆனுல் நம் முன்னேர்கள் உடல் பலம், நீண்ட ஆயுள், மனச்சாந்தி, புத்திகூர்மை முதலிய நன்மைகள் அனுபவித்தனர். காரணம் தெரிந்து கொள்வதற்காகக் கேள்விகள் விடுப்போரை விட, அவர்கள் புத்திசாலிகள் என்று நாம் தெரிந்து

கொள்வதற்கு இதுவே போதுமான பிரமாணம் ஆக வில்லையா?

தெய்வீகப் பாதையில் செல்லும் ஒருவனுக்கு எது ஸாதனையாகுமோ அதுஒரு ஸித்தனுக்கு இயற்கையாக அமையும். அதைத் தவிர ஸித்தனுக்கு ஒரு பெரிய பொறுப்பும் கடமையும் உண்டு. அவர் மற்ற மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். அவரே தலைவரும் சிரேஷ்டரும் ஆவார்.

"யத்யத் ஆசரதி ச்ரேஷ்டா தத்ததேவ இதரோஜனஃ
ஸயத் ப்ரமாணம் குருதே லோகஸ்ததனு வர்த்ததே"

(தலைவரைப் பின்பற்றி மக்களும் நடந்து கொள்வார் கள்—என்பது கருத்து.) என்று கீதாசாரியார் உரைத் தார். தெய்வ நெறியில் தலைவராக விளங்குபவர், மாயையையும் நல்லவை கெட்டவைகளையும் கடந்து நிற்பவர்களாய் இருந்தாலும், தன்னைப் பின்பற்று வோர் நலனைக் கருதியாகிலும் தர்மத்தைக் காக்க வேண்டும். இல்லை யென்றால், இவர்கள் அவரைப் பின்பற்றி மாயை என்னும் பாதாளத்தில் விழுந்து விடுவார்கள்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானே இதற்கு ஓர் உதாரணம். அர்ஜுனனுக்கு ஸாரதியாக இருந்து எவ்வளவு ஆச்சரியமாக அவர் தன்னுடைய கடமையை இயற்றினார்! தன் 'யஜமானன்' உரைத்தபடி பல இடங்களுக்கும் ரதத்தை ஓட்டினார். ஒவ்வொரு நாளும் யுத்தம் முடிந்ததும், குதிரைகளைக் குளிப்பாட்டி அவைகளுக்குத் தன் கைகளினாலேயே உணவு கொடுத் தார். "நிஷ்காம்ய கர்மயோகம்" எவ்வாறு செய்ய

வேண்டும் என்பதற்கு ஓர் உதாரணமாக விளங்கினார். இனி அடுத்த சூத்திரம் ஒரு சரியான எச்சரிக்கை விடுக்கின்றது.

சூத்திரம் 13.

"அன்யதா பாதித்யா ஸங்கயா"

கருத்து :—"இல்லாவிடில் வீழ்ச்சியடையக்கூடும்.

இது முக்தி யடைந்த ஜீவாத்மாக்களைக் குறிப்பது 1-ஆவது சூத்திரத்தில் கூறிய ஜயா—விஜயா என்பவர்களின் கதையை நினைவுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சாரூப்ய முக்தி அடைந்த போதிலும் கர்வத்தால் தவறி விட்டார்கள்.

ஜடபரதருடைய கதையையும் நினைக்கவேண்டும். இவர் மெய்ஞானியாக இருந்த போதிலும் மானாகவும் பிராமணப் பையனாகவும் பிறக்கவேண்டி வந்தது. காரணம் ஒரு மான் மீது இவருக்கு இருந்த பாசம். இந்த பாசமும் தயையின் காரணமாக எற்பட்டது. தயை நல்லது தான். ஆனால் மோகம் ஒரு சிறிது அளவு இருந்ததால் ஆபத்தாக முடிந்தது. உயர்ந்த நிலைக்கு வந்த பெரியோர்களே இவ்வாறு இடறி விழும் போது, தெய்வீகப் பாதையில் செல்லும் ஒருவன் தன்னுடைய நிலையை ஊகித்துக்கொள்ள வேண்டும். அதனால் எப்போதும் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். ஸ்ரீ குருதேவர் 'கடைசி வரை ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும்' என்பார். இதையே ஸ்ரீ கிருஷ்ண பகவான் "ஸ்தித்வாஸ்யாம் அந்தகாலேபி ப்ரம்ம நிர்வாணம் ருச்சதி." (கடைசி மூச்சு இருக்கும் வரை

இந்த நிலையில் இருப்பவன் நிர்வாணப் பதவியைப் பெறுகிறான்:) என்று உரைத்தார்.

1950-ஆவது வருஷம் ஸ்ரீ குருதேவர் அகில இந்திய யாத்திரியை முடித்து இலங்கைக்குப் போகும் போது, கப்பலின் தலைவர் வேலை செய்யும் விதத்தை கவனித்தோம். "திசை அறிவிக்கும் காந்தக் கருவியே எனக்கு வழி காட்டி. இங்கே நான் ஒரு சிறிய பிழை செய்தால், இலங்கைக்குப் பதிலாக மலேயாவுக்குப் போய் விடுவோம். இந்த இடத்திலிருந்து பார்ப்பதற்கு ஒரு சிறிய கறுப்புக்கோடு போல் காணப்பட்ட போதிலும், கப்பல் துறைமுகம் கண்ணுக்கு எட்டாமல் இருப்பதனால், இக்கருவியை வைத்துக் கொண்டு தலைமன்னாருக்குப் போய் சேர முடியும்." என்று அவர் எங்களுக்கு உரைத்தார். சாஸ்திரங்களே நமக்குத் திசை காட்டும் கருவி. அவை நமக்கு வழிகாட்டுகின்றன. நாம் அவ்வழியில் செல்ல வில்லையானால், நமது லக்ஷியத்தை அடையாமல் வெகு தூரமுள்ள வேறு இடத்திற்குப் போய்விடக்கூடும்.

ஒரு பெரிய அணைக்கட்டில் ஒரு சிறிய பிளவு அல்லது துவாரம் ஏற்பட்டாலும் பெரிய நாசத்தை விளைவிக்கும். துவாரம் அணையை உடைக்காது. ஆனால் நாசம் விளைவதற்குக் காரணம், அங்கு தங்கிய ஜலத்தின் அழுத்தும் சக்தியாகும். அதைப் போல ஒரு உபாஸகனுடைய வாழ்க்கையில் தீவிரமான கட்டுப்பாடு சிறிதளவு தளர்ந்துவிடும். அது அவ்வளவு பெரிதல்ல. ஆனால் ஒன்று சேர்ந்த பாப வாசனைகள் துவாரத்தின் வழியாக வெளிப்பட்டு கட்டிடத்தைப்

பாழாக்கி விடும். அதனுல் தான் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று சொல்லப் பட்டது.

சாஸ்திரங்களுக்கு முடிவு இல்லை. அச்சு யந்திரம் எல்லா நூல்களையும் ஒவ்வொருவர் கையிலும் எட்டும் படிச் செய்யும் இன்னுட்களில், எதை தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் ஒருவருக்கு ஏற்படும். அதனுல் இம் மூதுரையைப் பின்பற்ற வேண்டும்.

"ச்ருதிர் விபின்னு ஸ்ம்ருதயோபி பின்னஃ
ததாமுனீனும் மதயோபி பின்ன
தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம்
மஹாஜனே யேன கதாஸ் (ஸஏவ) பந்தாஃ"

(வேத நூல்களும் ஒன்றுக்கு ஒன்று மாறுன கருத்துக்கள் உடையன. ஞானிகளின் மனதும் வெவ்வேறுன கருத்துக் கொள்வது போல் தோன்றும். தர்மத்தின் உண்மையான பொருள் மறைந்திருக்கின்றது. அதனுல் பெரியோர்கள் சென்ற வழியே சிறந்த பாதை.)

சூத்திரம் 14.

"லோசோபி தாவதேவ கிம்து போஜனுதி வ்யாபாரஸ்த்வா சரீர தாரணவதி."

கருத்து :—அதைப் போலவே ஸமூகப்பழக்கங்களையும், வழக்கங்களையும் இறை நெறியில் முன்னேறிச்செல்ல எவ்வளவுக்கு உதவியாக இருக்கிறதோ அவ்வளவுக்குப் பின்பற்ற வேண்டும். ஆனுல் உடல் இருக்கும் வரை அதற்கு உணவும் ஆடையும் தேவைதான்.

பக்தன் சமூகத்திற்கு விரோதமானவன் அல்ல. அவனும் சூழ்நிலைக்குத் தக்கவாறு உலகில் வாழ

வேண்டும். இந்த சூத்திரம் முன் சொன்ன "நியாஸ" "வேதவ்யாபார" என்ற வார்த்தைகளுக்கு விரிவான உரை தருகிறது.

வழக்கங்களும், தலைமுறை, தலைமுறையாக அனுசரித்து வந்த ஐதிகங்களும் அனேகம் உள்ளன. அவைகள் எப்போதும் சிறந்தவை என்றும் ஒப்புக்கொள்ள வேண்டியன என்றும் பக்தன் நினைக்க மாட்டான். நல்லதும் கெட்டதும் ஆகிய இரு சக்திகளின் விளைவான கிரியை—பிரதிக்கிரியை காரணமாக ஐதீகங்கள் ஏற்பட்டுள்ளன. சில வேளைகளில் கெட்ட சக்திகள் ஸனாதன தர்மத்தைக் குலைக்கும். சில வேளைகளில் அதர்மம் தர்மத்தை வென்று விட்டதைப்போல் தோன்றும். இதுவும் கடவுள் விளையாட்டு. ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன்னை எவ்வகையானவன் என்று விரித்துரைக்கும்போது,

காலோஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ

எனக்கூறியுள்ளார்.

இங்கே நல்லது, கெட்டது என்ற வித்தியாசம் கிடையாது. 'லோக க்ஷய'—முடிவில் எல்லாம் நசித்துப் போகவேண்டியது தான். அதர்மத்தை மட்டும் அழித்து வேருடன் நாசம் செய்வது என்றால், இறைவன் அவதாரம் செய்து நமக்காக ஞானிகளையும் தபசிகளையும் எப்போதும் அனுப்ப வேண்டிய அவசியம் என்ன? அதனால் அவ்வப்போது அதர்மம் தலைதூக்கி தர்மத்தை வெல்வதாகவும் தோன்றும். அப்போது காணப்படும் பழக்கங்கள் அதர்மமா யிருக்கும். இது பக்தனுக்குப் பிரியமா யிருக்காது. உதாரண

மாக, ஹிரண்யகசிபு தேவர்களை அடக்கி ஆட்சிசெய்த காலம் கவனிக்கத்தக்கது.

“ஹிரண்யாய நமः என்ற மந்திரத்தை உச்சரிக்கும் படி எல்லா மக்களுக்கும் தீக்ஷை கொடுக்கப்பட்டது. ஆனால் பிரஹலாதன் அவ்வழக்கத்தின்படி நடக்கவில்லை. அதற்குக் காரணமானவர் தன்னுடைய கொடூரமான தகப்பனார் என்று நினைத்து அவன் துக்கப்படவு மில்லை. தைரியமாக ஸ்ரீமன் நாராயணனையே பூஜித்தான்.

தெய்வீக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய எந்த சமூக வழக்கங்கள் அனுகூலமாயிருக்குமோ அவைகளே நல்லவை என்று தேர்ந்தெடுக்க வேண்டும் எது நல்லது என்று ஆராய்ந்து அறிவதற்கும் குருவும் சாஸ்திரங்களும் துணையாக இருக்கும்.

நாரதர் ஒரு மகத்தான உண்மையைக் குறிப்பாகச் சொல்கின்றார். இவ்வுடல் பஞ்ச பூதங்களால் ஏற்பட்டு அழியக்கூடியதாயினும் பக்தன் இதை அசட்டை செய்ய மாட்டான். அது தற்கொலைக்குச் சமமான பாபச்செயல். இதற்கு மாறாக, உடலுக்கு வேண்டிய உணவும் ஆடையும் இருப்பிடமும் கொடுத்துப் பாதுகாத்துக் கொள்வான். ஆனாலும் உலக மக்களைப் போல, உடலுக்கு அதிகமான உணவு அளித்து அலங்காரம்செய்து, பூஜை செய்யவும் மாட்டான். இது லக்ஷியத்தை அடைய இவன் பிரயாணம் செய்யும் ஒரு வாகனம் ஆகும். எந்த சமயத்திலும் அதர்ம வழிகளைக் கடைப்பிடிக்க மாட்டான். வாழ்க்கையை நடத்தினாலும் நேர்மையாக இருப்பான்.

ஸூத்திரம் 15.

“தல்லக்ஷணானி வாச்யந்தே நாநாமதபேதாத்”

கருத்து :—கருத்துக்கள் மாறுபடுவதால் பக்தியின் லக்ஷணங்கள் பலவாறாக விரித்துரைக்கப்படுகின்றன.”

உண்மையை அறிய அவாவுடன் செல்பவன் ‘யோகம்’ என்ற ஏணியில் படிப்படியாகச் முன்னேறுவான். அப்போது இறைவனும் மிகுந்த கிருபையும் கருணையும் கொண்டு இவனை வரவேற்க இறங்கி வருகிறார். மனிதன் எவ்வளவு பாடுபட்டாலும் கடைசியில் கடவுள் கிருபைதான் அவனுக்கு மெய் ஞானத்தைக் கொடுக்கும். கதோபநிஷது உறுதியாக உரைப்பது என்ன வென்றால்,

“யமேவைஷ வ்ருணுதே தேன லப்ய
தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதே தனூம் ஸ்வாம்.”

(ஆத்மா எதைத்தேர்ந்தெடுக்கின்றதோ அதன் மூலமாக அது பிரகாசிக்கும்.)

இதையே பகவத் கீதையிலும்

“திவ்யாம் ததாமி தே சக்ஷு:
பச்யமே யோகம் ஐச்வரம்.”

(நான் உனக்கு திவ்யமான பார்வையைக் கொடுக்கிறேன். என்னைப்பார்) என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறினார். இவறைவனைப் பார்க்கும் ஞானக் கண், இறைவனே கொடுத்தபரிசு ஆகும். மனிதன் அதற்கு ஆசைப்பட்டவனாகவும் தகுதியுள்ளவனாகவும் இருக்கலாம். ஆனால் இறைவன் கருணையே எதிர்

பாராமல் தோன்றி பக்தனை அவருடைய மடியின்மேல் தூக்கி வைத்துவிடும்.

இவ்வாறு தேர்ந்து எடுத்தவர்களில் ஒரு சிலர், மக்களுக்கு இறைவனுடைய பரிசாக அனுப்பப்படு கின்றனர். (கடவுளுக்காக உழைப்பவர்களிலும், கடவுளையே அடைய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்களிலும் ஏதோ ஒரு சிலர்தான் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.) மற்றவர்கள் இறைவனோடு ஒன்றாகி விடுவர். நம்மிடம் திரும்பி வருபவர் இறைவன் ஒளியும், கிருபையும், ஸங்கல்பமும் உள்ளவர்கள். இறை அன்பாகிய நெருப்பில் தன்னை அர்ப்பணம் செய்து, 'நான் வேறு' என்ற இவர்களுடைய தனிப்பட்ட எண்ணம் சாம்பலாகிவிட்டது என்று சொல்லலாம். நான் எனது என்ற எண்ணமும் ஆசைகளும் பக்தியாகிய நெருப்பிலிடப்பட்டு ஜீவன் முக்தியடைந்து விட்டது. முக்தி அடைந்த ஜீவாத்மா அன்புமிக்க இறைவனோடு ஒன்றான நிலையை அடைந்தது. இறைவன் மக்களிடம் கொண்ட பேரன்பின் விளைவாக, அந்த ஜீவாத்மாவை மறுபடியும் உலகத்துக்கு அனுப்பிவைக்கிறார். உலகத்தில் மறுபடியும் அவதரிப்பவர் முன்பு முக்திபெற்ற ஜீவாத்மா அல்ல. ஆனால் அவர் கடவுள் ஒளியும் பேரன்பும் இச்சாசக்தியும் உருவானவர். இறை ஒளி, ஒவ்வொரு உடலிலும் மனதிலும் பிரகாசிப்பது இறைவன் இச்சையாகும்.

அதனால்தான் குருவேதான் கடவுள் என்று நாம் பூஜிக்கிறோம். அப்போது அவர் ஒரு தனி மனிதன் அல்ல. மனித உடலில் தோன்றும் இறைவனே ஆகும்.

கடவுளுடைய கருணை, மனித வர்க்கத்தைத் தெய்வீகப் பாதையில் முன்னேறச் செய்வதற்காகவே தோன்றுகிறது. கடவுள் எல்லாம் அறிந்தவரானதால், யோகியாக இருப்பவன் உலகத்தில் எந்த இடத்தில் 'தோன்றி யிருக்கிறானோ' அங்கே எவ்வகை நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வான். நமது குறைகள், தேவை, திறமை, அறிவு எல்லாம் அவருக்குத் தெரியும். அதனால், நாம் இருக்கும் இடத்தை விட்டு, அவர் உறையும் இடத்தைச் சேருவதற்கு இறைவன் கருணையே வழிகாட்டுகிறது. அப்போது இயற்கையாகவே வெவ்வேறு காலங்களுக்கும் தேசங்களுக்கும் மக்களுக்கும், இப்பாதையும் வெவ்வேறாக இருக்கும்.

பெரியோர்களின் உபதேசங்களிலும் சிறு முரண்பாடுகள் தோன்றுவதற்கும் இதுதான் காரணம். மக்கள் ஒரு இடத்தைவிட்டு வேறு இடத்தைத் தாவி ஊசலாடும்பொது, உபதேசங்களும் அதற்குத் தக்கவாறு மாறுபடுகின்றது. இதை ஸ்ரீ குருதேவரிடம் நாம் காண்கிறோம். தூக்கத்தை, தியானம் என்று தவறாக நினைக்கும் சோம்பேறிக்கும் சுறுசுறுப்பான சேவை செய்யும்படி உபதேசிப்பார். ஆனால் இதற்கு மாறாக, இரவும் பகலும் உழைப்பவனுக்கு, வேலையிலிருந்து ஓய்வெடுத்து மௌனமாக தியானத்தில் ஆர்வத்துடன் ஈடுபடும்படி போதனை செய்வார்.

இரண்டும் சரியானவைகளே. ஒவ்வொரு உபதேசமும் எந்த மனிதனுக்குச் சொல்லப்பட்டதே அவனுக்குப் பொருத்தமானது. குரு உபதேசம் 'கடுமையாக' இருந்தாலும், சாதாரணமான ஒரு சீடன்

அவ்வளவு தூரம் போவதில்லை. இந்த எச்சரிக்கை அவனுடைய எதிர்குணத்தை மாற்றி 'நடு வழியை'க் கடைப் பிடிக்கத் துணை செய்யும்.

மேலும், இறைவனுடைய ஒளி, உயிரோடு இருக்கும் ஒரு மஹா புருஷனுடைய உடலிலும் மனதிலும் பிரகாசிக்கின்றது. இவ்வொளி பிரகாசிக்கும் முன்பே, அந்த உடலுக்கும் மனதுக்கும் ஒரு வகை வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. அவ்வொளி தோன்றும்போது, அந்த உடலை நாசம் செய்யவோ அந்த வர்ணத்தை பலாத்காரமாக மாற்றவோ செய்யாது. அதனால் அது பிரகாசிக்கும்போது ஒரு அளவுக்கு அவ் வர்ணத்தை எடுத்துக் கொள்ளும். பெரியோர்களின் உபதேசங்களும் இவ்வாறு அமைந்திருப்பதை நாம் காணலாம்.

ஆனால் முக்கியமான இரண்டு குறிப்புகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். (1) பிரகாசிக்கும் அவ்வொளி அவர்களிடம் முற்றிலும் தெய்வீகமாகவே இருக்கும். (2) கடவுள் இச்சையினால் அவ்வொளி அவ் வுடலில் தோன்றுவதால், இது கடவுளாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டது. அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்குத் தக்க காரணங்களும் உள்ளன. இறைவன் உலகத்தாருக்கு வழிகாட்ட ஒரு மஹானை திருப்பி அனுப்பும்போது, தன் ஒளியைப் பெறும் உடலின் தன்மையை நன்றாக அறிந்தே செய்கிறார் என நாம் நம்பலாம்.

இனிமேல், பக்தியைக் குறித்து சில பெரியோர்களின் கருத்து விவரிக்கப்படும்.

சூத்திரம் 16.

“பூஜாதிஷ்வனுராகஃ இதி பாராசர்யஃ”

கருத்து:—அது ஈசுவர பூஜையிலும் அதைப் போன்ற கிரியைகளிலும் பற்றுக்கொள்வது என்று பராசரர் மகனான வியாஸர் கூறுகிறார்.

இறைவனுடைய சிலைகளுக்குப் பூஜை செய்வது பக்தியின் ஒரு அங்கமாக முன் காலத்திலிருந்தே வழக்கமாக இருந்து வருகிறது. முக்கியமாக ராமாவதாரத்திற்கும் கிருஷ்ணாவதாரத்திற்கும் பின்பு இது அதிக பிரபலமாகி விட்டது.

விக்ரஹ ஆராதனை செய்யும் பக்தன், அதை ஒரு கல்லாகவோ வெறும் பொம்மையாகவோ கருதமாட்டான். அவனுக்கு அது உயிரோடு வாழும் கடவுளே ஆகும். அந்த விக்ரஹத்தை இறைவனோடு உறவு வைத்துக்கொள்ளும் ஒரு கருவி என்று கூட நினைக்க மாட்டான். உதாரணமாக, வேறு இடத்தில் உற்பத்தியாகும் மின்சார சக்தியை நமது வீடுகளுக்குக் கொண்டுவர உபயோகிக்கும் கம்பியை ஒரு கருவியாகவே நினைக்கிறோம். அவனுக்கு அந்த விக்ரஹம் கடவுளேதான். இறைவன் எங்கும் பரவி யிருப்பதனால், இந்த விக்ரஹங்களிலும் தோற்றம் அளித்து பக்தனுடைய நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறார்.

பக்தர்களிலும், முக்கியமாக சைவ சமய நாயன்மார்கள், ஆலயங்களிலிருக்கும் விக்ரஹங்களுக்குப் பூஜை செய்வது ஒன்றே தங்கள் கடமை என்று கருதினார்கள். அவர்கள் வேறொன்றையும் பொருட்படுத்த

வில்லை. உலகம் கடவுளுடைய சிருஷ்டி என்றும் இங்கே உள்ள பிரச்னைகள் அவர் கவனிக்க வேண்டியவை என்றும் உணர்ந்தனர். இவ்வாறு நல்ல குணத்திலும் தியாகத்திலும் அவர்கள் சிறந்து விளங்குவதால் மனித வர்க்கத்துக்கே அது ஒரு பெரிய புண்ணியம். அதனால் அவர்களும் சமூகத்திற்குத் தொண்டு செய்பவராவர். இத்தகைய பெரியோர்கள் வாழ்வதே மக்களுக்கு ஒரு ஆறுதல். ஆனால் உலக விவகாரங்களில் அவர்கள் தீவிரமாக ஈடுபடவில்லை.

முமுக்ஷுவுக்கு மூர்த்தி பூஜை ஒரு பெரிய ஸாதனையாக உதவியது.

ஒரு வீட்டில் விக்ரஹ மூர்த்தியை பிரதிஷ்டை செய்தால், அந்தக் குடும்பத்தின் பொறுப்பை இறைவனே ஏற்றுக்கொள்வார். குடும்பத் தலைவர் கடவுளின் ஊழியனாகவே வேலை செய்வார். இந்தியாவில் இரண்டு ராஜ்யங்களிலாயினும் அம் மன்னர் கள் அந்த நாடுகளில் தலைமை வகிக்கும் கடவுளுடைய ஊழியனாகவே தங்களைக் கருதினர். தேரி-கார்வால் அரசன் பத்ரி நாராயணனுக்கும், திருவிதாங்கூர் மன்னன் ஸ்ரீ அனந்த பத்மநாபனுக்கும் பணிசெய்து வந்தனர்.

பக்தனும் அவனுடைய குடும்பத்தினரும் எது எடுத்துக் கொண்டாலும் அது கடவுளுக்கே அர்ப்பணம் செய்யப்பட்டது. உணவு அவருடைய பிரசாதம். இவர்கள் வீட்டிற்குக் கொண்டுவந்த ஆடை ஆபரணங்கள் இறைவனுக்கு என்றே கொண்டுவரப் பட்டன. எல்லாம் இறைவனுக்கே உரிமையானவை. அவர்கள் வாழ்ந்ததும் இறைவனுக்குத் தொண்டு

செய்வதற்காகவேதான். இவ்வாறு பூரண சரணுகதி செய்யும் உணர்ச்சி, பக்தனுக்கும் அவன் குடும்பத்தின ருக்கும் வளர்ந்து வந்தது. இதற்குத் தியாக உணர்ச்சி அவசியமாகும். இவனுடையது என்று ஒன்றும் கிடை யாது. இவனும் கடவுளுக்கே உரிமையானவன்.

பூஜையை ஒழுங்காகச் செய்ய வேண்டும். ஒரு போதும் தவறலாகாது. ஏனென்ருல் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யாமல் இவர்கள் சாப்பிடமாட்டார் கள். இதனுல் ஸாதகனுக்கு விரோதிகளான, தமோ குணம், பிழை, கவனக்குறைவு, அலக்ஷியம், முதலி யவை தோல்வி அடைந்துவிடும். பிரசாதத்தை நிந் தனே செய்யக்கூடாது. பகவானுக்கு அர்ப்பணம் செய்வதற்கு முன் ருசி பார்க்கவும் கூடாது. வீட்டில் பெண்கள் சமைத்த உணவில் உப்புப் போடுவதற்கு மறந்துவிட்டால் அதை 'கவனிக்காமல்' உண்ணவேண் டும். அப்போது ஒவ்வொரு வகையிலும் தன்னடக்கம் பழக்கமாகவே வந்துவிடுகிறது.

பொதுமக்கள், ஒருவர் செய்வதுபோல் மற்றவரும் பின்பற்றும் மனப்பான்மை கொண்டவர்கள். பெரிய மகான்கள் செய்யும் கிரியைகளில் வெளியே தோன்று பவை மட்டும் இவர்களுக்குத் தெரிவதால், உட்புறம் பான மனநிலையை அறியாமல், அவர்களேப்போல இவர்களும் நடிக்கின்றனர். அப்போது அம் மகான் களுக்கு இருந்த உணர்ச்சி மறைந்து, உயிரற்ற வெளித் தோற்றம்மட்டும் நின்றுவிடுகிறது. பக்தனுக்கு இறை வனுடைய சிலேயின்மீது பற்றுதல் வளருகின்றது. இவன் இறைவனேச் சேர்ந்தவன் என்பதற்குப் பதிலாக அந்த விக்ரகம் தன்னேச் சேர்ந்தது என்று எண்ணி

விடுகிறுன். விக்ரகத்தின் தெய்வீக அம்சத்தைக் காட்டிலும், அதனுள் அடங்கிய தங்கத்திற்கு அதிக மதிப்புக் கொடுக்கிறுன். விக்ரகத்தை அலங்காரம் செய்த ஒரு சிறு ஆபரணம் காணுமல் போனுலும் இவனுக்குக் கவலே வந்துவிடுகிறது. விக்ரகத்தின் தெய்வீகத் தன்மை மறைந்து, லௌகீக உணர்ச்சி மிகுந்து, அதனுல் விளேயும் பற்றுதல், பொருமை, கர்வம் முதலான கெட்ட குணங்கள் தோன்றிவிடுகின்றன.

இவ்வாறு சீரழியும் மனதைத் திருப்புவதற்கு, அறிவுமிக்க ஞானிகள் முயன்றனர். அதனுல் அவர்கள், வெளியே செய்யப்படும் புறம்பான பூஜையைவிட மானஸீக பூஜையே மேன்மையானது என்று அறிவித்தார்கள். இதயத்திலேயே ஒரு பெரிய கோயில் கட்டி அதில் இறைவனுடைய தங்கச்சிலே ஒன்று வைத்து அதற்கு எல்லாவிதமான பூஜையும் செய்யுங்கள் என்று பக்தர்களுக்குச் சொன்னுர்கள். இது உண்மையான பக்தனுக்குப் பணமோ அல்லது வேறு சௌகரியங்களேக் குறித்த எவ்விதமான தடைகளும் இல்லாமல் அதிக சுதந்திரத்தை அளித்தது. உதாரணமாக, பீமன் பூஜை செய்த கதை நமக்குத் தெரியும். அர்ஜுனனுக்கு, நானே ஒரு பெரிய பக்தன் என்ற கர்வம் தோன்றியது.

இந்த கர்வத்தை அடக்க, ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனே தேவலோகத்திற்கு அழைத்துச் சென்றுர். அங்கே பல வேலேயாட்கள் புஷ்பங்களே வண்டிகளில் இழுத்துக்கொண்டு போனுர்கள். அர்ஜுனன் அவர்களே விசாரித்தபோது, இந்த புஷ்பங்கள் கடவுளுக்குப் பீமன் மானஸீக பூஜை செய்தவை என்று

பதில் சொன்னுர்கள். பக்தன் மானஸீக பூஜை செய்வதற்குக் கவனங்களில் கிடைக்கும் எல்லா மலர்களையும், வண்டிக்கணக்கில் பலகாரங்களும், கடல் அளவு பாலும் டன்கணக்கில் கற்பூரமும் அர்ப்பணம் செய்ய முடியும்.

இதுவும் எல்லாவருக்கும் பொருத்தம் ஆகாது. பக்தனுக்குச் சரியான மனோபாவம் இல்லையென்ருல் மானஸீக பூஜை பலன் தராது. ஒருவேளை அவன் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருப்பான். அல்லது தூங்குவான். புறம்பாகச் செய்யும் பூஜைக்கு கடினமான முறையும் கட்டுப்பாடும் உண்டு. இந்த முறை கைவிடப்பட்டது. ஆனுல் இதற்குப் பதிலாக வேறு சரியான ஸாதனை எதுவும் ஏற்படுத்தவில்லை. அப்போது ஸ்ரீ சங்கராச்சாரியார் தோன்றினுர்.

அவர் பராபூஜையை ஏற்படுத்தினுர். பக்தி உபாஸகனுடைய வாழ்க்கை பூராவும் தெய்வீகம் ஆக்கப்பட்டது. சோம்பேறித்தனம் ஆதரவு பெறவில்லை. உபாஸகனை சுறு சுறுப்பாக இருக்கும்படி உபதேசித்தார். அவர் சிவபெருமானை தோத்திரம் செய்வது இவ்வாறு:—

"ஆத்மாத்வம் கிரிஜாமதிஸ்ஸஹா சரப்ரணு ச்சரீரம் க்ருஹம்
பூஜாதே விஷயோப போகாஃசான நித்ராஸ மாதிஸ்திதிஃ
ஸஞ்சாரஃ பதயோஃப்ரதக்ஷிணவிதி ஸ்தோத்ராணி ஸர்வாகிரோ
யத்யத் கர்மகரோமி தத்தத் அகிலம் சம்போ தவாராதனம்."

(நீயே ஆத்மா. பார்வதியே மனம். பிராணங்கள் உன் துணையாளர். (என்) உடம்பு உன்னுடைய வீடு. என் இந்திரிய இன்பங்கள் யாவும் உன் பூஜை. தூக்-

கம் ஸமாதி நிலே. நடையானது உன்னேச்சுற்றிப்பிர தக்ஷிணம் செய்வது. என் வார்த்தைகள் எல்லாம் உன் தோத்திரங்கள். இறைவனே! நான் எந்த வேலே செய்தாலும் அது உன்னுடைய பூஜையே ஆகும்.)

இதைப்போலவே தேவியைக் குறித்தும்

"ஜபோ ஜல்ப: சலப: ஸகலம் அபிமுத்ரா விரசன
கதி:ப்ரதக்ஷிண்ய-க்ரமணம் ஆஸனுதி ஆஹுதி-விதி
ப்ரணுமாஸ்ஸம் வேச: ஸுகம் அகிலம் ஆத்மார்ப்பணதகோ
ஸபர்யா-பர்யாயஸ் தவ பவது யன்மே விலஸிதம்."

(நான் எந்த வேலே செய்தாலும் அது உன் பூஜையாகும். என் பிதற்றல் உன் தோத்திரம். என் கைகள் செய்யும் அனேக வேலேகள் பூஜைக்குரிய முத்ரைகள். நான் அங்கும் இங்கும் திரிவது உன்னேச்சுற்றி வலம் வருவதாகும். நான் உணவு எடுத்துக்கொள்வது உனக்கு அளித்த நைவேத்தியம். கீழே படுத்துக் கொள்வது உனக்குச் செய்த நமஸ்காரம். வேறு சுகங்களேக் கருதுவது, என்னே முற்றிலும் உன்னிடம் அர்ப்பணம் செய்வதாகும்.)

என்று சொல்லுகின்ருர்.

சூத்திரம் 17.

"கதாதிஷ்விதி கர்க:"

கருத்து:—பக்தி என்பது இறைவன் பெருமையையும், புகழையும், லீலேகளேயும் குறித்துப் பேசுதல் என்று கர்கமஹாரிஷி நினேக்கிருர்.

கதைகள் மனதை வசீகரிக்கும். சம்பாஷணே மூலம் ஒரு நீதியைச் சொல்லும்போது பெரும்பாலும்

சாரமற்றிருக்கும் ஒரு கதை மூலமாகச் சொல்லும் போது கேட்பதற்கு இனிமையாக இருக்கும். பேருண் மையை ஆராய்ந்து அறியும் ஆவலுள்ளவனைத் தவிர மற்றவர்களுக்கு ஒரு வேதாந்தப் பாடம் அல்லது கட்டுரை இனிமையாகத் தோன்ருது. ஒரு நீதியை விளக்கும் சிறு கதையை எல்லோரும் பிரியமாகக் கேட்பார்கள்.

முன் காலத்திலிருந்து சிறுவர்களுக்கு நீதியையும் மத சம்பந்தமான உண்மைகளையும் போதிப்பதற்குக் கதைகள் மூலம் தெரிவிக்கும் முறையைப் பெரியோர் கள் கையாண்டனர்.

பூஜையாகிய ஒரே கிரியை மட்டும் அனுசரித்து வந்ததனுல் வாழ்க்கையின் லக்ஷியத்தை அடைந்த பக்தர்கள் உண்டு. அதைப்போலவே இறைவனுடைய லீலைகளைக்கேட்டு வந்ததனுலேயே இறைவனை அடைந் தவர்களும் உண்டு. இம்மாதிரி பக்தர்களில் சிறந்த வர் ராஜா பரீக்ஷித்து. இவர் கடவுளின் அவதாரக் கதைகளை ஏழு நாட்கள் தொடர்ந்து கேட்டு வந்த தால் மோக்ஷத்தை அடைந்து விட்டார்.

இது "கடவுள் முன்னிலையில் இருக்கும் பழக்கத் தை"சுலபமாக்கி விடுகின்றது. கடவுள் சரித்திரங் களை எவன் கேட்கிருனே அவன் கடவுள் முன்னிலை யில் வாழ்கிருன். அவன் அக்கதையைக் கேட்பதில் தன் சூழ்நிலையையும், உடலையும் வேறு எல்லாவற் றையும் மறந்து விடுகிருன். அரசனுன குலசேகரர் கதா காலக்ஷேபம் நடக்கும்போது, ராவணன் சீதையை இலங்கைக்குத் தூக்கிக்கொண்டு போய்

விட்டான் என்று கேட்டதும், சீதையைக் காப்பாற்றும் பொருட்டு தன் சேனையுடன் புறப்பட்டு சமுத்திரத்திலேயே குதித்து விட்டாராம்! இவ்வாறு பெரிய பக்தர்களும் பகவானுடைய லீலைகளைக்கேட்ட மாத்திரத்திலேயே அவனோடு இரண்டறக் கலந்து விடுவதும் இயற்கைதான்!

மற்றவர்கள் கதைகளைக் கேட்பது, வேதாந்தத்தில் கூறப்படும் ச்ரவண-மனன-நிதித்யாஸன-முறைகளுக்கு ஒப்பாகும். கதை கேட்கப்படுகிறது. அது மனதுக்கு உகந்ததாக இருக்கின்றது. அதற்குப் பிறகும் கதையைக் குறித்த எண்ணங்கள் மனதில் தோன்றி தீவிரமான சிந்தனையில் ஆழ்த்துகின்றது. அப்போது இறைவனிடம் நிலையான பக்தி ஏற்பட்டு விடும். நீங்கள் எவருடைய பெருமைகளைக் கேட்டீர்களோ, அப்போது இயற்கையாகவே அவரை நினைத்துத் தியானம் செய்து விடுகிறீர்கள். இதுதான் ‘நிதித்யாஸனம்’ எனப்படும். எந்த லக்ஷியத்தை அடைவதற்காக ஞானயோகி தீவிரமாகப் பிரயத்தனம் செய்கிறானோ அதை பக்தன் சுலபமாக அடைந்து விடுகிறான்.

கதைகளைக் கேட்டாகிலும் இறைவனை அடைய வேண்டும் என்ற ஆசை இல்லாதவர்களுக்கும், இது அதிக நன்மையைத் தரும். இவர்களுடைய தனிப்பட்ட குணம் உருவாக்கப்படுகிறது.

படிப்பதனாலும் கேட்பதனாலும் உண்டாகும் பயன் இதுவேதான். நாம் படிப்பதும் கேட்பதும் நம் மனத்துள் பதிய வேண்டும். அதைச் சரியாகவும்

பூர்த்தியாகவும் தெரிந்து கொள்ளவேண்டும். இல்லா விட்டால் பயனற்றதாகும். பாகவதம் இராமாயணம் முதலான புராணங்களில் கூறும் இறைவனுடைய லீலைகளை எப்போதும் கேட்பது மிகவும் நன்று. நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ அந்தக் கதையில் வரும் ஏதாவது ஒரு நடிகரைக் குறிப்பாகத் தெரிந்தெடுத்து அவரைப்போல் நாமும் இருப்பதற்கு முயற்சி செய்வோம்.

கடைசியாக, உலகப்பற்றுள்ள மனிதனின் இதயத்தையும் இக்கதைகள் கவர்ச்சியடையச் செய்கின்றன. நாளடைவில் அவனும் ஒரு பக்தனுக மாறிப் புண்ணிய புருஷனுகி விடுவான்.

கதா காலஷேபங்களின் மகிமையும் பெருமையும் எண்ண முடியாதவை. அதனுல், கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியதுபோல், பக்தர்கள் இறைவனுடைய லீலைகளைப் பேசியும் கேட்டும் ஆனந்தம் அடைகின்றனர்.

சூத்திரம் 18.

"ஆத்மரத்யா விரோதே (நஇதி) சாண்டில்யஃ"

கருத்து :—அது ஆத்மாவில் நிலைத்திருப்பதனுல் வரும் ஆனந்த அனுபவத்திற்குத் தடையில்லாமல் இருக்க வேண்டும் என்பது சாண்டில்ய முனிவரின் கருத்து.

மனம் எப்போதும் இந்திரிய சுகங்களை நாடும் இயல்புடையது. நாம் ஆத்மஞானம்பெற்று ஆத்மானந்தத்தில் நிலைத்து நிற்கும் வரையிலும் மனதின் தன்மையும் இப்படித்தான் இருக்கும். ஸாதகனுக்கு இது ஒரு

பெரிய விரோதி. எக்காரணத்தைக் கொண்டும், எந்த வேளையிலும் அவன் இந்திரிய சுகம் என்னும் இடைவழிகளில் தன்னுடைய மனதைத் திரியும்படி விடக்கூடாது. அப்படிச் செய்வது ஒரு பெருந் தவருகும்.

ஒரு வகையில், பக்திக்கிரியைகள் இருபக்கமும் கூரான கத்தியைப் போலாகும். ஆத்மீகப் பயிற்சியில் ஈடுபட்டு மனதின் கவனத்தைச் சாதுரியமாக இந்திரிய விஷயங்களிலிருந்து திருப்பிவிட பக்தன் பிரயத்தனம் செய்கிருன். இறைவன் தரிசனம் கிடைக்கும் வரையிலும், மனம் லக்ஷியத்தை மறந்து இவன் அனுசரிக்கும் முறைகளோடு நின்று விடாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

உதாரணமாக, தன்னுடைய நாவிற்குத் திருப்தி செய்வதற்காக, இவன் பூஜை செய்யும் விக்ரகத்திற்கு எல்லா விதமான பலகாரங்களும் செய்யும்படி இந்த மனது தூண்டுகிறது.

(யக்ஞங்களும் இப்படித்தான் இழிவான நிலைக்கு வந்தன. உயிர்களைப் பலி கொடுக்கும் பழக்கம் யக்ஞத்தின் ஒரு அங்கமாக இருந்து வந்தது. ஆனல் உயிர் பலி கொடுத்து மாம்ஸம் சாப்பிடுவதற்காக யக்ஞத்தை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டனர்!)

இதைப்போலவே தந்திரீக வழி பாடுகளும் (ஜீவாத்மா முன்னேற்றம் அடைவதற்கு உகந்ததாகவும் உயர்ந்த பலனை அளிக்க வல்லதாகவும் கருதப்படும் மதசம்பந்தமான கிரியைகளும்) சிற்றின்ப வேட்கைக்கு வசமான அறிவீனர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன.

கதா காலக்ஷேபங்கள் செய்வதும், கேட்பதும் அஜாக்கிரதையான ஸாதகனை ஏமாற்றி விடக்கூடும். இவைகளை ஸாதனையாக நினைக்காமல் புத்திக்குச் சிறிது பொழுது போக்காகவோ அல்லது ஒரு ஜீவனோ பாயமாகவோ கருதி இவைகளில் ஈடுபட நேரிடும்.

இவை யெல்லாம் வெளியே காணப்படும் இடை யூறுகள்.

இதைத் தவிர, வெளியே தெரியாத நுட்பமான இடையூறுகளும் உள்ளன. மானஸீக பூஜை செய்தும், இறைவனுடைய லீலைகளை நினைத்துக்கொண்டும் இந்த ஸாதகன் ஒரு விதமான கனவு உலகில் வாழ்ந்து, இதைக் கடந்து முன்னேறுமல் இருப்பான். அப்போது, தன்னை ஒரு பெரிய பக்தன் என்று நினைத்து, இவன் நுட்பமான ஒரு கர்வம் அடையக் கூடும். இது கூடாது.

இதைவிட நுட்பமானது ஸவிகல்ப ஸமாதி என்பது. இங்கு திருபுடி (ஞானம், ஞானி, ஞானப் பொருள்) என்பது நீங்காதிருக்கும். மெய்ஞானம் பெறுவதற்கு இதுவும் ஒரு இடையூறு என்று பதஞ் சலி மஹாரிஷி கூறுகிறுர்.

அதனுல், ஆத்மானந்தம் பெறுவதற்கு, இந்த பக்திக்கிரியைகள் தடங்கலாகாதவாறு, நாம் ஒவ் வொரு படியிலும் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும் என்று ஸாக்திவ்ய முனிவர் எச்சரிக்கை செய்கிறுர்.

நடு நிலையாகிய நுட்பமான பாதையில் ஜாக்கிரதை யாகச் செல்ல வேண்டும். நமது நோக்கம் எப்போதும்

கடவுளிடத்திலேயே இருக்கவும் வேண்டும். சாதாரணமாக இந்துமத ஆலயங்களில் கடவுள் விக்ரஹத்தின் இரு புறத்திலும் இரண்டு தேவிகளைக் காணலாம் இதிலிருந்து நமக்கு ஒரு நீதியைத் தெரிந்து கொள்ள முடியும். நடு நிலையான பாதைக்கு இரு புறமும் மாயை காணப்படுகிறது. நுட்பமான நடு நிலையான பாதையே இறைவனுக்கு உகந்த பாதை.

நமது கவனம் அங்குமிங்கும் மாருமல் இறைவனையே நினைத்தும் எப்போதும் ஜாக்கிரதையாகவும் இருந்து இறைவனிடத்திலேயே நேராகச் செல்ல வேண்டும்.

சூத்திரம் 19.

"நாரதஸ்து ததர்பிதா கிலாசரதா
தத்விஸ்மரணே பரமவ்யாகுல தேதி."

கருத்து :—ஆனல் எல்லா கர்மானுஷ்டானங்களையும் தன்னையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்வதும், கடவுளை மறந்தபோது தாங்க முடியாத துயரம் அடைவதும் பக்தியான லக்ஷணங்கள் ஆகும் என்பது நாரதருடைய அபிப்பிராயம்.

இப்போது நாரதர் பக்தியைக் குறித்து தன்னுடைய சொந்தமான விளக்கம் கூறுகிருர்.

கடவுளுக்காகவே பக்தன் வாழ்கிருன் மூச்சு விடுவதும் வேலை செய்வதும் அவருக்காகவே. 'அர்ப்பணம்' என்பது உயர்ந்த கருத்து உடையது. நமக்குப் பிரியமானதைச் செய்து விட்டு பிறகு எல்லாம் அவருக்கே 'அர்ப்பணம்' செய்வது அல்ல. கடவுள் எங்கும்

பரந்து உறையும் தன்மையுள்ளவரானதால், நம் முன்னிலையில் நிற்கும்போது அவருடைய பாத கமலங் களுக்கு ஒரு கருமத்தை நாம் 'அர்ப்பணம்' செய்ய விரும்பினால், அங்கும் இங்கும் பார்க்காமல் அவ ருடைய பாதார விந்தங்களையே நோக்கி நேராகச் சென்று அதை அர்ப்பணம் செய்து விடுவோம். "ஆத்மார்ப்பணம்" செய்யும் முறை நேரான ஒரு பாதை யாகும். அது தர்மப்பாதை. இந்த விஷயத்தில் நாம் எவ்விதமான தவறுதலும் இழைக்கலாகாது.

மேலும் இறைவனை அடைவதற்கு எவன் உண் மையாகத் தன்னுடைய கிரியைகளை அவனுக்கே அர்ப் பணம் செய்கிறானோ, அவன் அந்த கிரியைகள் பாபத் தால் மாசு அடையாதவாறு காத்துக்கொள்வான். கடவுளிடம் ஆழ்ந்த பக்தி உங்களுக்கு இருந்தால், வாடிப்போன மலரை அவருடைய பாதங்களுக்கு அர்ச்சனை செய்யமாட்டீர்கள். வாழ்க்கை துணையான அன்புமிக்க மனைவிக்கும்கூட இவ்வாறு செய்ய உங்க ளுக்கு விருப்பம் இருக்காது. (தைரியமும் இருக்காது.!)

அதனால் நாம் செய்யும் கிரியைகள் எல்லாம் கட வுளுக்கே அர்ப்பணம் ஆகவேண்டும். அவை மாசு பெறுமலும் தூயதாகவும் அமைந்து தெய்வீகத் தன் மையும் பெறவேண்டும். கடவுளுக்காகவே நாம் வாழவும் வேண்டும்.

இவ்வளவு தூரம் நாரதர் சொல்லிவிட்டு நிறுத்தி விட்டால் ஒரு சிறிய குறைக்கு இடமாகும். வெகு நாட்களுக்கு முன் ஒரு அமெரிக்க யாத்ரீகர் சொன்ன தைப்போல, நாம் செய்யும் கிரியைகள் எல்லாம் கடவு

ளுக்கே அர்ப்பணம் செய்தவை. அதனுல் நாம் எல்லோரும் கர்ம யோகிகள் என்று நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ளும் நிலைமைக்கு வந்துவிடக்கூடும்!

சூத்திரத்தின் இரண்டாவது பாகம் இந்த ஆபத்தான படுகுழியில் விழாதவாறு நம்மை காத்துக்கொள்கின்றது. உலக விஷயங்களில் ஈடுபட்டு சுறுசுறுப்பாக வேலை செய்து, எப்போதாவது ஒருதரம் "பிரம்மார்ப்பணம்" என்று சொல்லிவிட்டு, நாமும் யோகிகள் என்று நம் முதுகைத் தட்டிக்கொள்வதில் ஒரு பயனும் இல்லை. நம் உள்ளும் புறமும், நம்மைச் சுற்றிலும் இறைவன் இருப்பதை உணரவேண்டும். இந்த உணர்வு தடைபட்டு நின்றுவிடும்போது, நாம் மிகுந்த துயரம் அடையவேண்டும். கடவுளுக்காகவே வாழ்ந்தும், வேலைசெய்தும் வருகிறோம் என்பதை நிரூபிக்க இதுவே சரியான ப்ரிசோதனையாகும்.

இதை வேறு விதமாகவும் சொல்லலாம். நாம் எப்போது துயரம் அடைகிறோம்? நாம் இழந்துவிட்ட பொருளை நினைக்கும்போதுதான். அதை மறந்தபோது அல்ல. கடவுளை மறந்தபோது நாம் எவ்வாறு துயரப்படமுடியும்? கடைசியாக இதன் கருத்து ஒரு நாளோ ஒரு மணி நேரமோ அல்லது ஒரு நிமிஷமோ, நாம் கடவுளை மறந்துவிட்டோம் என்பதை நினைக்கும் போது (இந்த நினைவு வரும் அவ்வேளையில்) நமது கவனக் குறைவுக்காக வருத்தப்பட முடியும் என்று சொல்லலாம்.

நமது துயரங்களுக்குக் காரணம், கடவுளை மறந்துவிடுவதால் வரக்கூடியது என்பது நாரதர் கருத்து ஆகுமா? இறைவனுடைய சர்வ வியாபகத் தன்மை

யும், சர்வ வல்லமையும், எல்லாம் அறிந்த சக்தியையும், நாம் எப்போதும் உணருவோமேயானால், துக்கமும் இல்லை வருத்தமும் இல்லை. துன்பம் என்பதை அனுப விக்கவே மாட்டோம்: அவர் எல்லாம் அறியக்கூடிய வராதலால் நமக்குத் தேவையானதைக் கண்டுகொள் வார் என்றும், சர்வவியாபகமாயிருப்பதாலும், சர்வ சக்தி வாய்ந்தவரானதாலும் அங்கேயே அப்போதே நிறைவேற்றி வைத்துவிடுவார் என்றும் நாம் நம்பிக் கையோடு இருப்போம். இதை எப்போது மறந்து விட்டோமோ அப்போது நமக்குத் துன்பம் வந்து சேருகின்றது.

நாம் தவறு செய்வதும், பாபங்கள் செய்வதும், இறைவனை மறந்தபோதுதான். இறைவன் எங்கும் நிறைந்திருப்பவர் என்றும், நம் எண்ணங்களைக்கூட அவர் அறிவார் என்றும் நாம் உண்மையாக நம்பியிருந் தால், நாம் செய்யும் தவறுகளில் ஆயிரத்தில் ஒன்று கூட செய்யவே மாட்டோம். பெரும் துன்பத்தி லிருந்து பிழைத்திருப்போம்.

பக்தன் கடவுளுக்காகவே வாழும்போது இவ்வித மான குறைகள் எதுவும் அவனுக்கு இராது. ஏனெ னில் அவன் எப்போதும் இறைவனோடு தொடர்பு கொண்டு அவனை ஒரு நிமிஷமும் மறவாதிருப்பான்.

சூத்திரம் 20.

“ அஸ்த்யேவ மேவம் ”

கருத்து:— “இதற்கு உதாரணங்களும் இருக்கின்றன”

முன் சூத்திரங்களில் கூறப்பட்ட பக்தியின் வெவ் வேறு நிலைக்குத் தக்கவாறு திருஷ்டாந்தங்கள் உண்டு.

அவைகளில் மேன்மையானவை அடுத்த சூத்திரத்தில் விவரிக்கப்படும்.

சூத்திரம் 21.

" யதா வ்ரஜ கோபிகானும் "

கருத்து:—'பிருந்தாவனத்து கோபிகைகளைப்போல'

நாரதர் விவரித்துக்கூறிய பக்திக்குச் சான்ருகப் பிருந்தாவனத்து கோபிகைகளை நமக்குக் காண்பிக்கிருர்.

கோபஸ்திரிகள் யார்?

இவர்கள் தேவலோகத்தைச் சேர்ந்தவர் என்றும் கிருஷ்ணுவதாரத்தின்போது அவருக்குத் தொண்டு செய்யவும் மனைவிகளாக இருக்கவும் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்றும் ஸ்ரீமத் பாகவதம் சொல்லுகிறது. இவர்கள் மனித ஜன்மமாகிய முற்பிறப்பில், மேன்மையான பக்தியைவளர்த்து பக்தியின் சிகரங்களாக விளங்கியிருக்கலாம். சிலர் மாதுர்ய (நாயகி - நாயக) பாவமும், சிலர் வாத்ஸல்ய (தாய் — மகன்) பாவமும், மற்றவர் ஸக்ய (சிநேகித) பாவமும் பழகியிருக்கலாம் என்று நினைக்க தகுந்த காரணங்கள் உண்டு. இவர்கள் செய்த புண்ணியத்தின் பயனுகத் தேவலோகத்தில் வாழும் பாக்கியம் பெற்றனர். ஆனுலும் லக்ஷியம் இன்னும் நிறைவேறவில்லை. கிருஷ்ணன் அவதாரம் செய்தபோது அது நிறைவேற ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது.

அப்போது இவர்கள் பூர்வ ஜன்மத்தில் பழகியவாறு, அதாவது இறைவனுக்கு குழந்தையாகவும்,

சிநேகிதனுகவும், நாயகனுகவும் நினைத்து, துதி செய்து அதே முறைகளை இப்போதும் தொடர்ந்து அனுசரிக்க அனுமதிக்கப்பட்டனர்.

பக்தி மார்க்கத்தில் அவர்கள் அதிக முன்னேற்றம் அடைந்ததால், கோபஸ்திரீகளாகப் பிறந்து பக்தியின் சிறந்த அம்சங்களாக உருவெடுததார்கள். ஸ்ரீ கிருஷ்ணனை நினைத்த மாத்திரத்தில் உலகத்தையே மறக்க முடிந்தது. அந்தக் குழலோசை அவர்களை கிருஷ்ண பகவானிடம் ஓடச் செய்தது.

புல்லாங் குழலைக் குறித்து ஒரு வார்த்தை. சப்தத்திற்கு நான்கு நிலைகள் உண்டு என்பது நமக்குத் தெரியும். அவை பராபசயந்தி, மத்யம, வைகரீ என்பன. எண்ணங்களையும் கருத்துக்களையும் காதால் கேட்கக் கூடிய சப்தங்கள் மூலமாகத் தெரிவிக்கிறோம். ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன்னுடைய குழலோசையின் மூலமாக கோபஸ்திரீகளின் இதயங்களில் மேன்மையான தெய்வீக சக்திகளை எழுப்பும் வல்லமை பெற்றிருந்தார் என்பதுமட்டும் நிச்சயம். முழு மனத்தோடு காதலித்த இறைவன் ஆணையே அது என்று அவர்கள் கருதினுர்கள். மாடு மேய்க்கும் வேறு சிறுவர்களின் குழலோசைக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய குழலோசைக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்கள் நன்ருகத் தெரிந்துகொண்டனர். அதனுல் அவ்வோசையின் அழைப்பை அவர்களால் எதிர்க்க முடியவில்லை.

இந்த கோபிஸ்திரீகளை இன்னும் சில உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்து இறைவனேடு இரண்டறக் கலக்கச் செய்யவேண்டும். இதற்குத் தகுந்த வழிகளே பிருந்தாவனத்தில் இயற்றிய ஸ்ரீ கிருஷ்ண லீலைகள்.

ஸ்ரீ கிருஷ்ணன் கோபிகைகளின் செல்வக்குழந்தை. கண்ணன் கேட்டிருந்தால் அவன் தின்னுவதற்கு வேண்டிய அளவு வெண்ணெ அவர்கள் கொடுத்திருப்பார்கள். ஆனால் திருடுவதில் அவனுக்கு மிகுந்த ஆசை. வெண்ணெயைத் திருடி நண்பர்களுக்கும் மிருகங்களுக்கும் அதைப்பங்கிட்டுக் கொடுத்தான். தர்மம் செய்வதைக் குறித்து ஒரு நீதி "நீயாக தர்மம் செய்யா விட்டால், நான் திருடி அதை தர்மமாக பங்கிட்டுக் கொடுப்பேன்!" சில சமயம் பானையை உடைத்து வெண்ணெயைக் கீழே சிந்தச்செய்து பயனில்லாமல் செய்து விட்டான். இப்படி கோபிகைகளுக்குத் தியாகத்தை உணர்த்தினன். தர்மம் செய்வது நல்லதுதான். ஆனால் உண்மையான தியாக உணர்ச்சியும் நடு நிலேயும் கொண்டு நாம் எப்போதும் தர்மம் செய்ய மாட்டோம். பரிசு அல்லது பிரதி பலனை எதிர்பார்த்துக் கொடுப்போம். இந்த எண்ணம் உள்ளுறைந்தோ வெளிப்படையாகவோ இருக்கும். இறைவனை நாடுபவன் பூர்ண தியாகம் செய்யும் வகையைத் தெரிந்துகொள்ள வேண்டும். வெளிப்பார்வைக்கு வீணனது என்று தோன்றுவதைக்கூட குருதேவர் அனுமதிப்பதும் இதே காரணம்தான். அதனுல்தான் பக்தர்களும் கங்கை போன்ற நதிகளில் காசுகளை வீசி எறிகின்றனர். நாம் உலகத்தை விட்டுப் போகும்போது எப்படி உடலேயும் விட்டுப் போகிறோமோ அதைப்போல உலகப்பொருள்களையும் உதறித்தள்ள வேண்டும். உடலே விட்டுப் பிரிந்ததும் அது என்ன கதி ஆயிற்று என்பதை சிந்திப்பதில்லே. ஜனங்கள் அதைக் கொளுத்துவார்

கள். அறுக்கவும் செய்வார்கள் அல்லது கழுகுக்கு இரையாக எறியவும் செய்வார்கள். இவ்வகையான தியாக உணர்ச்சி அவர்களுக்கும் உண்டாகவேண்டும் என்று நினைத்தே ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெண்ணைத் தாழிகளை உடைத்து புழுதியிலும் மண்ணிலும் கலந்துவிடச் செய்தார்.

கோபிகள் ஆடையின்றிக் குளிக்கும்போது, அவர்களுடைய ஆடைகளை திருடிச் சென்றதும், புண்ணிய நதிகளில் நிர்வாணமாக நீராடுவது அதர்மம் என்பதை உணர்த்துவதற்காகவே தான். பக்தி மார்க்கத்தில் செல்லும்போது வெட்கப்படுவதும் ஒரு இடைஞ்சல் ஆகும். இறைவன் நாமத்தைப்பாடி ஆடவேண்டும். முன்னாட்களில் பிரசாரத்திற்காக யாத்திரை செய்த இடங்களில் மேடைகளில்ஏறி பிரசங்கம் செய்தபோது குருதேவர் அப்படிச் செய்தது உண்டு.

கோபஸ்திரீகளை இரு விதமாகப் பிரிக்கலாம் என்று நான் கருதுகிறேன். கண்ணனை குழந்தையாக நினைத்துப் பாராட்டிய கல்யாணமாகி வயது முதிர்ந்த தாய்மார்கள் ஒருவகை. மற்றவர் அவனை கணவனாக நினைத்து ஆசைப்பட்ட இளம் பெண்கள். இரண்டாவது வகையினர் தங்களுடைய இச்சை நிறைவேற காத்யாயினிவ்ருதம் அனுஷ்டித்து வந்தனர். கார்த்திகை பௌர்ணமியன்று ஸ்ரீ கிருஷ்ணன் இவர்களுடைய இச்சையை பூர்த்தி செய்ய நினைத்தார். யமுனைக் கரையிலிருந்து குழலை எடுத்து ஊதினதும் கோபிகள் ஓடி வந்தனர். இறைவன் கூப்பிடுவது காதில் விழுந்ததும் லௌகிகமான கருமங்கள் அனைத்தும் தாமாகவே நழுவி விடுகின்றன. எந்த வேலை செய்து

கொண்டு இருந்தாலும் அதை அப்படியே விட்டு விரைந்து சென்றனர். அவர்களுக்கு பயித்தியமே பிடித்து விட்டது. ஆடைகளும் நகைகளும் சரியாக அணியப்பட்டனவா என்று கூட அவர்கள் பார்க்கவே இல்லை. முன் சூத்திரங்களில் பகவத் பித்து ஏறிய பக்தனுடைய நிலையை எவ்வாறு நாரதர் விவரித்துக் கூறினரோ, அதற்கு ஒப்பாகக் காணப்பட்டனர்.

இந்த ராஸலீலையைத் தேவர்களும் கவனித்தார் கள். இங்கே இந்திரிய விஷயமான களங்கம் ஒன்றும் கிடையாது. ஏகமான கிருஷ்ண பகவான் அனேக உருவெடுத்து ஒவ்வொரு கோபிக்கும் ஒவ்வொரு கிருஷ்ணனுகத் தோன்றினன். இதைப்போலவே மேன்மையான பக்தனும், எங்கும் நிறைந்த கடவுளை ஒவ்வொருவர் இதயத்திலும், தன் சொந்தமான இதயத்திலும் ஒளிர்வதை உணர்வான்.

வைகுண்டத்தில் துவாரபாலகரும் எவ்வாறு கர்வம் கொண்டனர் என்பதை அறிவோம். இந்த கர்வம் கோபஸ்திரீகளையும் விட்டு வைக்கவில்லை. இறைவன் அருகிலேயே இருந்ததால், இவர்களுக்கும் கர்வம் தலைக்கு ஏறிவிட்டது. இதை அந்தர்யாமி யான ஸ்ரீ கிருஷ்ண பகவான் கண்டு கொண்டார். உடனே மறைந்து விட்டார். அப்போது கோபிகா ஸ்திரீகள் பெருந்துயரம் அடைந்தனர். அழுதும் புரண்டும் பிதற்றவும்செய்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனையே நினைத்திருந்ததால் தங்களை மறந்தனர். அப்போது ஒவ் வொரு கோபியும் தன்னிடமே ஸ்ரீ கிருஷ்ணனையே தரிசிக்கலானுர்கள். இவர்களுடைய சுயமான உணர்வு முழுதும் மறைந்து விட்டது. இறைவனையே துதித்

தார்கள். சரணுகதி பூர்த்தியாகி விட்டது. அப்போது இறைவனே அவர்களுக்குத்தானுகை வெளிப்படுத்தி அறிவித்தார்.

இது பரபத்தர்களான கோபஸ்திரீகளோடு ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடிய அற்புதமான கதை. நமக்கு அறிவூட்டும் கருத்து நிறைந்தது.

சூத்திரம் 22.

"தத்ராபி ந மஹாத்ம்ய ஞான
விஸ்ம்ருதி அபவாதஃ"

கருத்து :—அந்த நிலையிலும் பகவானுடைய பெருமையையும் மேன்மையையும் மறந்துவிட விசேஷ காரணம் எதுவும் இல்லை.

ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தெய்வீகத் தன்மையை இந்த கோபிகள் அறியாதவரல்ல. ஸ்ரீகிருஷ்ணனுக்குத் துணையாக பூமியில் அவதரித்த இந்த தேவஸ்திரீகள் முன் ஜன்மத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்த பக்தர்கள் எனக்கருதினுலும், இவர் தெய்வாம்சம் பொருந்தியவர் என்று அவர்களுக்குத் தெரியாது என்று சொல்ல ஒரு காரணமும் இல்லை.

இவர்கள் படிக்காதவர்களும் கபடமற்றவர்களுமான இடையர் குலப்பெண்களாக இருந்த போதிலும் அவர்கள் வாயிலிருந்து ஒரு பெரிய வேதாந்தக் கருத்து வெளிப்படுகிறது. தங்கள் அருகே திரும்பவும் வந்து தோன்றும்படி ஸ்ரீ கிருஷ்ணனிடம் பிரார்த்தனை செய்யும்போது "நீ கோபிகளுடன் கூடி விளையாடும் தோழனே செல்வப்பிள்ளையோ அல்ல! எல்லா உயிர்

களுக்கும் ஸாக்ஷியாக இருக்கும் அந்தராத்மா.'' என்று கூறி வாழ்த்தினார்கள்.

இவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனோடு விளையாடினார்கள். இறைவன் பக்தனுக்கு சமீபமாகவே இருப்பான் என்று உணர்த்துவதற்காகவே, அவர்களுக்கு இசைந்த வாறு நடந்து கொண்டான். இந்த ரீதியில் இறை வனின் ஸௌலப்யம் வெளிப்படுகிறது.

ஸ்ரீ கிருஷ்ணன் தெய்வீகத் தன்மை வாய்ந்தவன் என்பது இவர்களுக்குத் தெரியாது என்று நாம் சொல்வது தெய்வ நிந்தனையாகும். இவர்கள் அவ னிடம் பக்தியுடன் பழகி வந்தனர் என்பதற்குச் சந்தேகமே இல்லை. இவர்களுக்குத் தெரிந்தாலும் தெரியா விட்டாலும் அவன் கடவுளேதான். நல்ல வர்களைக் காப்பாற்றி தர்மத்தை நிலை நாட்டி, விரோதி களுக்கும் மோக்ஷத்தைக் கொடுப்பதற்காகவே அவன் அவதாரம் செய்தான். தன்னுடைய தெய்வாம் சத்தை எப்போதும் அறிந்தவன். கோபிகைகளின் அகக்கண்களுக்குப் புலப்படாமல் உண்மையை மறைத்திருப்பானா?

ஸூத்திரம் 23.

“தத்விஹீனம் ஜாரணுமிவ”

கருத்து:—இந்த உணர்வோ அறிவோ இல்லையென்றால், இது ஒருமாது தன் கள்ள நாயகனிடம் கொண்டுள்ள காதலுக்கு ஒப்பாகும்.”

இவ்வகையான உணர்ச்சியும் அறிவும் இல்லை யென்றால், இவர்கள் கண்ணனிடம் கொண்ட அன்பு

ஒழுங்கீனமானது என்றுதான் கருதப்படும். இவ்வளவு நாட்களாக மனிதனுக்கு ஊக்கம் அளிக்கும் அழிவில்லாத வார்த்தைகளைக் கூறிய கிருஷ்ண பகவான் தீய ஒழுக்கமுள்ளவன் என்று நினைப்பது மாபெரும் தெய்வ நிந்தனையாகும். இவ்விதமான தவறான அன்பு கொள்ள ஸ்ரீ கிருஷ்ணன் கோபிகளுக்கு ஒருபோதும் அனுமதி அளித்திருக்க மாட்டான்.

நாம் பாகவதத்தைப் படித்து கோபிகளுக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்குமுள்ள உறவை சிந்தித்துப் பார்க்கும்போது, அவன் கீதையில் கூறியிருக்கும் உபதேசங்களை, அதாவது

[1]. "யத்யத் ஆசரதி ச்ரேஷ்டத் தத்ததேவ இதரோஜநஃ
ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்தத்தனு வர்த்ததே"

என்பதையும்

[2]. "லோகஸங்க ரஹ்மேவாபி ஸம்பச்யன் கர்த்துமர்ஹஸி."
மனதில் நினைத்துக்கொள்ள வேண்டும்.

சூத்திரம் 24.

"நாஸ்த்யேவ தஸ்மின் தத்ஸுக ஸுகித்வம்"

கருத்து :—கள்ளக்காதல், உறவில், ஒருவருடைய இன்பத்தில் மற்றவருக்கு இன்பம் இருக்கவே மாட்டாது.

கற்பு இல்லாத ஒருமாது, தன் கள்ள நாயகனையே நினைத்த வண்ணம் இருப்பது அவன் சுகத்தைக் கருதி

1. *பெரியோர்கள் எது எதை அனுஷ்டிக்கிறார்களோ மக்களும் அதையே பின்பற்றுகின்றனர்.

2. உலக நன்மையைக் கருதி நீ உன் கடமையைச் செய்ய வேண்டும்.

யல்ல. அவ்வகை நல்ல நோக்கம் அவளுக்குக் கிடையாது. தன்னுடைய இன்பத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்து நேர்மையையும், நன்னெறியையும், கள்ள நாயகனுடைய சுகத்தையும்கூட தியாகம் செய்து விடுகிருள்.

கோபஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனிடம் வைத்த அன்பு அவ்வகையானது அல்ல.

இவர்களுடைய நோக்கம் கிருஷ்ணனே இன்புறச் செய்வது ஒன்றுதான். இதற்காகவே அவர்கள் இவ்வுலகில் பிறக்கும்படிக் கட்டளையிடப்பட்டனர். அத்துடன், இவர்கள் எல்லோருக்குமே, ராதை கிருஷ்ணனோடு இருக்கவேண்டும் என்ற ஆசை இருந்தது.

ராதையையும் கிருஷ்ணனேயும் குறித்து ஒரு விவரம் சொல்வதுண்டு. பேரானந்தமே உருவான கடவுளுக்கு அந்த ஆனந்தத்தை அனுபவிக்க ஆசை ஏற்பட்டது. அதற்காக தன்னிடமிருந்து அந்த "பேரானந்தத்தைப்" பிரித்து விட்டார். ஸத்சித்து ஆனந்தத்தை அனுபவிக்க ஆசை கொண்டது. ஸ்ரீ கிருஷ்ணன் "ஸத்சித்தாகவும்" ராதை 'ஆனந்தமாகவும்' ஆகிவிட்டனர். ஆனந்தம் ஸத்சித்தின் ஒரு பாகம் ஆனதால், எப்போதும் அது ஸத்-சித்தையே நாடிற்று ஒன்று இல்லையானுல் மற்றொன்று இருக்க முடியாது போலும். கோபிகளும் இதை இயற்கையாகவே உணர்ந்து அவ்விருவரும் கூடியிருக்க ஆசைப்பட்டனர்.

எது கிருஷ்ணனுக்கு இன்பத்தை ஊட்டியதோ, அது இவர்களுக்கும் ஆனந்தமாயிருந்தது. ஏனென்

ருல் இவர்கள் கிருஷ்ணனிடம் வைத்த மனோபாவனை யில், சிற்றின்ப எண்ணம் சிறிதும் கிடையாது.

சூத்திரம் 25.

"ஸாது சர்மஞான யோகேப்யோ அப்யதிகதரா"

கருத்து :—இது, கர்மம் ஞானம் யோகம் என்னும் இம் மூன்றையும் விட உயர்ந்தது.

இதைப்போலவே பகவத்கீதையிலும் ஸ்ரீகிருஷ்ண பகவான் சொல்வது என்ன வென்றால்

"தபஸ்விப்யோதிகோ யோகி ஞானிப்யோபி மதோதிகஃ
கர்மிப்யாச்சதிகோ யோகி தஸ்மாத் யோகி பவார் ஜுனு."

(தபசியையும், ஞானியையும், கர்மம் செய்வோரையும் விட யோகி மேலானவன். அதனால் யோகியாக இரு.)

இது இறைவன் விளக்கிக் கூறும் தியானயோகத் தைக் குறிக்கும். தபசு, ஞானம், கர்மம் எனும் மூன் றையும் விட இது மேலானதாகக் கருதப்படுகிறது. ராஜயோகம், ஞானயோகம், பக்தியோகம், மூன்றுக் கும் தியானம் பொதுவானது. அதனால் அடுத்த சுலோகத்தில் பக்தனைத் தனியாகக் குறிப்பிட்டார்.

"யோகினுமபி ஸர்வேஷாம் மத்-கதேனுந்த ராத்மனு
ச்ரத்தாவான் பஜதேயோமாம் ஸமேயுக்த தமோமதஃ"

(சிரத்தையுடன் எந்த பக்தன் முழுமனத்துடன் என்னைத் தொழுகின்றானோ அவன் எல்லா யோகிகளுக் கும் மேலானவன்.)

"ச்ரத்தாவன்" "பஜதே" என்ற இரு சொற்களும் நம்பிக்கையையும், பக்தியையும் குறிக்கும். இறை

வனது கமலபாதங்களில் அந்தராத்மாவை ஒப்படைத்துவிட்ட பக்தன், எல்லோரையும் விட மிகவும் மேலானவனுகக் கருதப்படுகிருன்.

"யுக்தாத்மா" என்பது உயர்ந்த நிலையைக் குறிக்கும். அதனுல் இது வெறும் யோகமோ அல்லது ஒரு தொடர்போ அல்ல. இது இறைவனேடு சேர்ந்த ஒருமையான நிலை. நாரதர் இக்கருத்தைக் கீதையிலிருந்து பெற்றுக்கொண்டார். ஆகையினுல் இந்த சூத்திரம் மிகவும் முக்கியமானது.

யோகமார்க்கங்களில் பக்தி மிகச்சிறந்தது என்பதற்கு அனேக காரணங்கள் உண்டு.

(1) இறைவனேடு இரண்டறக் கலப்பதே யோகமார்க்கங்களின் லக்ஷியம். சிரத்தையுடன் வணங்கும் பக்தன், உயிர், உணர்வு, உடைமை எல்லாமும் கடவுளுக்கே அர்ப்பணம் செய்து விடுவான். மற்றவர்கள் தங்கள் இதயங்களில் கடவுளை அமர்த்தித் தொழுவதற்கு முயற்சி செய்யும்போது, பக்தன் கடவுளுடைய இதயத்திலேயே அமர்ந்து விடுகிருன். இவன் இறைவனுடைய பாதங்களில் விழுந்து "கடவுளே! நான் உன்னைச்சேர்ந்தவன். நான் என்பது இல்லை. நீயே எல்லாம்." என்று தொழுவான்.

(2) மேலும், சிறந்த பக்தர்களும், ஆசாரியர்களும், பக்திமார்க்கத்திற்கு ஒரு துணையாகவே ஞானத்தைக் கருதுகின்றனர். ஒருவருடைய குணங்களும், மேன்மையும், பெருந்தன்மையும் தெரிந்து கொண்டால்தான் நாம் அவரிடம் அன்பு செலுத்துகிறோம். அதனுல் கெட்டவைகளை அகற்றி மனத்

தூய்மையாக்கும் கருமமும், உண்மையை உணர்ந்து இறைவன் பெருமையை அறியச்செய்யும் ஞானமும் முடிவு பெறும் உன்னத நிலையே பக்தி, என்று அவர்கள் வற்புறுத்திக் கூறுகின்றனர்.

(3) இன்னும் பக்தியானது, வேறு யோகமார்க்கங்களின் முக்கிய அங்கமாக இருப்பதனுல், அவைகளைவிட இது சாலச்சிறந்ததாகும். ஆத்மாவினிடத்து பக்தி இருந்தால்தான் ஞானமார்க்க முறைப்படி குரு மூலமாக அதைக் கேட்பதற்கும் (ச்ரவணம்) சிந்திப்பதற்கும் (மனனம்) பிறகு தியானம் செய்வதற்கும் (நிதித்யாஸனம்) விருப்பம் தோன்றும். பதஞ்சலி மஹாரிஷியின் ராஜயோக முறைப்படி, பரமபுருஷனிடம் பேரன்பு இருக்கும்போது தான், பிரத்யாஹாரமும், தாரணையும், தியானமும் பழகி ஸமாதி நிலையில் இறைவனேடு ஒன்ருன நிலையை அடையலாம். எங்கும் நிறைந்த ஈசனிடம் உங்களுக்குப் பக்தி இருந்தால் தான், எல்லோருக்கும் தொண்டு செய்து நிஷ்காம்யகர்மயோகம் பழகுவதற்கு விருப்பமும் ஏற்படும். பக்தி ஒன்று இல்லா விட்டால் இந்த யோகமார்க்கங்கள் ஸாதனைத்தன்மையை இழந்து விட்டவைகளேயாகும். பக்தியோகம் இந்த முக்கியமான குணும்சம் பொருந்தியதானதால் இது மேலானதாகக் கூறப்பட்டுள்ளது.

(4) 'நான்' எனும் அகந்தையை நீக்குவதே எல்லா ஸாதனைகளின் முக்கிய நோக்கம். ஞானி சுய-ஆராய்ச்சி செய்தும், ராஜயோகி தியாகம் செய்தும் கர்மயோகி ஆத்மார்ப்பணம் செய்தும் இந்த

லக்ஷியத்தை அடைகின்றனர். இவர்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், கடவுள் கிருபை எப்போது தோன்றுமோ அது வரையில் அகந்தை உணர்ச்சியை முழுதும் நீக்க முடியாது. ஆனால் ஸாதனை துடங்கும் போதே எந்த பக்தன் பூரண சரணாகதி அடைகிறானோ அவன் அப்போதே 'நான்' என்னும் அகந்தை உணர்ச்சியிலிருந்து காப்பாற்றப் படுகிறான். மிகவும் ஜாக்கிரதையாக இல்லா விட்டால், மற்றவர்களிடம் இவ்வுணர்வு நுட்பமாக இருந்து பிறகு வல்லமை யுடன் வளரக்கூடும். இவ்வபாயத்திலிருந்து பக்தனை இறைவனே காப்பாற்றி விடுவான். பக்தன் எப்போது சரணாகதி அடைந்து விட்டானோ, அப்போதே தன்னை விட்டுப் போகாதபடி கடவுளே கவனித்துக் கொள் வார். எளிய பக்தனிடம் இறைவனுக்கு மிகுந்த ஆசை என்பதை முன்பே அறிவோம்!

வேறு யோக மார்க்கங்களை விட பக்தி மார்க்கம் சாலச்சிறந்தது என்பதற்கு எல்லோரும் அறிந்த சில காரணங்களும் உண்டு.

(1) வேறு மார்க்கங்களில் செல்லும் முமுக்ஷு குரங்குக் குட்டியைப் போன்றவன். தன்னுடைய பலம், இச்சா சக்தி, திறமை முதலியவற்றை நம்பி இருப்பான். இது 'மர்கட-நியாயம்' ஆனால் பக்தன் தன்னைக் காப்பாற்றுவதற்கு, கடவுளையே சரணம் அடைந்து கூப்பிடுகிறான். பூனைக்குட்டி கத்துவது போல் பகவன் நாமத்தை உச்சரிப்பதால் தாய் பூனை யைப் போல இறைவனே இவனுக்கு வழி காட்டிக் காப்பாற்றுகிறார். இது 'மார்ஜால நியாயம்'.

(2) வேறு மார்க்கங்களைக் கடைப்பிடிக்கும் முமுக்ஷு ஸம்ஸார ஸாகரத்தில் நீந்தி மோக்ஷமாகிய அக்கரையைச் சேரும் மனிதனுக்கு ஒப்பாவான்.

இவன் நடுவில் அனேக இன்னல்களுக்கு உட்படுகிறான். பக்தன் இறைவனிடம் பிரார்த்தனை செய்வதால், அவன் கிருபையால் துன்பங்கள் எதுவும் இல்லாமல் பாதுகாக்கப்பட்டு, படகில் ஏறி அக்கரையைச் சேர்ந்து விடுகிறான்.

சூத்திரம் 26.

"பல ரூபத்வாத்."

கருத்து:—பலன் எத்தன்மை வாய்ந்ததோ, இதுவும் அவ்வாறே இருக்கின்றது.

கடவுளுடன் ஒன்றாக இருக்கும் நிலையே யோக மார்க்கங்களின் லக்ஷியம். பக்தன் ஏறக்குறைய இந்நிலையிலிருந்தே புறப்படுகிறான்! எவ்வாறு என்றால், பக்தியின் முதற்படியில் ஒரு பாதத்தை வைத்ததும், சரணாகதி செய்து, தன்னை மறந்து, சுயமான ஒரு உணர்வு இல்லாத நிலைக்கு வந்து விடுவான். வேறு மார்க்கங்களைக் கடைப்பிடித்து கடினமாகப் போராடி முமுக்ஷுக்கள் பெறும் பலன் பக்தியேயாகும்.

பக்தியே ஸாதனையும் பலனும். அதுவே முறையும் முடிவும் ஆகும். இதர யோக மார்க்கங்களில் அனுசரிக்கும் முறைகளுக்கும் முடிவுக்கும் வித்தியாசம் உண்டு. ஞானியானவன், ஐந்து கோசங்களையும் மூன்று சரீரங்களையும், மூன்று அவஸ்தைகளையும்

மறுத்துத் தள்ளிவிட முயற்சி செய்கிறன். பின்னல் அடையப்பெறும் ஆத்ம தரிசனத்திற்கு இவை முற்றி லும் மாறுனவை. ராஜயோகி, யமம்-நியமம்-ஆஸனம் -பிராணுயாமம் பிரத்யாஹாரம் (இந்திரியங்களோடும் மனத்தோடும் போராடுவது) முதலிய வழிகளைப் பழகி, ஆத்மாவைப் பிரித்து அதோடு நிலேத்திருக்க முயற்சி செய்கிறன். கர்மயோகி, நாமமும் ரூபமும் இல்லாத எங்கும் பரந்த ஆத்மாவை அடைவதற்கு நாமரூபத்துடன் கூடின பொருள்களுக்குப் பணி செய் கிறன். கடைப்பிடிக்கும் முறைகள் வேறு, முடிவு வேறு. ஆனல் பக்தியோகம் இப்படிப்பட்டது அல்ல. பக்தியோக ஸாதனேயே எல்லாம். முதற்படியில் கால் வைத்ததும், நான் இல்லே-நீயே எல்லாம்'' என்று கூறிவிடுகிறன். இவன் இறைவனேடு ஒன்றுன நிலேக்கு வரும்போது அறிந்து உணரும் ஞானமும் இதுவேயாகும்.

சூத்திரம் 27.

''ஈச்வரஸ்யாப்யபி மானத்வேஷித்வாத்
தைன்யப்ரியத்வாச்ச.''

கருத்து.—இறைவனும் கர்வத்தை வெறுத்து, பணிவுடன் இருப்பவர்களே விரும்புகிறன்.

இதைக் கேட்டதும், கடவுளும் ராகத்வேஷங் களுக்கு உட்பட்டவர் என்று நினேக்கத் தோன்று கிறது.

''ஸம் மோஹம் ஸர்வ பூதேஷு
நமே த்வேஷ்யோஸ்தி நப்ரிய:''

(எனக்கு எல்லோரும் சமம். எவரும் பிரியமும் இல்லை, விரோதமும் இல்லை.) என்று கீதையில் உரைத்ததற்கு மாருக இருக்கிறது.

இறைவன் எல்லோருக்கும் எவரிடத்தும் சமம். குளிர்ந்த காற்று வீசும்போது, ஒருவன் மூடிவைத்த அறையில் இருந்தால் அவ்வின்பத்தை அனுபவிக்க முடியாது. ஆனுல் மாடியில் திறந்த வெளியில் இருப்பவனுக்கு அனேக நன்மைகள் ஏற்படுகின்றன. அதைப் போலவே, அகங்காரமும் மமதையும் உள்ளவன் இறைவன் ஒளியையும் கிருபையையும் வரவொட்டாமல் தடுத்து விடுகிருன். பணிவு உள்ளவன் இதயத்தைத் திறந்து வைத்திருப்பதால் கடவுள் கிருபைக்குப் பாத்திரம் ஆவான். இந்த உண்மையை நாரதர் சிறிது கடுமையான சொற்களால் முமுக்ஷுவுக்குத் தெளிவாக உணர்த்துகிருர்.

நம்முடைய அபிமானம் எவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்காது. கர்வமும் அகங்காரமும் உள்ளவனிடம் எவருக்கும் பிரியம் இருக்காது.

"அபிமானம் சுராபானம் கௌரவம் ரௌரவம் ஸமம்
ப்ரதிஷ்ட ஸூகரீவிஷ்டா த்ரயம் த்யக்த்வா ஹரிம் பஜேத்"

(கர்வம், போதைதரும் பானங்களுக்கு சமமாகும்).

குடிவெறி மூளையை மறைத்து புத்தியின் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. போதைதரும் பொருள்களை உபயோகிப்பதால் நாமாகவே மனமுவந்து புத்தி நாசத்தை வருவித்துக் கொள்கிறோம் என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். கர்வத்திற்குக் கட்டுப்பட்டவன் கதியும் இப்படித்தான். இவன் எத்தன்மை

வாய்ந்தவன் இல்லையோ அத்தன்மை வாய்ந்தவனாக வேஷம் போட்டு பெரியவன் போல் நடிக்கிறான். இதை நிலைநாட்டுவதற்காக பொய் பேசவும், வேறு கெட்ட பழக்கங்களையும் தன் இச்சைப்படி கடைப் பிடிக்கிறான். 'கௌரவம் என்பது ரௌரவம் என்னும் நரகத்திற்கு சமம். இதற்கு வசமாகும்போது, மனிதன் தெய்வீகப் பாதையில் முன்னேறும் விருப்பம் சிறிதும் இல்லாமல் பாபகருமங்களைச் செய்து நரகத்தில் விழு கிறான். 'ப்ரதிஷ்ட' என்பது கௌரவமும் ஆதிக்கமும் நிறைந்த பதவியில் இருப்பது. இத்தகைய பதவியில் இருப்பவனுக்கு ஸாதனை செய்ய விருப்பம் இருக்காது. இப்பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, இறைவனுக்கும், சமூகத்திற்கும், தனக்கும் விரோத மான பாபகருமங்களைச் செய்கிறான். இறைவனை நினைப்பதே இல்லை. அதனால் பக்தன் இம்மூன்றை யும் தியாகம் செய்து விடவேண்டும்.

இவ்வுலகம் கடவுள் சிருஷ்டி. அவன் வீடு என்று சொல்லலாம். உங்கள் வீட்டில் வேலைக் காரர்கள் கர்வம் கொள்வதை நீங்கள் விரும்புவ தில்லை. வேலைக்காரர்கள் அப்படி கர்வமும் மமதையும் அடையும்போது என்ன செய் கின்றீர்கள்? அவனை வேலையைவிட்டு நீக்கிவிடுகிறீர் கள். இந்த உரிமை கடவுளுக்கு இல்லை. ஏனெனில் இந்த சிருஷ்டி எல்லாம் அவருடைய வீடு. கர்வ முள்ளவனை நீக்கிவிட முடியாது. ஆனால் அவன் கர்வத்தை அடக்கவேண்டும். எல்லாம் அறிந்த இறைவன் இதற்கு பல முறைகளை உபயோகிக்கிறான். ஸாதனைக்குப்பரம விரோதியான கர்வத்தை நீக்கும்

பொருட்டு, தோல்வி, அவமானம், துன்பம், வறுமை, நோய், மூப்பு, சாவு முதலிய தூதர்களை இறைவன் அனுப்பி வைக்கிறான்.

ஆனால் பணிவு என்பது ஒரு நல்ல பழக்கம். பணிவு உள்ளவனை எல்லோரும் விரும்புவர். அவனுக்குத்தொண்டு செய்யவும் ஓடி வருவார்கள். கடவுளும் அவனிடம் அன்பு செலுத்துவதில் அதிசயம் ஒன்றும் இல்லை.

பணிவுடன் இருப்பவன் அவமானத்தையும் துன்பத்தையும் பொறுத்துக் கொள்வான். குருதேவரும் "அவமானத்தையும் துன்பத்தையும் பொறுத்துக் கொள். இதுவே உயர்ந்த ஸாதனை" என்பார். அகம்பாவத்தை நீக்கி பணிவை வளர்க்க இதுவே மேலான ஸாதனையாகும். உங்களை ஒருவன் அவமதிக்கும் போது, கர்வம் வெளித்தோன்றும். அவமானம் உறுத்தும்போது, நீங்கள் கலகம் செய்கிறீர்கள். அறிவுள்ள ஸாதகன் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப்பயன் படுத்தி தன்னுள்ளே உறையும் இப்பகைவனை, தற்சோதனை செய்தும், சிந்தித்துப் பார்த்தும் ஒழித்து விடுவான். சுய ஆராய்ச்சி செய்வதால் கர்வம் தோன்றும் இடத்தை அறிந்து, அதை முற்றும் ஒழிக்க முடியும். நாம் அவமானத்தையும் துன்பத்தையும் வரவேற்க வேண்டும், உலகில் வேறு எதுவும் செய்ய முடியாத காரியத்தை இவை செய்து முடிக்கின்றன. மனோதத்துவமான சண்டையில் நம் எதிரியான கர்வத்துக்கு நேருக்கு நேராக இவை நம்மை அழைத்துச் செல்லுகின்றன. இந்த எதிரியின் அருகிலேயே எப்

போது வந்து விட்டோமோ, அப்போது அவனைக் கொன்று விடலாம். அப்போது "நீ எவைகளிலிருந்து விடுபடுவதற்கு ஆசைப்படுகிருயோ அவ்வுடலையும் மனத்தையும்தான் அவன் அவமதிக்கிருன். நீ உடலுக்கும் மனத்துக்கும் வேருனவன் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்'' என்று குருதேவர் உபதேசிப்பதை நாம் உணர முடியும். சரியான வேளையில் நாம் தவருதிருக்க, அவருடைய கிருபைதான் நமக்கு மன உறுதி அளிக்கவேண்டும்.

பணிவு உள்ளவனைப் பல மில்லாதவன் என்று நினைத்துவிடக் கூடாது. மனிதன் குறை யுள்ளவன் என்றும் ஒரு அளவிற்குட்பட்டவன் என்றும், இறைவனே ஸர்வ வல்லமையும், பூர்ணத்தன்மையும், எல்லையற்றவனுகவும் இருக்கிருன் என்பதும் அவனுக்குத் தெரியும். இறைவன் இச்சையின் ஈடற்ற நிலையை அறிந்து அதற்குப் பணிவுடன் தலைவணங்குவான்.

கடவுளுக்கும் இதுவேதான் வேண்டும்! அர்ஜுனன் போர் செய்ய மனமில்லாமல் கைவிட்டபோது, ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனை இகழ்ச்சியாகவே பேசி, ஆண்மையற்றவன் என்று உரைத்து, யுத்தத்தில் வெற்றியடைய அர்ஜுனன் போர் செய்ய வேண்டும் என்று தோன்றும்படிச்செய்கிருன். எல்லாம் அவனைச் சேர்ந்தது. விச்வரூபம் காண்பித்தபோது,

"மயைவைதே நிஹதா பூர்வமேவ நிமித்த மாத்ரம்
பவ ஸவ்ய ஸாசின்."

(நான் அவர்களை முன்பே கொன்று விட்டேன். என் கையில்—இந்த நாடகத்தை முடிக்க—நீ ஒரு ஆயுதமாக இரு). எனவும்,

"தஸ்மாத்வ முத்திஷ்ட யசோ லபஸ்வ"

(எழுந்திரு! புகழ்பெறுவாய்) என்றும் ஸ்ரீ கிருஷ்ணன் கூறினன். புகழ் எதற்கு? செத்துப்போன பாம்பைக் கொல்வதற்கு! இது மனிதன் செயல் அல்ல. ஆனால் மனோபாவம் மனிதனைச் சேர்ந்தது. நிமித்த பாவனை யின் ரகசியம் இதுதான்.

நாம் கடவுளுடைய கைகளில் ஏந்திய வெறும் ஆயுதங்கள் என்று உணரவேண்டும் என்பது அவன் இச்சை. அதிக வலிமையுள்ள கடவுளுக்கு, மிகவும் பணிவுள்ள ஆயுதங்கள் என்று நாம் நினைத்தால், அவர் நம்மிடம் அன்பு செலுத்தி, நம்மைக்காத்து நமக்கு வழியும் காட்டி ஸம்ஸாரத்திலிருந்து காப்பாற்றுவார்.

இந்த மகத்தான உண்மையை ஸ்ரீ கிருஷ்ண னுடைய வாழ்க்கை மூலமாக அறிய முடியும். அவன் எளியவர்களின் அன்பன். பாண்டவர்களுடைய தூதனாக ஹஸ்தினபுரம் சென்றபோது, கௌரவர் கள் அவனை விருந்துக்கு அழைத்தனர். தெருவின் வழியாகப் போகும்பொழுது, வீட்டு வாசல் முன் விதுரர் நிற்பதைக்கண்டு, கிருஷ்ணன் அவரை விசாரித் தான். அப்போது விதுரர் "பகவான்! இது உங்கள் வீடு" என்று பதில் உரைத்தார். ஸ்ரீ கிருஷ்ணன் தானாகவே அவர் வீட்டில் நுழைந்து, அந்த ஏழையின் விருந்தைத் ஏற்றுக்கொண்டார். (இவர் ஒருவரே, இது இறைவனுடைய வீடு என்று சொன்னவர்.) கர்வம் மிகுந்த துரியோதனனுக்கு இவ்வாறு ஒரு பாடமும் கற்பிக்கப்பட்டது.

கபடமில்லாத, எளிய பக்தியைப்போல, இறைவனுக்குப் பிரியமானது வேறு ஒன்றுமில்லை.

ஸூத்திரம் 28.

"தஸ்யா ஞானமேவ ஸாதன மித்யேகே."

கருத்து:— ஞானமே இதற்கு உபாயமாகும் என்பது ஒருவருடைய அபிப்ராயம்.

பக்தன் வெறும் மூடநம்பிக்கையுள்ளவன், அறிவில்லாத கருத்துடையவன், விசித்திரமான நடத்தையுள்ளவன், இறைவன் தன்மை தெரியாதவன் என்று பலவாருகப் பேசுபவர்கள் வாயை இது மூடி விடுகின்றது. அப்படிப்பேசுவது தவறு என்று இவர் உரைக்கின்ருர். பக்தியை வளர்க்க ஞானமே ஓர் உபாயம் என்று சொல்வதோடு நிற்காமல், பக்திக்கு ஞானமே உபாயம் என்று உறுதியாகக் கூறுகின்ருர்.

இந்த இடத்தில் ஞானம் என்பது ஒருவன் மூளையில் நிரப்பும் அறிவு அல்ல. மனிதன் ஒரு அசையும் நூலகமாக (Moving Library) இருந்தாலும், ஒரு பெரிய முட்டாள். அனேக விஷயங்களைத் தெரிந்து கொள்வது, ஒரு நெருப்புப் பெட்டியை சட்டைப் பையில் வைத்திருப்பதற்கு ஒப்பாகும். உங்களிடம், எண்ணெய், விளக்கு, திரி, ஒரு நெருப்புப்பெட்டி எல்லாம் இருந்த போதிலும், இருள் மறைந்து ஒளி பரவி இருக்கிறது என்று சொல்ல முடியாது. இந்த சாமான்களைச் சேகரிப்பது அறிவைப் பெறுவதற்கு ஒப்பாகும். விளக்கை ஏற்றி ஒளிரச்செய்வது ஞானம். இந்த ஸூத்திரத்தில் சொன்னது ஞானத்தைக் குறிக்

கும். ஒருவன் உலகத்திலுள்ள தத்துவ சாஸ்திரங்களை எல்லாம் கற்றுத்தேர்ந்தவனுக இருக்கலாம்; ஆனாலும் இவன் ஆத்ம ஞானம் இல்லாதவனுக இருப்பான். ஆனல் இதற்கு மாருக ஒருவனுக்கு விஷயங்கள் ஒன்றும் அதிகமாகத் தெரியாவிட்டாலும், ஆத்ம ஞானம் உள்ளவனுக இருப்பான்.

அகில இந்திய யாத்திரையின்போது, குருதேவர் இலங்கையில் ஒரு மாணவனுக்கு இக்கருத்தை உணர்த்தினர். "கீதையையும், அதற்கு எழுதியுள்ள எல்லா விளக்க உரைகளையும் நன்ருகப்படித்தால் நீ ஒரு பண்டிதன் ஆகலாம். கீதையில் ஒரு சுலோகத்தைக் கற்றுக்கொண்டு, நீ அந்த உபதேசத்தைக் கடைப்பிடித்து வந்தால், அப்போது உனக்கு இறைவன் தரிசனம் கிடைக்கும்" என்று உரைத்தார்.

நாம் எப்போதும் இறைவன் பெருமையைக் கேட்டு, அவன் சர்வ வியாபகன், சர்வசக்தி யுள்ளவன் எல்லாம் அறிந்தவன் என்பதை நம் இதயத்தில் பதிய வைக்க வேண்டும். இவ்வுணர்ச்சி நமக்கு பக்தியைத் தூண்டும். அது இறைவனிடம் நம்மை இழுத்துச் செல்லும். நாம் இறைவன் அருகே போகும்போது அவன் பெருமை நமக்கு நன்ருக விளங்கும். இவ்வாறு அவனிடம் சேர்ந்து நாளடைவில் இறைவனேடு ஒன்ருகி விடுவோம்.

நாம் முற்றுப்பெருத நிலையில் இருப்பவர் என்றும் இறைவனே பூரண நிலையில் இருப்பவர் என்றும், இந்த ஞானமே நமக்கு உணர்த்துகிறது. இறைவன் அருகிலேயே அழைத்துச் செல்லும் ஞானத்தையே இந்த சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

"மையேவ மன ஆதத்ஸ்வா மயிபுத்திம் நிவேசய"

(என்னிடத்திலேயே உன் மனதைச் செலுத்து. என்னிடமே உன் புத்தி நிலைத்திருக்கட்டும்.) என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொன்னார். பக்தி என்பது இதுவே ஆகும். நமது அறிவு, தெய்வ நெறியில் முன்னேறுவதற்கு ஒரு தடையாக இல்லாமல், கடவுளுக்குப் பணிந்து அவனிடம் பேரன்பு செலுத்த உதவவேண்டும். அது நம்பிக்கையாலும், பக்தியாலும் ஒளிரவும் வேண்டும். இறை அன்பை வளர்க்க, இவ்வகை ஞானமே ஒரு ஸாதனையாகும்.

சூத்திரம் 29.

"அன்யோன்யாச் ரயத்வமித்யன்யே."

கருத்து :—சிலர், இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உள்ளவை என்று கருதுகின்றனர்.

'ஒன்றுக்கு ஒன்று தொடர்பு' என்பது, ஞானத்திற்கும் பக்திக்கும் ஏற்பட்ட தொடர்பைக் குறிக்கும். இது முன் சூத்திரத்தில் விவரமாகக் கூறப்பட்டது. அறிஞர்களுக்கு ஒரு நட்சத்திரம் எவ்வாறு ஏசுநாதர் பிறந்த பெதல்ஹெம் என்ற இடத்திற்கு வழிகாட்டியதோ அதைப்போல, இறைவன் அருகே நெருங்க உதவும் மனமும் புத்தியும் சேர்ந்த நிலையே ஞானம். அதைப்போல, பக்தியும் இறைவன் அருகே நம்மை அழைத்துச் சென்று நமக்குக் கிடைத்த இறைவன் தரிசனத்தைத் தெளிவாகச்செய்து ஞானத்தைத்தீவிரமாக்கி உயர்த்திவிடும்.

இது இறைவனுக்கும் பக்தனுக்கும் ஏற்படும் தொடர்பையும் குறிக்கும். ஒரு மஹா புருஷர் அழகாகவும் தைரியமாகவும் சொல்வது என்ன வென்றால்,

"நநாஹம் த்வத்ருதே நாதவான்
மத்ருதே த்வம் தயாநீயவர்ன் நசா
விதிநிர்மிதம் ஏததன்யம்
பலாய மஸ்ம ஜிஹபாஹ."

(உன்னையன்றி வேறு ஒரு கடவுள் எனக்கில்லை. உன் கருணையைப் பொழிவதற்கு என்னைப்போன்றவர் வேறொருவரும் இல்லை. கடவுள் ஒரு கருணைக்கடல் என்ற சிறப்புப் பெயரும் உனக்குக் கிடைக்காது.— இது விதியின் விளைவால் வரும் தொடர்பு. அதனால் என்னைக்காப்பாற்று). இதிலே ஒரு பெரிய உண்மை உண்டு.

இறைவன் இல்லையானால் நம்மால் வாழமுடியாது. வாழும் உயிர்களுக்கெல்லாம் அடிப்படை இறைவன். அவ்வாறு இருக்கும்போது "பக்தன் இல்லையென்றால் கருணையே உருவான கடவுளும் இல்லை." என்றும் சொல்லலாம். ஏனெனில், நாம் ஸாதனை பயனளித்து கர்ம வினையால் எல்லாம் நடைபெற்று, நாம் எதற்குத்தகுதி உடையவர்களோ அவை மட்டும் கிடைக்கப் பெற்றால் (நாம் எதற்காக கடவுளை வேண்டினோமோ அது வல்ல.) உலகில் நீதி இருக்கும். அப்போது கருணை நிறைந்த கடவுளுக்கு இங்கு இடமே இல்லை. பணிவுள்ள ஒரு பக்தன் இறைவனை நாடிச்செல்வதால், இறைவனும் அதற்கு இணங்கி, தன்கருணையை அவன் மீது பொழிகிறான்.

"நதாமி புத்நியோகம் தாம் ஏனமாம் உபயாந்திதே."
(நான் அவர்களுக்கு புத்தியோகத்தைக் கொடுக்கிறேன். அதன் முலம் அவர்கள் என்னை அடைகிறார்கள்.)

"திவ்யாம் நதாமிதே சக்ஷு, பச்யமே யோகமைச்வரம்."
(நான் உனக்கு ஞானக்கண் அளிக்கிறேன். என்னைப் பார்) என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் உரைத்தார். இதனால் இவனுக்கு கடவுளைப் பார்க்கவும், அறிந்து உணரவும், கடவுளையே பூஜித்து, வாழ்த்தி, தியானம் செய்யவும் முடிகின்றது.

இன்னும் ஒருவிதமான உரையும் சொல்லலாம். இது தந்தைக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. தந்தையில்லையானால் பிள்ளைகளும் இல்லை. பிள்ளைகள் இல்லையானால் ஒருவனைத் தகப்பன் என்று கூப்பிடவும் முடியாது. கடவுள் இல்லையென்றால் நமக்கு வாழ்வு இல்லை. பக்தர்கள் இல்லையென்றால் கடவுளும் இல்லை. இதை வேறு விதமாகச் சொன்னால், இறைவனை மறந்து, இல்லாத ஒரு பொருளாகவும் நினைத்துவிட நேரிடும்!!

மேலும், பக்தி தவிர்க்க முடியாதது, என்பதை இத்தொடர்பு ஊர்ஜிதப்படுத்துகிறது. இவ்வகையில் நாம் இறைவனோடு உறவு கொண்டு, நிலையான பக்தி மூலமாக அனுக்குக் கட்டுப்பட்டு விட்டோம். அவனோடு நெருங்கிய உறவு கொள்வதால், நாம் அவனிடம் பேரன்பு செலுத்தி விடுகிறோம். இந்த நிலையை எதுவும் மாற்ற முடியாது. உணர்ந்தோ உணராமலோ அவனிடம் பக்தி ஏற்பட்டு விடுகிறது. உணர்வுடன்

பக்தி செலுத்தினுல், அவன் பாத கமலத்தை எளிதில் அடைந்து விடலாம்.

சூத்திரம் 30.

"ஸ்வயம் பல ரூபதேதி ப்ரம்மகுமாராঃ"

கருத்து :—பிரம்மாவின் குமாரர்கள், பக்தியே அதனுடைய பலன் என்று கருதுகின்றனர்.

சூத்திரங்களில் வார்த்தைகளை வீணுக்குவதில்லை. வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி அல்லாமல், சூத்திரங்களையே திரும்பவும் சொல்ல மாட்டார்கள். ஆனுலும் இக் கருத்தை திரும்பவும் சொல்ல வேண்டியது அவசியம் என்று நினைத்தார் நாரதர். "பக்தியே அதன் பலன்" என்பதும், "பக்தியே அனுசரிக்கும் முறையும், முடிவும் ஆகும்" என்பதும் முக்கியமான விஷயம்.

இறைவனிடம் பேரன்பு வளர்க்க அனுகூலமான ஸாதனைகளைக் குறித்துப் பேசும்போது, இக்கருத்தைத் திரும்பவும் சொன்னது கவனிக்க வேண்டியது. பேரன்பை வளர்க்க வேறு எந்த முறைகள் இருக்கின்றன? இறைவனிடம் அன்பைப் பெருக்க எவ்வழி சிறந்தது? அவனிடம் அன்புகொள்ள வேண்டும் என்பது தெளிவான விஷயம்.

ஆயினும், இது முன் சூத்திரத்தில் கூறினதற்கு முரண் ஆகாது. இது முன் சொன்ன கருத்தை உறுதிப்படுத்துகிறது. "ப்ரம்ம குமாராঃ" என்பது ஸனத் குமாரர்களைக் குறிக்கும். அவர்கள் பெரிய ஞானிகளாகவும், தபசிகளாகவும் இருந்தனர். நாரதரும் ப்ரம்ம குமாரர் ஆவர். அதனுல், ப்ரம்ம குமாரர்

களும், நாரதரும் இக் கருத்து கொண்டார்கள் என்று இந்த சூத்திரத்திற்குப் பொருள் கூறுவது பொருத்த மாகும். ஞானத்திற்கும், பக்திக்கும் உள்ள தொடர்பை அறிந்த இப் பெரும் ஞானிகள், பக்தியைப் பெறு வதற்கு பக்தியே வழி என்று தைரியமாக ஊர்ஜிதம் செய்தனர். பக்தியைப் பெறுவதற்கு, ஒரு ஸாதனே மார்க்கமாகக் கருதப்படும் ஞானம், வெறும் வறட்டு தத்துவ ஞானம் அல்ல. ஆனுல், அது, முன் சூத்திரத் தில் உரைத்தவாறு பக்தியைப் பலப்படுத்திப் பெருக் கும் ஞானமாகும். அந்த ஞானமும் பக்தியே யாகும். முன் சூத்திரத்தின் உட் கருத்தை இது வெளிப்படுத்து கிறது. பக்தியும் ஞானமும் தொடர்பு உள்ளவை என்று சொல்லும்போது, பக்தி ஜீவாத்மாவுக்கும், ஞானம் உடலுக்கும் ஒப்பாகும்.

சூத்திரம் 31.

“ராஜக்ருஹ போஜனுதிஷு தைவ த்ருஷ்டத்வாத்”

கருத்து:—அரசன், வீடு, உணவு இவைகளில் காணப்படு வதைப்போல் ஆகும்.

இவை வேதாந்த உவமைகள்! ஆத்மானுபூதி அடைவதால், புதிதாக ஒன்றும் கிடைத்து விடவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்ய, இவைகள் உவமையாகச் சொல்லப்படுகின்றன. ஆத்மா, சுயம்பிரகாசமாகவும், தானுகவே நிற்கும் உண்மையாகவும், எப்போது நிலைத் திருக்கும் பொருளும் ஆகும். ஸாதனே, இந்த ஆத் மாவை சிருஷ்டிக்கவில்லை. ஆனுல் உண்மையை மறைக் கும் திரையை நீக்கி விடுகிறது. அவ்வளவுதான். ஸாதனே இதயத்தைத் தூயதாக்கி, உள்ளுணர்விஞல்

ஏற்படும் அறிவின் மூலமாக இந்த ஆத்மாவைத் தெரிந்து கொள்ளும்படிச் செய்கிறது. இந்த உவமைகளை இந்த இடத்தில் உரைப்பதால், பக்தியும் ஆத்மானு பூதியும் ஒரே பொருளுடைய வெவ்வேறு சொற்கள் என்றே நாரதர் கருதுகிறுர் என்பதைத் தெளிவாக்குகிறது.

இது 29-ஆவது சூத்திரத்தின் இரண்டாவது கருத்தை உறுதிப்படுத்தும் ஈசனும் ஜீவனும் இந்த அன்பினுல் இணைக்கப்படுகின்றன. நாம் இறைவனிடம் அன்பு செலுத்தாத காலமும், இறைவன் நம்மிடம் அன்பு செலுத்தாத காலமும் இதுவரை இருந்ததும் இல்லை, இனி இருக்கப் போவதும் இல்லை. ஆனுலும், நமக்கு இது தெரியாமல் ஸம்ஸாரத்தில் உழன்று, அழியும் பொருள்களில் இச்சை வைத்து, மனிதரிடம் அன்பைத் தேடுகிறோம். நாமும் அன்பு செலுத்தி, பிறரும் நம்மீது அன்பு செலுத்துவதில் நாம் ஆசை கொள்வது, பேரன்பே அழியாத பொருள் என்பதை உணர்த்துகிறது. இப் பேரன்பே கடவுள். இதைத் தெரிந்துகொள்ள முடியாமல் அஞ்ஞானம் என்னும் திரை மறைக்கிறது. இத் திரையை நீக்குவதற்காகவே பக்தி ஸாதனை ஓர் உபாயமாக அமைந்து, நம்மை இதுவரையிலும் காப்பாற்றிய அன்பு நிறைந்த கடவுளிடம் நாமும் அன்பு கொண்டுள்ளோம் என்பதை அறிவுறுத்துகின்றது.

இனி இந்த உவமைகளைக் குறித்து ஒரு வார்த்தை.

(1) ஓர் இளவரசன், சிறுவனுக இருக்கும்போது, காடுகளில் வழி தவறி விட்டதால் வேடன் ஒருவன்

வீட்டில் வளர்ந்து வந்தான். தன்னை ஒரு வேடனாகவே நினைத்து அவனைப் போலவே வாழ்ந்து வந்தான். ஒரு நாள் ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் இவனை அடையாளம் கண்டு பிடித்து, இவன் அரசவம்சத்தைச் சேர்ந்தவன் என்பதை இவனுக்கு எடுத்து உரைத்து, அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். இந்த இளவரசன் அதை மறந்து விட்டான் என்பதைத் தவிர, இவனுடைய பரம்பரை உரிமை எதுவும் மாறவில்லை.

(2) யாத்திரை செய்யும் ஒருவன், தன்னுடைய வீட்டிலிருந்து வெகு தூரம் சென்று, வெப்பத்திலும் குளிரிலும் கஷ்டப்பட்டு, சிலவேளை பட்டினி கிடந்தும் சில வேளை சந்தோஷத்தையும் சில வேளை துன்பத்தையும் அனுபவித்து, கடைசியில் தன் வீடு திரும்பி வந்து பாதுகாப்போடு சந்தோஷமாக வாழ்கிறான். தெருக்களிலும், பிளாட்பாரங்களிலும் தூங்கினாலும் கூட அவன், வீட்டை எவரும் எடுத்துப்போக வில்லை. அவன் தன்னுடைய உரிமையை திரும்பக்கேட்டு வீடு வந்து சேரவேண்டும் அவ்வளவுதான்.

(3) உணவு சாப்பிடுவதால் ஒரு புது சக்தியைக் கொடுக்கவோ அல்லது பசியை முடிவாக நீக்கவோ செய்ய வில்லை. அந்த வேளைக்கு மட்டும் பசியை நீக்குகிறது. அது ஒன்றேதான்.

இதை அடுத்த சூத்திரம் தெளிவாக்கும்.

சூத்திரம் 32.

"நதேன ராஜபரிதோஷ க்ஷுதரசாந்திர்வா"

கருத்து :—அதனல் (வெறும் அறிவினுல்) மட்டும் அரசன் அரசனுவதில்லை. பசி இருப்பவனுக்கும் திருப்தி ஏற்படுதில்லை.

அரசகுமாரன் எப்போதும் உரிமையுள்ளவன். அஞ்ஞானம் அகன்றதால், அவனுடைய அடிப்படையான தன்மைக்கு எதுவும் சேர்க்கப்பட வில்லை,

உண்பதால் பசியே இல்லாமல் செய்துவிட வில்லை தற்காலிகமாக ஏற்பட்ட ஒரு நிலை நீங்கிற்று.

எது நிலையான பொருளோ அது நிலையான உண்மைப்பொருள். அது தானுக நிற்பது. அத்துடன் வேறொன்றும் சேர்க்கவும் முடியாது. அதிலிருந்து எதையும் குறைக்கவும் முடியாது.

"பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணுத் பூர்ண முதச்சதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேலா விசிஷ்யதே."

பூர்ணமான எல்லையில்லாத நிலையான பொருளே இருந்தது, இருக்கின்றது, இனிமேலும் இருக்கும். இதுவே கடைசியான உண்மை. வேறெதுவும் பொய். கௌடபாதாசாரியார் புகழ்பெற்ற அஜடவாதத்தை (இருப்பது ஒன்றேதான். உண்மையில் சிருஷ்டி என்பது இல்லை என்ற கொள்கை) ஸ்தாபித்தார் மந்தபுத்தியுள்ளவர் உண்மை என்று நினைக்கும் வெளித்தோற்றம் வெறும் பொய் என்பதை உணர்த்தவே ஸ்ரீ சங்கரர் மாயாவாதத்தை எடுத்துரைத்தார்.

பொய்யை மெய்யென்று தோன்றும்படிச் செய்து, உண்மையை மறைப்பது எதுவோ அதுவே மாயை. மாயை ஸத்துப்பொருளோ அஸத்துப் பொருளோ அல்ல. அது உண்மையாக இருப்பது என்பதும் இல்லை. இல்லை யென்பதும் இல்லை. அது வெறும் பொய் என்று மறுக்க முடியாத கானல் நீர் போன்ற ஒரு பொய் தோற்றம்.

இனி அந்த மூன்று உவமைகளையும் சரியாக கவனிப்போம்.

(1) அந்த அரச குமாரன், தன்னுடைய உண்மை நிலையை அறியாமல் இருந்ததால், வேறொருவன் அதை அவனுக்கு விளக்கி உரைத்து, மாளிகைக்கு அழைத்து வர வேண்டியதாயிற்று. அப்போதுதான் அவனுக்கு அந்த ராஜ்யம் திரும்பவும் கிடைத்தது. அதைப் போலவே, அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த ஜீவனை, குரு தட்டி எழுப்புவது அவசியம். உலகத்திலுள்ள எல்லா சாஸ்திரங்களைப் படித்தாலும், எல்லா அனுஷ்டானங்களையும் யோகமுறைகளையும் பழகி வந்தாலும் குருமூலமாக மெய்ஞான உணர்ச்சி பெறாவிட்டால் இவை எதுவும் பயனில்லை. ஸனத்குமாரர்களுக்கு தக்ஷிணாமூர்த்தி ஞானோபதேசம் செய்ததைப் போல், இறைவனுடைய நிலையை சரியாகத் தெரிந்து கொள்ள வார்த்தையற்ற சம்பாஷணையினால் சிந்தையை நேராக திருத்தி அமைப்பதும் குருமூலமாகவே ஏற்பட வேண்டும்.

நமக்கு மெய்ஞான அறிவைக் கொடுத்து தேவ லோகத்திற்கு வழி காட்டுவதும் குருவேதான்.

(2) அஞ்ஞானத்திரை அகன்று, நாம் மெய்ப் பொருள் ஞானம் (பரோக்ஷஞானம்) பெற்றாலும் பொருள்களிலிருந்து நம் கண்களைத் திருப்பாமலும், நமக்கே உரிமையான வீட்டிற்குத் திரும்பிப் போகாமலும் இருந்தால், சாந்தியே உருவான நமது இருப்பிடத்தை மறுபடியும் பெற முடியாது. நாம் வீட்டை விட்டு வெகு தூரம் வந்து விட்டோம். இந்த ஸம்ஸாரத்தில் வழி அறியாமல் தடுமாறி, வெப்பம் குளிர், இன்பம் துன்பம், மானம் அவமானம் என்னும் துவந்தங்களிடையே அலைகிறோம். நமக்கே உரிமையான வீடு வேறு இடத்தில் உள்ளது என்பதை உணர்ந்து, அங்கே போய் சேருவதற்கு அறிவுடன் பிரயத்தனம் செய்ய வேண்டும். இது நிவிர்த்திமார்க்கம் எனப்படும். இறைவன் இருப்பிடம் நோக்கி நமது பாதையில் திரும்பச்செல்ல வேண்டும். அங்கே அவர் நம்மை வரவேற்று சாந்தியும் பேரானந்தமும் கொடுப்பதற்குக் காத்திருக்கிறார்.

(3) உணவைப்பற்றிய (விஞ்ஞான ரீதியாகவும் பூர்த்தியாகவும்) வெறும் அறிவு மாத்திரம் இருந்தால் பசி தீராது இருக்கும். சாப்பிடும் அறைக்குள் நுழைந்து உணவுக்கு எதிரே உட்கார்ந்தாலும் பசியைத் தீர்க்க முடியாது. நாம் உணவை புசித்தால் தான் பசி தீரும். அதைப்போலவே, கடவுள் ஒருவர் உண்டு என்றும் நாமும் அவரோடு ஒன்றாய் இருப்பவர் என்றும் நமக்குத் தெரியும். நாம் உலகைத் துறந்து வனத்திலும், குகையிலும் அல்லது ஆச்ரமங்களிலும் வசிக்கக் கூடும் அப்படி இருந்தாலும், பக்தியோகம் நடைமுறையில் நாம் பழகாவிட்டால் இறைவனைக்காண முடியாது.

ஸூத்திரம் 33.

"தஸ்மாத்ஸைவ க்ராஹ்யா முமுக்ஷுபிஃ"

கருத்து:—மோக்ஷத்தில் இச்சை உடையவர் பக்தியைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

நாரதர் ஈச்வர தரிசனத்தைப் பராபக்திக்குச் சமமாக எவ்வாறு உரைத்தார் என்பதை நாம் பார்த்தோம். பக்தியே லக்ஷியம் என்பதை உறுதிப்படுத்திவிட்டார். இப்போது பக்தியே மோக்ஷம் அல்லது விடுதலை என்று உரைக்கின்றார். மோக்ஷத்தில் இச்சையுடையவர் பக்தியைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்பதன் கருத்து அதுவேயாகும்.

முக்கியமான வேறு ஒரு கருத்து இதில் காணப்படுகிறது. அது பக்தி ஸாதனையில் புருஷார்த்தம் (சுய முயற்சி) பெறும் இடம். வேறு வேலை எதுவும் செய்யத்திறமை இல்லாமையினால் கடவுளிடம் பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படும். புத்தியில்லாத ஒருவனுக்கு பக்தி உகந்ததல்ல. தீவிரமான மன உறுதியும் அதே சமயம் இறைவன் கமல பாதங்களுக்கு அதையும் அர்ப்பணம் செய்ய பலம் பொருந்தியவனுக்கேதான் பக்தியும் பொருத்தமாகும். பக்தன் இறைவனிடம் பூனைக்குட்டியைப் போன்ற பாவனையோடு அவன் இச்சைக்குக் கீழ்ப்படிந்தாலும் இதற்கும் மிகுந்த மனோ சக்தி வேண்டும். இதுவும் புருஷார்த்தத்தின் (முழுதும் தன்னை அர்ப்பணம் செய்வதற்கு வேண்டிய சுயமுயற்சியின்)விளைவுதான். இதை "க்ராஹ்யா" (பற்றிக்கொண்டு). என்னும் வார்த்தையினால் நாரதர் குறிப்பாகச் சொல்லுகின்றார்.

வேறு எல்லாவற்றையும் விட்டு, இறைவன் திருப் பாதங்களையும் பக்தியையும் பற்றிக்கொள்ள வேண் டும். இதற்கு மிகுந்த மனோ சக்தி, உறுதி, விவேகம், வைராக்யம் எல்லாம் அவசியம்.

''தஸ்மாத்'' என்று விவாதம் முடிவு பெறும். பக்தியே சுயமாக நிற்பதும், அதுவே உண்மையாகவும் இருப்பதால், ஒருவன் முழு மனத்துடன் பக்தியை பற்றிக்கொள்ள வேண்டும்.

சூத்திரம் 34.

''தஸ்யா ஸாதனானி காயந்த்யாசார்யாஃ''

கருத்து :—பக்தியை வளர்க்கும் முறைகளை ஆச்சாரியர்கள் பாடியுள்ளனர்.

பக்தி உயர்வானது என்றும் முக்கியமானது என்றும் சொல்லிவிட்டு நாரதர் திருப்தி அடைய வில்லை. நமது குருதேவரைப்போல, பக்தியை வளர்க் கும் முறைகளையும் உபதேசிக்க விரும்புகிறார்.

இது குருதேவருடைய உபதேசங்களின் தனிப் பட்ட முறை. ஒரு உபாஸகர் ''ஸ்ரீ...யும் ஸ்ரீ சுவாமி... அவர்களுடையவும் உரைகள் மேன்மையானதும் எண்ணங்களைத் தூண்டுவதாகவும் இருக்கின்றன. உண்மைதான். ஆனால் நான் இரவில் வாசித்துவிட்டு காலையில் எழுந்ததும் என்ன செய்வது என்று எனக் குத் தெரியவில்லை. நடைமுறையில் கையாள வேண் டிய வழிகள் எதுவும் அவர்கள் கூறவில்லை. இங்கே தான் சிவானந்தரின் மகிமை தெரிகின்றது. காலையில் 4-மணிக்கு எழுந்து ராமஜபம் செய்யுங்கள் என்று

இவர் சொல்லுகிறார். இவ்வுபதேசம் இல்லாத வேறு எல்லா தத்துவங்களையும் போதிப்பதைக் காட்டிலும் இதுவே மேலானது'' என்று என்னிடம் சொன்னார்.

நாரதரும் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து வாழ்பவர். நாமும் அனுசரிக்க வேண்டிய வழிகளை யும் உபதேசிக்கின்றார்.

"காயந்தி'' என்பது கவனிக்கவேண்டியது. நாம் சந்தோஷமாக இருக்கும்போது உண்மையின் தோற் றம் தெரிந்ததும், ரிஷிகள் ஸாமவேதத் துதிப்பாடல் களைப் பாடினார்கள். மாணாக்கருக்கு பக்தியை வளர்க் கும் முறைகளை உபதேசிக்கும்போதும் ஆசிரியர் "பாடினார்கள்''. நல்ல மாணாக்கர்களைப் பார்த்ததும், இவர்களும் மகிழ்ச்சியுடன் உபதேசம் செய்வதில் ஆனந்தம் அடைந்தனர் ஒவ்வொரு நிலையிலும் பக்தி சுவை உள்ளதாகவும் ஆனந்தமாகவும் இருக்கும்.

சூத்திரம் 35.

"தத்து விஷயத்யாகாத் ஸங்கத்யாகாச்ச.''

கருத்து :—அது, இந்திரிய விஷயங்களையும் பற்றுதல்களை யும் துறந்துவிடுவதால் வரக்கூடியது.

விஷய வாஸனையை (இந்திரிய சுகங்களை அனுப விக்க வேண்டும் என்ற மனோபாவத்தை) முற்றிலும் ஒழிப்பதே, ஞானஸாதனையின் முக்கியமான நோக்கம். விஷயவாஸனை அஞ்ஞானத்திலிருந்து தோன்றுவது.

இது இந்திரிய சுகத்தைக் கொடுக்கும் செயல் களைத் திரும்பத் திரும்பச் செய்வதற்கு அழைக்கின் றது. அப்போது இந்த வாஸனை மேலும் அதிக

மாகிறது. இவ்விதமாக, தப்பிவர முடியாத ஒரு கஷ்டமான விஷயச்சுழல் தோன்றிவிடும். தீரபுருஷன் மனமும் இந்திரியங்களும் தேடி அலைகின்ற சுகங்களை பிடிவாதமாக நிராகரித்து, இச்சுழலிலிருந்து தப்பிவிடுகிறான். அதே சமயத்தில் அவைகளுக்கு தெய்வீக உணவு அளித்தும் (வேதம் ஓதுதல், தியானம், ஜபம், பிராணாயாமம், கீர்த்தனம் முதலியவை செய்தும்), அவதூதர் கூறிய,

"முக்திமிச்சஸி சேத் ததா விஷயான் விஷவத் த்யஜேத்."

(விடுதலை வேண்டுமென்றால், விஷம் எப்படி தவிர்க்கத் தக்கதோ, அதைப்போலவே இந்திரிய சுகங்களையும் உதறித்தள்ள வேண்டும்.) என்னும் சிறந்த உரைகளையும் சிந்தித்துப் பார்க்கிறான்.

விஷயங்கள் (இன்பமளிக்கும் வஸ்துக்கள்) அஞ்ஞானம் என்னும் விஷம் கலந்தவை. அவை மெய்ஞானம் பெறவேண்டும் என்ற அவாவைக் கொன்று ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்துகின்றன.

இதை மனதுக்கு உணர்த்த வேண்டும். நீங்கள் மிகுந்த பசியுடன் இருக்கும்போது, உங்கள் முன்னால் ஒரு பாத்திரத்தில் நல்ல பசுவின் பாலை வைத்து பாலுடன் தவறுதலாக சிறிது விஷம் கலந்துள்ளது என்று சொன்னால், நீங்கள் அதை சாப்பிடுவீர்களா? அதை சாப்பிட மாட்டீர்கள் அல்லவா? இந்திரிய சுகத்தைக் கொடுக்கும் பொருள்களைப் பார்க்கும்போதும் இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவை அஞ்ஞானத் திரையை இன்னும் வலியதாகச் செய்து, இறைவனை விட்டு வெகு தூரம் உங்களைத் தூக்கிச் செல்லுகின்

றன. அவை உங்கள் ஆத்மாவுக்கு விஷத்தைக் கொடுத்து விடும்.

“விஷயத்யாகாத்” (பொருள்களை தியாகம் செய்ய வேண்டும்) என்று சொன்னால் மட்டும் போதாதா? “ஸங்கத்யாகாத்” என்றும் ஏன் சேர்க்கவேண்டும்?

நெருப்பில் காய்ந்த இரும்புக்கட்டி, நெருப்புக் கரியை விட மிகவும் அபாயமானது என்றும், அதைப் போலவே, கெட்ட நடத்தையுள்ள ஒருவன் மாதர்களை விட மிகவும் ஆபத்தானவன் என்றும், சூதாடுபவனுடைய சேர்க்கை, சூதாட்டம் நடக்கும் இடத்திற்குப் போவதைவிட அபாயகரமானது என்றும் குரு தேவர் சொல்வது உண்டு.

எப்படி?

அனேக வழிகளில் ஒருவன் கெட்ட பழக்கத்தை சம்பாதித்துக் கொள்கிறான். அது ஆரம்ப நிலையில் இருக்கும்போது, சில வேளைகளில் இது கெட்டது என்பதை உணர்வான். இவ்வாறு மனம் ஊசலாடும் போது, கெட்ட சிநேகிதன் ஒருவன் வந்து, கெட்ட வழிகளில் ஈடுபடத் தூண்டினால், இவன் நாசம் அடைவான். தகாத சிநேகிதன் மட்டும் ஏற்படவில்லையானால், இவன் காப்பாற்றப்பட்டு அந்த தீய பழக்கத்தை விட்டிருப்பான். கெட்ட சேர்க்கையானது தீய ஒழுக்கத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டுகின்றது.

‘ஸங்க’ எனும் வார்த்தைக்கு “பொருள்களை நினைப்பதால் ஏற்படும் தொடர்பு” என்றும் கருத்துக் கொள்ளலாம். கெடுதலான ஒரு எண்ணம் எவ்

வகையில் ஒருவனை நாசம் அடையச் செய்கிறது என்பதை ஸ்ரீ கிருஷ்ண பகவான் அற்புதமாகக் கூறியிருக்கிறார்.

"த்யாயதோ விஷயான் பும்ஸ:
ஸங்கஸ்தே ஷூப ஜாயதே
ஸங்காத் ஸஞ்சாயதே காம:
காமாத் க்ரோதோபி ஜாயதே

க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம:
ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்திநாசோ
புத்தி நாசாத் ப்ரணச்யதி"

சுகத்தைக் கொடுக்கும் பொருளை ஒருவன் நினைத்த மாத்திரத்தில், நுட்பமானதும் ஆனால் மிகவும் சக்தியுள்ள ஒரு தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. இத்தொடர்புதான் 'ஸங்கம்' என்பது. இவ்வழியாக மனம் பொருளிடத்துப் பாய்கின்றது. அப்பொருளை அடையவோ, அல்லது அதன் மூலம் சுகத்தைப் பெறவோ மனதில் ஒரு ஆசை எழுகிறது. ஆசை நிறைவேறினால், அப்போதே புத்தி நாசமும் அதனால் வரும் கெடுதலும் விளைகிறது. ஆசை நிறைவேறா விட்டால் கோபம் உண்டாகும். ஆசை நிறைவேறி, காமத்துக்கு அடிமையாக இருக்கும்போதும், ஆசை நிறைவேறாமல் கோபம் வந்தபோதும், குடிவெறியனைப் போன்ற நிலைக்கு வந்து விடுவான். கெட்ட எண்ணத்தால் பீடிக்கப்பட்டு தன்னையே மறந்து விடுவான். அவனுடைய புத்தி மறைக்கப்படுகிறது. அப்போது (ஸ்ம்ருதி விப்ரமஹ:) என்ற நிலை வந்துவிடும். தான்

யார், தன்னுடைய லக்ஷியம் எது என்பதையெல்லாம் மறந்து, கெட்ட வழியே சென்று விடுகிறான். அதே காரணத்தால்தான் கோபத்துக்கும் காமத்துக்கும் அடிமையானவர்கள், அவர்கள் செய்ததை நினைத்து பிறகு வெட்கம் அடைகின்றனர். "ஸ்ம்ருதி ப்ரம்ச" என்பதுதான் ஆசையை நிறைவேற்றுவதற்கு தூண்டுதலாக இருப்பது. கெட்ட எண்ணங்களின் சக்தியும், தன்னையே மறக்கச்செய்யும் வெறிபிடித்த நிலையும் சேர்ந்து அறிவை அழித்து விடுகின்றது. (புத்திநாசம்) இதனால் அவன் நாசமடைந்து பாபமும், கெட்டதுமான படுகுழியில் வீழ்ந்து விடுகிறான்.

எண்ணம் ஓர் சிறிய அலை. அது மனத்தில் எழுந்ததும், அங்கேயே அப்போதே அடக்கவேண்டும். 'ஸங்க' அல்லது இணைப்பு ஏற்பட்டு விட்டாலும் அதை முறிப்பது கடினமாகும். ஏனெனில் மனதும் இந்திரியங்களும் வெளியே ஓடும் தன்மை உடையவை. இந்த இயற்கை சக்தியைத் தடுப்பது கடினம். இணைப்பு ஏற்பட்டு ஆசை எழுந்ததும், அவ்வுணர்ச்சி வேகத்தைத் தடுப்பது மனித சக்தியை மீறிய ஒரு வேலையாகும். அதற்குக் கடவுள் கிருபை வேண்டும்.

'ஸங்க' என்பதை நாரதர் இப்படியும் கருதியிருக்கலாம். பொருள்களை நினைத்து அவைகளுடன் தொடர்பு ஏற்படாமல் நம்மைக்காத்துக் கொள்ள வேண்டும். எண்ணம் எழுந்த அச்சமயத்தில் (அப்போதுதான் அதை அடக்க வேண்டிய சமயம்) நல்லதும் உறுதியுமான இறைவன் சிந்தனையால் தந்திரமாக மாற்றிவிட வேண்டும்.

மனத்தால் செய்யும் கிரியைகளே (நினைவுகள்) உண்மைக் கிரியைகள். சட்டமும் இவ்வாறுதான் அமைந்திருக்கிறது. சாவு மூன்று காரணங்களால் ஏற்படக்கூடும். (1) விபத்து—உதாரணம் மோட்டார் விபத்து. (2) திடீரென்று அடக்க முடியாத கோபம் வருவதால் விளைவது. (3) முன்னேற்பாடாகச் செய்து முடிப்பதால் விளைவது. முதல் காரணத்தால் ஏற்பட்டால் அதிக தண்டனை இல்லாமல் விடுதலை பெறவும், இரண்டாவது காரணமாக இருந்தால் சிறிய தண்டனையும், மூன்றுவதாக இருக்கும்போது, மனத்திலேயே அக்குற்றம் உருவாய் விட்டதால், கடினமான தண்டனையும் விதிக்கப்படுகிறது. நமது ஸ்முருதியும் இம்முறையைப் பின்பற்றுகிறது. தற்செயலாக நாம் செய்யும் பாபங்கள், ஒவ்வொரு நாளும் நாம் செய்ய வேண்டிய பஞ்சமஹா யக்ஞங்களால் நிவர்த்தியாகி விடுகின்றன, இரண்டாவது வகையைச் சேர்ந்த பாபங்கள், தானம் செய்வது அல்லது உண்ணுவிரதம் இருப்பதால் தீர்ந்து விடுகின்றன. ஆனால் மனதில் பாப எண்ணங்கள் வேரூன்றி விட்டால் கடினமான தண்டனை விதிக்கப்படும்.

ஏன் ?

ஏனென்றால் சாஸ்திரங்கள், பாபத்தைவிட பாப வாஸனைகளை (பூராவும் நீங்காமல் மிஞ்சியிருக்கும் பாபமனப்போக்கை)க்குறித்து வற்புறுத்திக் கூறுகின்றன. தற்செயலாகவோ அல்லது உணர்ச்சி வேகத்திலோ செய்யும் கருமங்களுக்குப் பிராயச்சித்தங்கள் விதித்திருப்பதும், மனதிற்கு அதிகமான சலுகை காட்டி திரும்பவும் அதே கருமங்களைச் செய்யாமல்

இருப்பதற்காகவேதான். முன் யோசனையோடு பாப கருமங்கள் செய்யும்போது, பாபவாஸனை அதிக பலம் பெற்று விடும். இவ்வாறு சீரழிந்து போகாமலிருப் பதற்குத் தக்கவாறு தீவிர நடவடிக்கை எடுக்கா விட்டால், பாபத்திலிருந்து விடுதலை பெறுவது மிகவும் கடினம்.

அதனால் முக்கியமாக மனத்தை அடக்கவேண் டும். அதற்காகவே "ஸங்கத்யாகம்" விஷயத்தியாகத் துடன் சேர்த்துக் கூறப்பட்டது. பொருள்களைத் தியாகம் செய்து விட்டாலும், அவைகளைக் குறித்து சிந்தனை செய்து கொண்டிருப்பவனை வெறும்வேஷ தாரி (கபடன்) என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகின்றார்.

சூத்திரம் 36.

"அவ்யாவ்ருத பஜனாத்"

கருத்து:—இடைவிடாத பஜனை செய்வதாலும்

'ஒருவன் தன்னை எப்படி நினைக்கிறானோ அதைப் போல் ஆவான்' என்பது பொதுவான உண்மை. ஒருவன் இடைவிடாமல் கடவுளையே நினைத்துக் கொண்டிருந்தால், அவன் கடவுளாகவே மாறிவிடு வான். அதுவே லக்ஷியம்.

'பஜ்' எனும் வார்த்தையிலிருந்து ஏற்பட்டது 'பஜனை' இதன் பொருள் 'அடைக்கலம் புகுவது', அல்லது 'துணையில் ஆனந்தம் அடைவது', இறைவ னோடு கூட சேர்ந்து இருப்பதற்கு எந்த தெய்வீக முறை அனுகூலமாக இருக்குமோ அது 'பஜனை'.

ஆனால் அது, ஈசன் நாமத்தையும் மந்திரங்களையும் பாடுவது என்பதைக் குறிக்கும் என்று நமக்குத் தெரியும்.

இதை பலவிதமாகச் செய்யலாம். மந்திரத்தைச் சப்தமிட்டு கேட்கும்படிச் சொல்வது, வெளியே கேட்க முடியாமல் தாழ்ந்த குரலில் சொல்வது, கீர்த்தனம் பாடுவது, ஸங்கீதம் (நாதயோகம்) என்று பலவகை. மானஸீக ஜபம் சிறந்தது. ஆனால் கீழே கூறப்படும் வரிசைக் கிரமத்தில் அதிக சுலபமாக மனதை அடக்க முடியும். ஸங்கீதத்தால் மனம் அடங்கின நிலைக்கு சுலபமாக வந்துவிடும். அடுத்தது, கீர்த்தனங்கள் பாடுவது. இதில் ஒரு இயற்கையான இணைப்பும் ஸங்கிதமும் சேர்த்துள்ளது. அதன் பிறகு சப்தமிட்டு ஜபம் செய்வது. (வைகரி) அதற்குப் பிறகு உபாம்ஸு (தாழ்ந்த குரலில் சொல்வது) கடைசியாக மான ஸீக ஜபம் (மனதிற்குள்ளே ஜபிப்பது.) இது மனதை ஒருமைப்படுத்தும், ஆனால் மிகவும் கடினம்.

வெவ்வேறு ராகங்கள் உற்பத்தி செய்யும் பல வகையான ஓசை அலைகளைக் குறித்த முழுவிவரங் களும் ஸங்கித சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. ஒரு வகையான ராகங்களின் சேர்க்கையால் மனிதனின் மனோநிலையை மாற்ற முடியும். தற்காலவிஞ்ஞான முறைகளால் யந்திரங்களை உபயோகித்து, மனித னுடைய குரலை மின்சார சக்தியாக மாற்ற முடியும் என்று கண்டுபிடித்துள்ளனர்.

அதனால், சில மந்திரங்களை ஜபிக்கும்போது, சில வகை ஓசை அலைகள் உற்பத்தியாகி, அவைகளால்

மின்சார சக்தியோ அல்லது ஆத்ம சக்தியோ ஏற்படுகின்றது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். முன் காலத்து ஞானிகளும் (ரிஷிகளும்) சிலவகை மந்திரங்கள் சில உருவங்களை எழுப்புகின்றன என்று கண்டு கொண்டார்கள் — அவைகளே தேவதைகள். அத்தகைய மந்திரங்களை தொடர்ந்து ஜபம் செய்தால், அந்த தேவதைகளின் உருவம் தோன்றும்.

மானஸிக ஜபம் இதைவிட சக்தி வாய்ந்தது. கடினமான சிவப்பு ஒளிக்கிரணங்கள்; உடலின் வெளிப்பாகத்திலுள்ள சதைகளில் தோன்றும் வலியை நீக்கிவிடும். ஆனால் சூக்ஷ்மமான எக்ஸ்ரே அல்லது ரேடியம் உடலின் உட்புறத்திலும் புகுந்து எலும்புகளையும் அசைக்க வல்லது. சிந்தனையின் சக்தியும் இதைப்போன்றதுதான். வார்த்தைகளையும் செய்கைகளையும் விட, சிந்தனை அதிக வலிமை உடையது. மானஸிக ஜபம் செய்வதால், அந்த தேவதை சீக்கிரத்தில் உருவாகித் தோற்றம் அளிக்கும். அது மட்டுமல்லாமல், தீய சக்திகளிலிருந்து நம்மைக் காத்து, நமது சக்தியை வெளியே பரவச்செய்யத் தகுந்த ஒளிவீசும் பிரபை போன்ற ஒரு கோட்டையை அது நம்மைச் சுற்றிலும் கட்டி விடுகிறது. இம்மாதிரியான சக்தி வாய்ந்த ஒளி நமக்கு இருந்தால், அதனுடைய எல்லைக்குள் வருபவர்கள் மேன்மை அடைந்து, சாந்தியும் சந்தோஷமும் பெறுவார்கள்.

நமது குருதேவருடையவும், கன்ஹன் காடு ஸ்ரீ ராமதாஸ் அவர்களுடைய வாழ்க்கையிலும், இவர்கள் மனதிற்குள்ளேயும், வாய்ச்சொற்களாகவும் உச்சரித்த மந்திரங்களை, உயிரற்ற பொருள்களும் உண்மை

யாகவே 'இழுத்து', மறுபடியும் அவ்வொலிகளைப் பரவச்செய்த சம்பவங்கள் உண்டு.

மந்திரம் சைதன்யம் வாய்ந்தது. அது ஒருசக்தி. உணர்வுள்ள ஒரு பொருள். அறிவிலியின் வீண் கற்பனை அல்ல. ஒரு பக்தன் ஜபம் செய்து கொண்டு இறைவனை தியானித்திருக்கும்போது, தனது இதயத்தில் கடவுளுடைய உருவம் பிரகாசிப்பதை உணர்வான். அவனுக்கு உலகப்பொருள்களைவிட அது உண்மையாகத் தோன்றும். அது அவனோடு பேசவும், அவனுக்கு வழிகாட்டவும் செய்யும். சில சமயங்களில் இறைவன் உருவெடுத்தும் தோன்றியிருக்கிறான் உதாரணமாக, ஸ்ரீ தியாகராஜருக்கு ஸ்ரீராமர் தரிசனம் கொடுத்தார். ஸ்ரீ நாராயண சுவாமிகளுக்கு பகவான் ஸ்ரீமன் நாராயணனே தரிசனம் கொடுத்தார். இருவரும் இறைவன் நாமத்தை இடை விடாமல் ஜபித்ததால் இந்த பாக்கியம் அவர்களுக்குக் கிடைத்தது.

முக்தி பெற வேண்டுமென்ற ஆசையில்லாமல், வேறு எதற்காகவாவது ஆசைப்பட்டு மந்திரங்களை ஜபிக்கும்போது, அனேக விதிகளை அனுசரித்து எழுத்துக்களையும் சரியாக உச்சரிக்க வேண்டும். தாந்திரீக ஸாதகர் இது மிகவும் அவசியம் என்பர். முக்கியமாக பீஜாக்ஷரங்களை உச்சரிக்கும்போது அவைகளைச் சரியாகச்சொல்ல வேண்டும். இல்லையென்றால் அது அனேகமாக எதிரிடையான பலனைக் கொடுக்கும். ஸாதகனுக்கு மனதில் உருவாவது (இச்சை) ஒன்று மந்திரத்தைத் தவறாக உச்சரிப்பதால் விளைவது மற்றொன்று. அப்போது இயற்கையாகவே இரண்டுக்

கும் முரண்பாடு ஏற்பட்டு, அதனுல் அவனுடைய உடலும் மனதும் ஜீவாத்மாவும் பாதிக்கப்படும்.

ஆனுல் இது நிஷ்காம்ய ஜபத்திற்கு (சுயநலமும், உலகப்பற்றும் இல்லாமல், இறைவனே அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்செய்யும் ஜபம்) பொருத்தமாகாது. இவ்வாறு செய்யும்போது, பக்தனுடைய திடமான நம்பிக்கையும், பக்தியும் இறைவன் கிருபை பொழிவதற்கு அனுகூலமாக அமைந்து விடும். அதுமட்டுமின்றி, உடலே சுத்தமாக வைத்திருக்க வேண்டிய விதிகளேக் கவனியாமல் இருப்பதால் வரும் பிழைகளேயும், வேறுவிதமான தவறுகளேயும், கடவுள் கிருபையே சீர்படுத்தி விடுகின்றது.

ஏழு வருஷங்களுக்கு ஒரு முறை, நமது உடல் அமைப்பு முழுதும் மாறி நமக்குப் புத்துயிர் அளிக்கப் படுகிறது என்று சொல்லுகின்றனர். அதனுல் முமுக்ஷுக்கள், குறைந்தது ஏழு வருஷங்கள் தொடர்ந்து ஜபம் செய்யவேண்டும் என்று அடிக்கடி கூறுவார்கள். அவ்வாறு இடை விடாமல் ஜபம் செய்திருந்தால், உடலில் இருக்கும் ஒவ்வொரு ஜீவ அணுக்களும் மந்திர சைதன்யத்துடன் விளங்கும். அவனும் அந்த மந்திர சைதன்யம் நிறைந்தவன் ஆவான்.

தொடர்ச்சியாக ஜபம் செய்வதற்குச் சில சிறந்த வழிகளேக் குருதேவர் உபதேசித்துள்ளார். "படுக்கையை விட்டு எழுந்ததும், இரவில் தூங்குவதற்கு முன்னும் இறைவனே நினே" என்று அவர் சொல்லுவார். படுக்கப் போவதற்கு முன்பும் தியானம் செய்யும் அளவுக்கு இவ்வுபதேசத்தைத் தீவிரமாகக்

கடைப்பிடித்தால், தூங்கும்போது கூட நாம் அறியாமலே நமது மனம் அந்த மந்திரத்தை நினைத்துக் கொண்டிருக்கும். இதற்கு அதிகமான பழக்கம் அவசியம் வேண்டும்.

ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை நம் கண்களை மூடி, மனதுக்குள்ளே மந்திரம் ஜெபிக்க வேண்டும் என்றும், இவ்வாறு ஜபம் செய்யும் பழக்கத்தை அடிக்கடி புதுப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறுவார். இதுவும் ஒரு ஞான அரணாக அமைந்து பெரிய பாபங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றும். நாளடைவில், நாம் எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் நாமஸ்மரணையை தொடர்ந்து செய்ய முடியும். நாம் கைகளால் வேலை செய்து கொண்டிருந்தாலும் மூச்சு விட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். அதைப் போலவே இதுவும் செய்யலாம். ஆனால் தீவிரமும் உண்மையுமான பயிற்சிதான் வேண்டும்.

சூத்திரம் 37.

"லோகோபி பகவத்குண ச்ரவண கீர்த்தனாத்"

கருத்து :—உலகத்தில் அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும், இறைவன் பெருமையைக் கேட்பதாலும் பாடுவதாலும் (பக்தியை வளர்க்கலாம்).

முன் காலத்தில் நாரதரும், இக்காலத்தில் நமது குருதேவரும், காலையிலும் மாலையிலும் இரண்டு மணி நேரம் ஸாதனையைச் செய்வதோடு நிறுத்திவிடக் கூடாது என்று வற்புறுத்திக் கூறுகின்றனர். நாம் அவ்வாறு நிறுத்தி விட்டு, மீதி நேரங்களில் நமது

கீழ்த்தரமான குணத்திற்கு அடிமையாகி விட்டால், அது அடிப்பாகம் இல்லாத வாளியை நிரப்புகின்றவனும் கரையோரத்திலுள்ள மரத்தில் கட்டி வைத்திருக்கும் படகை ஓட்டுபவனும் செய்கின்ற முட்டாள் தனமான செயலுக்கு ஒப்பாகும்.

"தெய்வீக வாழ்க்கை என்பது, வாழ் நாட்களையே தெய்வீகம் ஆக்குவது" என்று குருதேவர் கூறுவர். வாழ்வில் ஒவ்வொரு நாளும் மேன்மையாகவும் இறைநெறியில் ஈடுபட்டும் வாழவேண்டும். இவ்வாறு வாழ்வதற்கு உண்மையாக முயற்சி செய்தால் அதிக பலனை அடையலாம்.

நாம் இறைவன் புகழைப் பாடவும், கேட்கவும் வேண்டும் என்று நாரதர் கூறுகிறார். ஒவ்வொரு நாளும் இருபத்திநான்கு மணி நேரமும் நம்மால் தியானம் செய்ய முடியாது என்பதை அவர் நன்றாக அறிவார். நாம் உலகத்திலேயே வாழ்ந்து பழகவும் வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் நாம் உலகத்தில் தவறிவிழுந்து விடக்கூடாது என்பது அவருடைய கவலை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நம்மை அடுத்துள்ளவர்களின் உலக சம்பந்தமான எண்ணங்களாலும் வார்த்தைகளாலும் செயல்களாலும் ஏற்படும் துரிதமாக இயங்கும் அலைகள், நுட்பமாகவும் இரகசியமாகவும் நம்மைத் தாக்குகின்றன. அதன் காரணமாக நாம் வழிதவறி விடாமல் காத்துக்கொள்ள, நம்மால் கூடியவரையிலும் பிரயத்தனம் செய்வது மட்டுமின்றி, பிறரையும் நல்வழியில் செலுத்த வேண்டும்.

இதற்குக் குருதேவர் சில நல்லுபதேசங்களை நமக்குக் கொடுத்துள்ளார்.

(1) நீங்கள் சிநேகிதனுக்கும் சுற்றத்தாருக்கும் தபால் எழுதும்போதும், எப்போதாகிலும் பேனவை எடுத்து எழுதும் போதும், ஓம் ஓம் ஓம் அல்லது ஏதாகிலும் ஒரு மந்திரமாவது எழுதி ஆரம்பிக்க வேண்டும். இது உங்கள் மனதையும், நீங்கள் எழுதியதை வாசிப்பவர் மனதையும் தெய்வீகம் ஆக்குவதுடன் ஜபம் செய்வதும் ஆகும்.

(2) இன்னும், உங்கள் சிநேகிதனை அல்லது உறவினரை உபசரித்து அழைக்கும்போது, ஆங்கில வார்த்தைகளான "குட்மார்னிங்" "ஹலல்லோ" என்று சொல்வதற்குப் பதிலாக "ஓம் நமோ நாராயணாய:" என்று உச்சரிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நூறு பேரை சந்தித்து, இப்படிச் சொன்னால் நீங்கள் அறியாமலேயே ஒரு மாலை ஜபம் பூர்த்தியாகி விடும். நூறு மனிதர்களின் காதுகளில் இறைவன் நாமம் எட்டச் செய்வதோடு வாயு மண்டலமும் தூய்மையாகும்.

நீங்கள் விசித்திரமான மனப்பான்மை உள்ளவர் என்று மற்றவர்கள் நினைக்கலாம். ஆனாலும், நாளடைவில் உங்கள் மனோநிலையை அவர்கள் சரியாக உணர்ந்து அவர்களும் அவ்வழியைக் கடைப்பிடிப்பார்கள். இவ்வாறு அனேக மக்களை இறைநெறியில் ஈடுபடச்செய்ய முடியும்.

இன்னும் மிக உயர்ந்த சாதனை ஒன்று குருதேவர் சொல்வது கடவுளை எங்கும் பார்க்கவேண்டும்என்பது. இது அடிக்கடி நமக்கு கடவுளை நினைவூட்டும்.

ஆகாசத்தைப் பார். அது இறைவனுடைய எல்லை யில்லாத் தன்மையை நினைவூட்டுகின்றது, அழகான பறவைகளையும், வானளாவி வளர்ந்த மரங்களையும், பலநிறங்களையுடைய புஷ்பங்களையும், ருசியுள்ள பழங் களையும் பார்க்கும் போதெல்லாம் இறைவன் நினைவு வருகின்றது. உங்களுடைய உடம்பையும் அதன் அமைப்பையும் பாருங்கள்! அதுவும் இறைவனையே நினைவூட்டும்.

ஆனால் அறிவில்லாத மூடர்கள் இது இயற்கை என்று கவனியாமல் தள்ளிவிடுவார்கள். இதெல்லாம் 'இயற்கை' தான். ஆனால் யாருடைய 'இயற்கை'? இயற்கை என்பது ஒரு குணம். யாருடைய குணம்? இவ்வுலகம் இறைவனுடைய இயற்கையை எடுத்துக் காட்டுகின்றது. அதிக நுட்பமாக ஆராய்ச்சி செய்ய விரும்பும் தத்துவ சாஸ்திரநிபுணர்கள் "கடவுள்" என்ற முக்கியமான வார்த்தையை நழுவ விட்டனர். அல்லது இருப்பதாக ஒப்புக்கொண்டனர். நாம் இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். இயற்கை நமக்கு எப்போதும் கடவுளின் சிந்தனையைக் கொடுக்கவேண்டும்.

இதைப்போல, உண்மையான பக்தன் இயற்கை ஒவ்வொன்றையும் கடவுளின் அற்புதச்செயலாகவே கருதுவான்! சில நிமிஷம் யோசிக்கும்போது, சூரியன் ஒவ்வொருநாளும் கிழக்கே உதித்து மேற்கே மறை வதும் ஒரு அற்புதமே ஆகும். பிறப்பு, இறப்பு, சுவா சம் செய்வது, உணவை ஜீர்ணம் செய்வது எல்லாம் அற்புதம். உடல் செய்யும் வேலைகள் நம்மைச்சுற்றிலும்

நடக்கும் காரியங்கள் எல்லாம் கடவுள் கிருபையின் அற்புதச் செயல்களே.

ஆனால் விஞ்ஞான மனப்பான்மை உடைய தற்காலமனிதன் இவைஎல்லாம் இயற்கை நிகழ்ச்சிகள் என்று உறுதியாகக் கூறுவான், உண்மையாக ஒரு அதிசயம் நிகழ்ந்தாலும் (உதாரணமாக, மோட்டார்விபத்தில் அகப்பட்டு எவ்விதகாயமும் ஏற்படாமல் ஒருவன் தப்பியபோதிலும்) இது தற்செயலாக வாய்த்தது அல்லது அவன் அதிருஷ்டம் என்று நினைப்பான். இதனால் அவன் ஒருபெரும் நஷ்டத்தை அடைந்தான்! இறைவனை ஒரு நிமிஷம் சிந்தித்து அவன் கருணையைப் போற்றிப் புகழ்வதற்கு ஏற்ற ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்டான். மற்றவர்கள் இதை ஒருதற்செயலான நிகழ்ச்சி என்று நினைத்தாலும் பக்தன், இதுவும் கடவுள் கிருபை என்று எண்ணிசில நிமிஷங்கள் இறைநிலையில் ஈடுபட்டிருப்பான்.

பக்தனுடைய கண்களுக்குஎல்லாம் கடவுளாகவே தோன்றும். இப்பிரபஞ்சம் அவனுடைய இயற்கை இங்கே இருப்பதெல்லாம் இறைவனை நினைவூட்டும். பிறரிடம் கடவுளைக்குறித்துப்பேசவும் அவர் பெருமையைக் கேட்பதில் ஆசையும் கொள்வான்.

இவ்வாறு உலகத்திலேயே வாழ்ந்து அதன் மூலமாக பக்தியை வளர்த்து, வாழ்க்கையைத் தெய்வீகமாக மாற்றிவிடுவான்.

சூத்திரம் 38.

“முக்யதஸ்து மஹத்க்ருபயைவ பகவத்க்ருபா லேசாத்வா”

கருத்து:—முக்கியமாக பெரியோர்கள் கிருபையாலும் அல்லது சிறிது அளவு கடவுள் கிருபையாலும்.

மந்திரங்களை உச்சரிக்கும்போதும் மனதுக்குள்ளே ஜபிக்கும்போதும், மந்திர சைதன்யம் எழுப்பப் படுகிறது என்பதை அறிந்தோம். ஸாதகன் சுயமுயற்சியால், எண்ணமும் வார்த்தையும் எவ்வளவு தூரம் எட்டுமோ அவ்வளவு தூரத்திற்குச் செல்வான். ஆனால் பரம்பொருள், வார்த்தைக்கும் மனதுக்கும் எட்டாதது என்று உபநிஷது உரைக்கின்றது.

“யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மானஸா ஸஹ”

என்றும்

“நதத்ர சக்ஷுர் கச்சதி ந வாக் நோ மனோ”

என்றும் சொன்னார்கள்.

மனத்தாலும் புத்தியாலும் அங்கே எட்ட முடியாது. அப்படியானால் நாம் அங்கே எப்படிப்போய் சேருவது? நாரதர் உரைக்கும் பதில் “பெரியோர்கள் கிருபையால்” என்பதாகும்.

இதுவே உயர்ந்த ஸாதனையாகக் கருதப்படுவதால், மஹாபுருஷர்களுடையவும், ஞானிகளுடையவும், குருதேவர்களுடையவும் கிருபையைப் பெறுவதற்கு கஷ்டப்பட்டு முயற்சி செய்யவேண்டும். பகவத் கீதையில் இதை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

"தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா
உபதேக்ஷ்யந்திதே ஞானம் ஞானினே தத்வதர்சிபி:"

(மெய்ப்பொருள் கண்ட ஞானிகளைப் பணிந்து, பரிவு மிகுந்த கேள்வியாலும், அவர்களுக்கு சேவை செய்வ தாலும் அவ்வுண்மையை அறியவும்.) சேவை செய் வது முக்கியம் என்று கூறப்படுகிறது.

"மஹத்ஸேவாம் த்வாரமாஹுர் விமுக்தே"

(மோக்ஷம் அடைவதற்கு வழி, பெரியோர்களுக்கு அல்லது குருவுக்குத் தொண்டு செய்வது தான்.) தொண்டு செய்வதால் அவர்களுடைய கிருபையைப் பெறுகின்றோம். அப்போது அவர்களும் கிருபை செய் யும்போது, கூலிக்கு உழைப்பவர்கள் என்று கருத முடியுமா? அவர்கள் யாவரையும் சமமாகக் கருதி, எவர்க்கும் கிருபை அருளும் பெரியோர்கள் அல்லவா?

ஆம். பெரியோர்களின் கிருபை நாம் ஒவ்வொரு வருடைய இதயத்தின் கதவையும் தட்டுகிறது. ஆனால் அவர்களுக்குத் தொண்டு செய்பவரும், அவர்களிடம் பக்தியுடன் இருப்பவர்களும்தான் கிருபை வந்து புகுவதற்காகக் கதவைத் திறந்து வைக்கின்றனர். சூரிய ஒளி எவ்வளவு பிரகாசமாக இருந்தாலும், நாம் வசிக்கும் குகைகளையும் இருட்டு அறைகளையும் விட்டு வெளியே வராவிட்டால், எவ்விதமான பலனையும் அனுபவிக்க மாட்டோம். அது நமது தவறேயன்றி சூரியனுடைய தவறு அல்ல. குருதேவரின் கிருபை நம்மைச்சூழ்ந்துள்ளது. ஆனால் அது நமது இதயங் களில் புகுவதற்குக் குருஸேவையும் குருபக்தியுமே வழிகளாகும். "ப்ரணிபாத" என்றால் நமஸ்காரம்

ஐஞுவாது ஆத்மார்ப்பண பாவனையுடன் நமஸ்காரம் செய்யவேண்டும். "இறைவா! நான் உன்னுடைய வன்." என்பது நமஸ்காரத்தின் பொருள். பெரியோர்களின் பாதகமலங்களின் தூளிகளை நமது தலையில் பூசிக்கொள்ள வேண்டும். ரஹூகணமஹாராஜாவுக்கு ஜடபரதர் செய்த உபதேசத்தை நாம் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது.

"வினுமஹத் பாத ராஜோ அபிஷேகம்"

(பெரியோர்களின் பாத தூளிகளில் நாம்மூழ்குவதைத் தவிர வேறு வழிகளால்) மெய்ப்பொருள் ஞானம் பெற முடியாது என்று கண்டிப்பாகக் கூறினர்.

இதைத்தான் குருகீதையிலும் "த்யான மூலம் குருர்மூர்த்திঃ பூஜாமூலம் குரோঃபதம் மந்த்ரமூலம் குருர்வாக்யம் மோக்ஷமூலம் குருக்ருபா." என்று சொல்லப்பட்டுள்ளது.

குருதேவருடைய மனித உருவத்தை நாம் தியானம் செய்யவேண்டும். அவ்வாறு செய்யும்போது, அவருடைய லக்ஷியத்திலும் தெய்வீக இயல்புகளிலும் நமது மனம் ஈடுபட்டால் நாமும் அவ்வியல்புகளைப் பெற்று அந்த லக்ஷியத்தின் சின்னங்களாக வளருவோம்.

"பூஜா மூலம் குரோபதம்" பூஜை செய்வது ஒரு இயந்திரம் இயங்குவதைப் போன்ற ஒரு முறை அல்ல. நமது கிரியைகளையும் நற்குணங்களையும் புஷ்பங்களாக நினைத்துப் பூஜை செய்கிறோம். கடவுள் முன்னிலையில் நமது ஜீவனும் புத்தியும் விளக்காக அமைந்து, சாம்பல மீதியாக கற்பூரத்தைப்போல் நமது லக்ஷியத்

தையே நினைத்து மற்றவைகளை முற்றும் மறந்து ஆர்வத்துடன் பிரார்த்தனை செய்யவேண்டும். இதை அழுத்திச் சொல்வதற்காகவே நாம் தரையில் விழுந்து "நான் இல்லை. இருப்பது நீயே. நான் உன்னுடையவன். எல்லாம் உனதே. இறைவா! உன் இச்சைப்படி நடக்கட்டும்" என்றுரைத்து நமஸ்காரம் செய்கிறோம். இது குருபக்திக்கு அவசியமான அங்கமாகும்.

"மந்த்ரமூலம் குரூர்வாக்யம்." நாம் ஆயிரம் தடவை கேட்டு வாசித்திருந்தும், அதே புத்திமதிகள் பெரியோர்கள் மூலமாகக் கேட்கும்போது, நம் வாழ்க்கையை மேன்மையாக்கும் சக்தி உடையதாகத் தோன்றுவதற்குக் காரணம் என்ன? "உண்மை பேசு" என்று எல்லோரும் உரைத்தனர். ஆனால் குருதேவர் இதைச்சொல்லும்போது, நீங்கள் உண்மையாகவே மேன்மை அடைந்தவர்களாக உணர்ந்து, அவ்வுபதேசத்தின்படி நடக்கத் தூண்டுகின்றது. எனென்றால் அவர் சொல்லும் வார்த்தைகள் ஒரு தெய்வீக நிலையிலிருந்து தோன்றுபவை. அதனால் நாம் இதயத்தில் ஊடுருவிப்பாயும் சக்தி அவைகளுக்கு உண்டு. நம் கடமை, அவருடைய வார்த்தைகள் "வேதவாக்கு" என்று எண்ணி, திடமான நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்போதுதான் குருகிருபை நமக்கு மோக்ஷத்தைக் கொடுக்கும். (மோக்ஷ மூலம் குரு க்ருபா.)

ஆத்மா நு பூதிபெற, நீண்ட காலம் அவசியம் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஒரு புஷ்பத்தை கையால் நசுக்கும் நேரத்தைவிட குறைந்த நேரம் போதுமானது. ஆனால் எவன் இதயத்தைப் பரிசுத்த

மாக வைத்திருக்கிறானோ அவனுக்கேதான் இது கை கூடும். ஸாதனைகள் எல்லாம் நாம் அகத்தூய்மை பெறுவதற்காகவே அமைந்துள்ளன.

"முக்யதஸ்து" என்பதற்கு வேறு ஒரு கருத்து உண்டு. பக்தியில் இரு வகை. "முக்ய பக்தி", "கௌண பக்தி" என்பவை. முதலாவது "ஸாத்யே பக்தி" இரண்டாவது "ஸாதன பக்தி". முதலில் சொன்னது முடிவு. பின்னால் சொன்னது, அனுசரிக்கும் முறை. நாம் கஷ்டப்பட்டு வளர்க்க வேண்டியது 'ஸாதனை பக்தி' ஜபம், கீர்த்தனம், தியானம், பூஜை, புராணங்களைப் படித்தல் முதலானவைகளைச் செய்யவேண்டும். ஸத்ஸங்கத்தில் கலந்துகொண்டு விவேகத்தையும் வைராக்யத்தையும் வளர்க்கவும் வேண்டும். ஆனால் 'முக்ய பக்தி' பெரியோர்களின் கிருபையால் வருவது. நாம் செய்ய வேண்டியது 'கௌண பக்தி' முக்கிய பக்தியை குருதேவர் கிருபைக்கும், கடவுள் கிருபைக்கும் விட்டுவிட வேண்டும்.

ஆனால், கடவுள் ஒரு விசித்திரமான பொருள் அல்ல. நமது கடமையை ஒழுங்காகவும் உண்மையாகவும் செய்தால், நாளடைவில் அவருடைய கிருபையினால் நமது லக்ஷியத்தை அடைய முடியும்.

ஸூத்திரம் 39.

"மஹத் ஸங்கஸ்து துர்லபோ அகம்யோ அமோகஃச்ச."

கருத்து:—பெரியோர்கள் தொடர்பு கிடைப்பது மிகவும் கடினம். அருகே நெருங்கவும் முடியாது. பயன் இல்லாமலும் போகாது."

இவ்வுலகில், மஹா புருஷர்களும், ஆத்மாநுபூதி பெற்ற மெய்ஞானிகளும், தபசிகளும் தோன்றுவது மிகவும் அரிது என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

இந்தியாவில், இருபது பையன்களுக்கு ஒரு ஆசிரியரும், நூறுபேருக்கு ஒரு வைத்தியரும் அவசியம் என்றும் இன்னும் பலவாருக மேடைகளில் அடிக்கடி பேசுகின்ருர்கள். வயிற்றுப் பிழைப்புக்கு உதவக்கூடிய கல்வியைமட்டும் ஆசிரியர் கற்றுக்கொடுக்கிருர். எப்படியும் அழியக்கூடிய இவ்வுடலுக்கு வைத்தியர் சிகிச்சை செய்கிருர். ஆனல் இன்னும் அதிகமான துறவிகளும், ஞானிகளும், ஸாதகரும் வேண்டும் என்று கதறுவதற்கு ஒருவரும் இல்லை. இப்பெரியோர்கள் பிறப்பும் இறப்பும் அற்று விடுதலை பெறுவதற்கு உதவும் வழிகளை போதித்தும், அஞ்ஞானமென்னும் பிணியினுல் துன்பப்படும் ஜிவாத்மாவையே சீர்படுத்தவும் செய்கின்றனர். மனிதருக்கு ஏற்பட்ட நிலையைக் குறித்து, ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஒருவரே வருத்தப்படுகிருர்.

"மனுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித் யததி ஸித்தயே
யததாமபி ஸித்தானும் கச்சின் மாம் வேத்தி தத்விதஃ"

(மனிதர்களில் ஆயிரவர்க்குள் ஒருவன் சித்திபெற முயற்சி செய்கின்ருன். முயற்சி செய்யும் ஸித்தர்களுக்குள் யாரோ ஒருவன் உண்மையில் உணர்கின்ருன்.)

பொது ஸ்தாபனங்களும் அரசாங்கமும், நாசம் செய்யும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்தி

விட்டு, அந்தப் பணத்தைக் கொண்டு அனேக ஆச்ர மங்களைக்கட்டி, ஞானிகளும், தபசிகளும் பக்தர் களும் வளர்ச்சியடைய உதவ வேண்டும் என்று குரு தேவர் சமயம் வாய்த்த போதெல்லாம் சொல்லுவது உண்டு.

இதற்கு வேறு ஒரு கருத்தும் கூறலாம். உண்மை யான ஞானிகள் தோன்றுவதும் அருமைதான். இவர் களில் அனேகர் ஒருவருக்கும் தெரியாமல் இறந்து விடுகின்றனர். ஞானி ஒருவர் தோன்றுவதும் அருமை, கடவுளை அறிய வேண்டும் என்று ஆவலுடன் ஞானி யின் தொடர்பை நாடிச்செல்பவனும் இக்காலத்தில் அருமையிலும் அருமை! "மஹத் ஸங்கம்" இரு வகையிலும் பாதிக்கப்படுகிறது. பெரியோர் சேர்க்கை மிகவும் அரிய ஒரு வாய்ப்பு.

"அருகே நெருங்கவும் முடியாது" என்று சொல் லும்போது, நாரதருடைய கருத்து என்ன? அவர் களை அணுகக்கூடாது என்று நமக்கு நாரதர் நிச்சய மாகக்கூற வில்லை.

உலக மக்களை நல்வழியில் செலுத்த, கருணை கொண்ட இறைவனால் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு சில பெரியோர்களைத் தவிர, மற்றவர்கள் மறைவாக வும் தனியாகவும் இருந்து, அதிகாரிகளில் (தக்கவர் களில்) சிறந்தவர்களுக்கு மாத்திரம் எட்டக்கூடிய அளவில் வாழ்ந்து வருகின்றனர். இந்த அதிகாரி களும் எவ்விதத்திலும் அவர்களைக் கண்டு பிடித்து விடுவார்கள். அவர்களிலும், குருதேவரைப் போன்ற சில பெரியோரிடம் தான், மற்றவர்களுக்குச்

சுலபமாக அருகில் நெருங்க முடியும். மற்றவர்கள், மெய்ஞானம் பெறுவதற்கு உண்மையான ஆவல் கொண்டவர்களை மாத்திரம் தங்கள் ஆதிக்கத்துள் வருவதற்கு அனுமதிக்கின்றனர். இவ்வகை ஞானி களுடையவும், தபசிகளுடையவும் தொடர்பு சாதா ரண மக்களுக்கு கிடைப்பது அரிது.

ஒரு வேளை பெரியோர்களிடம் அதிகமாக நெருங் கிப் பழகக்கூடாது என்று நாரதர் எச்சரிக்கை செய் கிறார் போலும். இதிலே, யாவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு பொது அறிவுரை காணப்படுகிறது.

"அதிபரிசயதவஞ்ய ஸந்ததகமனுத் அனுதரோ பவதி
மலாயேபில்ல புரந்த்ரி சந்தனதாரு காஷ்டம் இந்தினிகுருதே"

(நெருங்கிப் பழகுவது அவமதிப்பை வளர்க்கும். சந் தன மரங்கள் நிறைந்த காட்டில், சந்தன மரத்தையே விறகாக எரிக்கும் மலைவாசிகளைப்போல, அடிக்கடி பார்ப்பது அலக்ஷியமான ஒரு நிலையை உண்டு பண்ணும்.)

நெருங்கிப் பழகுவது அவமதிப்பை வளர்க்கும். பெரியோர்கள் ஸத்ஸங்கத்தை நாம் நாடிச்சென்று, அவர்களுடைய சீடர்கள் ஆவதற்கு விரும்பவேண்டும். ஆனால் நமது வாழ் நாட்களில், நாம் அவர்களிடத்தில் வைத்த உயர்ந்த மரியாதையைக் கைவிடலாகாது. நாம் மரியாதையாக சிறிது தூரத்திலேயே இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த குரங்கு மனம் பெரியோர்களிடம் சில குறைகளை உற்பத்தி செய்யா மல் இருக்கும். பெரியோர்களிடம் வெளிப்படையாக நாம் எவ்வளவு நெருங்கிப் பழகினாலும், ஞான மார்க்

கத்தில், இரு துருவங்களுக்கு உள்ள தூரத்தில் இருக்கின்றோம் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் லக்ஷியத்தை அடைந்து விட்டனர். ஆனால் நமக்கு அது இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது.

பெரிய தபசிகளும், யோகியரும், ஞானக்கனல் போன்றவர். அவர்களுடைய பேரறிவால் ஏற்படும் வெப்பமும், நமக்கு வழிகாட்டக்கூடிய ஒளியும் அவசியம். ஆனால் நாம் அதோடு விளையாடினால், நெருப்புடன் விளையாடுவதற்கு சமமானது. நாம் அந்த வெப்பத்தை அனுபவிப்பதற்குப்பதிலாக அது நம்மை எரித்து விடும்.

இதைத்தான் நாரதர் "மஹத்ஸங்கம்" அருகே நெருங்கவும் முடியாது என்று கூறியிருக்கவேண்டும். எதற்கும், மிகுந்த எச்சரிக்கை அவசியம்.

மேலும், ஒவ்வொரு ஸாதகனுக்கும் இது இன்றி அமையாதது. ஏனெனில், இது அவனுக்கு நன்மை செய்வதில் தவறுவதில்லை. குரு இல்லாமல், தங்கள் சொந்த முயற்சியால் ஸாதனை செய்து லக்ஷியத்தை அடைவோம் என்று சொல்பவர் கனவு காண்கின்றனர், அல்லது பைத்தியக்காரர் என்றே சொல்லலாம். மற்றவர்களை விட ஞான மார்க்கத்தில் செல்லும் முமுக்ஷு, அத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதி தெய்விகம் என்னும் மூன்று தாபங்களாலும் பாதிக்கப்படுகிறான். இவைகளிலிருந்து குரு ஒருவருக்கே அவனைக் காப்பாற்ற முடியும்.

எண்ணற்ற தீய சக்திகள் மனதில் மறைந்திருக்கின்றன. மனிதன் இதயத்தை, காமம் கோபம், பேராசை எனும் நெருப்பு எரிகின்றது. இது அத்யாத்மிகதாபம். இன்ப நுகர்ச்சிக்கு இடங்கொடுப்பதும் அல்லது கடினமாக அடக்குதலும் பயன் தராது. இம் மாதிரி கஷ்டமான சமயங்களில் ஸாதகனுடைய மனதை திறமையுடன் செலுத்தும் வழியைக் குரு அறிவார். குருதேவர் இவ்வகையான நிலைகளைத் திறமையுடன் கையாளுவதை நான் பாத்திருக்கிறேன். என்ன பொறுப்பு! என்ன இரக்கம்! தன் மனதுக்குள்ளே போராடும் சீடனை நல்வழியில் செலுத்த எவ்வளவு அறிவு வேண்டும்! ஆசையை அடக்கும் போது அவன் மனம் நிலை தடுமாறும். அதற்கு அதிக சலுகை காட்டினால், இவன் சறுக்கி கீழே விழுந்து விடுவான். ஜாக்கிரதையாக, அவனை தானாகவே திருப்தி அடையச்செய்து, அவன் அதை தொடர்ந்து அனுபவிப்பதால் ஏற்படும் ஆபத்தையும் அப்போதே உணர்த்துவார். அத்துடன், நேர் வழியில் அவன் கவனம் செல்லுவதற்குத் தகுந்த ஒரு சுலபமான முறையைக் கையாண்டு அவனைத் திருப்பி விடுவார். இவை யெல்லாம் 'மஹத் ஸங்கம்' இருக்கும் போது தான் ஏற்பட முடியும். இல்லாவிடில், நாம் தீவிரமான உலக வாழ்க்கையில் சிக்கி விடுவோம், அல்லது பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் இருப்போம்.

ஆதிபௌதிகம்:—இயற்கை சக்திகளும் அவைகளால் இயன்ற தடங்கல்களைச் செய்கின்றன. கோடை காலத்தில் அதிகமாக முயற்சிசெய்ய இயலாமல், குளிர் காலத்தில் அதை ஈடுசெய்யலாம் என்று எண்ணு

கிரேம். குளிர் காலம் வரும்போது, கம்பளியைப் போட்டு மூடிக்கொண்டு, ஸாதனைக்குக் கோடை காலமே மேலானது என்று நினைக்கிறேம். பருவ காலங்கள் சுற்றி வருகின்றன. நமது சக்தியற்ற நிலையைக்கண்டு கேலி செய்து, நம்மைச்சுற்றி ஆடி வருகின்றன. இச்சமயத்தில், குருவின் எச்சரிக்கைகளை விட, அவருடைய சொந்த வாழ்க்கையில் நடத்திக் காட்டும் முறைகள், நமக்கு உதாரணங்களாக அமைந்து, நம்மைக் காத்துக்கொள்ளும். பருவ காலங்கள் மாறினுலும், அதைக் கவனிக்காமல், நாள் தோறும் வருஷம் பூராவும் குருதேவர் ஸத்ஸங்கத்திற்கு வருவதை நாம் பார்க்கிறேம். பருவகாலம் மாறினல் அவருடைய உடை மாறும். அந்தராத்மா எப்போதும் மாறுவதில்லை. அவர் மூலமாக நாம் இதை அறிகிறேம். ~~வேறு வகையில் நாம் இதை அறிகிறேம்.~~ வேறு வகையில் நாம் இதை கற்றுக் கொள்ள முடியாது.

“ஆதிதெய்விக தாபம்” இது முக்கியமாக கர்ம பலன் ஆகும். முன் ஜன்மத்தில் செய்த கர்மங்களின் பலனை இப்போது அனுபவிக்கிறேம். துன்பம் வரும் போது பெரிய வீரனும் நடுங்கி விடுவான். துன்பங்கள் வரும்போது அவைகள் மேகங்களைப்போல நிலையற்றவை என்று நல்லுபதேசம் செய்யும் குரு ஒருவர் இல்லை யென்ருல், நாம் தெய்வ நெறியை விட்டு வெகு தூரம் சென்று விடுவோம். அவர் வார்த்தைகளிலிருந்து, நாம் பலம் பெற்றுச் சில காலம் கழித்து, இச்சம்பவங்களை நினைக்கும்போது, இதற்காகவா புத்தியில்லாமல் அவ்வளவு கவலைப்பட்டோம் என்று

எண்ணுவோம். எப்படியானாலும், அச்சமயத்தில் குருதேவருடைய உதவி இல்லையென்றால் நாம் நஷ்டம் அடைவோம்.

அதனால் 'மஹத் ஸங்கம்' ஒன்றே நம்மைக் காப்பாற்றும். அது மிகவும் அரிது என்றாலும், சமயம் வாய்த்த போதெல்லாம் நாம் அதை பயன் படுத்த வேண்டும். நமக்கு விருப்பம் இருந்தால் அனேக சந்தர்ப்பங்கள் வாய்க்கும். எப்படி என்பதை அடுத்த சூத்திரம் விளக்கும்.

சூத்திரம் 40.

"லப்யதே (அ)பி தத் க்ருப்யைவ"

கருத்து:—(பெரியோர்களுடைய தொடர்பு) கடவுள் கிருபையால் மட்டும் கிடைக்கப்பெறுவது.

இந்த 'மஹத் ஸங்கம்' (பெரியோர்கள் தொடர்பு) கடவுள் கிருபையால் ஏற்படுவது. பெரிய மஹான்களைக்கண்டு பிடித்து, தகுந்த பாவனையுடன் அவர்களை அணுகச் செய்வதும் கடவுள் கிருபைதான். அவர்கள் மூலமாக நாம் ஆத்ம உணர்ச்சி பெறுவதும், இறைவன் கிருபையால் கைகூடுகின்றது.

ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கானவர், சிவானந்த ஆச்ரமத்தின் வழியாகச் செல்கின்றனர். ஆனால் எத்தனை பேர் உள்ளே வந்து அவர் தரிசனம் பெறுகின்றனர்.

குருதேவருடைய, பக்தி நிறைந்த சீடர்களில் பலர் தண்ணீர் அல்லது மோர் குடிப்பதற்காக ஆச்ரமத்தின் உள்ளே நுழைந்து, ஸ்ரீ குருதேவருடைய தரிசனத்தை

யும் உபதேசாமிருதத்தையும் பெற்றுப்போனவர்களும் உண்டு.

வித்தியாசம் எங்கே உள்ளது? அவரவர்கள் சம்பாதித்த கிருபையைப் பொறுத்தது.

குருதேவர் அழகாகச் சொன்னதுபோல, ஈசன் கிருபையும், கேட்டபோது கொடுக்கப்படுவது. நாம் அதற்காக ஆர்வத்துடன் பிரார்த்தனை செய்து, (எப்போதும் அதையே விரும்பி) தகுதியுடையவராகச் செய்து கொண்டால், நமக்கு அது நிச்சயமாகக் கிடைக்கும்.

சூத்திரம் 41.

"தஸ்மின் ஸ்தத் ஜனேஅபேதா பாவாத்"

கருத்து:—அதற்கும் அவர்களுக்கும் (பக்தர்களுக்கும் அல்லது பெரியோர்களுக்கும்) வித்தியாசம் இல்லை.

'அது' என்ற வார்த்தைகளுக்குக் 'கிருபை' என்னும் பொருள் கொண்டால், கடவுள் கிருபையும் குரு அல்லது ஆத்ம ஞானம் பெற்ற பெரியோர்கள் வாயிலாகவேதான் நமக்குக் கிடைக்கின்றது என்னும் ஊக்கமளிக்கும் உள்ளுரை தெரியவரும். இறைவன் கிருபைக்கும் குருவுக்கும் வித்தியாசம் இல்லை.

'அது' என்பதற்கு 'கடவுள்' என்ற பொருளும் கூறலாம். கடவுளுக்கும் குருவுக்கும் வித்தியாசம் இல்லை. குருவே கடவுள் ஆவார். நமது பிரார்த்தனைக்கும் விருப்பத்திற்கும் இணங்கி, அவர் நம்மிடையே தோன்றி, நம்மைத்தட்டி எழுப்பி, வாழ்க்கையின் லக்ஷியத்தை அடைய வழி காட்டுகின்றார்.

சிறையினுள்ளே செல்கின்றவர்கள் மூன்று வகையைச் சேர்ந்தவர்கள். (1) தண்டனை அடைந்தவர்கள் (2) சிறையைப் பார்க்கச்செல்பவர்கள். (3) தேசத்தை ஆள்பவர். குற்றம் செய்ததனால் தண்டனை அடைந்தவர் சிறையில் வைக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் தங்கள் விருப்பப்படி உள்ளே போகவும் வெளியே வரவும் செய்யலாம். இவர்கள் கட்டுப் பட்டவர்கள் அல்ல. சிறையைப் பார்க்கப் போகிறவர்கள், குற்றவாளிகளுக்கு புத்திமதி கூறி ஆறுதல் அளிக்கின்றனர். தேசத்தை ஆள்பவர், இவைகளை ஏற்படுத்தி அவர்களுக்கு வேண்டிய சௌகரியத்தையும் செய்கிறார்கள்.

இதைப்போலவே, சில வேளைகளில், இறைவனே பூமியில் அவதாரம் செய்தும், சில சமயங்களில் அவருடைய வேலையை நிறைவேற்ற சில மஹான்களை மட்டும் அனுப்பிவைக்கிறார். இவர்களுக்கு எவ்வித பந்தமும் கிடையாது. இவர்கள் சாதாரண மக்களைப் போன்றவர்கள் அல்ல. மனிதன் மாயைக்கு உட்பட்டவன். அவர்கள் மாயையை வென்றவர்கள் ஆனதால் மாயையினால் ஏமாற மாட்டார்கள். இவ்வகையில் குருவும், இறைவன் அவதாரத்தைப் போன்றவர் (கடவுளுக்கும், ஆத்மானுபூதிபெற்ற மெய்ஞ்ஞானிகளுக்கும், ஒரு வேற்றுமை உண்டு என்பர். நேர்மையாக நடப்பதால் விரைவில் விடுதலை பெறும் வழிகளையும், ஒழுங்கான வாழ்க்கை நடத்துவதால் திரும்பவும் சிறை தண்டனை வராமல் தடுத்துக் கொள்ளும் முறைகளையும், சிறையைப்பார்க்க போகிறவர் கைதிகளுக்கு எடுத்துரைப்பார்கள், ஆனால் அரசனுக்கு அப்போதே

கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம் உண்டு. அதைப்போலவே, ஜீவாத்மாவுக்கு மோக்ஷத்தை அளிக்கும் அதிகாரம் மெய்ஞானம் பெற்ற பெரியோர்களுக்கு இல்லை என்றும், கடவுளுக்கே உரிமையான சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார சக்திகள் இவர்களுக்குக் கிடையாது என்றும் கூறப்படுகிறது. மோக்ஷ ஸாம்ராஜ்யத்தின் வாசல் அருகிலேயே குரு நம்மை விட்டு விடுகிறார். கதவைத் திறப்பது கடவுள்! இவ்விதமான கருத்து கொண்டால், முன் சொன்ன வித்தியாசம் அதிகம் கிடையாது.)

சூத்திரம் 42.

“ ததேவ ஸாத்யதாம் ததேவ ஸாத்யதாம்ஃ ”

கருத்து :—அதுவே கைகூடட்டும், அதுவே கைகூடட்டும்.

இது முக்கியமானது, என்பதையும், உடனடியாகச் செய்ய வேண்டியது என்பதையும் உணர்த்துவதற்காகவே, இவ்வுபதேசம் இருமுறை சொல்லப்படுகிறது.

இதனால் ஸத் - ஸங்கம் அல்லது மஹத் - ஸங்கம் எவ்வளவு முக்கியமானது என்று நாரதர் கருதுகிறார் என்பது தெரியவரும். மஹத் - ஸங்கத்தினால் நாரதருக்குக் கிடைத்த நன்மைகள் எவ்வளவு என்பதை நாம் முன்பே அறிந்தோம். ஆகவே அவர், “ ததேவ ஸாத்யதாம் ” என்பதை உயர்ந்த ஸாதனையாகக் கருதி ஊர்ஜிதம் செய்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இருமுறை சொல்லுவதுடன், ‘ஏவ’ என்னும் வார்த்தையையும் உபயோகித்து, மஹத் - ஸங்கத்தின் அவசியத்தை நன்றாக உணர்த்துகிறார்.

10

சூத்திரம் 43.

" துஃஸங்கஃ ஸர்வதைவ த்யாஜ்யஃ "

கருத்து:—எவ்வகையிலும் தீயோர் இணக்கத்தை விட்டு விட வேண்டும்.

நாம் எவ்வகையான தொடர்பு கொண்டுள்ளோம் என்பதைக் குறித்து, நாரதருக்குக் கவலை அதிகம். ஏனெனில், அத் தொடர்பு அதிக சக்தி வாய்ந்தது. பக்தியைப் பெண்பால் (Pronoun) வார்த்தையால் முன்பு குறிப்பிட்டார் என்பது உங்களுக்குத் தெரியும். சிறு பூக்கொடி பெண் இனத்தைச் சேர்ந்தது. அது சுற்றிக்கொள்ள ஒரு ஆதாரத்தைத் தேடுகிறது. அதைப் போலவே பக்தனும் தகுந்த உறவைத் தேடிக் கொள்வான். பக்தி யோகமும், கர்ம யோகமும் தனியாக பயிற்சி செய்வதை விட, பலருடன் சேர்ந்து செய்வது பயனை அளிக்கும். ஆழ்ந்த தியானத்தில் ஸமாதியில் அமர்ந்து கடவுளுடன் நேராக உறவு வைத்துக் கொள்ளும் நிலை வரும் வரையிலும், பக்தனுக்குத் துணைவர்கள் அவசியமாகும்.

கீர்த்தனம் செய்யும்போது இவன் ஆனந்தத்தை அநுபவிக்கிறான். இதை மற்றவர்கள் அநுபவிப்பதற்கும், இவனுடைய உற்சாகம் நிலைத்து நிற்கவும், மற்றவர்களும் இவனோடு சேர்ந்து ஈசன் நாமத்தைப் பாடுவதற்கும் ஆசைப்படுவான். இறைவன் பெருமையைப் பேசுவதற்கும் விரும்புவான். ஆனால், அதைக் கேட்பதற்கு ஜனங்கள் இருக்க வேண்டும். (ஆனாலும், சில வேளைகளில் ஏகாந்தமாக இருக்கவும், " தனிமையாக

இருந்து கடவுளை நினைத்துக் கண்ணீர் விடவும்" தியா னத்தில் அமரவும் ஆசைப்படுவதும் உண்டு.)

இந்த மனோநிலை இருக்கும்போது, அவன் கெட்ட வர்களுடன் சேர்ந்தால், இறைவனுக்குக் கிடைக்கப் பெற்ற தெய்வீக சம்பத்தையும் இழந்து, சிறிய அள வில் இவன் மனதில் மறைந்து இருக்கும் தீய சக்திகள் வெளியே தோன்றி பெரியதாக மாறிவிடும்.

இது ஒரு பக்தனுடைய நிலை.

இன்னும், மனிதன் ஏன் எப்போது தொடர்பைத் தேடுகிறான் என்று பார்ப்போம். தன்னிடத்திலேயே சலிப்பும் அதிருப்தியும் ஏற்பட்டபோது, வெளித் தொடர்பை நாடுகிறான். தன்னுள்ளே சாந்தியோ, ஆனந்தமோ அவனால் காண முடியவில்லை. அப்போது அவன் முயற்சி செய்கிறான். இது சிறிது நாட்கள் தொடர்ந்து செல்லுகிறது. கடைசியில் சலிப்பு அடை கிறான்: இப்போது இவன் மனது உட்புறமாகச் செல்ல மறுத்து, வெளித் தொடர்பைத் தேடுகின்றது.

இந்த சமயத்திலேதான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு சிறிய தவறு பெரிய நாசத்தை விளைவிக்கும்.

சிறிது அளவு வெறுப்பும் சந்தேகமும் பொறாமை யும் கொண்டு எப்போது சமயம் வாய்க்கும் என்று, கெட்ட மனிதன் ஒருவன் காத்துக்கொண் டிருப்பான். பக்தன் எதற்காக உறவை நாடுகிறான் என்பது அவ னுக்குத் தெரியும். பக்தனுடைய கவனத்தை மாற்றக் கூடிய பொருள் அவனிடம் தயாராக இருக்கிறது. பழக்கமில்லாதவன் சுலபமாக ஏமாந்து போகக்கூடும்.

கெட்டவன் ஒருவன் சொன்ன தவறான கருத்துகள், முதிர்ந்த ஸாதகனுக்கும், வெகு நாட்களுக்குப் பின் விரும்பத் தகாத பலனைக் கொடுக்கும். ஸாதனைகள் எதற்கும் உதவாதவை என்றும், கடவுளே இல்லை என்றும், இல்லாத ஒரு பொருளை நம்பி இருப்பது மடமை என்றும் கெட்ட மனிதன் சொல்லக் கூடும். அந்த சமயத்தில் ஸாதகன் திடமான நம்பிக்கையுடன் இவ்வார்த்தைகளுக்கு உடன்படாமல் எதிர்த்து நிற்பான். ஆனால், இவனுடைய நம்பிக்கையைத் தீவிரமாக சோதனை செய்யப்படும் காலம் வரும். இவன் சிறிது தளர்ச்சி யடைந்து இருக்கும்போது. வெகு நாட்களுக்கு முன் இவன் மனதுக்கு ஊட்டிய தவறான கருத்துகள். இந்த ஸாதகனுக்கே முட்டுக் கட்டையாக மாறிவிடும். தீயோர் இணக்கும், இவ்வாறு வெகு நாட்களுக்குப் பிறகும், மிக்க அபாயமான பலனைக் கொடுக்க வல்லது.

கெட்டவர்களையும் சீர்திருத்திய கௌரங்க மஹாப்பிரபுவைப் போன்ற பெரிய பக்தர்களின் சரித்திரத்தை நாம் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால், அவர்கள் மிகுந்த வல்லமை பெற்றவர்களாயும், ஆத்ம ஞானம் நிறைந்தவர்களாயும் வாழ்ந்தனர். நானும் நீங்களும் அவ் வல்லமையும் சக்தியும் பெற்றவர்கள் என்று நினைப்பது ஆபத்தை வரவழைத்துக் கொள்வதாகும். உலக மக்களோடு நாம் தொடர்பு வைத்துக்கொள்ளும் போது, மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அது, எவர் அதிக வல்லமை யுடையவர் என்பதையும், தாக்கும் சக்தி எவருக்கு அதிகமாக உள்ளது என்பதையும் பொறுத்தது! அவ்வளவுதான்! மற்றவர்

கள் நம்மை மிஞ்சிவிட்டால் நாம் தோல்வி யடைந்து விடுவோம்.

"ஸர்வ தைவ" என்னும் வார்த்தையை கவனிக்க வேண்டும். தீயோர் தொடர்பை நாடிச் செல்வதற்கு நாம் எவ்விதமான சமாதானமும் சொல்லுவதற்கு இல்லை. ஸ்ரீ குரு தேவருடைய வாழ்க்கையே இதற்கு ஓர் உதாரணமாக இருக்கிறது. சோர்வை எதிர்த்து மனம் போராடுகிறது என்பது அவருக்குத் தெரியும். அதனால், கூட்டுமுறை யோக மார்க்கத்தை (Yoga of Synthasis) அனுசரிக்கும்படிக் கூறினார். ஒவ்வொன்றையும் சிறிது அளவு செய்து சோர்வு அடையாமல் பார்த்துக் கொள்கிறோம். அவர் எவ்வாறு ஸத்ஸங்கம் நடத்துகிறார் என்பதை கவனியுங்கள். பிரசங்கம், கீர்த்தனை, தமாஷ், பாட்டு, எல்லாவற்றிலும் ஒரு சிறிய அளவு சேர்ந்து காணப்படுகிறது. உங்களுக்கு சினிமா பார்க்க வேண்டுமா, ஸத்ஸங்கத்தில் பாடுங்கள், பாட்டுக் கச்சேரி வேண்டுமா, அங்கே வைத்துக் கொள்ளுங்கள், நாட்டியம் பார்க்க வேண்டுமா ஸத்ஸங்கத்தில் வந்து பாருங்கள். எல்லாவற்றிற்கும் அடிப்படை ஸத்ஸங்கமாக இருக்க வேண்டும். லக்ஷியத்திலிருந்து நாம் வழி தவறாமல், இவ்வாறு சாதுரியமாக நாம் நடந்து கொள்ளலாம்.

உலகப் பற்றுக்கொண்டவன், மதப் பற்றுள்ளவர் போன்று ஏமாற்றித் திரிந்து, நமக்கு ஆத்மீக போதனை செய்பவனிடம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவனுடைய தொடர்பு அதிகமான தொடர்பை விளைவிக்கும். பேயும் சாத்திரம் பேசும். அவ

னுடைய அறிவை நாம் வியந்தாலும், அவன் வார்த்தைகள் நம்மை தவருன வழியில் நடத்திச் செல்லும்.

ஸத்ஸங்கத்திலும் கூட, நாம் கவனமாக இருந்து, அதுவும் தீய சேர்க்கையாக மாறிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஸத் ஸங்கம் நம்மை நிஸ்ஸங்கத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அதுவே லக்ஷியம். நல்லோர் இணக்கம் தனிமையான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்போது, ஸத் ஸங்கத்திலும் நாம் இறைவனுடன் மட்டும்தான் இருப்போம். ஸத் ஸங்கத்திலும் ஒரு தனி மனிதனிடம் பற்றுதல் வளராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லையென்ருல், நாம் எதற்காக ஸத் ஸங்கத்தை நாடினேமோ அந்த லக்ஷியம் கைகூடாமல் போய்விடும்.

ஸூத்திரம் 44.

"காமக்ரோதமோஹ ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்திநாச ஸர்வநாச காரணத் வாத்."

கருத்து:—ஏனெனில் அது, காமம், க்ரோதம், மோஹம், மறதி, புத்தி நாசம், முற்றும் அழிதல் ஆகியவைகளுக்குக் காரணமாகின்றது.

பக்தன் ஒவ்வொரு கல்லாக எடுத்து வைத்து பக்தி என்னும் மாளிகையை கட்டுகிருன். கெட்ட மனிதனின் ஒரே குண்டு ஒரு நிமிஷத்தில் அதைத் தகர்த்து விடும்.

சிறுவன் ஒருவன் மிகவும் கஷ்டப்பட்டு படிகளின் மேல் பந்தை எடுத்துச் செல்லுகிருன். குறும்பு செய்

யும் இன்னொருவன் அதைக் கையிலிருந்து தட்டி விடு கிறான். கண் இமைப் பொழுதில் அது கீழே விழுந்து விடுகிறது.

தீயோர் இணக்கத்தில் சிக்கிக்கொண்ட பக்த னுடைய நிலையும் இவ்வகையானது. ஒரு நிமிஷம் கவனக் குறைவாக இருந்தாலும், நம்பிக்கையற்ற நிலை யான பாதாளத்தில் அவனைத் தள்ளிவிடும். மேலும், முயற்சி செய்யும் தூண்டுதலும் அனேகமாக இல்லா மல் போய்விடுகின்றது.

இறை நெறியில் ஈடுபட்ட ஒருவன், இல்வாழ்க் கைக்குத் திரும்பி வராமல் இருப்பதற்காக, ஒரு சமயம் குருதேவர் பெருமுயற்சி செய்தது என் நினைவுக்கு வரு கின்றது. முதலில் குருதேவர் கவலையுடன் ‘அமைதி யற்ற’ நிலையில் இருந்தார். அப்போது அவர், “அவன் குடும்பத்திற்குப் பணம் அனுப்பவும் எனக்கு முடியும். வேலை எதுவும் செய்ய விருப்பம் இல்லையென்றால் அப் படியே இருக்கட்டும். ஆனால், அவன் இப்பாதையை மட்டும் கைவிடக் கூடாது. அது நேர் எதிரான பலனை விளைவிக்கும்” என்று அதற்கு விரிவுரை கூறினார்.

ஸாதகன் தன்னடக்கம் பயிற்சி செய்யும்போது, ஆசைகள் எல்லாவற்றையும் அப்போதே தூயதாக்க முடியாது. அடக்கு முறையைக் கையாள வேண்டி வரும். அவ்வாறு ‘அடக்கிவைத்த’ மனம், சரியான சமயத்தில் வெளியே பாய்வதற்குக் காத்துக்கொண் டிருக்கும். அதனால் ஸாதகன் ஒருவன் தவறி விழும் போது, தான் முன்பு இருந்த நிலையை விடவும், உலகப் பற்றுள்ள மனிதனை விடவும் மோசமான நிலைக்கு வந்து விடுகிறான்.

மனதில் எழும் சிறிய ஆசையும் கெட்ட சகவாஸத்தால், தீவிரமாக மாறுதல் அடைகிறது. மற்றவனுடைய குற்றம் குறைகளைக் கண்டு, தன் இச்சைப்படி அவைகளை உபயோகப்படுத்திக் கொள்வதுதான் உலகப் பற்றுள்ளவனுடைய முக்கியமான நோக்கம். உலக வாழ்க்கை ராகத்வேஷம் நிறைந்துள்ளது. ஏதாவது ஒன்றில் ஆர்வம் மிகுந்து அதிகமான பற்றுதலும், மற்றொன்றில் தீவிரமான வெறுப்பும் உண்டாக்குவதற்கு எவனுக்கு வல்லமை இருக்கிறதோ அவனைப் பின்பற்றிச் செல்வோர் பலர் உண்டு. இவ்வகை கூட்டாளிகளுடன் சேரும்போது, ஸாதகனுக்கும் காமம் குரோதம் முதலிய துர்க்குணங்களும் மெதுவாக ஏற்படுகின்றன. காமமும் குரோதமும் அனேகமாக ராகத்வேஷத்தைச் சேர்ந்தவைகளே ஆகும். இவை ஒருவனிடம் புகுந்துவிட்டால், மோகமும் பின் தொடரும். இதனால் நினைவு கெட்டு, பக்தன், தன்னுடைய தெய்வீக நிலையையும், வாழ்க்கை லக்ஷியத்தையும், எல்லாவற்றையும், மறந்து விடுகிறான். பிறகு, புத்தி நாசமும் ஏற்படுகின்றது. நாரதர் இதுவரையிலும், ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் உரைத்த, வார்த்தைகளைப் பின்பற்றிக் கூறினார். முடிவில் 'ஸர்வ நாச' என்னும் அழுத்தமான வார்த்தையினால், எல்லாமும் நாசம் அடைகின்றது என்று கூறிவிட்டார். விவேகம் இழந்துவிட்டால், வைராக்யமும், பக்தியும் எல்லாமும் நாசம் அடைந்து விடும்.

சூத்திரம் 45.

" தரங்காயிதா அபீமே அஸங்காற் ஸமுத்ராயந்தி ".

கருத்து:—அவைகள் அலை அளவில் இருந்த போதிலும் (கெட்ட சகவாஸத்தால்) கடல் அளவுக்குப் பெரிய தாகி விடும்.

அது அவர்களுடைய தவறு அல்ல! கெட்டவன் நமது விரோதியும் இல்லை. நாம் அகத்துள்ளேதான் விரோதியும் இருக்கிறான். அது களங்கமுள்ள மனது. கெட்ட வாஸனை முதலாவது சிறிய அலைபோல் இருந்து, கெட்ட சகவாசத்தால் அது கடலைப்போல் பெரிதாகி விடும்.

இதை வேறுவிதமாகவும் விளக்கிக் கூறலாம். நம்மிடம் காணப்படும் கெட்ட ஸமஸ்காரங்கள், அடியில் மறைந்திருக்கும் நெருப்பைப் போன்றவை. அதன் மேல் பக்திக் கிரியையான சாம்பலைச் சேர்த்துக் குவித்து விட்டோம். அடியில் இருக்கும் நெருப்பு முழுதும் அணையவில்லை. தீயோர் இணக்கம், சாம்பலை அகற்றி, கீழே இருக்கும் நெருப்பைத் தூண்டிப் பெரிய தாக்கி விடும்.

நமது வலிமையை நாமே சோதனை செய்யக் கூடாது என்று சொல்லுவதற்குக் காரணமும் இதுவே தான். எப்போதும் நம்மிடத்து ஏதோ சில தீய சக்திகள் இருப்பதாகவே எண்ணிக்கொள்ள வேண்டும். ஜடபரதரைப் போன்ற மஹா ரிஷியும், மோக்ஷம் அடையும் பொருட்டு இவர் செய்த முயற்சிகள் எல்லாம், கருணை என்னும் சீரிய ஒழுக்கத்தால் கடைசி

காலத்தில் ஏற்பட்ட பற்றுதலின் காரணமாக நாசம் ஆய்விட்டன, என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

கடைசி மூச்சு உள்ளவரையிலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று சாதகர்களுக்கு எச்சரிக்கை செய்வதில் குருதேவர் தளர்ச்சி அடையவேமாட்டார். ஏதாவது ஒரு சமயத்தில் செய்யும் ஒரு தவறுதலும், ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரு பெரும் ஆபத்தாக முடியும். மீன்கள் ஜதை சேர்வதைக்கண்டதன் பயனாக ஒரு பெரிய தபசி வீழ்ச்சி அடைந்தார்! அப்படி இருக்கும் போது, அனேக விதமான வசீகரமானதும், மனதைத் தடுமாறச் செய்யும் சூழ்நிலைகளாலும் நாம் சூழப்பட்டிருக்கும் இக்காலத்தில் நமது கதி என்ன? இறைவன் ஒருவர்தான் நமக்குப்புகலிடம்.

சூத்திரம் 46.

"கஸ்தரதி கஸ்தரதி மாயாம்? யঃ ஸங்கம் த்யஜதி
யோ மஹானுபாவாம் ஸேவதே, நிர்மமோ பவதி."

கருத்து:—மாயையை எவன் தாண்டிச் செல்லுகின்றான்? எவன் தாண்டிச் செல்லுகின்றான்? கூட்டுறவை எவன் துறந்து விடுகிறானோ அவனும், மஹானுக்கு (குருவுக்கு) பணி செய்பவனும், "நான், எனது" என்ற எண்ணம் இல்லாதவனும்.

மாயையை எவன் கடந்து செல்கின்றான் ?

எல்லா விதமான சேர்க்கையையும் எவன் துறந்து விடுகிறானோ அவன் நான் முன்பு சொன்னதுபோல், இது கெட்ட சகவாஸத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுவதாகும். 'ஸத்-ஸங்கத்தை'யும் உண்மையாகவே

'ஸங்கம்' என்று நினைக்கக்கூடாது. ஒருவன் கூட்டத்தின் இடையே இருந்தாலும், உண்மையான ஸத்ஸங்கத்தில் ஒவ்வொருவனும், இறைவனோடு தனிமையாகவே இருக்கிறான். 'ஸத்ஸங்கம்' என்னும் பெயரால் நமக்கு ஒரு மனிதரிடமோ, அல்லது ஒரு உறைவிடத்திலோ பற்றுதல் ஏற்பட்டு விடக்கூடாது என்று நாரதருக்கு கவலை. அதனால் அவர் எல்லா விதமான சேர்க்கையையும் துறந்துவிட வேண்டும் என்று சொல்லுகிறார்.

எவன் மாயையைக் கடந்து விடுகிறான்?

ஒரு மஹாநுபாவனுக்கு எவன் தொண்டு செய்கிறானோ அவன். இங்கே கூறியிருக்கும் எண் ஒருமை. இதன் உட்கருத்தை நாம் கவனிக்க வேண்டும். எப்போது ஒரு மஹாத்மாவுக்குச் சிடனாக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டோமோ, அவரிடத்திலேயே நிலைத்திருந்து அவருக்கே தொண்டு செய்யவும் வேண்டும். சுழலும் கல்லு பாசியைச் சேர்க்காது. சிறிது சிறிதாக அனேக இடங்களில் பள்ளம் வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காது. நாம் அனேக ஞானிகளின் ஸத்ஸங்கத்திலும் கலந்து கொண்டாலும், நமது குரு தேவருக்கே பணி செய்து அவர் உபதேசத்தையே முடிவாக ஏற்றுக்கொள்வோம்.

பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன்னுடைய பாதங்களையே குறிப்பிட்டு "எவன் என்னை சரண் அடைகிறானோ" அவன் மாயையைக் கடந்து செல்கிறான்" என்று கூறினார். ஆனால் இந்த இடத்தில் நாரதர், எவன் ஒரு ஞானி அல்லது கடவுளிடத்து மேன்மையான பக்தியுடையவன் பாதார

விந்தங்களைச்சரண் அடைகிறுனே அவன் மாயையைத் தாண்டி விடுகிறுன் என்று உறுதியாக உரைக்கின்றுர். இதன் கருத்து வெளிப்படையானது, இவர்கள் இரு வரும் வேறுனவர்கள் அல்ல. ஒருவர்தான். உண்மை யை அறிய விரும்பும் ஒருவனுக்கு இறைவனே குரு வாகத் தோன்றுவார்.

கீதையில் உரைத்ததைப்போல், முக்குணங்களும் கூடிய இறைவனது சக்தியே மாயை எனப்படும். அவளை நாம் அசட்டை செய்யக்கூடாது. மாயை யைக் கடந்து செல்வது கடினம் என்று இறைவனே எச்சரிக்கை செய்திருக்கிறுர். தனி மனிதனுக்கு உண் மையை உணர முடியாதவாறு மாயை மறைத்து விடுகிறுள். அவள் அவித்தை (அஞ்ஞானம்). அவளே 'நான்' என்ற உணர்ச்சியும் மனமும் ஆவாள். அகந்தையை அழிக்க நாம் எவ்வளவு முயற்சி செய் தாலும், அது பல உருவங்கள் எடுத்து, நமது முயற்சி கள் எல்லாம் பயனில்லாமல் செய்து விடுகின்றது. அகந்தையை அகற்ற நாம் செய்யும் முயற்சியின் அடிப் படையிலேயே இவ்வகந்தை உணர்ச்சி வளருகின்றது.

நமது முக்கிய விரோதியான 'நான்' என்னும் உணர்வை வெல்லவேண்டுமாயின், அதை குருவிடத் திலே ஒப்படைத்து விடுவது விவேகமுள்ள முறை யாகும். அவர் மெய்ஞானி ஆனதால், அதை எவ்வாறு அழிக்க முடியும் என்பதை அறிவார். நமது அகந் தையை அவரேதான் அகற்றக் கூடியவர்.

மாயையை எவர் கடந்து விடுகின்றனர்?

'நான்' எனும் அகந்தையை முழுதும் எவன் வென்று விடுகிறுனே அவனே மாயையைத் தாண்டிச்

செல்கிறுன். நமது என்று எதுவும் வைத்துக்கொள்ளாமல், நாம் எப்போது ஆசாரியரிடம் அடைக்கலம் புகுந்து விட்டோமோ, அப்போது நமக்கே உரிமையானது என்ற உணர்ச்சி தாளுகவே மறைந்து விடும். 'நான்' 'எனது' என்ற எண்ணமும் அகந்தையும் அகன்று விட்டால் மாயையும் மறைந்து விடுகிறது.

சூத்திரம் 47.

"யோ விவிக்தஸ்தானம் ஸேவதே, யோலோகபந்து
முன்மூலயதி, நிஸ்த்ரை குண்யோபவதி, போகக்ஷேமம்
த்யஜதி."

கருத்து :—புனிதமாகவும் தனிமையாகவும் இருக்கும் இடத்தைச் சேர்பவனும், உலகப்பற்றுக்களை எல்லாம் அறவே ஒழித்தவனும், முக்குணங்களைக் கடந்தவனும், 'பொருளை சம்பாதித்துக் காப்பாற்றி வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணங்களை எல்லாம் விட்டவனும் எவனே அவன்.

மாயையை எவர் கடந்து செல்கின்றனர் ?

தெய்வீகமானதும் தனிமையாகவும் உள்ள இடத்தை எவன் நாடுகிறுனே அவன். பக்தன் இறைவனேடு ஏகாந்தமாக உறவாட எது உகந்ததோ அது தெய்வீகமான இடம். உதாரணமாக, தெய்வாம்சம் பொருந்தியதோ அல்லது ஒரு மஹாரிஷி அல்லது ஒரு சரியாயோகி, முதலானவர்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட ஓர் இடம், மனதை சரியான நிலைக்கு சுலபமாகக் கொண்டு வரும் சக்தி வாய்ந்தது. ஸாதனையில் இப்பகுதியை, ஸ்ரீ கிருஷ்ண பகவான் "விவிக்த-

ஸேவீ லக்வாசி" என்றும் "விவிக்ததேச ஸேவித்வம் அரதிர்ஞான ஸம்ஸதி" என்றும் கூறியிருக்கிறார்.

பக்தன் கூட்டத்தைக்கண்டு பயப்படுவ தில்லை. மற்றவரோடு பழகவும் அஞ்சமாட்டான். அவன் பிற மனிதரிடம் பழகுவது இந்திரிய சுகங்களை அனுப வீக்கும் ஆசையினால் அல்ல. ஒரு கூட்டத்தின் நடுவே இருந்தாலும், அவன் தன்னுடைய சுயமான உலகி லேயே வாழ்கிறான். இந்நிலையில் இருக்கும் திறமை யுடைய பெரியயோகிகள் இக்காலத்திலும் உள்ளனர். ஜனரல் யதுநாத்ஸிங், போர்முனையிலும் கூட, குறித்த நேரத்தில் தியானத்தில் அமர்ந்து விடுவார். துப்பாக் கிக் குண்டு தன் பக்கமாக "உஸ்" என்று பாய்ந்தாலும் அவர் அசைய மாட்டார். இதைப் போலவே, நியூ யார்க்கில், ஹாரி டிக்மன், சப்தம் நிறைந்த இடத்தின் மத்தியிலும் 'பிரத்யாஹாரம்' நேர்மையுடன் பழகு வார். இவர்கள் எங்கு இருந்தாலும் தனிமையில் இன்பம் அனுபவிக்கின்றனர். அவர்கள் எங்கே இருந் தாலும் அது ஒரு புனிதமான இடமாகும். நாம் அந்த நிலைக்கு வரும்வரையிலும், தனிமையான இடத்தை நாடிச்செல்வது சாலச்சிறந்தது. ஒரு கூட் டத்தின் நடுவே நமது மனம் சஞ்சலமற்று இருந்தா லும், நகரத்தின் இரைச்சலும் சப்தமும், நமது உடலை பலவீனப் படுத்தும் சூக்ஷ்மமான சக்தி வாய்ந்தது. நமது கவனத்தைத் திருப்பும் சூழ்நிலைகள் அங்கே இருப்பதால், இறைவனை நினைத்து தியானம் செய்ய நமக்கு இயலாது. ஏன்? சப்தம் நிறைந்த கடைத் தெருவுகளில் மேன்மையான எண்ணங்கள் தோன்று வதே மிகவும் கடினம். நல்ல எண்ணங்களும்,

மேன்மையான கலைச்சித்திரங்களும், தனிமையான இடங்களிலே தான் உருவாயின.

மாயையை எவர் தாண்டிச் செல்கின்றனர்?

எவன் உலகபாசங்களை அறவே அழித்து விடுகிருனே அவன். ஒரு மரத்தின் கிளைகளை வெட்டினுல் மட்டும் போதாது. அதை வேரோடு வெட்டித்தள்ள வேண்டும். ஸம்ஸார விருக்ஷத்தை வெட்டி வீழ்த்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஓர் அற்புதமான கோடாரியைச் செய்து விட்டார். அதுதான் பற்று இல்லாமல் இருத்தல். பற்றில்லாமை என்னும் கோடாரியால் உலக சம்பந்தங்களை எல்லாம் முறித்துவிட வேண்டும். இறைவன் உலகத்தைப் படைத்தான். அவனே இதைக் காப்பாற்றவும் செய்கிருன். எங்கே எப்போது என்ன செய்ய வேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும்! அதனுல் நமது எல்லையை மீறிச்செல்லக் கூடாது. இறைவன் கைகளில் உள்ள ஆயுதங்களாகவே நம்மை நினைத்துக்கொண்டு, நமது கடமையை மாத்திரம் செய்து, உலகத்தில் ஏதாவது ஒரு பொருளிடத்தோ, ஒரு மனிதரிடமோ பற்றுதல் கொள்வதைத் தவிர்க்கவேண்டும்.

மாயையை எவர் கடந்து செல்கின்றனர்?

முக்குணங்களையும் எவன் தாண்டிச்செல்கிருனே அவன்? இது மிகவும் தெளிவானது. மாயை முக்குணங்களால் இயக்கப்படுவது என்று கீதையில் கூறப்பட்டுள்ளது. எவன் மாயையைக் கடந்து செல்ல விரும்புகிருனே, அவன் முக்குணங்களையும் தாண்டி விடுவான். ரஜோ குணத்தை சுறு சுறுப்பாக வளர்த்து தமோ குணத்தை ஒழித்தும், ஸத்வகுணத்தை நன்ரு

கப்பயிற்சி செய்து, ரஜோ குணத்தையும் ஸத்வகுண மாக மாற்றி விடுவான். ஸத்வமும் ஒரு தடை. பொன்ஞல் செய்த பூட்டு. ஆனுல் இறைவனிடம் பக்தன் பூரணமாக சரணம் அடைவதால், முக்குணங்களைக் கடந்து செல்ல, இறைவனே உதவி செய்கின்ருர்.

எவன் மாயையை வென்று விடுகிருன் ?

பொருளைச் சம்பாதித்து சேர்த்து வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணங்களை எல்லாம் முற்றும் துறந்தவன் எவனே அவன். கடவுள் இவ்வுலகைப் படைத்து காப்பாற்றுகிருர் என்பதை நாம் பார்த்தோம். இறைவன் ஸர்வ வியாபகமாகவும், ஸர்வ வல்லமை பொருந்தியவரும், எல்லாம் அறிந்தவராகவும் இருக்கிருர் என்பது பக்தனுக்குத் தெரியும். பக்தன் அறியும் முன்பே இவனுக்குத் தேவையானது எது என்பதை கடவுள் அறிவார். அவர் எங்கும் நிறைந்திருப்பதால், இவனுக்கு வேண்டியதை எந்த இடத்திலும் பூர்த்தி செய்வார். ஸர்வ வல்லமையுடையவராதலால் இறைவனுல் செய்ய முடியாத காரியம் ஒன்றும் இல்லை என்பதற்கு சந்தேகம் சிறிதும் கிடையாது. பக்தன் ஒரு குடும்பத்தையாவது, சமூகத்தையாவது நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும், அல்லது அதை கடவுளிடத்திலேயே ஒப்படைத்து விட்டாலும், இறைவன் ஒருவனே இவ்வுலகனைத்தும் காப்பாற்றுகிருன் என்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். உதாரணமாக, ஒருவன் ரயில் பிரயாணம் செய்யும்போது, தன்னுடைய பெட்டியைத் தலைமீது வைத்துக்கொண்டிருந்தால், ரயில் இன்னும் வேகமாகப்போய் விடும் என்று

நினைப்பது அறிவீனம் அல்லவா? எப்படியும் அப் பெட்டியை ரயில் வண்டிதான் சுமந்து செல்கிறது. இவ்வுண்மையை அறிந்தவன் தனக்கு எது கொடுக்கப் பட்டுள்ளது என்று கஷ்டப்படுவதும் இல்லை, கொடுத் ததை எப்படி காப்பாற்றுவது என்று கவலைப்படு வதும் இல்லை. அது இறைவன் பொறுப்பு. பக்தன் இறைவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து, எல் லாம் கடவுள் இச்சை என்றுவது நினைத்தும் பொறுமையுடன் இருப்பான்.

சூத்திரம் 48.

“யஃ கர்மபலம் த்யஜதி கர்மாணி ஸன்யஸ்யதி
ததோ நிர்த்வந்த்வோ பவதி”

கருத்து :—கர்மபலன்களை தியாகம் செய்தவனும், கருமங் களை துறந்தவனும், இருமைகளை (இன்பம்-துன்பம், நல்லது-கெட்டது, வெப்பம் - குளிர்) கடந்து செல்கின்றான்.

பகவத்கீதை முழுதும் இந்த ஒரு சூத்திரத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மாயையை எவன் கடந்து செல்கிறான் ?

கர்மபலன்களைத் துறந்தவன் எவனோ அவன். அதுவே விவேகத்துடன் நடந்துகொள்ளும் முறை. நீங்கள் இதைக்குறித்து சிறிது யோசித்துப் பார்க்கும் போது, நாம் செய்யும் கிரியைகளுக்கும், நாம் அனுப விக்கும் பலன்களுக்கும் சிறிதும் பொருத்தம் இருப்ப தாகத் தெரியவில்லை! நமது அன்றாட வாழ்க்கையில் இதைப் பார்க்கிறோம். ஸம்ஸ்கிருதத்தில் இதை

'அதிர்ஷ்டம்' என்பார்கள். நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு சக்தி அதன் இச்சையை நம்மைக்கொண்டு பூர்த்தி செய்து வைக்கின்றது. இந்த சக்தி நமது முன் வினையின் பயனாக விளைவது.

இரண்டு பையன்கள் பரீக்ஷைக்காக தயார் செய்து கொள்கின்றனர். ஒருவன் படிக்காமல், பொழுதை அனேகமாக வீணாகவே கழித்து, ஒரு நாள் முன்பு புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்கிறான். ஏதோ சில பக்கங்கள் மட்டும் அவனால் வாசிக்க முடிகிறது. கேள்விக் கடுதாசியில், இவன் படித்த பக்கங்களில் கூறியதை ஒட்டியே வினாக்களும் இருக்கின்றன. அதனால் இவன் சுலபமாக விடை எழுதி தேர்ச்சி பெற்று விடுகிறான்.

மற்றவன் நன்றாகப் படிக்கிறான். ஆனால் பரீக்ஷைக்கு முன் தினம் ஜுரம் கண்டு படுக்கையில் படுத்து விடுகிறான். அவன் பரீக்ஷைக்குப் போனாலும் மனக்குழப்பம் ஏற்படுகிறது. அப்படியும் இவன் சில கேள்விகளுக்கு விடை எழுதினாலும், இதைத் திருத்தும் ஆசிரியருடைய மனோநிலை அவருடைய தர்ம பத்தினியால் கெட்டுவிடும். இவனுக்குப் பல விதமான தடைகள் ஏற்பட்டு பரீக்ஷையில் தவறி விடுகிறான்.

வினைப்பயன் எவ்வாறு கர்மங்களை ஒட்டி இருக்கின்றன?

புலன் முன்செய்த கர்மங்களைத் தழுவி டைரைட்டர் மெஷினைப் போன்றது. ஒரு தனிப்பட்ட சாவியைத் தொட்டதும், ஒரு அச்சு மேலே வருகிறது.

துணைக்கருவிகள் அனேகம் வேலை செய்கின்றன. அதைப்போலவே, பையன் பரீக்ஷைக்கு உட்கார்ந்ததும், (முன்வினைப்பயன் பெற வேண்டிய) அதற்குத் தகுந்த சாவி வேலை செய்ய ஆரம்பிக்கின்றது. அதோடு இணைக்கப்பட்ட துணைக்கருவி (பரீக்ஷை) தற்செயலாக வாய்ந்தது! பலன், அனேகமாக, முன் செய்த கர்மத்தைப் பொறுத்தது. அப்போது செய்ததை ஒட்டியதன்று. பின் செய்தது தற்செயலாக நிகழ்வது.

அதனால் உண்மையை நாடிச்செல்லும் எவனொருவன் கர்மபலன்களைத் துறந்து விடுகிறானோ அவனே புத்திசாலி. செய்வினைக்குத்தக்க பயனை எதிர்பார்க்கிறவன் தவறு இழைக்கிறான். ஏமாற்றமும் அடைகிறான். இறைவனுடைய இச்சை எதுவென்றும், முன் வினைப்பயன் எதுவென்றும் ஒருவன் எப்படி அறிந்து கொள்வான்? நமக்கு அனுகூலமாக நடந்துவிட்டால், நமது கர்மம் வெற்றி யடைந்தது என்று எண்ணி சந்தோஷப்படுகிறோம். தோல்வி யடைந்துவிட்டால், அனேகமாக பிறரை நிந்திப்போம். அல்லது நம்மையே நொந்து கொண்டு வருத்தப்படுவோம்.

சந்நியாசி (வினைப்பயனைத் துறந்தவனும், வினைப்பயனை கர்மங்களுடன் இணைக்காதவனும்) பலன்களில் மூவகையான, விரும்பத் தக்கவை, விரும்பத் தகாதவை, இரண்டும் கலந்தவை, என்ற பாகுபாட்டைக் கடந்து செல்கிறான். அவன் எதையும் எதிர்கொண்டு அழைப்பான். எது நேர்ந்தாலும், முன் வினையே பலன் அளித்து முற்றுப் பெறுகின்றது. என்பதும் அவனுக்குத் தெரியும். முன்வினையின் விசை முடிவு பெறுகின்றது என்று எண்ணி எப்போதும்

மகிழ்ச்சி அடைகிறான். இந்த விசை முற்றுப் பெற்றச் தும், விடுதலை அடைவோம் என்பதையும் அவன் அறிவான்.

"கர்மாணி ஸன்யஸ்யதி" என்பதற்கு, 'கிரியை களைத் தவிர்க்க வேண்டும்' என்ற பொருள் கொள்ளக் கூடாது. ஆனால், அவைகளை 'இறைவன் பாதார விந்தங்களில் அர்ப்பணம் செய்ய வேண்டும்' எனும் கருத்தைக் கொள்ள வேண்டும். பயனைக் கருதாமலும், சுயநலமற்ற தன்மையுடனும், 'நான்' எனும் அகந்தை உணர்ச்சி இல்லாமலும், கருமங்களைச் செய்வதே லக்ஷி யம். இவ்வாறு செய்ய முடியும் என்று சிலருக்கு நம்ப வும் முடியவில்லை! இறைவன் இச்சையுடன் ஒன்றான நிலைக்கு வரும் வரையில், பயனைக் கருதாமலும் சுயநல மும் 'நான்' என்னும் உணர்ச்சியும் இல்லாமல் ஒருவ னால் கருமங்களைச் செய்ய முடியாது. அதுவரையிலும், நாம் நல்ல எண்ணத்துடன், கடவுள் கையில் ஒரு ஆயுதமாகவே நினைத்து, நமது நலனைக் கருதாமல், மற்றவர் நன்மையைக் கருதிக் கருமங்கள் செய்யவேண் டும். ஆனால் இவை விடுதலை பெறுவதற்கான கிரியை கள் ஆகாது! கர்மத்திலிருந்து நாம் முற்றிலும் விடு படாமல் இருப்பதால், அது நம்மைத் திருப்பித் தாக்க வும் செய்யும். அதனால், கருமங்களை இறைவனுக்குப் பூஜை செய்யும் மலர்களாக விவேகமுள்ளவன் அர்ப் பணம் செய்கிறான். அப்படிச் செய்யும்போது கட்டுப் பட்ட நிலை அறுக்கப்படுகிறது. இவ்வாறு 'அர்ப் பணம்' செய்யும்போது, கபடமில்லாமல் உண்மை யாகவேதான் செய்கிறோம் என்று நாம் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? பாபச் செயல்களைச்

செய்துவிட்டு, இவைகளையும் கடவுளுக்கு 'அர்ப்பணம்' செய்து விட்டதாக நினைத்துக்கொள்ள, இவ்வேதாந்தக் கருத்தையும் தவருக உபயோகிக்க நேரிடும். நாம் செய்த வினைப்பயன் நம்மை எதிர்க்கும்போது தான், நமது உண்மையான நிலை பரிசோதிக்கப்படுகிறது. எது நேர்ந்தாலும், சாந்தமாகவும் மகிழ்ச்சியுடனும் பக்தியோடும் இது 'கடவுள் இச்சை' என்று வரவேற்கத் தயாராக இருக்கிறேமா? அவ்வாறு தயாராக இருந்தால் நாம் சிறிதளவு வெற்றி யடைந்து விட்டோம். நாம் செய்யும் கிரியைகளை ஈச்வரார்ப்பணம் செய்துவிட்டு, அதைக் குறித்து நினைக்கவோ, தற்பெருமை கொள்ளவோ, நாம் இதைச் செய்துவிட்டோம் என்ற கர்வமோ சிறிதும் அடையக் கூடாது. அப்போதுதான் நாம் அர்ப்பணம் செய்தவை உண்மையானதும், மனமுவந்து செய்தவையும் ஆகும். விடுதலையின் வழியே நெருங்கி விட்டோம் என்றும் கருதலாம்.

இவ்வாருன ஸாதனையில் வெற்றி பெற்ருல், நாம் இருமைகளை (நன்மை-தீமை, சுகம்-துக்கம், விருப்பு-வெறுப்பு முதலியனவை)களைத் தாண்டிச் சென்றுவிட்டவர்கள் ஆவோம். எது நேர்ந்தாலும், இது கடவுள் கிருபை என்று நினைத்து, வரவேர்ப்போம். நம் வாழ்வில் துன்பமுள்ளதாக எதுவும் இருக்காது. கஷ்டம், அவமானம், தோல்வி, இவைகளும் கடவுள் கிருபையால் ஏற்பட்டன என்று அறிவோம். நாம் எதை உபசரித்து வரவழைத்தோமோ அது எப்போதும் இன்பமாகத் தோன்றும். மலைகளில் ஏறிச் செல்பவனுக்கு அதிகமான குளிர், பசி ஏறும்போது உண்டா

கும் கஷ்டம் எல்லாமும் இன்பமாகவே தோன்றும். ஏனெனில், அவன் அவைகளை மனமுவந்து வரவேற்கிறான்! துன்பம் இன்பமாக மாறிவிட்டது. (Plesure is of Course taken in our stide). அப்போது நமக்குத் துன்பம் என்பது எங்கே? இதனால்தான், பக்தன் எப்போதும் சந்தோஷமாகவே இருக்கிறான் என்று கூறப்படுகிறது. அவன் இருமைகளை தாண்டிச் சென்று மாயையும் கடந்து விட்டான்.

சூத்திரம் 49.

"வேதானபி ஸன்யஸ்யதி கேவலமவிச்சின்னானு ராகம் லபதே"

கருத்து:—எவன் வேதங்களையும் தியாகம் செய்துவிட்டு, இடைவிடாத பக்தியைப் பெற்று விட்டானோ அவன்.

அடிக்கடி இக் கருத்தைக் கூறும்போது, முன் காலத்தில் வேதங்களிலும், அவற்றில் கூறியுள்ள உரைகளிலும் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பது தெரிகிறது. எவராகிலும் வேதங்களை எதிர்த்தால், அவனை சமய பேதமுள்ளவனாக நினைத்து சமூகத்திலிருந்தே தள்ளி வைத்து விட்டனர். வேதக் கிரியைகளையும், சடங்குகளையும் செய்யத் தவறியவனைக் கண்டனம் செய்தனர். அதற்காகவேதான் இரண்டாவது பிரிவையும் சேர்த்துக் கூறப்பட்டது.

எவன் மாயையை வெல்கிறான்?

வேதங்களையும் எவன் கைவிட்டானோ அவன். "த்ரைகுண்ய விஷயா வேதா". (வேதங்களில் முக்குணங்களைப் பற்றியும் சொல்லப்படுகிறது.) என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் கூறியுள்ளார்:

வேருெரு இடத்தில் "குணமயீமம மாயா" (என் மாயை முக்குணங்களால் ஏற்பட்டது) என்றும் சொன்ஞர். இவை இரண்டையும் சேர்த்துப் படிக்கும் போது, முக்குணங்களை (மாயையை)த் தாண்டிச் செல்ல எவன் விரும்புகிருனே, அவன் கட்டாயமாக வேதங்களையும் கடந்து செல்ல வேண்டும். அதைத் தவிர, சுவர்க்கத்தை மாத்திரம் கொடுப்பதாக வேதங்கள் வாக்குறுதி அளிக்கின்றன. பக்தன் இதை விரும்பவில்லை. அவனுக்கு சுவர்க்கம் வேண்டாம், அவனுக்கு வேண்டியதெல்லாம் கடவுளேதான். வேருென்றும் இல்லை. அதனுல் அவன் வேதங்களில் கூறியுள்ள கிரியைகளையும் சடங்குகளையும் செய்யாமல் விட்டுவிடுகிருன்.

வேதக் கிரியைகளையும் சடங்குகளையும் துறந்து விட்டால் மட்டும், ஒருவனுக்கு மோக்ஷம் கிடைத்து விடாது. அது நாசத்தையே விளைவிக்கும். அது, ஒருவன் தன்னுடைய கடமையைச் செய்யாமல், மன்னிக்க முடியாத பாபகரமான அளவுக்கு அசட்டை செய்ததாகவே கருதப்படும். உண்மையைப் பார்க்குமிடத்து, வேதங்களின் கட்டளைகளைப் பக்தன் தியாகம் செய்து விடவில்லை. அவனுடைய மனது முழுவதும் இறைவனிடத்திலேயே லயித்து, நீங்காத பக்தி இருப்பதால், உலகை ஒட்டிய கடமைகள் எல்லாம் தாஞகவே நீங்கி விடுகின்றன. இதை முக்கியமாக கவனிக்க வேண்டும். பக்தன் உலக ரீதியான கடமைகளிலிருந்து தப்பிப் போய்விடவில்லை. ஆனுல், எல்லாவற்றிலும் முக்கியமாக, இறைவனிடம் நீங்காத நினைவுகொண்டு நிலைத்து நிற்கும் உண்மை ஸாதனையில் ஈடுபட்டு விடுகிருன்.

ஸூத்திரம் 50.

" ஸதரதி ஸதரதி ஸலோகாம் ஸ்தாரயதி "

கருத்து :—அவன் கடந்து செல்கிறுன், அவன் கடந்து செல்கிறுன், உலகத்தோரையும், தாண்டிச் செல்ல உதவி செய்கிறுன்.

அவனே மாயையைக் கடந்து விடுகிறுன். இதை இரண்டாவது தடவையாகவும் சொல்வது, உறுதியாகக் கூறுவதாகும். சந்தேகத்துக்கு இடமில்லாமல், இவ்வகையான பக்தன் மாயையை வென்றுவிடுகிறுன்.

ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து செல்லும் பக்தர்களில் பலவிதம் உண்டு. சிலர் கஷ்டப்பட்டு அக்கரைச் சேருகின்றனர். அவ்வாறு அவர்கள் சேர்ந்துவிட்டால் அது ஒரு பெரிய ஸாதனேயேயாகும்.

மூழ்கித் தடுமாறும் ஆத்மாக்களில் ஒன்று அல்லது இருவகைக் கரையேற்றம் வல்லமை யுடையவர்களும் உண்டு.

இன்னும், படகில் ஏற்றிச் செல்வதைப் போல், சில மக்களேயும் சேர்த்துக் கொண்டு அக்கரைக்கு எடுத்துச் செல்பவரும் உண்டு. அவர்கள் பெரிய சமய ஆசாரியர் ஆவர்.

மற்றும் சிலர், அனேக மக்களே ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்றி விடுவார்கள். இவர்கள், கடலில் செல்லும் கப்பலேப் போன்றவர். இதற்கு உதாரணமாக, அவதார புருஷராகிய ஸ்ரீ ராமரையும், ஸ்ரீ கிருஷ்ணனேயும் சொல்லலாம்.

" ஸதரதி " என்று மறுபடியும் சொல்லுவது, இவ்வகைப் பிரிவையும் குறிப்பதாகும். ஆனல், இறை

வனைக் கண்டு அறியும் நிலையாகிய அக்கரைக்குச் செல்வதற்குப் பாடுபடும் ஒரு பக்தனும், மற்றவர்களில் சில பேர்களையாகிலும் ஸம்ஸார ஸாகரத்தைக் கடக்க மறைமுகமாக உதவி செய்கிறான். அவனுடைய வாழ்க்கை ஓர் உதாரணமாக அமைந்து, மற்றவர்களுக்கும் அது ஊக்கத்தை அளித்து, அவர்களும் பக்தி நெறியைக் கடைப்பிடிக்கின்றனர். மற்றவர்களுடைய மெய்ஞ்ஞான வளர்ச்சிக்கு, பக்தன் நேரடியாக ஒன்றும் செய்யாவிட்டாலும், இவனுடைய சக்தியின் மூலமாக அவர்களும் முன்னேறுகின்றனர். சாதாரண ஒரு பக்தனும் மக்களுக்குப் பெரும் நன்மை செய்பவராவர்.

சூத்திரம் 51.

“ அனிர் வசனீயம் ப்ரேம ஸ்வரூபம் ”

கருத்து :—தெய்வீகக் காதலின் தன்மையை (சொல்லால்) விவரித்துக் கூற முடியாது.

நாம் உலகத்திலுள்ள ஒரு பொருளை எவ்வாறு வர்ணிக்கிறோம்? இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அல்லது வித்தியாசத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறோம். ஒரு வத்துவையாவது, ஒரு அனுபவத்தையாவது, நமக்குத் தெரிந்த மற்றொரு வத்து அல்லது அனுபவத்துடன் உவமைப்படுத்தி உரைக்கிறோம். தெய்வீகக் காதலை எத்துடன் ஒப்பிட்டுக் கூறமுடியும்? இவ்வுலகில் தெய்வீகக் காதலுக்கு இணையாக எந்த உணர்ச்சியோ, அனுபவமோ கிடையாது.

அடுத்த சூத்திரம் சொல்வதைப் போல, இறைவனிடம் மெய்யன்பை அனுபவித்தவர்கள், கல்கண்டின்

இனிமையை சுவைத்த ஊமையன் நிலையில் இருப்பதாகவே உணர்ந்தனர். ஆனாலும், தெய்வீகக் காதலை அனுபவித்தவர்களால், அந்த அனுபவத்தை அடக்கி வைத்துக் கொள்ள முடியவில்லை. இறையன்பின் பெருமையை உலகத்துக்கும் அறிவிக்க ஆவல் கொண்டனர். ஆனால், இது ஆச்சரியமான ஒரு கூற்று. தெய்வீகக் காதலை விவரித்துச் சொல்ல முடியாது என்று ஒருபுறம் கூறப்படுகிறது. இருந்தாலும் இவ்வகை தெய்வீகக் காதலைப்பற்றி அனேக ரிஷிகளும் ஞானிகளும் முடிவில்லாமல் பேசியும், அதன் பெருமையைப் பாடியும் இருக்கின்றனர்.

இப்பெரியோர், அதற்கு உபமானமாக, எவ்வளவு சொல்ல முடியுமோ அவ்வளவையும் சொல்ல முயற்சித்தார்கள். ஆனால், அவர்களுடைய சொற்களுக்கு தவறான அபிப்ராயம் கொள்கின்றனர். உலகத்தில் வாழும் சாதாரண ஒரு மனிதன், மானிட அன்பின் தன்மையை அறிய வல்லவன் என்று கண்டு கொண்டனர். கணவனும் மனைவியும் ஒற்றுமையாக இருப்பதனால் விளையும் அன்பே உயர்ந்தது. அதனால் "பக்தனும் இறைவனோடு கலந்து கொள்வதும், சுமாருக அதைப் போலுள்ளது" என்று அவர்கள் சொன்னார்கள். அழுக்கடைந்த மனது, உவமானத்தை மட்டும் பிடித்துக் கொண்டு, அதன் லக்ஷியத்தை அடைய மறுக்கிறது. ஒரு உவமையோ, விரிவுரையோ கூறும்போது, உண்மையைச் சுட்டிக் காட்டுவதற்கு மட்டும் தான் அது கையாளப்படுகிறது. எல்லா வகையிலும் இரண்டும் ஒருபோதும் பொருத்தமுள்ளதாகாது.

காம இச்சையால் ஏற்படும் ஒற்றுமை எங்கே? தெய்வீகக் காதல் எங்கே?

இப்படித் தவருக உணர்ந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே, வேறு சில ரிஷிகள் 'நேதி-நேதி' (இதுவல்ல. இதுவல்ல) என்ற எதிர்மறை வார்த்தைகளைக் கையாண்டனர்.

இந்த நிலையை அடுத்த சூத்திரம் நன்ருக விளக்கிக் கூறியுள்ளது.

சூத்திரம் 52.

"மூகாஸ் வாதனவத்."

கருத்து:—ஊமையன் ருசியை அனுபவித்ததற்கு ஒப்பானது.

ஊமையன் ருசியுள்ள உணவை சாப்பிட்டு விட்டு, மிகவும் சந்தோஷமாக இருக்கிருன். அது எவ்வளவு இனிமையானது என்பதை, நீங்களும் அனுபவிக்க வேண்டும் என்பது அவன் விருப்பம். ஆனுல், அவன் ஊமை. அவன் எண்ணங்களை அவனுல் வெளியிட முடியவில்லை.

ஆத்மானுபூதி பெற்ற ஞானியின் நிலையும் இவ்வகையானது. அவ பூர்ணமான பேரின்பத்தை அனுபவிப்பவர். ஆனுல், அவ்வின்பத்தை வெளியிட முடியாது. சில வரம்புக்கு உட்பட்டு, அதற்குச் சம்பந்தமான கருத்துக்களை மட்டிலும் சில வார்த்தைகளால் உணர்த்த முடியும். எல்லாவற்றிற்கும் மேலான அனுபவத்தை உணர்த்த, வார்த்தைகள் சக்தியில்லாதவை.

பாம்பிற்கும் தன்னுடைய தலையை விழுங்க முடியாது. அதனால் வெட்கம் அடைந்து, "வார்த்தையும் மனமும் அதை உணர்ந்து வெளிப்படுத்த முடியாமல், அவ் விடத்திலிருந்து திரும்பி விடுகிறது."

மௌனமே, அத்வைத பாவனையின் பாஷை; பரிபூர்ண நிலையின் பாஷையும் மௌனம்தான். வாயைத் திறந்த போதே துவைதம் வந்துவிட்டது. இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்ட பக்தனுக்கும் துவைத பாவனை (இரண்டு உதடுகளும் பிரிவது) தெரியாது. அதனால் தெய்வீகக் காதலும், இறைவன் தரிசனம் பெற்ற தெய்வீக அனுபவமும் (இரண்டும் ஒரே நிலையானதால்) வர்ணிக்க முடியாதவை.

ருசியுள்ள உணவு அருந்திய ஊமையனைப் பாருங்கள். அவன் முகத்திலும் கண்களிலும், ஆனந்தமும் பிரகாசமும் ஒளிருவதைக் காணலாம். அவன் முகக் குறி எதை உணர்த்துகிறது என்பதை உரைக்க முடியாது! ஆனால், அவன் சந்தோஷம் அடைந்தான் என்பது மட்டும் உங்களுக்குத் தெரியும். இன்பத்தை ஊட்டிய உணவை ருசிபார்த்தான் என்பதும் தெரியும். பித்த நீரால் வயிற்றுக் கோளாறு இல்லாதிருந்தால், நீங்களும் அவ் வுணவை உண்டு அதே இன்பத்தை அனுபவிப்பீர்கள். அதைப் போலவே, இறைவன் தரிசனம் பெற்ற பெரியோர்களைப் பார்க்கும்போது, அவர்கள் எந்த நிலையிலும் கலங்காமலும் சந்தோஷமாகவும் இருப்பதற்குத் தகுந்த ஒரு அனுபவத்தைப் பெற்றனர் என்று நீங்கள் கண்டு கொள்ளலாம். அதே அனுபவத்தை வர்ணித்துக் கூறவோ, உங்களுக்கு உணர்த்தவோ அவர்களால் முடியாது. ஆனால் அவர்கள்

அதற்குத் தகுந்த பாதையைக் காண்பிப்பார்கள். "இறைவனிடம் பக்தியைப் பழகிக்கொள்" என்று சொல்வார்கள். நீங்களும் அவ்வாறே செய்தால், (பெரியோர்களின் உயர்ந்த நிலை உங்களுக்கும் ஊக்கம் அளித்து அப்படிச் செய்யத் தூண்டுகிறது.) அதே பேரின்பத்தை நீங்களும் அனுபவிப்பீர்கள்.

சூத்திரம் 53.

"ப்ரகாசதே க்வாபி பாத்ர꞉"

கருத்து :—சில பாத்திரங்களில் அது பிரகாசிக்கின்றது.

வார்த்தைகளால் விவரிக்க முடியாத பக்தியின் அனுபவம் அல்லது இறைவனுடன் தொடர்பு கொண்ட நிலை, அறிவுக்கும் பேச்சுக்கும் அப்பாலுள்ளது என்ற உண்மையை எப்போது நன்ருக அறிந்தோமோ, அப்போதே "பரிபூரண நிலையை அடைவதற்கு ஆயிரத்தில் ஒருவர் முயற்சி செய்வார். அப்படி முயற்சி செய்பவர்களிலும் ஆயிரத்தில் ஒருவர் வெற்றி பெறுவார்கள்" என்று எதற்காகச் சொல்லப்பட்டது என்பது தெரியும். போராட்டம் மிகவும் சிரமமானது. பாதையும் முள் நிறைந்தது. அனேக ஆபத்துக்களும் இருக்கின்றன. விவரித்துக் கூற முடியாததாக இருந்தாலும், கையைப் பிடித்து வழியைக் காண்பிக்க மட்டும் இயலும். ஒரு புதிய இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லக்கூடிய பெரியோர்களை அனுசரித்து நாம் கண்ணை மூடிக்கொண்டு போகவேண்டும். இறைவனிடம் பக்தன் கபடமில்லாமல் பூரண சரணுகதி அடைந்தால், பாதை கரடு முரடில்லாமல், நடந்து செல்வதற்கு சுலபமாகிவிடும். ஆனல், அப்படிப்பட்ட

சரணுகதி செய்வது மிகவும் கடினம். குருவிடத்தில் திடமான நம்பிக்கையும் பக்தியும் இருந்தால், பாதையும் நடந்து செல்வுதற்கு சுலபமாகிவிடும். ஆனுல் திடமில்லாத மனது அதைச் செய்ய மறுத்து விடுகிறது.

அதனுல்தான், உன்னதமான பக்தியின் ஒளி எங்கேயாவது ஒரு சமயம் "சில (அபூர்வமான) பாத்திரத்தில்'' பிரகாசிக்கின்றது. உபநிஷத்து உரையாகிய "யாமைவைஷ வ்ருணுதே தேன லப்யா'' என்னும் வார்த்தை கடினமாகத் தோன்றுகிறது (ஆத்மன், அதை அறிந்தவனைத் தேர்ந்து எடுக்கின்றது). அறிவு மூலம் வாதித்து ஆத்மாவைத் தெரிந்து கொள்ள முடியாது. தெய்வீக நீதி கொடுங் கோன்மையானதோ நியாயமற்றதோ அல்ல. தமது அறிவுக்கு அது எட்டவில்லை. ஆகையால் அது ஆச்சரியமாகவும் மறை பொருளாகவும் தோன்றுகிறது.

"ப்ரகாசதே'' என்பது கவனிக்க வேண்டிய ஒரு வார்த்தை. பக்தியானது பாத்திரத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது. (எந்த இதயத்தில் காணப்படுகிறதோ அந்த இதயத்தை). பக்தன் தன்னுடைய பக்தியை வெளி வேஷத்தைப்போட்டு விளம்பரப் படுத்த வேண்டியதில்லை. அவன் உள்ளத்திலிருந்து பக்தி ஒளி வீசும். நாம் அதைக்கண்டு கொள்ளலாம். அது அவனுடைய மேன்மையானதும் ஊக்கமளிப்பதுமான வார்த்தைகளின் மூலமாகவும் செய்கைகள் மூலமாகவும் வெளியே தோன்றும். தன்னுடைய உண்மையான இயற்கை நிலையை வெளியே தெரிவிக்காமல் இதயத்தில் அந்தரங்கமான பக்தி யுடையவர்கள் போல் பாசாங்கு செய்யும் வேஷதாரிகளிலிருந்து, இச்

சூத்திரம் நம்மைக்காத்துக் கொள்கிறது. "ப்ரகாசதே" தானுகவே ஒளி வீசும். தங்கள் மூலமாகப் பிரகாசிப் பதை அவர்களால் தடுக்கவும் முடியாது. அவ்வாறு இல்லையென்றுல் அவனை நீக்கிவிட வேண்டும். வார்த்தைகளும் செயல்களும் தெய்வ நெறிக்கு மாறுக இருந்தால் அவனை நீக்கிவிட வேண்டியதுதான்.

சூத்திரம் 54.

"குணரஹிதம் காமனு ரஹிதம் ப்ரதிக்ஷண
வர்தமான மவிச்சின்னம் ஸூக்ஷ்மதர மனுபவரூபம்."

கருத்து :—(ஏனெனில் அது) குணங்கள் எதுவும் இல்லா மலும், ஆசையற்றதும், ஒவ்வொரு நிமிஷத்திலும் வளரக்கூடியதும், இடைவிடாமல் தொடர்ச்சியாக இருப்பதும், மிகவும் ஸூக்ஷ்மமானதும், உடனே நேராக அனுபவிக்கக் கூடியதும் ஆகும்.

களங்கமற்ற பக்தி அல்லது பரபக்தி, முக்குணங் களுக்கும் (ஸத்வம், ரஜஸம், தமஸம்) அப்பாற்பட் டது. நாம் எல்லோரும் இம்முக்குணங்களுக்கும் உட் பட்டவர்கள். நமது பாதை ஸத்வகுணத்தைத் தழு வியது. ஆனுலும் ஸத்வகுணத்தையும் தாண்டிச் செல்லா விட்டால் நாம் பராபக்தியை அனுபவிக்க முடியாது. ஸத்வம், இறைவன் கிருபை நமக்கு கிடைக்கச் செய்யும். கடவுள் கிருபைதான் நம்மை ஸத்வகுணத்திற்கு அப்பாலும் ஏற்றிச்செல்லும். எவன் ஸத்வகுணமுள்ளவனுக இருக்கிருனே அவனே பூரண சரணுகதி செய்து, விடுதலை பெறுவதற்கு கடவுள் கிருபையை எதிர்நோக்கி யிருப்பான். குணு தீதர்களைச் சிருஷ்டி செய்வதில், இயற்கை அதிக சிக்க

னத்தைக் கையாளுகிறது. அவர்கள் சில இடங்களில் சில வேளைகளில் காணப்படுவார்கள்.

ஆசைக்கு நேர் எதிரானது பக்தி என்று திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. இது காமம் அல்லது ஆசைக்கு முற்றும் முரணானது என்றும், இறைவன் பரிபூரணமும், எல்லையற்ற தன்மையும், உயர்ந்த நிலையிலும் இருப்பவன் என்னும் அறிவினால் ஏற்படுவது. பராபக்தியின் மூலமாக இறைவனை அடைந்த போது, எல்லா ஆசைகளும் தானாகவே நிறைவேறுகின்றன என்பதை அவன் தெரிந்து கொள்வான். அதாவது ஆசைகள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இந்திரியங்களைத் திருப்தி செய்யாமல் 'பட்டினி' போடுவதால் ஆசைகள் குறைந்து விடும். ஏனென்றால் மெய்ஞான வேட்கை ஏற்பட்டு விட்டால் ஆசைகளைப் பூர்த்தி செய்ய மனம் ஒப்பாது. பரபக்தி அடைந்ததும் அல்லது மெய்ப்பொருளைக் கண்டதும் அவை மறைந்து விடுகின்றன. அதனால்தான் இந்நிலையை அடைந்தவர் மிகவும் அரிது என்று கூறப்படுகிறது.

"ப்ரதிக்ஷண வந்தமானம்" என்னும் வார்த்தை, வெகு நாட்களாக பக்தராக இருந்தும், கடவுள் அருள் செய்யவில்லை என்று சொல்பவர்களின் கபடமான தன்மையை வெளியே காட்டி விடுகிறது. ஒவ்வொரு நிமிஷமும் பக்தி அதிகமாக வளரும். அவ்வகை மக்களின் நிலையும் இதைப்போல் ஆகுமா?

இவர்கள் அதிருப்தியோடு முணு முணுக்கும் போதே, கடவுளிடத்தில் இவர்களுக்கு உண்மையான பக்தி இல்லை என்பதைக் காட்டுவதுமன்றி, அவர்களுக்கு இருந்த சிறிது பக்தியும் மறைந்து விட்டது!

உண்மை அன்பு எதையும் கேட்காது. ஒவ்வொரு நிமிஷமும் வளர்ந்து கொண்டே போகும். அதனால், எந்தப் பாத்திரத்தில் இறங்கியுள்ளதோ அதன் மூலமாக அது கண்டிப்பாக பிரகாசிக்கும்.

இழுப்பு வலியின் அறிகுறிகளையும் சாதாரணமாக பக்தி என்று தவறாக நினைப்பது போல் அல்ல. பக்தனுடைய வாழ்க்கையில் ஒரு நிமிஷமாவது பக்தி புலப்படாமல் இருக்காது. பொதுக்கூட்டங்களில் வந்து தகுந்த வேளையில் தன்னுடைய பக்தியை வெளிப்படுத்தி "ஒவ்வொரு நாளும் இக்கலையில் முன்னேறிச் செல்லும்" வரையிலும், தெய்வ நெறிக்கு மாறாக வாழ்க்கை நடத்தும் பக்தனிடம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். பக்தி இடைவிடாமல் தொடர்ந்து வளரக்கூடியது.

"ஸூக்ஷ்மதரம்" என்பது இதை இன்னும் உறுதிப்படுத்துகின்றது. பக்தனுடைய உள்ளத்தில், தெய்வீகக் காதல் மிகவும் நுட்பமான ஒரு நிலை. பக்திக் குறிகள் அவன் உடலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவைகளுக்கும் பக்திக்கும் சிறிதும் சம்பந்தமில்லை. அதை தனியாக வெளியே நிரூபிக்கவும் முடியாது. ஆனாலும் முன்பு உரைத்ததுபோல், ஒரு பக்தனைக் காணும்போது தவறாக நினைக்கவும் கூடாது.

அடுத்தவிவரணம், ஸாதகனுக்கு ஒருகடுமையான எச்சரிக்கையாகும். பக்தராகிய நாம், நமது 'பக்தியை' விளம்பரப்படுத்தி நாமும் ஏமாற்றம் அடையாமல் பிறரையும் ஏமாற்றக் கூடாது. உண்மையான பக்தி அனுபவ நிலையில் இருப்பது. அது உள்ளுணர்வு.

இறைவனுடைய சிறந்த பக்தர்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த அனுபவமும் இருவகையானது. கடவுளை விட்டு வேருனவராகவும் தனிப்பட்ட உணர்ச்சியும் இருக்கும்போது, விராகத்தால் தாங்க முடியாத துயரம் வந்து தவிக்கின்றனர். தங்களுக்கு அனேக குறைகள் இருப்பதாகவும், ஒன்றும் தெரியாதவர்கள் என்றும், மிகுந்த துயரம் உள்ளவர்களாகவும் நினைத்துக் கதறுகின்றனர். இறைவனேடு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற தீவிரமான விருப்பம், தன்னுணர்ச்சியைச் சாம்பலாக்கி, இறைவனைக் கண்ட அக உணவாகிய அனுபவத்தைப் பெறச்செய்கிறது. 'நான்' எனும் எண்ணம் சிறிதும் இல்லாததால், அந்த அனுபவமும் தெய்வீகத்தன்மை வாய்ந்ததே ஆகும். அப்போது, கடவுளே உண்மை என்றும், பரிபூரணமாய் எல்லாம் அறிந்து ஆனந்தமயமா யிருப்பவர் என்றும் அவர்களுக்குத் தெரியும். இறைவனே பரிபூரணமானவர் அல்லது 'நான்' இல்லை! 'நான்' என்ற உணர்ச்சி இருக்கும்போது விராஹம் ஏற்படுகிறது. 'நான்' மறைந்ததும், கடவுள் ஒருவரே உறைவார்.

"அவருடைய பூரணநிலை எனது பண்பு ஆகாது!" உலகத்தை ஒட்டிய சாதாரண நினைவு வரும்போது, திரும்பவும் விராஹம் ஏற்படுகின்றது. அவன் வாழ் நாட்களில் ஓய்வு எடுத்துக்கொள்ள ஒரு நிமிஷம் கூடக் கிடைக்காது. அப்படி இருந்தால் அவன் பக்தன் அல்ல. (a relitous pedlar)

ஸூத்திரம் 55.

"ததப்ராப்ய ததேவாவ லோகயதி ததேவச்ரு
ணோதி ததேவ பாஷயதி ததேவ சிந்தயதி."

கருத்து:—அதைப் பெற்றதும், ஒருவன் அதையே பார்த்தும், கேட்டும் அதைக்குறித்தே பேசியும் அதையே நினைக்கவும் செய்கிறான்.

இதுதான் நிஷ்டையில் இருப்பவனுடைய தனிப்பட்ட குணம். இறைவனைக்கண்டு அறிய இதுவே முதல் நிபந்தனையாகும். இதயத் தூய்மையையும் உன்னதமான உணர்ச்சிகளையும், கட்டுக்கடங்கிய மனதையும், இந்திரிய ஜயத்தையும் இது குறிப்பாகக் காட்டுகிறது. நமது அந்தராத்மா இந்நிலையில் இருந்தால் தான், நமது மனமும் வேறொன்றையும் விரும்பாமல் கடவுளையே வேண்டி நிற்கும். இறைவனிடத்தில் ஏற்படும் பேரன்பானது, வேறு எல்லாவற்றையும் அழித்து விடும் தெய்வீகக் காதலாகும். அது உண்மையாக இதயத்தில் புகுந்து விட்டால், மற்றெல்லாப் பற்றுகளையும் எரித்து விடும். அவ்வாறான தெய்வீகக் காதலே, மட்டமான மனித குணத்தை ஒழித்து, இறைவன் ஒளியை வீசச்செய்கிறது. இதற்காகவே நிஷ்டையின் அவசியத்தையும் வற்புறுத்திச் சொல்லப்படுகிறது.

நாம் அன்பு செலுத்தும் பொருளைப் பார்க்கும் போது, மகிழ்ச்சி அடைகிறோம். அன்பு செலுத்தாத பொருளைப் பார்ப்பதற்குச்சிறிதும் விருப்பம் ஏற்படுவதில்லை. பக்தன் எப்போதும் கடவுளைக் காண்பதற்குத்தான் ஆசைப்படுகிறான். பக்தியின் பல விதங்களை

யும், விபூதி யோகத்தையும் பழகிக்கொள்வான். நாம ரூபங்களைப் பொருட்படுத்தாமல், எல்லாப்பிராணி களிலும் மறைந்திருக்கும் தெய்வாம்சத்தையே காண் பான். இறைவனைத் தவிர வேறு எதையும் பார்க்கக் கூடாது என்னும் பக்தனுடைய மேன்மையான காதல் உணர்ச்சியை, பில்வமங்கள் கதை அழகாக சித்தரித் துக் காட்டுகிறது. பில்வமங்கள் இறைவன் தரிசனம் பெற்றதும், உலகப்பொருள்களைக் காணவே கூடாது என்று தனது இருகண்களையும் தோண்டி எடுத்து விட்டார். இது பயித்தியக்காரச் செயல் அல்ல. ஆனால் அது ஒருவனை வீழ்ச்சி அடையாமல் காத்துக் கொள்கிறது. பகைவன் எவ்வளவு வதை செய்தா லும், தாய் நாட்டின் ரகசியங்களைத் தெரிவிக்கலாகாது என்று தங்கள் நாக்குகளை அறுத்துக்கொண்ட தேச பக்தர்களும் உண்டு.

பக்தன் அதையே விரும்பிக் கேட்கிறான். வீண் வார்த்தையும் உலகசம்பந்தமான விஷயங்களும் பேசுவ தில்லை. இறைவன் லீலைகளை எங்கே பாடுகின்றனரோ அங்கும், தெய்வீகக் காதலைக் குறித்து எங்கே கூடிப் பேசுகின்றனரோ அவ்விடத்தும் அவன் விரைந்து செல்வான்.

அவன் அதைப்பற்றியே எப்போதும் பேசுவான். அதையே நினைத்திருப்பான். ஏனென்றால் அதுவே மெய்ப்பொருள், மற்றவை எல்லாம் பொய் என்பதை அவன் உணர்ந்து விட்டான். வெறும் மாயையாகிய காட்சிக்காக ஏன் பிராணனை வீணாக்க வேண்டும்? மனத்தை எதற்காக நிழலுக்குப்பின் செலுத்த வேண்

டும்? அவன் முழு மனதுடன் கடவுளையே நேசிக்கிருன். முழுமனதுடன் இறைவனையே அடைய வேண்டுமென்றும் ஆசைப்படுகிருன். கருமி பணத்தைத் தவிர வேறு எதையும் சட்டை செய்வதில்லையோ, அதைப்போலவே பக்தனும் வேறு எதையும் பொருட்படுத்துவதில்லை. ஆனல் மெய்ப்பொருளிடத்து வைத்த ஆசை மிகவும் சிறந்ததும் வீடுதலைக்கு வழி காட்டும் ஆனந்தமான பாதையும் ஆகும்.

சூத்திரம் 56.

"கௌணீ த்ரிதா குணபேதா தார்த்த திபே தாத்வா."

கருத்து:—நடுத்தரமான பக்தி, குணபேதங்களுக்கும் அல்லது (ஆர்த்த, ஜிக்ஞாஸு, அர்த்தார்த்தி, ஞானி) முதலிய வேறுபாடுகளுக்கும் தக்கவாறு மூவகைப்படும்.

பரா பக்தி அல்லது மேன்மையான பக்தியைக் குறித்து இதுவரையிலும் சொல்லப்பட்டது. பர பக்தனே ஞானி அல்லது யோகிகளுள் சிறந்தவன். இவன் உலகத்தில் தோன்றிய கடவுளேயன்றி ஒரு மனிதன் அல்ல. அதுவே லக்ஷியம் அல்லது பரிபூரண நிலை.

ஆனல், அதற்கு அடுத்த இரண்டாவது படியான பக்தி முக்குணங்களின் (ஸத்வம், ராஜஸம், தாமஸம்) ஆதிக்கத்துக்கும் உட்பட்டது. இது மூன்று வகைப்படும்—ஸாத்வீகம், ராஜஸீகம், தாமஸீகம்—இவை மூன்றுக்கும் வித்தியாசம் உண்டு.

தாமஸீக பக்தன், பிறருக்குத் துன்பம் விளைவிப்பதற்காக உபாசனை அல்லது இரண்டாவது வகையான பக்தியைப் பழகிக் கொள்கிருன். இவன் பிசாசுக்குச்

கிடன். கீழ்த்தரமான பக்தனுடைய உதாரணத்தைச் சொல்வது எதற்காக வென்றால், துரோகச் செயல் நிறைவேறுவதற்கும் இவன் உபாஸனையைக் கையாளு கிறான். (ஆனால், ஹிம்சித்தும் சட்ட விரோதமான வழிகளாலும் நிறைவேற்றுவதில்லை.)

ராஜஸீக பக்தன், தனக்கு ஏதாவது ஒரு லாபத்தைக் கருதியே உபாஸனை செய்கிறான். பரபக்தனுக்கு எவ்விதமான ஆசையும் கிடையாது. இதற்கு மாறாக ராஜஸீக பக்தனுக்கு ஆசைகள் இருக்கின்றன. ஆனால், அவ் வாசைகளை நிறைவேற்ற, தவறான வழிகளில் செல்லாமல், கடவுளிடத்தில் பிரார்த்தனை செய்கிறான். தகுந்த காலத்தில் இப் பக்தியும் ஸாத்வீகமாக மாறி விடும். இவனுடைய இச்சைகளை கடவுள் பூர்த்தி செய்தவுடன், ஆசைகளைப் பூர்த்தி செய்வதால் நிரந்தர மான இன்பம் கிடைக்காது என்றும், அவ்வாசைகளை அகற்றி இறைவன் தரிசனம் கிடைத்த போதுதான் பேரின்பமும் கிடைக்கும் என்பதையும் உணர்வான்.

ஸாத்வீக பக்தன் இறைவனிடம் வைத்த அன்பு எவ்விதமான நோக்கத்துடனும் செய்ததல்ல. கடவுளிடம் அன்பு செலுத்தாமல் அவனால் இருக்கவும் முடியாது! அது அவன் இயற்கை குணம். அதனால் தன்னலம் அல்லது மாசு என்னும் மூடியால் அவனுடைய பக்தி மறைக்கப் படுவதில்லை. அவன் பரோக்ஷ ஞானி. சாஸ்திரங்களைப் படித்ததாலும், குரு உபதேசத்தாலும், ஒருவனிடம் உறையும் அந்தராத்மா இறைவனே என்ற திடமான நம்பிக்கை இவனுக்கு ஏற்பட்டு விடு கிறது. நாளடைவில் தகுந்த தருணத்தில் பரா பக்தி

அல்லது அபரோக்ஷ ஞானம் அல்லது நேராக உடனடியான அனுபவத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

நடுத்தரமான பக்தியில் வேறொரு பிரிவும் உண்டு. அவை ஆர்த்தா, ஜிக்ஞாஸு, ஆர்த்தார்த்தி, ஞானி என்பன. ஆர்த்த பக்தனுக்கு துன்பத்திலிருந்து மீள வேண்டும் என்ற விருப்பம். அர்த்தார்த்தி பக்தனுக்கு செல்வம் வேண்டும். இவர்கள் தங்களுடைய ஆசை நிறைவேற கடவுளை நாடிச்செல்கின்றனர். ஜிக்ஞாஸு, இறைவனிட மிருந்து மெய்ஞ்ஞானத்தைக் கேட்கிறான். ஞானி என்பவன் அறிவு பெற்றவன். அதனால் இந்த நால்வகை பக்தர்களில் இவனே மேலானவன்.

சூத்திரம் 57.

"உத்தரஸ் மாதுத்தரஸ்மாத் பூர்வ பூர்வா ச்ரேயாய பவதி."

கருத்து:—முந்திய ஒவ்வொன்றும், அதை அடுத்துப் பின்னால் வருவதைவிட மேலானது.

ஸாத்வீகம், ராஜஸீகம், தாமஸீகம் எனும் மூவகை பக்தியில், ஸாத்வீகம் ராஜஸீகத்தை விடவும், ராஜஸீகம் தாமஸீகத்தை விடவும் மேன்மையானது.

இதயமும் மனமும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகம் தூய்மை அடைகிறதோ, அவ்வளவுக்கு பக்தியின் தன்மையும் மேன்மை பெறும்.

மற்றொரு பிரிவைக் கவனிக்கும்போது, ஞானி-பக்தனே மேலானவனாகக் கூறப்படுவதால், அந்த நான்கு பிரிவுகளையும் திருப்பி அமைத்துக் கொள்ளவேண்டும். அப்போது, ஞானி முதலாவதாகவும், பிறகு ஜிக்

ஞாஸு, அடுத்தது அர்த்தார்த்தி, கடைசியில் ஆர்த்தா வாகவும் வரும். துன்பம் நீங்குவதற்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்பவன், துன்பம் ஏது என்பதையே மறந்துவிடுகிருன். "துன்பம் என்பது கடவுளுடைய தூதன்: அது மறைந்து நிற்கும் அருள். அது உன்னைக் கடவுள் சிந்தனையில் ஆழ்த்துகின்றது. உன் இதயத்திலும் கருணையைப் புகுத்துகிறது." என்று குருதேவர் கூறுவர். இதைச் சரியாகப் புரிந்து கொண்டவன் துன்பத்தை விட்டு ஓடமாட்டான். அர்த்தார்த்தி ஒரு பொருளைக் குறிப்பாக வேண்டுவதால் இவன் சிறந்தவன். ஏனென்ருல், கடவுளிடம் பிரார்த்தனை செய்து இவன் வேண்டிய பொருளைப் பெற்றுக்கொள்ளும்போது, அதைத் தர்ம விஷயங்களுக்காகப் பயன் படுத்த வழியுண்டு.

"தனுத் தர்ம: தத: ஸுகம்" ஜிக்ஞாஸு

(மெய் ஞானத்தைப் பெற இச்சையுள்ளவன்) இவர்களைவிட மேலானவன். ஞானி எல்லாவர்க்கும் மேலானவன் என்று பகவானே சொல்கிருர்.

சூத்திரம் 58.

"அன்யஸ்மாத் ஸௌலப்யம் பக்தெள."

கருத்து:—மற்றவைகளைவிட பக்தி சுலபமானது.

அன்பு செலுத்துவது எல்லாப் பிராணிகளுக்கும் இயற்கை. அதனுல் ஞானயோகம், ராஜயோகம் முதலான வழிகளைவிட பக்திமார்க்கத்தைக் கடைப்பிடித்தால், சுலபமாகவும், துரிதமாகவும் இறைவன் அருகே போய்விட முடியும்.

ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிக்க, சக்தி வாய்ந்ததும், கூர்மையான புத்தியும் அவசியம்.

ஏனென்றால், அன்னமயம், ப்ராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் ஆகிய கோசங்களின் வழியாக ஊடுருவிச் சென்று, ஆத்மாவை உணர வேண்டுமானால், அக்கோசங்களை நேராகவே "பார்க்க வேண்டும்." இவைகளைப் பற்றிய அறிவு மட்டும் இருந்தால் போதாது.

ராஜயோகத்தில் வெற்றி யடைவது, முமுக்ஷு தயாராக இருக்கிறானா என்பதைப் பொறுத்தது. யம-நியமங்களில் நிலையாக நிற்பதற்கே அனேக பிறவிகள் எடுக்க வேண்டி வரும். யம-நியமங்களைப் பூரணமாக பழகி, சரியான நிலை வருவதற்கு முன்பு, நாம் தியானம் செய்ய முயற்சித்தால், தூக்கம் தான் வரும். அது ஸமாதியல்ல.!

யோக மார்க்கத்தில் தடைகள் வரும்போது நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். யோகம் பழகும் போது தோன்றக்கூடிய மனோதத்துவ அனுபவங்களும் பரிபூரண நிலை அடைவதற்கு இடையூறுகளாகவே கருதப்படுகின்றன. ஆனால் பக்தி மார்க்கம் அன்பே உருவாக உள்ளதால் அதற்குத் தடைகளே கிடையாது. சாதாரணமாக, ஒரு காதலனும் தனக்கு ஏற்படும் இடையூறுகளை தனது காதலின் நேர்மையைச் சோதிப்பவை என்று தான் நினைப்பான். அந்த இடையூறுகளும் அவன் காதலை வளரச்செய்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மேலும் ஒவ்வொரு படியிலும், தடைகளை அகற்றும் கடவுள் கிருபை பக்தனுக்கு ஏராளமாகக் கிடைக்கிறது.

சூத்திரம் 59.

"ப்ரமாணாந்த ரஸ்யான பேக்ஷத்வாத்
ஸ்வயம் ப்ரமாணத்வாத்"

கருத்து:—ஏனென்றால், அது தெளிவாக இருப்பதால் ருசுப்படுத்த வேண்டியதில்லை.

கடவுள் ஒருவர் உண்டு என்று ஞானிகளும் தபசிகளும் தைரியமாகவும் சந்தேகத்துக்கு இடை இல்லாமலும் கூறி விட்டார்கள். நாம் உயிரோடு வாழ்வதை நிரூபிக்க பிரமாணம் எதுவும் கேட்பதில்லையோ அதைப் போலவும், மற்றவர்கள் ஒப்புக்கொண்டாலும் இல்லையானாலும் நமக்கு பசி என்பது எப்படி இருக்கிறதோ அதைப்போலவும், கடவுள் உண்டு என்பது அவர் இருப்பதும் தெளிவான விஷயம்.

அதைப்போலவே, நமது இதயத்தில் பக்தி அல்லது பேரன்பு தழைக்கும்போது, அதை நாம் உணர்வோம். வேறு பிரமாணம் எதுவும் அவசியம் இல்லை.

இவ்வாறு, பக்தி மார்க்கத்தில் லக்ஷியமும் பாதையும் தெளிவானது. இதை அறிய எவ்விதமான கஷ்டமும் ஏற்படாது. ஆனால் வேறு மார்க்கங்களில் சில தடைகள் ஏற்படக்கூடும். ஞானம், அஞ்ஞானம், விபரீதஞானம், பரோக்ஷஞானம், அபரோக்ஷஞானம் இவைகளுக்குள்ள வித்தியாசத்தை நன்றாக புரிந்துகொள்ளவேண்டும். ஜடஸ்மாதிக்கும் சைதன்யஸமாதிக்கும் உள்ள வித்தியாசத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். எது மெய்ப்பொருள், எது பொய் தோற்றம் என்பதை அறிய வேண்டும்.

அதனால், இது வேறு மார்க்கங்களை விட சுலப மானது என்று சொல்லப்பட்டது.

சூத்திரம் 60.

"சாந்திரூபாத் பரமானந்த ரூபாச்ச"

கருத்து:—(ஏனெனில்) அது இயற்கையாகவே சாந்தமாக வும், பேரின்பமாகவும் இருக்கும்.

பாதையையும் லக்ஷியத்தையும் ஒன்றாக இசைத்து மறுபடியும் கூறப்படுகிறது. 'அது' என்பது பக்தியை யும் அதன் லக்ஷியமாகிய கடவுளையும் குறிக்கும்.

இறைவன் சாந்தமும் பேரானந்தமும் உருவான வர். அதனால் எங்கும் உறையும் இறைவனோடு நாம் உறவாட வேண்டும். அதற்காகவே நமது உறவின ரிடத்திலும் நாம் அன்பு செலுத்துபவரிடமும் பேசும் போது அவர்கள் கண்களைப் பார்க்கிறோம். கண்கள் ஜீவாத்மாவின் ஜன்னல்கள். இதற்கு அடுத்த நிலையில் ஆனந்தம் அதிமாகும்போது, நமது கண்களை மூடிக் கொள்கிறோம். தவறாக வெளிப்பொருள்களில் தேடும் இன்பத்தை, நமக்குள்ளே இருப்பதைக்கண்டு கொள் கிறோம். ஆத்மாவுடன் தொடர்பு கொள்வது சாந்தி யையும் இன்பத்தையும் தரும்.

பக்தன் துதி செய்யும் கடவுள் சிலையை உற்று நோக்குகிறான். அப்போது இறைவன் இருப்பதை உணர்வான். அது அவனுக்கு சொல்லொணாத சாந்தி யையும் இன்பத்தையும் தரும். அவன் கண்களை மூடினதும் தன்னுள்ளே அதே சாந்தியையும் இன்பத்-

தையும் அனுபவிக்கிருன். தன்னுள்ளே இறைவனைக் கண்டு விட்டான். எப்போது, கடவுளை தனது இதயத்தில் வைத்து அனுபவித்து உணர்ந்து விட்டானே, அப்போது பக்தனை இறைவன் ஆட்கொண்டு அருள் புரிவார். அவனை விட்டு பிரிந்து போவதில்லை.

இவ்வாறு பக்தன் லக்ஷியத்தை நோக்கி முன்னேறும்போது ஒவ்வொரு படியிலும் அவன் சாந்தியையும் இன்பத்தையும் அனுபவிப்பான். வேறு பிரமாணம் எதுவும் கேட்பதில்லை.

நாம் சரியான வழியில் செல்கிறோம் என்றும், லக்ஷியமும் அருகிலேயே வந்து விட்டது என்றும் நினைத்து திருப்தி அடைகிருன். தகுந்த வேளையில் சேர வேண்டிய இடத்தையும் அடைந்து விடுகிருன். ''காலேன ஆத்மானி விந்ததி''

சாந்தியும் ஆனந்தமும் இடைவிடாமல் நிகழக் கூடியது. ஏனெனில் பக்தன் எப்போது இறைவனிடம் சரணமடைந்து விட்டானே அப்போது அவனை முழுதும் சொந்தமான பொருளாக கடவுளே காப்பாற்றுகிருர். அதிலிருந்து அவருடைய செல்வத்தைப் பாதுகாத்து, தன் கைகளிலிருந்தும் சரியான பாதையிலிருந்தும் தவறிப்போகாமலும் கவனமாகக் காத்துக்கொள்வார். இறைவனோடு பக்தனை இணைக்கும் கயிறும் ஈசனைப்போல் பேரானந்த சொருபமானது. இவ்வாறு ஈசனின் பாதங்களில் கட்டுப்பட்டதும், பக்தன் எப்போதும் பேரானந்தத்தையும் சாந்தியையும் பெற்று இன்புற்றிருக்கிருன்.

சூத்திரம் 61.

"லோகஹானௌ சிந்தா நகார்யா நிவேதிதாத்ம லோக வேதத்வாத்."

கருத்து:—உலகத்தில் காணப்படும் துன்பங்களைக் குறித்து, பக்தன் கவலைப்படக் கூடாது. ஏனெனில் அவன் ஜீவனையும், உலகத்தையும் வேதங்களையும் கடவுளுக்கே அர்ப்பணம் செய்து விடுகிறான்.

"சித்தா" என்பது கவலைதான். பக்தன் எதற்கும் கவலைப்படுவதில்லை. ஏனென்றால், அவன் உலகத்தில் உள்ளவைகளையும் வேதங்களையும் (உத்தரவுகள், தடைகள், நேர்மை, நேர்மையில்லாதவை என்பவைகளை எடுத்துச் சொல்லும் பிரிவுகளை) இறைவன் பாதங்களில் அர்ப்பணம் செய்து விட்டான்.

"இறைவா! நான் உன்னுடையவன். எல்லாம் உனது. உன் இச்சைப்படி நடக்கட்டும்" என்பதே அவன் பிரார்த்தனை.

உலகில் காணப்படும் துன்பங்கள் எதுவும் அவன் அருகில் வராது. எவராலும் அவனுக்குத் தீங்கு செய்ய முடியாது. அவனுக்குத் தீங்கு செய்ய முயற்சி செய்பவர்களிடம் அவன் அலட்சியமாயிருப்பான். அவமானத்தையும் துன்பத்தையும் மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொள்வான். நமது நண்பர்களுக்குக் கடனாகக் கொடுத்த பணத்தை அவர்கள் நமக்குத் திருப்பிக் கொடுக்கும்போது நாம் எப்படி வரவேற்றுக் கொள்கிறோமோ அதைப் போலவே, பிராரப்தமாக நிகழ்வதைச் சகித்துக்கொண்டு கஷ்ட நஷ்டங்களையும் வரவேற்றுக்கொள்கிறான்.

ஆனால் மற்றவர்கள் கஷ்டப்படும்போது எப்படி? அதுவும் அவனுக்குக் கவலை கொடுப்பதில்லை. "இறைவன் எது மிக நல்லது என்பதை அறிவார்" என்று இவனுக்குத் தெரியும். ஆனாலும், மற்றவர்கள் துயரப் படும்போது, இவன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு அசிரத்தையுடன் இருக்கவும் மாட்டான். அவன் கவலைப்படுவதில்லை. ஆனால் இவன் இதயத்தில் உறையும் அன்பே உருவான கடவுள், சுயநலமற்ற சேவையாகவும் தர்ம கைங்கர்யமாகவும் வெளிப்படுத்துகிறார். இவன் எதுவும் செய்வதில்லை. இவன் மூலமாக இறைவன் பணி செய்கிறான். அதனால் மக்கள் நன்மையைக் கருதி பணியாற்றும் கடவுளின் சிரேஷ்டமான பக்தர்களோடு இவனும் சேர்ந்துவிடுகிறான். இவன் கவலைப் படாமல், மற்றவர்கள் நன்மைச்காக பாடுபடுகிறான். இவனாக எதுவும் செய்வதில்லை. ஆனால் எங்கும் பரவி நிற்கும் இறைவனுடைய கைகளில் ஒரு ஆயுதமாகவே நினைத்து இறைவழி பாடு செய்கிறான்.

சூத்திரம் 62.

"நதத்ஸித்தௌ லோகவ்யவஹாரோ ஹேயः
கிந்து பலத்யாகः தத்ஸாதனம்ச (கார்யமேவ")

கருத்து :—அதைப் பெறுவதற்காக, உலக ரீதியான கருமங்களை கைவிடக்கூடாது. ஆனால் கர்மபலனைக் கருதாமல் ஸாதனை செய்யவேண்டும்.

நாம் உலகில் வாழ்ந்து நமது, 'அருகே வசிப்பவர்களிடமிருந்து' சில 'உதவிகள்' பெறும் வரையிலும், நாமும் தெய்வீக நிலை அடைந்து நம் அருகே இருப்பவர்களுக்குக் கடவுள் அனுக்கிரகங்களை வழங்க திறமை

பெறும் வரையிலும், அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை கைவிடக்கூடாது. நம் சமூகத்துக்கும் பொது மக்களுக்கும் ஊக்கத்துடன் உழைக்க வேண்டும். குருதேவர் தன்னுடைய வாழ்க்கை மூலமாக, இந்த மாற்ற முடியாத கொள்கையை வற்புறுத்திக் கூறுகிறார். நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு நாளும், நமது வரவு - செலவு பத்திரத்தில் வரவுக் குறிப்பில் தெய்வீக சம்பத்து அதிகமாகவே காணப்பட வேண்டும். நம்மைச் சுற்றிலும் வசிப்பவரிடமிருந்து, நாம் வாங்கியதைவிட செலவு செய்தது அதிகமாகவே இருக்க வேண்டும் என்றும் உறுதியாக உரைக்கின்றார்.

'கர்ம பலனைத் துறத்தல்' என்பது, கடமைகளை இறைவனுக்குச் செய்யும் பூஜையாகவே நினைத்து பற்றின்றியும் வெகுமானங்களை (உலகத்தை ஒட்டியவை) எதிர் பாராமலும் செய்யவேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

அதோடு பக்தி ஸாதனையையும் நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

இந்த மனோ நிலையும் ஸாதனையும் உலக வாழ்க்கையில் நமது கடனை அதிகரிக்காமல் குறைத்து, நமது பூர்வஜன்ம கர்மத்தையும் தீர்த்து, மேலும் புதியவை சேராமல் காத்துக்கொள்கின்றன. அவ்வாறு தீவிர ஸாதனையில் ஈடுபட்டால்தான் நம் அகத்தே இருக்கும் குறைகளையும் பலவீனங்களையும் சோதித்துப் பார்த்து, இவைகள் வராமல் தடுத்து, ஒவ்வொரு நாளும் பக்தி மேன்மேலும் அதிகமாக வளரச் செய்யமுடியும்.

சூத்திரம் 63.

"ஸ்திரீதன நாஸ்திக (வைரி) சரித்ரம் நச்ரவணீயம்"

கருத்து:—ஸ்திரீகள், செல்வம், நாஸ்திகர் (விரோதிகள்) முதலானவைகளைப் பற்றிய விவரங்களைக் கேட்கக் கூடாது.

'ஸ்திரீ' என்பது 'சிற்றின்ப இச்சையை'க் குறிக்கும். இதை "ஆடவர்" என்று வைத்துக்கொண்டு வாசித்தால் கருத்து மாறிவிடாது. வெகுகாலமாக காமம், மிகவும் சக்தி வாய்ந்ததும் தெய்வீக வாழ்க்கையின் விரோதியாகவும் கருதப்படுகிறது. உலகமெங்கும் பெரிய ரிஷிகளும் ஞானிகளும், முமுக்ஷுவுக்குப் பிரம்மசர்யம் இன்றியமையாதது என்றே கருதினார்கள். கிருஹஸ்தாச்ரம வாழ்க்கையின் கடமைகள் தாங்க முடியாதவை. அதற்காகவே ஆணும் பெண்ணும் பங்கு எடுத்துக் கொள்வது. தனிப்பெரும் பொருளை அடைவதற்கு ஜீவாத்மா தனியாகவே செல்லவேண்டிய குறுகிய தெய்வீகப் பாதையானது, இருவரும் சேர்ந்து போக இடம் கொடுக்காது.

அதனால்தான் மெய்ஞ்ஞான இச்சையுள்ளவன் பாதையில் தனியாகவே போகவேண்டும் என்று எச்சரிக்கை விடப்பட்டது. ஒரு துணை வரும்போது, முன்னேறுவது தடைபட்டு வெற்றிபெற முடியாமல்போய் விடும். இதை உணர்த்துவதற்காகவே "சிற்றின்ப இச்சை" எனப் பொருள் கூறுவதுடன் ஸ்திரீகளைப் பற்றிய விவரங்களையும் கேட்கக் கூடாது என்றும் சொல்லப்படுகிறது. அது முமுக்ஷுவின் இதயத்தில்

காம இச்சையைத் தூண்டி ஞான வாழ்க்கையை நாசம் செய்துவிடும்.

"செல்வமும் அதிக மயக்கத்தைக் கொடுக்க வல்லது. ஏனென்ருல், ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற இயற்கை இச்சையை அது நிறைவேற்றி வைக்கிறது. தற்கால உலகில் இறைவனுல் ஆகவேண்டிய வேலைகளை, செல்வத்தைக் கொண்டே செய்து முடித்துவிடுகிருர்கள். அதனுல் ஆபத்துக்கள் அனேகம் உள்ளன! ஒரு அளவுக்கு உட்பட்ட இப் பொருளைக் கைப்பற்ற ஒவ்வொருவரும் கைகளை நீட்டும்போது, சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. மனிதனுக்குத் தொண்டு செய்வதற்காகத் தான் செல்வம் சேர்க்கப்பட வேண்டும். ஆனுல் எல்லோருக்கும் பொதுவான இயற்கை அளித்த இச் செல்வம், ஒருவனை சுகத்தைக் கொடுப்பதற்கு என்று உரிமைப் பொருளாக மாற்றி வைக்கப்படுகிறது. தன் சுகத்திற்காக, மனிதனுல் செய்த இவ்வடிமை, யஜமானன் வீற்றிருக்கும் இடத்திற்கே ஏறி வந்துவிடும்போது, யஜமானனுகிய மனிதன் அடிமையாகி விடுகிருன். இதைத் தடுத்துக்கொள்ள வேண்டும் என்று தான் நாரதர் நமக்கு எச்சரிக்கை விடுகிருர். பணக்காரர்கள் சந்தோஷமாக இருக்கவில்லை என்பது நமக்குத் தெரியும். செல்வம் நம்மை மயக்கி, பக்திப் பாதையிலிருந்து நாம் திரும்பி விடும்படிச் செய்துவிடக் கூடாது. செல்வத்தால் ஏற்படும் சுகங்களைப்பற்றிய கதைகளுக்கு நாம் செவி சாய்க்கவும் கூடாது.

"அர்த்தம் அனர்த்தம் பாவய நித்யம்
நாஸ்தி தத ஸுகலேச ஸத்யம்

புத்ராதபி தனபாஜாம் பீதிः
ஸர்வத்ரைஷா விஹிதா ரீதிः"

(செல்வம் துரதிருஷ்டத்தைக் கொடுப்பது என்று நினை. செல்வம் படைத்தவர்கள் தங்களுடைய பிள்ளைகளைக் கண்டு அஞ்சுகின்றனர். இது உலகத்துக்கே பொதுவான நியதி.)

ஸ்திரீகளையும், செல்வத்தையும்விட அநேகமாக நாஸ்திகர்களே முமுக்ஷுவுக்குக் கெடுதல் விளைவிப்பார்கள். தெய்வீக உணர்ச்சியின் வேர்களையே அவர்கள் நாசம் செய்துவிடுகின்றனர். நமது நம்பிக்கை வேரூன்றி நிற்கும் வரையிலும், முக்கியமாக ஆரம்ப நிலையில் நாஸ்திகரை அணுகாமல் வெகுதூரத்திலிருந்தே விலகி விடவேண்டும். "அவர்களை நல்வழிப்படுத்துவது" நமது வேலையன்று. அது கடவுளுடைய வேலை. அவர்களை எப்படி திருத்தவேண்டும் என்பதை கடவுள் அறிவார். நாம் அவர்களை நெருங்காமல், அவர்களுக்காக பிரார்த்தனை செய்யவேண்டும். நாம் நெருப்புக்கும் அவர்கள் தண்ணீருக்கும் ஒப்பானவர். இவை இரண்டும் சேர்ந்தால், அதன் விளைவு என்னவாகும் என்பதைச் சொல்ல முடியாது. அது அவைகளின் சக்தியைப் பொறுத்தது. தண்ணீரைவிட நெருப்பு அதிகமாக இருந்தால், தண்ணீர் ஆவியாக மாறிவிடும். ஆனால் தண்ணீரைவிட நெருப்பின் சக்தி குறைவாக இருந்தால் நெருப்பு அணைந்துவிடும். முதலாவதாக நமது தெய்வீகப் பண்பாகிய நெருப்பை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும். அது ஒன்றே நமது கடமை. கடவுள் இச்சை இருந்தால், நாம் அவர்களுடன் தர்க்

கம் செய்து அறிவுறுத்தாமல், நம் நடத்தையைப் பார்த்து அவர்கள் திருந்திவிடுவார்கள்.

"விரோதிகளின் விவரங்கள்." நமக்கு விரோதிகள் எவரும் இல்லை. இருக்கப்போவதும் இல்லை. நமது பக்தி வளர வேண்டுமானால் அதுவே முதல் நிபந்தனையாகும். இங்கே கூறுவது என்னவென்றால், எவர் நமக்கு விரோதிகளாகத் தங்களை நினைத்துக்கொள்கிறார்களோ அவர்களையே குறிக்கும்.

இவர்களுடைய விவரங்களை, முமுக்ஷுவானவன் கேட்கக்கூடாது என்று நாரதர் ஏன் சொல்கிறார்? வம்பு வார்த்தை பேசக்கூடாது என்பதற்காகவேதான், 'நமது விரோதிகளின்' விவரங்களை கேட்க விரும்புகிறோம் என்று நம்மை அடுத்தவர்கள் தெரிந்துகொண்டால், அவர்கள் அடிக்கடி நம்மைப் பார்க்கவந்து அவ் விரோதிகளின் கதைகளைச் சொல்வார்கள். (அது அனேகமாக கட்டுக்கதையாகவே இருக்கும்.) பொழுது போவதற்காக, நம்மைக் குறித்து அவர்கள் என்ன சொன்னார்கள் என்று கற்பனைசெய்து பொய்வார்த்தை வளர்ப்பார்கள். அப்போது நமது மனம் அமைதி குலைந்துவிடும். நம் இதயத்தில் விரோதம் எதுவும் இல்லை. எவர்க்கும் நாம் தீங்கு நினைக்கவில்லை. நம்மைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நாம் ஏன் கவலைப்படவேண்டும். நமது வேலையைக் கவனித்து எல்லோருக்கும் பொதுவாக பிரார்த்தனை செய்வோம். வீண் பேச்சுக்குச் செவி சாய்க்காமல் இருந்துவிடுவோம். அது நம்முடைய பொழுதை வீணாக்காமல் தடுத்து, மனச்சாந்தியை நிலைநாட்டும்.

ஸூத்திரம் 64.

"அபிமான டம்பாதிகம் த்யாஜ்யம்."

கருத்து :—கர்வத்தையும், தற்பெருமையையும், இன்னும் வேறு குறைகளையும் நீக்கவேண்டும்.

பல தேசத்து பக்த சிரோமணிகளின் வார்த்தைகளையும் கட்டுரைகளையும் பார்க்கும்போது, அவற்றில் உறைந்திருக்கும் பணிவான தன்மை நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. தென் தேசத்து ஆழ்வார்கள், நாயன்மார்கள், கன்னட தேசத்து தாஸர்கள், துகாராம், மீரா, துளசிதாஸ், கபீர்தாஸ், கிருஸ்துவ மத யோகிகள், ஞானிகள் எல்லோரும் இறைவனைப் புகழ்ந்து பாடும்போது அவர்களுக்கு இருந்த விநயம் அல்லது பணிவு என்னும் பண்பு நன்ருக வெளிப்படுகிறது. நான் முன்பு உரைத்தவாறு, கடவுளைக்காண வேண்டும் என்ற ஆர்வத்துடன், தனிப்பட்ட தாஸர்கள் என்ற நிலையில் தங்களை நினைத்துக்கொண்டு எழுதிய வேளையில் (வேறு விதமாகச் சொன்னுல் தங்களுடைய உடலையும் ஜீவனையும் ஒட்டிய நினைவுடன் இருந்து, கடவுளோடு ஒன்ருன ஞானநிலையில் இல்லாதபோது) இயற்கைக்கு ஒப்பாக, சக்தியற்றவர்களாகவும், அறிவீனர்களாகவும், துன்பம் அடைந்தவர்களாகவும், பிரயோஜனம் அற்றவர்களாகவும் நினைத்துக்கொண்டனர்.

இக்கருத்தை நமது மனத்திலும் எப்போதும் நினைத்துக் கொண்டால், நாம் உண்மையாகவே பணிவுடன் இருப்போம். "வேருன ஜீவாத்மா ஒன்று இல்லை. கடவுளே எல்லாம் நான் தனிப்பட்டவன் அல்லது வேருன ஒரு ஜீவாத்மா என்ற எண்ணம்

ஒருவனை விட்டு நீங்கி விட்டால் அவன் கடவுளே தான்.'' அப்போது நாம் விதி வசத்திற்குக் கீழ்படியாமலும், மனச்சோர்வு அடையாமலும், இறைவனுடைய ஒளியும், சக்தியும் ஞானமும் எங்கும் பரவச் செய்யும் ஆயுதங்கள் என்பதை மறவாமலும், தொண்டு செய்யும் தெய்வீக உரிமையைக் கைவிடாமலும், உண்மையாகவே பணிவாகவும் விநயமாகவும் இருப்போம்.

சூத்திரம் 65.

''தர்பிதாகிலாசாரஸ்ஸன் காமக்ரோதாபி மானுதிகம் தஸ்மின்னேவ கரணீயம்.''

கருத்து :—நாம், நமது கிரியைகளை முற்றும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்து விட்டதால், காமம் குரோதம் அபிமானம் இவைகளையும் அவனிடத்திலேயே செலுத்த வேண்டும்.

முதலாவது 'அபிமானம்' என்பதைக் கவனிப்போம். உண்மையான பணிவு எது என்பதை அறிவது கடினம். நாம் நமது திடசித்தத்தை இழக்காமல் காத்துக்கொள்வதும் அவசியம். இல்லாவிடில் நம்மைத் தாக்கும் தீயசக்திகளுக்கு இரையாகி விடுவோம். நமது விநயத்தை நாமே பிரமாதமாக நினைத்துக் கொண்டால், நம்மிடம் இருக்கும் அகங்காரம், உருவம் மாறி பணிவாகிய தன்மையைப்போல் காணப்படும். அப்போது, நமது பணிவாகிய பண்பைக் குறித்து கர்வம் அடைவோம். அதனால் நாரதர் நமது அபிமானத்தையும் கடவுளிடத்திலேயே செலுத்த வேண்டும் என்று கூறுகிறார். ''நான் இறைவனிடம் சரண்

அடைந்து விட்டேன். அதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். அவர் எல்லாம் அறிந்த வரும், சர்வ வியாபகமாகவும், சர்வசக்தியுள்ளவராகவும் காணப் படுகிறார். அவர் எனக்காகச் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை. நான் பக்தன் நான் பொய் சொல்வதையும், கெட்ட எண்ணங்களை மனத்தில் நினைப்பதையும் அவர் விரும்பமாட்டார். பக்தனாகிய எனக்கு அது சிறிதும் பொருந்தாது.'' என்று நினைப்பதும் அபிமானத்தால் வரக்கூடியது என்று சொல்லலாம். தீயசக்தியை தூய்மையாக்கும் இம்முறையும் அவசியம். நாளடைவில், கடவுள் கிருபை தோன்றும்போது, இந்த அபிமானமும் மறைந்து விடும். தீயசக்திகளுக்கு இரையாகாமல் நம்மைக் காத்துக் கொள்ளவும் செய்யும்.

'காமம்' என்னும் இச்சையை, தூய்மை யாக்கினால், விடுதலை பெற வேண்டும் அல்லது இறைவனோடு ஒன்றாகக்கலக்க வேண்டும் என்ற பேராசையாக மாறி விடுகிறது. எல்லாவற்றையும் பொசுக்கி விடும் இப்பேராசையானது, கீழ்தரமான மற்ற இச்சைகளை அடியோடு ஒழித்து நம்மை இறைவனிடம் தூக்கிச் செல்கின்றது. இதை கடவுளிடம் திருப்ப வேண்டும் என்பதன் கருத்து என்ன வென்றால் "நான் கடவுளையே விரும்புகிறேன். வேறு பொருளிடத்து அன்பு செலுத்துவது பலனற்றது. இறைவனையே காண வேண்டுமென்ற உணர்ச்சி மிக்க ஆசை எனக்கு இருக்கிறது. வேறு பொருள்களில் ஆசை இல்லை.'' என்று அடிக்கடி தீவிரமான உணர்ச்சியுடன் நமக்கு நாமே சொல்லிக்கொள்ள வேண்டும். இதற்குக்குரு

தேவருடைய வாழ்க்கையின் உதாரணத்தைப்போல் வேறு ஒன்றில்லை. "1923-ஆம் வருஷம் மலேயாவை விட்டு இந்தியாவுக்கு வரும்போது, நான் இப்போதே இறைவனைக்கண்டு உணர வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் எனக்கு இருந்தது." என்று அவர் கூறுகிறார்.

மனிதனுக்கு இயற்கையான எதிர்த்துப்போராடும் உணர்ச்சியும் வெளிப்பட்டு தூயதாக மாறவேண்டும். அப்படிச் செய்யாமல் அடக்கி வைத்தால், பதுங்கியிருந்து மறைமுகமாக எதிர்த்துப் போராடும். அதனால், அவ்வுணர்ச்சியும் இறைவனிடத்திலேயே செலுத்தப்படுகிறது. பெரிய ரிஷிகளும் பக்தர்களும், தங்கள் வார்த்தைகள் மூலமாக இறைவனைச் சில வேளைகளில் 'நிந்தனை' செய்தும், அவருடன் 'சண்டை' போட்டதும் உண்டு. குருதேவரின் துயரத்தை உணர்த்தும் பாட்டு இதற்கு உபமானம். "என்னை ஏன் அலட்சியம் செய்கிறாய்? இது உனக்கு இயற்கை குணம் இல்லை. இதற்கு நீ பதில் உரைக்க வேண்டும்" என்று கேட்கிறார். கடவுள் கிருபை தோன்றுவதற்கு பொறுமையுடன் காத்திருக்க வேண்டும், என்று ஒரு பக்தனுக்கு உபதேசித்த போதிலும், சில வேளைகளில் கடவுளை விட்டுப் பிரிந்திருப்பதால் ஏற்படும் துயரம் தீவிரமாகும்போது, இறைவனை கண்டித்துப் பேசுதலும், அவர் "கொடூரமானவர்" என்று சொல்வதும் தவறு ஆகாது.

இவ்வாறு தூய்மை அடைந்த நம் இயற்கை குணங்கள் இறைவனிடம் பூர்த்தியாகின்றன.

சூத்திரம் 66.

"த்ரிரூப பங்கபூர்வகம் நித்யதாஸ நித்யகாந்தா பஜனுத்மகம் வாப்ரேமைவ கார்யம், ப்ரேமைவ கார்யம்.''

கருத்து :—மூன்று பிரிவுகளையும் கடந்து, எப்போதும் இறைவனுக்கே தொண்டு செய்யும் பக்தியும், நிலையான அன்பும் செலுத்தப் பழகவேண்டும்.

மூன்று பிரிவுகளையும் விட்டுவிட வேண்டும் என்பது எவைகளை குறிப்பது?

(1) ஸத்வம், ராஜஸம், தாமஸம்

(2) ஆர்த்த, ஜிக்ஞாஸு, அர்த்தார்த்தீ

(3) காமம், குரோதம், லோபம். (கடவுளிடத்தில் செலுத்தினுலும் கூட).

மனிதன் அகத்தே ஆழ்ந்து கிடக்கும் சக்திகளை எப்படித் தூயதாகச் செய்ய முடியும். என்பதற்கு, முந்திய சூத்திரம் ஒரு வழி காட்டியது. அதை அசட்டை செய்வது முட்டாள் தனம். அவைகள் மிகவும் சக்திவாய்ந்தன என்ற உண்மையைப் புராணக் கதைகளில் வரும் அனேக திருஷ்டாந்தங்கள் மூலமாக நாம் தெரிந்து கொள்ளலாம். தேவர்கள், ரிஷிகள், தபசிகள், முதலானவர்களை விட வலிமையுள்ளது என்றும் விரித்துரைக்கின்றன. இத்தீய சக்திகளை வேறு வழியில் திருப்புவது, பக்தனுக்கே உரிமையான கடமை. இவைகள், அறிவுக்கு எட்டாதவாறு தெய்வீகத் தன்மை பெற்று, கடவுளிடத்தே செலுத்தப் படுகின்றன!

ஆனுல் இது ஒரு சலுகையே யன்றி, அனுமதிச் சீட்டு ஆகாது! நமக்குக் கோபம் வராவிட்டால்,

"'கடவுளிடத்தில் கோபம் கொள்ள வேண்டும்'' என்று தவருக நினைத்துவிடக் கூடாது. இவைகளை ஒழிக்க வேண்டுமானல் இறைவன் பக்கமாக திருப்புவது தான் சாதுரியமான வழியாகும். தீய பழக்கங்களை ஒழிப்பது, முதலாவது செய்யவேண்டிய முக்கியமான வேலை. இதை நாம் மறக்கவே கூடாது. தெய்வீக அன்பு ஒன்றுதான் இதைச்செய்யும்.

இரண்டாவது பிரிவில், ஞானம் பெறவேண்டும் என்ற இச்சையுள்ள 'ஜிக்ஞாஸு' என்பவனையும் சேர்க்கப்பட்டுள்ளது. நமது லக்ஷியம், பாதை, இறை வனிடம் அன்பு செலுத்தத் தகுந்த இதயம் இவை களைப்பற்றிய விவரங்களை அறிவின் வாயிலாக நிச்சய மாகத் தெரிந்து உணர்வது அவசியம் தான். ஆனல், இந்த அறிவு, இறைவனிடம் பேரன்பு செலுத்த ஒரு தடங்கலாக அமையக்கூடாது. நம்பிக்கை என்னும் அஸ்திவாரம் இல்லாமல் அறிவை மட்டும் வளர்ப்பது அபாயமாகும். நம்பிக்கையாகிய மண்ணில் அறிவு வளரவேண்டும். அப்போதுதான் இனிமையான பழங் களாகிய பக்தியும் இறைவன் தரிசனமும் கிடைக்கப் பெறும். பக்தி யோகத்தைப்பற்றிய தத்துவார்த்த ஞானமும் விரிவான அறிவும் நமக்கு இருக்கவேண்டும் அதோடு நாம் கிரியாம்சத்தில் அதைப்பழகி இறை வனை நோக்கிச் செல்லவும் வேண்டும்.

பக்தி ஸாதனையின் இயல்பு ஒன்றுக்கொன்று முரண்பாடாகக் காணப்பட்டாலும், உண்மையை எடுத்துக் காட்டுகிறது. இது பக்தனுக்கும் இறைவ னுக்கும் ஏற்பட்ட இருவகை தொடர்பு. பக்தன் கடவுளிடம் அன்பு செலுத்துவது சரிதான். நாயகி

நாயக பாவத்துடன், கடவுளை நாயகனுகவே நினைத்து முழு மனத்துடன் அவரிடம் அன்பு செலுத்துகிருன். இது வெறும் பொழுதை வீணுக்கும் காதல் அல்ல. "என் இறைவன் இவ்வுலகத்திற்கே அதிபதி. நான் அவருடைய நாயகி. அதனுல் நான் என் இச்சைப்படி ஓய்வு எடுத்துக்கொள்வேன். பணியாளர்களும் எனக்குப் பணிந்து சேவை செய்ய வேண்டும்'' என்று நினைத்து விடக்கூடாது. இக்கருத்தை நமக்கு ஞாபகமூட்டுவதற்காகவே, புராணங்களிலும், லக்ஷ்மி தேவியானவள் ஸ்ரீ நாராயணனுக்குத் தொண்டு செய்வதில் எப்போதும் கண்ணும் கருத்துமா யிருக்கிருள், என்றுரைத்து நம்மைத்தட்டி எழுப்புகின்றன. இப்போதனையை மறந்துவிடலாகாது என்பதற்காகவே நாரதரும், நாம் எப்போதும் கடவுள் விருப்பத்துக்கு இசைந்து நடந்து கடைசிவரையிலும் இறைவனுடைய அடிமைகளாகவே இருக்கவேண்டும் என்று முக்கியமாகச் சொல்லுகின்ருர். இவ்வுணர்வோடு இருந்தால், அவருடைய கைகளில் மேன்மையான ஆயுதமாகவும், அடிமையாகவும், அதனுல் அவருடைய அன்புக்குரிய நாயகியாகவும் நம்மை நினைத்துக் கொள்ள முடியும்.

மேலும், ஒரே சமயத்தில் ஒரு பக்தன் மூன்று விதமான பாவனையோடு இருக்க முடியும். ஸ்ரீ ராமரை நோக்கி அனுமான் இவ்வார்த்தையைச் சொல்கின்ருர்.

" தேஹபுத்யாஸ்து தாஸோஹம் ஜீவபுத்யா த்வதாம்சகः
ஆத்மபுத்யா த்வமேவாஹம் இதிமே நிச்சய மதிः "

(எனக்கு உடலையொட்டிய உணர்வு இருக்கும்போது, நான் உனக்கு அடிமை. நான் அஞ்ஞானத்திலும்

ஐந்து கோசங்களிலும் அகப்பட்டுக்கொண்ட ஜீவன் என்றும் நினைக்கும்போது, தெய்வீகத்தன்மை வாய்ந்த உன் ஒளியின் ஓர் சுடர். இவைகளை எல்லாம் தாண்டிச் சென்று நான் 'ஆத்மா' என்று உணரும்போது நான் உன்னோடு ஒன்றானவன்.) இப்பாடல். துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று தத்துவ ஆசாரியர்களின் வெவ்வேறு கருத்துக்களையும் சமாதானப்படுத்தி ஒன்று சேர்க்கின்றது.

வாழ்நாட்களில் அனேகமாக உடலை ஒட்டிய உணர்ச்சியோடுதான் நாம் பொழுதைப் போக்குகிறோம். அதனால் அந்த நேரத்தை எல்லாம், இறைவனுடைய ஆயுதங்களாக நினைத்து, 'நான்' என்ற அபிமானம் இல்லாமலும், 'கர்த்ருத்வ-போக்த்ருத்வ (நான் செய்பவன்-நான் அனுபவிப்பவன்) என்ற பாவனை இல்லாமலும் அவனுக்கே பணிசெய்ய வேண்டும்.

நாம் இறைவன் அன்புக் குரியவர்கள். அதனால் அவருடைய ஊழியர்கள்.

நாம் இறைவனுடைய ஊழியர்கள். அதனால் அவருடைய அன்புக் குரியவர்கள்.

வேறு ஒரு உண்மையையும் நாம் கண்டுகொள்ள வேண்டும். காந்த பாவம், அல்லது மாதுர்ய பாவம் அல்லது நாயகி-நாயக பாவம் என்பதற்கும் 'ஆண்-பெண்' பாகுபாட்டிற்கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லை. தற்கால மனிதரைவிட உயர்ந்த மனநோக்கம் கொண்ட பக்தி-ஆசாரியர்கள், 'காந்த பாவம்' எவ்வளவு மேலான கருத்தை உணர்த்துகிறது என்பதை தெரிந்து கொண்டனர். தற்கால மனிதன், நாயகி-

நாயக பாவம் என்பதை ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள தொடர்பை உணர்த்துவதாக நினைத்துக் கொள்வதால், இந்த சந்தர்ப்பத்தில் அலைகளுக்கும் கட லுக்கும் உள்ள ஒற்றுமையை இதற்கு ஓர் உதாரண மாகக் கூறுவது நலம். கடலைவிட்டு அலைகள் நீங்காமல் எப்போதும் ஒன்றாகக் காணப்படுகிறதோ அதைப் போல் அமைந்த ஒரு நிலை. நாம் அலைகள் என்றால் கடவுள் சமுத்திரம் என்று சொல்லலாம்.

சூத்திரம் 67.

“பக்தா ஏகாந்திநோ முக்யா꞉”

கருத்து :—பக்தர்களில் சிறந்தவனுக்கு (பரமபக்தி அல்லது மேலான இறையன்பு பழகிக்கொள்பவனுக்கு) இறை வனிடம் முழு மனத்துடன் கூடிய பக்தி ஏற்படு கின்றது.

ஸாதகன் ஸாதனை செய்வதால் ஸித்தி பெறு வான். அது நைஷ்கர்ம்ய ஸித்தி எனப்படும். இது வர்ணிக்க முடியாத கடவுளுடன் ஒன்றுபட்ட ஒரு நிலை. இதுவே முக்கிய பக்தி அல்லது பராபக்தி அல் லது ஞானம் எனப்படும். தகுந்த காலம் வருவதற்கு முன்பாக ஒருவன் இந்நிலையை அடைந்துவிட முடி யாது. உண்மையாகவே இது கடவுள் கிருபையினால் கிடைக்கக்கூடிய ஒரு பரிசு. நம் ஸாதனையின் விளை வாக ஏற்படும் பயன். ஆனால், இது மறைமுகமாக வரும். எப்போது உயர்ந்த படியில் வந்து தயா ராக இருக்கிறானோ, அப்போது இறைவனே பக்தன் கையைப் பிடித்து தன்னுடைய மடிமேல் வைத்துக் கொள்ளுவார்.

இது மிகவும் அபூர்வமான ஒரு நிலை. இவ்வகை பக்தர்களைச் சிருஷ்டி செய்வதில் இயற்கை அதிக சிக்கனத்தைக் கையாளுகிறது. அதனால் நாம் பாசாங்கு செய்யவோ நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளவோ கூடாது. கடவுளுடைய திட்டமான செய்கைகளில், எல்லா விதமான பக்தர்களுக்கும் அவரவர்களுக்குத் தகுந்த வேலை உண்டு என்பதையும் உணர்ந்து நடக்க வேண்டும். உண்மையான பக்தன், தனக்கு வாய்த்த கருமங்களைக் குறித்து சந்தேகப்படாமல், சந்தோஷமாகவும் வினயத்தோடும் அதை செய்து முடிப்பான்.

தங்கள் உடலையும் சூழ்நிலையையும் மறந்து, கடவுளைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லாத இறைப் பித்து ஏறிவிட்ட இம் மெய்யன்பர்களை, சுயநலம் படைத்தவர் என்றும், மக்களுக்குத் தொண்டு செய்ய தங்களுக்கே உரிமை உண்டு என்று நினைக்கும் சிலபேர் நிந்தனை செய்கின்றனர். அவர்கள் சுயநலம் படைத்தவர்களா? பொது மக்களுக்கு நன்மை எதுவும் செய்வது இல்லையா? சமூகத்தைச் சுரண்டிப் பிழைப்பவர்களா?

இல்லவே இல்லை. சமூகத்திற்கு நன்மை செய்பவர்களில் சிறந்தவர்கள் அவர்களே. பொது ஜனங்களிடம் அவர்கள் எதையும் கேட்பதில்லை. அவர்களுக்கு ஆசை என்பதும் இல்லை. எதுவும் அவசியமும் இல்லை. அவர்களுக்குத் தொண்டு செய்வது நமக்கு ஒரு பெருமையும் கடவுள் செய்த ஆசீர்வாதம் என்றும் நாம் நினைக்கிறோம். அவர்கள் உடல் வாழ்க்கையில் நாம் எடுத்துக் கொள்ளும் சிறிய அளவு பொறுப்புக்-

குப் பதிலாக, நமக்கு அவர்களுடைய சிறந்த ஆசீர்வாதங்களைப் பொழிகின்றனர்.

உண்மையை நோக்குமிடத்து, நாம் செய்யும் தியாகத்தையும் அவர்கள் கேட்பதில்லை. அவர்களுடைய ஆசீர்வாதங்களையும் கருணையையும் எல்லோரிடமும் சமமாகவே பொழிகின்றனர். அவர்கள்தான் தெய்வீக ஒளியைப் பரவச்செய்யும் பிரகாசமான விளக்குகள். நாம் கேட்காமலே அவ்வொளியை நமக்குக் கொடுத்து, நமது லக்ஷியப் பாதையிலும் அவ்வொளியை வீசி உதவி புரிகின்றனர். சமூகத்திற்குத் தொண்டு செய்பவர்களில் அவர்களே மேன்மையானவர்கள். தகுதியில்லாதவர்களுக்கும் உதவி செய்கின்றனர். அவர்கள் செய்யும் சேவைதான் சிறந்தது. அவர்கள் அளிக்கும் பரிசுகளே நிரந்தரமானவை.

சூத்திரம் 68.

"கண்டாவரோத ரோமாஞ்சாருபிஃ பரஸ்பரம்
லபமாஞு பாவயந்தி குலானி ப்ருதிவீம்ச".

கருத்து :—அவர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ளும் போது, பேச்சு தடுமாறும், மயிர்க்கூச்சல் உண்டாகும். கண்களில் நீர் பெருகும். தங்கள் குடும்பத்தையும் உலகத்தையும் புனிதமாக்குகின்றனர்.

பராபக்தர்கள் இறைவனையும் அவருடைய லீலைகளையும் குறித்து அடிக்கடி பேசுவது உண்டு. அப்போது தங்களுக்குள்ளே அவர்கள் ஆனந்தத்தை அனுபவிப்பதும் பரவசமான நிலையில் இருப்பதும் தெளிவான ஒரு அறிகுறி. அவைகளில் சிலவற்றை

இங்கே கூறப்படுகின்றன. பேச்சு தடைபடுவதும் மயிர் நேராக நிற்பது, கண்களில் நீர் பெருகுவது முதலானவை. பிரசித்திபெற்ற பக்தி நூல்கள் இதை விரித்துரைக்கின்றன. இது வம்புவார்த்தைகள் பேசுவதோ, பேரன்புக்கு வாயளவு மதிப்புக் கொடுப்பதோ, பொழுது போவதற்காக அறிவுக்கு மட்டும் சிறிது வேலை கொடுப்பதோ அல்ல. அவ்வார்த்தைகள் இதயத்திலிருந்தே ஊறுகின்றன. அவர்கள் கடவுளைக் குறித்துப் பேசும்போது, இமயமலையில் ஏதோ ஒரு யதி (பூதம்) இருக்கலாம் என நினைத்துப் பேசுகின்றனர் என்றும் நாம் எண்ணலாகாது. அச்சமயத்தில் அவர்களிடம் கடவுள் உறைந்திருக்கிறார். உண்மையாகவே அவர்கள் அனுபவித்து, இறை அன்பை வெளிப்படுத்துகின்றனர். எல்லையில்லாத தெய்வீகத் தன்மை வாய்ந்த இறைவன் கிருபையைத் தெளிவாக உணர்ந்து ஒப்புக்கொள்ளவும் செய்கிறார்கள். இறைவனின் வரம்பு இல்லாத இயற்கையை நினைக்கும்போது, அவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். அவன் அன்பின் இயல்பைப் பேசும்போது, பேச்சு தடுமாறுகின்றது. அவனுடைய சக்தியை எடுத்துச் சொல்லும்போது அவர்களுக்கு மயிர்க்கூச்சலும் ஏற்பட்டு விடுகிறது. இறைவனுடைய கிருபையை நினைத்த மாத்திரத்தில் கண்களில் நீர் பெருகி விடும். வாழ்க்கையில் வேறு கவலையே இல்லாத ஏகாந்த பக்தர்கள் பேசிக்கொள்ளும்போது இடத்தையும் பொழுதையும் கவனிப்பதே இல்லை. உலகம் இருப்பதாகவே அவர்கள் நினைக்க மாட்டார்கள். ஆனாலும் அவர்கள் வாழ்வதால் உலகம் தூய்மை அடைகிறது.

அவர்கள் பெரிய வேப்பமரம் அல்லது சந்தன மரத்துக்கு ஒப்பானவர்கள். நாம் வெளியே மூச்சு விடும்போது வரும் விஷவாயுவை இம்மரங்கள் கெடுதல் விளைவிக்காமல் தடுத்து நமக்குத் தேவையான பிராணவாயுவையும் உடலுக்கு நன்மை தரும் வேறு பொருள்களையும் கொடுத்து உதவுகின்றன. இவையெல்லாம் வெளியே தெரியாமல் அமைதியாகவே நடைபெறும். நமக்கு எவை உதவி செய்கின்றன என்று தெரிந்து கொள்ள வில்லையானாலும் நாம் நலம் பெறுகிறோம் என்பது மட்டும் நிச்சயம். இதை போலவே, நமது நடுவே சிறந்த பக்தர்கள் வாழ்வதால் நம் சூழ்நிலை தூயதாகி, உலகப்பற்றுள்ள மக்களின் மாசு நிறைந்த இதயத்தில் உதிக்கும் கெட்ட எண்ணங்களால் கெடுதல் ஏற்படாமல் காப்பாற்றப்படுகிறோம். பக்தர்களைச் சேர்ந்த குடும்பத்தினரும் மேன்மை அடைகிறார்கள். அவர்களைப்பற்றிப் பேசும்போது "அவர் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்" என்று அவ்வுறவினர் பெருமையுடன் சொல்லுவார்கள். இவ்வாறாக பக்தர்களின் பெருமையைக்கூறி, மற்றவர்களும் தங்களுக்குத் தெரியாமலே பக்தர்கள் முறைகளைக் கடைப்பிடித்து வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக் கொள்வார்கள்.

பக்தனுடைய புண்ணிய வசத்தால் அவனுடைய முன்னோர்களும் மேன்மை பெறுகின்றனர். நம்மையும் நம்முடைய மூதாதையர்களையும் கண்ணுக்குத் தெரியாத ஒரு கயிறு இணைத்துக் கட்டுகிறது. நமக்கு அவர்களிடம் பற்றுதல் இல்லாவிட்டாலும், அவர்களுக்கு நம்மிடத்தில் பற்றுதல் உண்டு. நம் கண்

களுக்குப் புலப்படா விட்டாலும் உண்மையாகவே இருக்கும் இவ்வழியாக, நாம் கொடுக்கும் பிண்டம் முதலானவைகள் அவர்களிடம் சேர்க்கப்படுகின்றன. ஒருவன், சிறந்த பக்தனுகவோ மெய்ஞானம் பெற்ற தபசியாகவோ இறைவன் ஒளியுடன் பிரகாசிக்கும் போது, இந்த இணைப்பின் பயனுக இவனுடைய முன்னேர்களுக்கும் அவ்வொளி வீசுகின்றது. மூதாதையர்கள் ஞானம் பெற்று முன்னேறுவது, அவர்களுடைய ஏற்றுக்கொள்ளும் சக்தியையும் இயல்பையும் பொறுத்தது. பக்தனுகிய மஹா புருஷர் அவருடைய முன்னேர்களின் குருவாக அமைந்து அவர்களையும் காப்பாற்றி விடுகிருர் !

சூத்திரம் 69.

"தீர்த்தீ குர்வந்தி தீர்த்தானி ஸுகர்மி குர்வந்தி
கர்மாணி ஸத்சாஸ்த்ராணி குர்வந்தி சாஸ்த்ராணி"

கருத்து :—புனிதமான இடங்களுக்குப் புனித மளிக்கின்றனர். கருமங்களையும் நற்கருமங்களாய்ச் செய்கின்றனர். சாஸ்திரங்களும் அதிகாரம் பெறுகின்றன.

இதைத் தெரிந்து கொள்வது சுலபம். இதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். "ரிஷிகேசம்" என்று சொல்லும்போது, "சுவாமி சிவானந்தர் வசிக்கும் இடம் என்பதை ஜனங்களுக்கு ஞாபகப்படுத்துகிறது. முப்பது வருஷங்களுக்கு முன்தென் இந்தியாவிலிருந்து வரும் யாத்ரீகர் காசிவரையிலும் தான் வருவார்கள். அவர்களில் தைரியம் உள்ளவர்கள் ஹரித்வாரம் வரையிலும் சென்றனர். ஹரித்வாரம் தான் யாத்ரீகரின் எல்லே. 'ரிஷிகேசம்' என்ற இடத்தைப்பற்றி ஒன்றுமே

தெரியாது. இப்போது இந்த இடத்திற்கு வந்த பெருமை குருதேவர் மூலமாக வந்தது. ரிஷிகேசத்தை சுற்றிப்பார்க்க வருபவர்கள், சுவாமிஜி முன்னாட்களில் தங்கி தபசு செய்த குடீரத்திலுள்ள மணலை தலையில் வைத்து வணங்குகின்றனர். இப்போது ஆயிரக்கணக் காண ஜனங்கள் ரிஷிகேசத்திற்கே நேராக வருகின் றனர். இதுவே அவர்களுக்கு யாத்திரையாகச் செல் லும் இடம். குருதேவர் இவ்வாறு இதை அமைத்து விட்டார்.

ஸ்ரீகிருஷ்ண பகவான் "யத்யத் ஆசரதி ச்ரேஷ்டா: தத்ததேவ் இதரோ ஜனா:" என்று உரைத்தார். நாம் செய்யும் கிரியைகள் அங்கீகாரம் பெறவேண்டுமானால், நமது மத ஆசாரியர்களை அனுசரித்துச் செய்கிறோம். அவர்களுடைய போதனைகளையும், அன்றாட வாழ்க் கையில் கடைப்பிடிக்கும் நடைமுறைகளையும் உதா ரணமாகக்கொண்டு நாமும் அவ்வாறே பின் பற்று கிறோம். "குருதேவ் சிவானந்தர்" என்னும் புத்தகத் தில், பகவன் நாம மகிமையையும் சங்கீர்த்தனத்தின் மகிமையையும் குருதேவர் தன்னுடைய ஆத்மசக்தி யினால் எவ்வாறு அத்வைத வேதாந்திகளும் உணரும் படிச் செய்திருக்கிறார் என்பதை விவரமாக எழுதி யிருக்கிறேன். ஒரு சுவாமி இவைகளை அனுசரிப்பது பொருத்த மற்றதாகக் கருதப்பட்டது! இதுவும் வேறு பலவகையான இறைவழி பாடுகளும் குருதேவர் மூல மாக அதிகாரம் பெறுகின்றன.

முக்கியமாக இந்தியாவில் சாஸ்திரங்கள் ஏராள மாக இருக்கின்றன. சாதாரணமாக வழிகாட்டி ஒருவன் இல்லையென்றால், உண்மையை நாடிச்செல்பவன்

போகவேண்டிய பாதை தெரியாமல் திகைப்பான். சாஸ்திரங்களில் எப்பகுதியைத் தேர்ந்தெடுத்து தன் வாழ்க்கையில் எந்த ஒரு மஹாபுருஷர் கடைப்பிடிக்கின்ருரோ, அப்போது அது மிகவும் மேன்மையாகக் கருதப்படுகின்றது.

சூத்திரம் 70.

''தன்மயாஃ''

கருத்து :—அவர்கள் அத்தன்மை (கடவுள் அல்லது பக்தி) உள்ளவர்களாய் இருக்கின்றனர்.

ஏழுவருஷங்களுக்கு ஒருமுறை நாம் முழுதும் திருத்தி அமைக்கப்படுகிருேம். உடலில் இருக்கும் எல்லா ஜீவிய அணுக்களும் மாறி அமைவதற்கு ஏழுவருஷங்கள் ஆகும். அப்போதும் பூராவும் மாறுதல் அடைகின்றது. இது மனோநிலையையும் ஜீவநிலையையும் எட்டிப்பரவுகிறது. அதனுல் தான்முக்கியமான விரதங்களும் அனுஷ்டானங்களும் ஏழுவருஷங்களுக்கு ஒருமுறையாகவும் கணக்கிடப்படுகிறது. அவ்வாறு நாம் ஏழுவருஷங்களுக்கு தீவிரமான பக்தி ஸாதனை பழகினுல் முழுதும் இறை அன்புமயமாக மாறி விடுவோம். இறைஅன்பு உருப்பெற்றுத் திகழ்வோம்.

இந்த இடத்திலும் வெவ்வேறு நிலைகள் உள்ளன முதலாவது நமது இயற்கையான சுபாவத்தை வெளிப்படுத்துகிருேம். நல்லொழுக்கங்களை கடைப் பிடித்தும் ஸாதனை செய்தும், ஸத்-பாவமாக உயர்த்திக் கொள்வோம். அப்போது நமது இயற்கை குணம் தூயதாகி ஸத்வம் நிறைந்து காணப்படுகிறன. இந்நிலையையும்

கடவுள் அருளால் தாண்டிச்சென்று கீதையில் கூறியுள்ள "மத்பாவம்" என்னும் நிலையை எட்டி விடுவோம். இது கடவுளுடைய பாவம் (இயற்கை அல்லது நிலை) இங்கே நல்லது - கெட்டது, தர்மம் அதர்மம், சரியானது தவருனது என்னும் இருமைகள் மறைந்து உலகம் எல்லாம் ஒன்ருன கடவுளுடைய விராட் சொரூபத்தில் ஒடுங்கிவிடும். இந்நிலையை நாமும் அடையவேண்டுமேயல்லாது, அதைபோல நாம் பாசாங்குசெய்து போலியாக நடிக்கக் கூடாது.

இதைப் போலவே மூன்றுபடிகள் உள்ளே வேறு ஒரு நிலையும் உண்டு. முதலாவது நமக்குத் தகுந்த ஸ்வகர்மங்களைச் செய்கிருேம். அவை நம் இயற்கை குணங்களால் ஏவப்பட்டுச் செய்யும் கருமங்கள். பிறகு நல்வழியைக் கடைப்பிடித்து ஸத்-தர்மாக்களை (நல்ல காரியங்களை) மட்டும் செய்கிருேம். இது ஒரு ஸாதகனுடைய நிலை பிறகு 'மத் - கர்மர்' என்றும் உயர்ந்த படியில் வந்து விடுவோம். இது பூரணமானநிலை. அப்போது நாம் தனிமனிதராக வாழாமல் இறைவனுக்கே உரியவராகி இறைவனுடைய இச்சையை பூர்த்தி செய்வோம். இந்த இடத்தில் கர்மம் தர்மம் என்னும் இருவார்த்தைகளும் ஒரே பொருள் உடையவை.

நாம் எப்போது மூன்ருவதான 'மத்பாவ' அல்லது 'மத்-கர்ம' என்னும்நிலைக்குவந்து விட்டோமோ அப்போது நாம் 'தன்-மயமாக' ஆகிவிடுவோம். அல்லது 'அது நிறைந்தவராக இருப்போம். அதுவே லக்ஷியம். ஸத்-பாவநிலையில் 'ஸத்-கர்மா' (ஸத்தர்மா) வைச் செய்து கொண்டு நாம் நல்வழியில் நடந்

தாலும், அபாய மில்லாத நிலையில் இருக்கிறோம் என்று நினைத்து விடக் கூடாது. நம்மைப்பிரித்து வைக்கும் தனிமை உணர்வு இன்னும் நீங்காமல் இருப்பதனால், நாம் தீய சக்திகளுக்கு இரையாவதற்கு இடமுண்டு. நான் என்னும் உணர்வும் ஒழிந்து தன்மயமாகத்திகழும் வரையிலும் ஸாதனையை உறுதியாகப் பழகவேண்டும். 'நான்' என்ற நினைவு வரும்போது ஒரு ஸாதகன் என்ற எண்ணம்தான் இருக்கும்!

ஸூத்திரம் 71.

"மோதந்தே பிதரோ ந்ருத்யந்தி தேவதாஃ
ஸநாதா சேயம் பூர்பவதி"

கருத்து:—மூதாதையர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். தேவர்களும் நடனம்செய்கின்றனர். உலகமும் காப்பாற்றப்படுகிறது.

ஸாதகன் ஒருவன் இவ்வாறு 'தன் மயம்' ஆகும்போது அவனுடைய மூதாதையர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். ஒருவன் தெய்வீக நெறியில் முன்னேறும்போது அவனுடைய மூதாதையர்களும் எவ்வாறு நன்மை அடைகின்றனர் என்பதைக் குறித்து முன்பு சொல்லப்பட்டது.

மஹரிஷிகள் தபசுசெய்யும்போது அதைக்கலைப்பதற்கு, தேவேந்திரன் தேவதைகளை அனுப்புகிறான் என்று சொல்லுவார்கள். அதற்குமாறாக இந்த சூத்திரத்தில், ஒருபக்தன் லக்ஷியத்தை அடைந்து விட்டால் தேவர்கள் களிப்பெய்துகின்றனர் என்று

கூறப்படுகிறது. தபசு செய்கிறவன் தேவர்களுக்கு விரோதி. அவன் செய்யும் தபசு இந்திரனுடைய பதவிக்கும் அவனை உயர்த்தி விடும். இதனாலேயே தேவேந்திரனும் பயப்படுகிறான். ஆனால் பக்தர்கள் செய்யும் பக்தி ஸாதனை தேவர்களுக்கும் நன்மை செய்கிறது. எவ்வாறெனில், தேவர்களுடைய பதவிக்கு இடையூறு வரும்போது, உதவியை நாடி இறைவனிடம் ஓடுகின்றனர். அப்போது தர்மத்தை நிலைநிறுத்த இறைவன் இங்கே அவதாரம் செய்ய வேண்டி வரும் ஒரு பக்தன் மெய்ஞானம் பெற்றபோதும் இதுவே தான் நடைபெறுகிறது. இவன் பிராத்தனைக்கு இணங்கி, நாமமும் ரூபமும் இல்லாத மெய்ப்பொருள் இங்கே அவதாரம்செய்து, அவருடைய கிருபை உலகில் பெருகி அதர்மத்தை முற்றும் ஒழித்து விடுகிறது.

எவ்வாறு ஒரு பக்தன் இறைவனுடைய ஒளியின் உறுப்பெறுவதால், இயற்கையாகவே, தர்மத்தைக் காப்பாற்றுபவர்களில் சிறந்தவராய் விளங்குகிறான் என்பதை முன்னே கண்டு கொண்டோம். பொது மக்களுக்கு நன்மை செய்பவர்களிலும் அவரே மேலானவர். அசுரர்களால் தேவர்களுக்கு ஏற்படும் பயத்தையும் போக்குவார் (Contumelia). அதனால் ஒரு பக்தனுக்கு இறைவனுடைய தரிசனம் கிடைத்த போது தேவர்கள் களிப்பெய்துகின்றனர்.

மெய்ஞானம் எய்திய பக்தர்களால், நாஸ்திகமும் உலகப்பற்றும் இந்திரிய வாழ்க்கை என்னும் நரகமாகிய இருட்டில் தடுமாறும் மக்கள், ஒளியும் ஆசீர்வாதமும் பெற்று காப்பாற்றப் படுகிறார்கள்.

ஸூத்திரம் 72.

"நாஸ்தி தேஷு ஜாதிவித்யாரூப குலதனக்ரியாதி"

கருத்து:—அவர்களுக்குள், ஜாதி கல்வி உடல் உருவம், இனப்பிரிவு, செல்வம் பதவி, இவைபோன்ற வித்தியாசங்கள் எதுவும் கிடையாது.

பக்தி அல்லது அன்பு உலகத்திற்கே பொதுவானது. அது எல்லாவிதமான வித்தியாசங்களையும் கடந்து நிற்கும். ஆனால் வேதக்கிரியைகளை த்விஜர்கள் மாத்திரமே செய்யலாம் என்று விதிக்கப்பட்டது. இதற்கு முன்பு ஒரு ஸூத்திரத்தில், வேதகிரியைகளை விட இறை அன்புக்கு முதன்மையான இடம் கொடுத்து, பக்தியின் பொருட்டு அந்த கிரியைகளையும் துறந்து விடலாம் என்றும் கூறப்பட்டது. ஆனால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் உரைத்ததுபோல் 'பராம்கதி' அல்லது இறை தரிசனமாகிய உயர்ந்த பதவியைப் பெறுவது எல்லோருக்கும் பொது. ஸ்ரீ கிருஷ்ண பகவானும் கீதையில்,

"ஸ்திரியோ வைச்ய ஸ்த்தா சூத்ராஸ்தேபி யாதி
பராம் கதிம்"

(பெண்களும், வைசியரும், சூத்திரரும் மேலான பதவியைப் பெறலாம்.) என்று சொன்னார்.

இறைவனுடைய பக்தர்களில் சிறந்து விளங்கும் சிலர் "கீழ் ஜாதியைச்" சேர்ந்தவர்கள். (ஜாதிப்பிரிவினை என்பது, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் வித்தியாசம் எதுவும் இல்லாமல் சமூகத்திற்கு யுக்தமான ஒரு பிரிவு என்பதை நிரூபிக்கிறது அல்லவா?)

படிக்காதவர்களும் வேதாந்த உண்மையை உணர்ந்து கற்று அறியாத சாஸ்திரங்களையும் வாழ் நாட்களி லேயே கையாண்டு வந்தார்கள். முன்பு உரைத்தது போல், இவர்களிடமிருந்தே சாஸ்திரங்களும் அதி காரம் பெறுகின்றன.

பணக்காரர்களிலும் ஏழைகளிலும் ஞானிகள் இருந்தனர். அந்த வித்தியாசத்தைப் பக்தி சமமாகச் செய்கிறது. செல்வம் நிறைந்த பக்தன் உலகத்தில் தன்னை ஒரு பிச்சைக்காரனாக எண்ணுகிறான். எல்லாச் செல்வமும் கடவுளுக்கே உரியது. இதற்கு மாறாக ஏழையானவன் இறைவனைத் தன்னுடைய இதயத் தில் அமர்த்தி விட்டதனால், எல்லாச் செல்வமும் இவனைச் சேர்ந்து விட்டது என்று நினைக்கிறான். இரு வரும் உலகப்பொருளையும் செல்வத்தையும் குறித்து நினைப்பதே இல்லை. வெவ்வேறு தொழில்களில் ஈடு பட்டாலும் பக்தராக இருந்தவர்களும் உண்டு. தெய் வீக வாழ்க்கைக்குத் தகாதது என்று கருதப்படும் கசாப்பு வியாபாரம் செய்த பக்தர்களும் இருந்து வந்தனர். ஆனால் அவர்கள் இறைவனிடம் அன்பு செலுத்துவதை அது தடை செய்ய வில்லை. கசாப்பு வியாபாரியான ஞானியும், பரம்பரைத் தொழிலை தன்னுடைய கடமை என்று செய்து அது வும் இறைவன் துதியாகவே எண்ணியிருந்தான். அதனால் பாபம் எதுவும் ஏற்படவில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான்,

“ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸ தோஷமபி நத்யஜேத்.”

(மட்டமானது என்று கருதப்பட்டாலும் உன் கடமை யைக் கைவிடாதே.) என்று கூறுகிறார். ஒரு பக்தன்,

தான் செய்யும் கிரியைகளைக் கடவுளுக்குப் பூசை செய்யும் மலர்கள் என்று நினைப்பான். அவனுக்குப் பற்றுதல் இல்லை. அவன் எவ்வகையிலும் பாதிக்கப் பட மாட்டான்.

சூத்திரம் 73.

''யதஸ்த தீயா:''

கருத்து:—ஏனெனில் அவர்கள் அவனுக்கே (இறைவனுக்கே) உரிமையானவர்கள்.

பக்தர்கள் எந்த ஜாதியையோ, சமயத்தையோ தேசத்தையோ சேர்ந்தவரானாலும், ஆணோ பெண்ணோ, அல்லது எப்பதவியில் இருந்தாலும் கடவுளுக்கே உரிமையானவர். தனி ஜாதி, சமயம் அல்லது தேசத்தைச் சேர்ந்தவர் என்ற உணர்வைக் கங்கைக் கரையிலிருக்கும் ஒருசிறு குட்டைக்கு ஒப்பிட லாம். கங்கையில் நீர் மட்டம் குறைந்திருக்கும்போது குட்டை வேறாகக் காணப்படும். ஆனால் கங்கையில் புனிதமான தண்ணீர் பெருகி வரும்போது, அதன் கரையிலுள்ள சிறு குட்டைகளில் தங்கிய தண்ணீரை வேகமாய் அடித்துக்கொண்டு போய்விடும். வெவ் வேறாக இருந்த வேற்றுமை மறைந்து விடுகின்றது. நாம் எல்லோரும் கடவுளுக்கே உரிமையானவர்கள்! அதில் சந்தேகம் சிறிதும் இல்லை. நாம், எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சேர்ந்த ஒரு முக்கியமான பகுதியாக இருந்தாலும், இறைவனையும் வெளி உலகத்தையும் விட்டுப்பிரிந்து தனியாக இருப்பவர் என்ற தவறான எண்ணத்தோடும் அகங்கார உணர்ச்சி

யோடும் வாழ்கிறோம். கங்கைக் கரையில் இருக்கும் குட்டைகளின் தண்ணீர் கங்கையைச் சேர்ந்ததுதான். கங்கையில் நீர்மட்டம் தாழ்ந்ததும் குட்டைகள் தனித் தனியாகக் காணப்பட்டன. வேறு புதிய வெள்ளம் வந்து அடித்துக்கொண்டு போகும் வரையிலும் அவை களும் 'சுதந்திரமாக' இருக்கும். அதைப் போலவே உண்மையாக, நாம் இறைவனிடத்திலேதான் உறை கிறோம். நம்மிடத்தில் உண்மையாக இருப்பதுவும் இறைவனேயாகும். எப்போது இறை ஒளியாகிய வெள்ளம் நம்மைவிட்டு நீங்கி விட்டதோ அப்போது இருள் சூழ்ந்து வீடுகிறது. அதனால் கர்வம் கொண்டு தனியாகவும் சுதந்திரமாகவும் இருப்பவர் என்று தவருக நினைத்து விடுகிறோம். இப்போது நாம் பிரார்த்தனை செய்து காத்துக்கிடக்க வேண்டும். விரா கத்தால் கண்ணீர் வடியும்போது, இறை வெள்ள மான கங்கையிலும் நீர் பெருகிவரும். அப்போது மறுபடியும் இறைவனோடு நாம் ஒன்று சேர்ந்து விடுவோம்.

இறைவனைத் தரிசித்த பக்தர்களின் நிலையும் அதுவேயாகும். அவர்கள் அவனோடு ஒன்றுகி விடு கின்றனர். தனிப்பட்ட ஜாதி, இனம், சமயம், ஆண், பெண், அல்லது தேசம் முதலியவைகளைச் சேர்ந்தவர் கள் அல்ல. அவர்கள் கடவுளுக்கே உரிமையானவர் கள். இவ்வகை வித்தியாசங்களையும், வரம்புகளையும் கடந்து நிற்பர்.

மற்றொரு கருத்தையும் கவனிக்க வேண்டும். உண்மையான பக்தன் மற்றவர்களுடன் பழகும்போது அவர்கள் பக்தராயினும் இல்லா விட்டாலும் முன்

சொன்ன வித்தியாசங்களைக் கவனிப்பதில்லை. தன்னுடைய அன்புக்கும் சேவைக்கும் சம உரிமையுள்ள இறைவனுடைய குழந்தைகள் என்று தான் நினைப்பான்.

சூத்திரம் 74.

"வாதோ நாவலம்ப்ய:"

கருத்து:—வீண் வாக்குவாதம் செய்யக்கூடாது.

அறிவினாலும் வாக்கினாலும் எட்ட முடியாப் பொருளைக் குறித்து வாதம் செய்வது பொருத்தமாகாது. உங்கள் குழந்தையை மடியில் வைத்து, அன்பு நிறைந்த கண்களால் ஒருவருக்கு ஒருவர் பார்த்துக் கொள்ளும்போது, மற்றொருவர் வந்து அவ்வன்பை ருசுப்படுத்து என்று கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் குழந்தையிடம் அன்பு செலுத்துவதையும், குழந்தையும் அவ்வாறே உங்களிடம் அன்புடன் பழகுவதையும் மற்றவர்களுக்கு எடுத்துரைத்து எவ்வாறு ருசுப்படுத்த முடியும்? நம்பிக்கை இல்லாதவனைச் சாதுரியமான வாக்கு வாதங்களினால் திருப்தி செய்வது என்பது ஒரு வீண் கனவு.

சூத்திரம் 75.

"பாஹுல்யாவ காசாத்வாத் அனித்யத்வாச்ச"

கருத்து:—ஏனென்றால் வெவ்வேறு கருத்துக்கு இடமுண்டு. ஒரு தீர்மானமான முடிவுக்கு வரவும் இயலாது.

எல்லையற்ற பரம்பொருளே உருவான இவ்வுலகில், வெவ்வேறு மனோபாவங்களுக்கும் உபகரணங்

களுக்கும் ஒரு எல்லை கிடையாது. எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ளே உறையும் ஒரு பொருளுக்கு மேல், எல்லையில்லாத வேற்றுமையுடன் கூடிய ஒரு கட்டிடம் அமைந்திருக்கிறது. உண்மையில், ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுக்குத் தகுந்த பாதையும் மதமும் தனித்தனியாக இருக்கும். ஒவ்வொருவனுக்கும் சொந்தமான கடவுளும் உண்டு. அவனுடைய மனோபாவத்திற்கும் உபகரணங்களுக்கும் ஏற்றவாறு இறுதியாகிய மெய்ப்பொருளைக் குறித்த கருத்துக்கும் இடம் உண்டு. எல்லையற்ற பரம்பொருளை எண்ணற்ற நிலைகளிலிருந்து பார்க்க முடியும். எல்லையில்லாப்பொருள் எண்ண முடியாத உருவங்களையும் எடுக்க முடியும்! எல்லாவற்றையும் கடந்து நிற்கும் உண்மைப்பொருள் எக்காலத்திலும் ஒன்றுதான். அது "எல்லாவற்றையும் தாண்டி" நிற்கும் பொருள். அதனால் அறிவுக்கும் விரிவுரைக்கும் எட்டாது.

முடிவாக உறையும் உண்மைப் பொருள், மனவாக்கிற்கு எட்டாமல் நிற்பதால் இறை அன்பும் 'அனிர்வசநீயமாக' (விவரிக்க முடியாததாக) உள்ளது. எவ்விதமான வாக்குவாதத்தாலும் நிச்சயமான தீர்மானத்திற்கு வர முடியாது.

அதனால் பக்தர்கள் கூடிப்பேசும்போது, வீண் வாக்குவாதம் செய்யாமல், அவரவர்களுடைய அனுபவத்தைப் பேசிக்கொள்வார்கள். அவ்வனுபவங்கள் முற்றும் உண்மைதான். அவர்களுடைய கருத்தும் ஒரே கடவுளைக் குறிப்பதாகும். அவர்களுடைய எண்

ணங்களையும் அனுபவங்களையும் பேசிக்கொண்டு களிப் பெய்துகின்றனர். வாக்கு வாதம் செய்வதில்லை,

"எதை எட்ட முடியாமல், மனதும் வாக்கும் பிர மித்துத் திரும்பி விடுகிறதோ" அப்பொருளைக்குறித்து எவ்வாறு விவரித்துக்கூற முடியும்? விரித்துரைக்க சிறிது முயன்றாலும், அறிவுக்கு எட்டாத அப்பொருளை மற்றொருவன் எப்படி அறிந்து கொள்வான்? நிச்சய மாக முடியாததைக் குறித்து முயற்சி செய்வதில் அர்த்தம் இல்லை.

இது முடியாதது என்பது மட்டுமல்ல. அவநம் பிக்கை யுள்ளவனோடு ஒரு பக்தன் வாதாடும்போது (முக்கியமாக ஆரம்ப நிலையில்) பக்தனுடைய மனதில் தவறான எண்ணங்கள் ஏற்படக்கூடும். உண்மையை விட வெளித்தோற்றத்தை சுலபமாகக்காண முடியும். சுத்தமான காற்றைவிட சிகரட்புகை கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறது. அதனால் சுத்தமான காற்று உடம்புக்கு நல்லது என்பதையும் சிகரட்புகை கெட் டது என்பதையும் மறுத்துக்கூற முடியாது. வெளித் தோற்றம் மாயை. மறைந்திருக்கும் உண்மைப் பொருளே நிலையானது. அதனால்' தவறான நம்பிக்கை யுடையவன் சுலபமாக வாக்குவாதம் செய்துவிடுவான். அவனுக்குத் தெரிந்த "உண்மைப் பொருள்" இந்திரி யங்களுக்குட்பட்டதும், மட்டமானதும், ஆசை காட்டி மோசம் செய்வதும் ஆகும். "குட்டிப்பருவத்திலிருக் கும்" பக்தன் அவனோடு வாதம் செய்தால் அவ னுடைய நோய் பக்தனுக்கும் பரவி விடும்.

நமது வழியே நாம் போக வேண்டும். அன்பு செலுத்தாமல் அன்பை நிரூபிக்க முடியாது. நமது

வாக்குவாதத்தைவிட, நம் வாழ்க்கையின் உதாரணத்தால் அவர்களை நம்பச்செய்ய வேண்டும். அப்போது நம்மைப் பார்த்து அவர்களும் ஊக்கமுடன் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிக்கக் கூடும். பிறகு அவர்கள் வாக்குவாதமும் செய்ய மாட்டார்கள்!

இவ்வாறு பேசுவதெல்லாம் ஸாதனையாகும். அது ஒரு ஸத்-ஸங்கம். ஒரு பொருளை உண்டு என்று நிருபிக்கவோ இல்லையென்று ருசுப்படுத்தவோ அவர்கள் கூடிப்பேசவில்லை. ஒரு முடிவுக்கு வந்த கருத்துதான் அவர்களுடைய பேச்சுக்கு ஆதாரம். கடைசி அத்தியாயத்திலிருந்து இவர்கள் ஆரம்பம் செய்கிறார்கள். வாக்குவாதம் அல்லது சர்ச்சை செய்து வேறு விதமான முடிவுக்கு வர பிரயத்தனம் செய்வதில்லை. கடவுள் எல்லையில்லாப் பொருளென்றும், அவர் கணக்கற்ற நிலைகளிலிருந்து எண்ணற்ற உருவங்களில் தோன்றுவார் என்றும், அதனால் கடவுளைப்பற்றி வெவ்வேறு கருத்துக் கொள்பவருக்கும் ஒரு எல்லை கிடையாது என்றும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (எப்போதும் தெரியும்).

சூத்திரம் 76.

''பக்தி சாஸ்த்ராணி மனனீயானி தத்போதக
கர்மாண்யபி கரணீயானி.''

கருத்து :—பக்தி சாஸ்திரங்களைக் கற்று, அவைகளில் கூறப்பட்ட ஸாதன மார்க்கத்தைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும்.

ஒரு பக்தன், இறைவனையும் பக்தியையும் அவனுடைய அநுபவங்களையும் குறித்து எந்நேரமும்

பேசிப்பொழுது போக்கமாட்டான். அவனுடைய இயற்கை குணத்திற்கும், உண்மைப்பொருளை அடைவதற்கும் எது உகந்ததாகக் காணப்படுகிறதோ அவ்வகை சாஸ்திரங்களை ஆர்வத்துடன் படிப்பான். 'மனனம்' என்றால் படிப்பது மட்டுமல்ல, கற்றதைத் தெளிவாகச் சிந்தனை செய்து நன்றாக அறிந்து உணர்வதாகும்.

அவ்வாறு நன்றாக அறிந்து உணர்ந்தால் தான் பக்தி ஸாதனையையும் பழக முடியும். பக்தி சாஸ்திரங்களில் விதித்துள்ள ஸாதனையைப்பழக அவன் ஆவலாக இருப்பான். தீவிரமும் சுறுசுறுப்பும் உறுதியுமான ஸாதனை செய்யாமல் நாம் அதைப்பற்றி எவ்வளவு பேசினாலும் லக்ஷியத்தை அடைய முடியாது.

அதனால் குருதேவர், பழகிக்கொள்ளும் முறை அவசியம் என்று வற்புறுத்திக் கூறுவார். வெறும் தத்துவங்களை அதிகமாகப் பேசி பிராணனை வீணாக்க மாட்டார். வாக்குவாதத்திலும் பிரவேசிப்பதில்லை. ஆச்ரமத்தில் எத்தனை தடவையோ நான் அதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உண்மையான ஸாதகன் ஒருவன், படிப்பில்லாதவனாயினும், தாழ்மையுடன் குருதேவரிடம் தனியாகப் பேசவேண்டும் என்று விரும்பிக்கேட்ட போது, அவர் அதற்கு இசைந்து வெகு நேரம் அவன் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டு, சந்தேகங்களைத் தீர்த்து, இன்னும் சில உபதேசங்களையும் அளிப்பார். ஒரு கல்வி அறிவு பெற்ற பண்டிதர் "யோகமார்க்கத்"தைக் குறித்து 'விவாதம்' செய்ய அணுகினால், "நீங்கள் காலையில் காப்பி சாப்

பிட்டீர்களா? நான் இட்டிலி வரவழைத்துக் கொடுக்கட்டுமா? அல்லது ரொட்டி வேண்டுமா? என்று கேட்டு விஷயத்தை மெதுவாகத் திருப்பி விட்டு, பண்டிதருக்குத் தகுந்தவாறு "விவாதம்" செய்ய ஆசைப்படும் வேறு சிநேகிதரிடமோ அல்லது ஆசிரம வாசியிடமோ அவரைச் சேர்த்து விடுவார். 'பழக்கமே தான் உங்களைப் பூர்ணத்தன்மை அடையச் செய்யும்" என்பர் குருதேவர். இவ்விஷயத்தில் அதுவே கடைசி வார்த்தை.

சூத்திரம் 77.

"ஸுகதுக்கேச்சாலா பாதித்யக்தே காலே ப்ரதீக்ஷ்ய
மாணே க்ஷணார்த்தமபி வ்யர்த்தம் ந நேயம்."

கருத்து :—இருமைகளான சுகம்-துக்கம், ஆசை லாபம் முதலியவைகளைத் துறந்து விட்டதும், ஒருவன் அரை விநாடிகூட வீணாக்காமல், இறை ஒளி எப்போது பிரகாசிக்கும் என்று காத்திருக்கவேண்டும்.

இந்த மேன்மையான சாஸ்திரத்தின் முடிவுரையாக வரும் இச்சூத்திரங்கள், பக்தியோகத்தின் சாராம்சம் ஆகும். பக்தன் இருமைகளைத் துறந்துவிடவேண்டுமென்று சொல்லும்போது, கீழே சொல்லப்படும் உண்மைகளையும் நன்றாகத் தெரிந்து தான் சொல்கின்றனர்.

(1) உலகைச் சிருஷ்டி செய்து, காத்து, அழிப்பது இறைவன்.

(2) கடவுள் முற்றும் அன்பு உருவானவர்.

(3) இறைவன் இச்சை இங்கே நடை பெறுகின்றது.

(4) முற்பிறப்பில் செய்த கருமங்களினுல் இப்பிறப்பில் சுகமும் துக்கமும் விளைகின்றது.

(5) பக்தன், உலகத்துடனும் கிரியைகளிலும் அதன் பலன் (சுகம் துக்கம் முதலானவை) களிலும் ஈடுபடாமல், கடவுளிடத்து இதய பூர்வமான அன்பைச் செலுத்த வேண்டுவது ஒன்றே அவன் கடமை.

(6) வேளை வரும்போது, இறைவனே தன்னை அவனுக்கு உணர்த்துவார்.

ஒரு பக்தனுடைய வாழ்க்கை விசித்திரமானது. இவன் இறைவனுடைய பேரன்புக்கு இரையாகிருன். அவனுக்கு கடவுள் கிருபையும் ஒளியும் எப்போது வரும் என்று காத்திருக்கும் பொறுமை உண்டு. பொறுமையாக இருந்தாலும், ஸாதனையைத் தளர விடாமலும், ஒரு நிமிஷமும் வீணுக்காமலும், இறைவனைக்காண எத்தனை வருஷங்களோ ஜன்மங்களோ ஆனுலும் காத்திருக்கத் தயாராகவும் இருப்பான். சுக துக்கங்களைத் தாண்டிச்சென்று பேரானந்த மயமான கடவுள் தரிசனத்தையே நாடிச்செல்வதுதான் அவனுடைய குறிக்கோள். பொறுப்பு கடமை என்பவைகளைக் கடந்து, இறைவன் கைகளில் ஒரு ஆயுதம் என்று நினைத்து, எவ்வுயிர்க்கும்எப்போதும் தொண்டு செய்வது அவன் இயல்பு. இவ்வாறு மனதை ஒரு நிமிஷமும் தளர விடாமல் "காலேனுத்மனி விந்ததி"

(வேளை வரும்போது ஆத்மானுபூதி அடைவோம்) என்றெண்ணி பக்தியோக ஸாதனையில் ஒவ்வொரு நிமிஷமும் ஈடுபட்டு, தன்னை இறைவனுக்கே பூரண மாக அர்ப்பணம் செய்து விடுகிறான்.

சூத்திரம் 78.

"அஹிம்ஸா ஸத்யசௌச தயாஸ்த்திக்யாதி சாரித்ரயாணி
பரிபால நீயானி."

கருத்து :—அஹிம்ஸை, ஸத்யம், தூய்மை என்னும் நற்குணங்களும், கடவுள் குரு சாஸ்திரங்கள் முதலானவைகளில் நம்பிக்கை என்பனவும் காப்பாற் றப்பட வேண்டும்.

முடிவாக, பக்தன் நல்லொழுக்க முள்ளவன் என்று நாரதர் கூறுகிறார். இந்திரியங்களையும் மனத் தையும் தளரவிட்டு, தீயபழக்கங்கள் வந்து சேராமல் பக்தன் எப்போதும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எவ்வகைத் தீங்கும் நினைக்கவோ, பேசவோ, செய்யவோ கூடாது. எவ்வுயிர்க்கும் அன்பு செலுத்த வேண்டும். உண்மையைக் கடைப்பிடித்து, உடலை யும் மனதையும் சூழ்நிலையையும் தூயதாக வைத்துக் கொண்டு, இறைவன், குரு சாஸ்திரங்கள் முதலானவை வைகளில் அசையாத நம்பிக்கையுடன் இருக்கவும் வேண்டும். இவைகள் எல்லாம் எவ்வளவு முக்கிய மானவை என்பதை ஏற்கெனவே நாம் தெரிந்து கொண்டோம்.

சூத்திரம் 79.

"ஸர்வதா ஸர்வபாவேன நிச்சிந்திதைர் பகவானேவ பஜனீயஃ"

கருத்து :—எப்போதும், எவ்வகையிலும், கவலையும் சஞ்சலமும் இல்லாமல் இறைவனையே பூஜிக்கவேண்டும்.

எப்போதும் இறைவனையே சிந்தித்து இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டோம். "ஸர்வ பாவேன" என்பதை சிறிது கவனிக்க வேண்டும். கடவுளை ஐந்து விதமான பாவனையோடு பக்தன் துதி செய்கிறான் என்று பக்தி சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை. (1) சாந்தபாவம், வாத்ஸல்யபாவம், ஸக்ய பாவம், தாஸ்யபாவம், மாதுர்யபாவம் என்பவை. இறைவனை சுலபமாக தியானம் செய்ய, ஒரு குழந்தை, சிநேகிதன், எஜமானன் அல்லது காதலன் என்ற முறையில் கருதலாம்.

வெவ்வேறு பக்தர்கள் வெவ்வேறு பாவனையைக் கையாளுகின்றனர். ஆனால், (பகவத் கீதையைப் போல்) இந்நூலும் எல்லா பாவனைகளுடனும் இறைவனை அணுகும்படி நமக்குப் போதனை செய்கின்றது. இது ஒரு பெரிய சாதனை. நமது அன்பை முற்றும் இறைவனிடம் திருப்பி, அவனிடமே நிறைவேறச் செய்யவேண்டும். நம் அன்புக்குரியவர் கடவுள் ஒருவர்தான். நாம் அன்பு செலுத்தும் பொருள்களை (உதாரணமாக, குழந்தை, சிநேகிதன், முதலானவைகளை)க் கடவுளின் உருவமாகவே நினைக்கவேண்டும். 'யாக்ஞவல்க்யர்' சொன்னதைப் போல, நாம் ஆத்மா

விடத்து யாவரும் ஒன்ருக இருப்பதனுல், அவர்களிடம் அன்பு காட்டுகிரேம்.

நாம் கவலைப்படக்கூடாது என்று திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. ஒரு பக்தனிடம் கவலையும் சஞ்சலமும் காணப்பட்டால், அவனுக்கு உண்மையாக பக்தி இல்லை என்பதையே அது குறிப்பிடும். எவன் கடவுளிடத்து உண்மையான பக்தியுடன், அவருடைய கருணையையும் கிருபையையும் நம்பி யிருக்கிருனே அவன் கவலைப்படுவதே இல்லை.

சூத்திரம் 80.

“ ஸகீர்த்யமானஃ சீக்ரமேவாவிர்பவதி
அனுபாவயதிச பக்தான்.”

கருத்து :—பக்தர்கள் இறைவன் பெருமையைப் பாடும் போது, அவன் உருவெடுத்து, பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்து அனுபவிக்கச் செய்கிருர்.

இது ஒரு உறுதிமொழி. நாரதர் உரைத்த இந்த ‘பக்தி யோகத்தை'ப் பழகும் ஒருவனுக்கு, இறைவன் த்ரிசனதால் ஏற்படக்கூடிய பலனைக் குறித்து ஏதாவது சந்தேகம் இருந்தால் அதை நீக்கி விடுகிறது.

இறைவன் நாமத்தை ஜபிக்க எவருக்கும் விருப்பம் உண்டு. எவராகிலும் உங்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால், நீங்கள் அந்த இடத்திற்குப் போய் என்னவென்று பதில் கூறுவீர்கள். ஒரு பக்தன் முழு மனத்துடன் இறைவன் நாமத்தை உச்சரித்துப் பாடும் போதும், இயற்கையாகவே கடவுளும் அவ்விடம் சென்று உருவுடன் தோன்றுவார். நாம ரூபங்களில்

லாத பரம்பொருள், சர்வ சக்தி வாய்ந்த தன்மையினுல் ஒரு ரூபத்தையும் நாமத்தையும் வைத்துக் கொண்டும், எங்கும் நிறைந்திருப்பதால் நினைத்த மாத்திரத்தில் தோன்ற முடியும்.

இவ்வாறு உருவுடன் தோன்றுவது அவருடைய இச்சை என்பது வெளிப்படை. நாம் அவருடைய நாமத்தை உச்சரித்துப் பாடினுல், அவர் இச்சைப்படித் தோன்றுவார். சூத்திரத்தின் இரண்டாவது பாகம் இதை இன்னும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பொதுவாக பக்தர்கள், இறைவனை அணுகுவதற்கு, ஒரு பெயரையும் ரூபத்தையும் வைத்துக் கொள்கிருர்கள். கடவுளும் அதற்கு இணங்கி கருணையுடன் அப்பெயரும் ரூபமும் பெற்றுத் தோன்றுவார். 'அனுபாலயதி'—அவருடைய தோற்றத்தைக் கண்டு அனுபவிக்க அவரே உதவி செய்கிருர். அவருடைய உருவத்தைப் 'பார்ப்பதற்கும்' இறைவனைத்தான் நம்பியிருக்க வேண்டும்.

"ந து மாம் சக்யஸே த்ருஷ்டும் அனேனைவ ஸ்வசக்ஷுஷா
திவ்யாம் ததாமி தே சக்ஷுஃ பச்யமே யோக மைச்வரம்."

('நீ இந்த ஊனக் கண்களைக் கொண்டு என்னைப் பார்க்க முடியாது. நான் உனக்கு ஞானக் கண்ணை அளிக்கிறேன். இப்போது பார்' என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனிடம் கூறினுர்.) இவ்வுலகிலும் அதற்கு அப்பாலும் (உண்மைப் பர வெளியிலும்), அவர்தான் நமக்கு வழி காட்டவும் வேண்டும். 'அனுபாலயதி'. நாமும் தெய்வீக இயல்பை அனுபவிக்கச் செய்கிருர். அப்போதுதான், விரித்துரைக்க முடியாம

விருந்தாலும், இறைவன், பேரானந்தமும், சாந்தியும் நிரந்தரமான பெருவாழ்வும் கொடுக்கவல்ல தெய்வீக இயல்பு வாய்ந்த ஒரு பெரிய ஊற்று என்று நாரதர் அனேக தடவை சொன்னதை உணர முடியும்.

சூத்திரம் 81.

" த்ரி ஸத்யஸ்ய பக்திரேவ கரீயஸீ பக்திரேவ கரீயஸி: "
கருத்து :—மூன்று உண்மைகளில் பக்தி மேன்மையானது.

இறைவன் தரிசனமும் அனுபவமும் பெறுவதற்கான, ஞானயோகம் பக்தியோகம் ராஜயோகம் எனும் மூன்று மார்க்கங்களில் பக்தி மார்க்கமே மேன்மையானது. ஏனென்றால், முன்பு சொன்னதுபோல், இது இடையூறுகள் இல்லாமலும், இறைவன் கருணையினால் கைகூடுவதும் ஆகும். வேதங்களில் கூறியுள்ள நித்திய நைமித்திக கருமங்களைச் செய்வதோடு நிறுத்திக் கொள்வதை விட, இது மேன்மையானது.

வேறு மார்க்கங்களும் 'உண்மை'யானவைதான் என்று நாரதர் ஒப்புக் கொள்கிறார். என்பதை கவனிக்க வேண்டும். அவைகளைக் குறைவாக மதிப்பிடவோ அல்லது நிந்திக்கவோ செய்யவில்லை. அம்மூன்று மார்க்கங்களிலும் பக்தியே சிறந்தது. ஞானயோகம், ராஜயோகம், கர்மயோகம் எனும் மூன்று வழிகளிலும் பக்தி ஒரு முக்கியமான அங்கமாக அமைந்தால், லக்ஷியத்தை சுலபமாக எட்டிவிடலாம். பக்திக் கலப்பில்லாத ஞானம் அல்லது ராஜயோக மார்க்கங்களையே இங்கு குறிப்பிடப்பட்டது.

ஸூத்திரம் 82.

"குணமஹாத்ம்யா ஸக்தி ரூபாஸக்தி -
பூஜாஸக்தி - ஸ்மரணஸக்தி - தாஸ்யாஸக்தி -
ஸக்யாஸக்தி - வாத்ஸல்யாஸக்தி - காந்தாஸக்தி -
ஆத்மநிவேதனஸக்தி - தன்மயாஸக்தி - பரம
விரஹாஸக்தி - ரூபஏகதாஅபி ஏகதசதாம் பவதி."

கருத்து :—பக்தர்களிடம் இறை அன்பு அடிப்படையில் ஒன்ருகக் காணப்பட்டாலும், அது கீழே கூறப்படும் பதினொன்று விதமாக உருவெடுக்கும் (1) இறைவன் பெருமையையும் பண்பையும் குறித்துப் பேசுவதற்கும் கேட்பதற்கும் ஆவலோடு இருப்பது. (2) இறைவனுடைய உருவத்தில் ஆசை வைப்பது. (3) பூஜை அல்லது பிரார்த்தனை செய்வதில் விருப்பம் கொள்வது. (4) எப்போதும் நினைத்து சிந்தனை செய்வதிலும் ஆசை வைப்பது. (5) இறைவனுக்குப் பணி செய்வதை விரும்புவது. (6) கடவுள் இவனுடைய தோழனாக நினைத்துப் பழகுவதை விரும்புதல். (7) ஒரு பக்தன், இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் நினைத்து மகிழுவதை விரும்புவது. (8) கடவுளைத் தன் குழந்தையாகவே நினைப்பதை விரும்புதல். (9) பூரணசரணாகதி செய்வதை விரும்புவது. (10) இறைவனோடு இரண்டறக் கலந்து 'தன்மயம்' ஆவதற்கு ஆசை வைத்தல். (11) இறைவனை விட்டுப் பிரிந்திருப்பதால் ஏற்படும் பெரும் துயரத்தை அனுபவிக்கவும் ஆசைப்படுதல்.

இது தெளிவாகத் தெரிகின்றது. இந்த பாவனைகள் எல்லாம் அனுபவிக்கக் கூடியவைகளே. இவ்வழி

கள் எல்லாம் இறைவனிடத்திலேயே சேர்த்து விடுகின்றன. சமயத்திற்குத் தக்கவாறு இந்த பாவனைகளை நாம் கையாள வேண்டும் என்று நாரதர் வேறு ஒரு இடத்தில் கூறியுள்ளார் என்பதைக் கவனிக்க வேண்டும். வேறு விதமாகச் சொன்னால், நம் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் எல்லாமும் ஒன்றாக இணைத்து இறைவனிடம் சேர்க்கவேண்டும் என்று சொல்லலாம்.

அதற்காகவே,

"த்மேவ மாதாச பிதா த்வமேவ
த்வமேவ பந்துச்ச ஸகாத்வமேவ
த்மேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ."

(தேவர்களுக்கும் இறைவனே! நீயே என் தாயும் தந்தையும், சுற்றமும், சிநேகிதனும், கல்வியும், செல்வமும் - எல்லாம் நீ ஒருவனாகவே இருக்கிறாய்) என்று பக்தன் பிரார்த்தனை செய்கிறான்.

இதுவே லக்ஷியம். நமது முக்கியமான கடமையும் இதுதான். மனித வாழ்க்கையின் கருத்தும், நோக்கமும் இதுவே.

பக்தியை விளக்கமாக எடுத்துரைத்து, தெளிவான ஒரு உறுதி மொழியுடன் நாரதர் பூர்த்தி செய்கிறார்.

சூத்திரம் 83.

"இத்யேவம் வதந்தி ஜனஜல்ப நிர்பயா:
ஏகமதா: குமார வ்யாஸ சுக சாண்டில்ய கர்க
விஷ்ணு கௌண்டின்ய சேஷோத்வாருணி
பலி ஹனுமத் விபீஷணாதயோ பக்தாசார்ய:"

கருத்து:—மக்கள் பிதற்றும் குணதோஷங்களுக்கு அஞ்சாத கீழ்கண்ட பக்தி ஆசாரியர்கள், இது இவ்வகையானது என்று ஏகமனதாக உரைத்துள்ளனர். சனத்குமாரர்கள், வியாஸர், சுகர், சாண்டில்யர், கர்கரிஷி, விஷ்ணு, கௌண்டில்யர், சேஷன், உத்தவர், அருணி, பலி, ஹனுமான், விபீஷணர், முதலானவர்.

இத் தருணத்தில் புராதனமான ஒரு நல்ல பழக்கம் கையாளப்படுகிறது. பெரிய ஞானிகளும் தபசிகளும் 'இது என்னுடைய கருத்து', 'நான் உறுதி கூறுகிறேன்' என்று உபதேசம் செய்வதில்லை. ஆனால் 'நான் இதை அவரிடமிருந்து கேள்விப்பட்டேன்' என்று எப்போதும் சொல்லி முடிப்பார்கள். இது கர்வம் இல்லாதிருக்க ஒரு பாதுகாப்பாகும்.

நம்பிக்கையில்லாத தற்காலத்து மனிதன் அறிவின்மையால் பக்தியையும் பக்தர்களைக் குறித்தும் பரிகாசம் செய்வான் என்று எவ்வளவு முன் யோசனையுடன் நாரதர் சொல்லி விட்டார் பாருங்கள். ஒரு தகப்பனுக்குப் பிறந்த மகன் என்று இவன் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொண்டாலும், கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு ஒரு பிரமாணம் வேண்டும் என்று சொல்வான். அவன் விக்ரஹ ஆராதனையை இகழ்ந்து பேசுவான். ஆனால் ஏதோ ஒருவருடைய

படம் வரைந்த ரூபாய் நோட்டுகளை வணங்கியும், அவனுடைய தேசாபிமானத்தைக்குறிக்கும் ஒரு கொடிக்கு மரியாதை செலுத்தியும், மேஜையின் மேல் வைத்த தனது மனைவியின் புகைப்படம், அவள் உயிரோடு வாழ்வதை அனுபவிக்கச் செய்வதோடு அவனுடைய இதயத்துக்கு ஊக்கமும் அளிக்க வல்லது என்னும் அசையாத நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகிருன். ஒரு யோகியைப் பார்த்து "பெயரைச் சொல்வதில் என்னபயன்" என்று பரிகாசம் செய்வான். ஆனுல் 'மடையன்' என்று அவனை கூப்பிட்டால் கோபம் வந்து விடும். ஒரு இனிப்பான பண்டம் அல்லது ஊறுகாயைக் குறித்துப் பேசினுல், நாவில் நீர் ஊறுவதை இவனுல் தடுக்க முடியாது. ஆதிகாலத்தில் சிருஷ்டி செய்த ஆணும் பெண்ணும் உபயோகித்ததைப்போல உடம்பும் அவயவமும் படைத்து, சாப்பிடவும், சுவாசமும் செய்யவும் அதே உடம்புத் துவாரங்களை உபயோகிப்பதற்கு இவனுக்கு வெட்கமாக இல்லா விட்டாலும், பக்தனை ஒரு பழங்காலத்து மனிதன் என்று சொல்வான்.

உண்மையான பக்தன் இவ்வாறு குறை கூறுபவர்களுக்கு அஞ்சவே மாட்டான். தைரியமாக உண்மையை விளம்பரம் செய்கிருன். இவன் அன்பு நிறைந்த உள்ளத்துடன் பக்திமார்க்கத்தில் தைரியமாகச் செல்லும்போது, பாதையில் அன்பு ஒளி வீச, அன்பே இவன் கையைப்பிடித்து முன்செல்ல, அன்பே இவன் சுமையைக் குறைத்து, இவனுடைய லக்ஷியத்தை அடையவும் உதவி செய்கிறது.

நாமும் பக்திமார்க்கத்தைக் கடைப்பிடித்து, இப் பிறப்பிலேயே ஸ்ரீ குருதேவரின் பாதகமலங்களின் அருளால் இறைவன் தரிசனமும் மெய்ஞ்ஞான அனுபூதி யும் பெறுவோமாக.

சத்குருபகவான்-கி-ஜே!

ஸூத்திரம் 84.

"ய இதம் நாரதப்ரோக்தம் சிவானுசாஸனம்
விச்வஸதி ச்ரத்ததே ஸ பக்திமான் பவதி ஸ
ப்ரேஷ்டம் லபதே ஸ ப்ரேஷ்டம் லபதே இதி."

கருத்து:—நாரதர் உரைத்த இவ்வுன்னதமான போதனை எவனுக்கு விசுவாசமும் நம்பிக்கையும் இருக்கிறதோ அவன் பக்தி நிறைந்தவனாய் அன்பே உருவான கடவுளைத் தரிசித்து அவனோடு சேர்ந்து விடுகிறான்.

இது பலச்ருதி. இப்போது நாரதர் பக்தியின் ஆதி குருவான சிவபெருமான் விதித்தபடி தேவரிஷி நாரதர் தெளிவாக எடுத்துரைத்த இவ்வுன்னதமான உப தேசங்களை எவன் விசுவாசத்துடன் நம்பிக்கையும் வைத்துப் பழக்கம் கையாளுகிறானோ அவன் இறை வனை 'அன்பு நிறைந்த நாயக' உருவமாகக்கண்டு களித்து அவனோடு ஒன்றாகி விடுகிறான்.

இறைவன் வாழ்க!

நாரதமஹரிஷி வாழ்க!

யோகிகள், தபசிகள், பக்தர்கள், பாகவதர்கள்,
மஹாத்மாக்கள், எல்லோரும் வாழ்க!

ஓம் தத் ஸத்! ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி:

"ஓம் தத் ஸத் ப்ரம்மார்ப்பண மஸ்து."

பிழை திருத்தம்

—:—

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
21	26	என்று	என்றும்
29	16	இன்றும்	இன்னும்
44	26	நமது	(நமது)
52	22	உண்மை விரதம்	உண்ணு விரதம்
76	24	ஸாந்திவ்ய	சாண்டில்ய
115	7	‘நாம் என்பதற்கு முன் [illegible]?’	‘நாம் எப்போது என் பதை சேர்த்துக் கொள்ள வேண்டும்
126	11	வேளையில்	வேலையில்
133	27	சாம்பல மீதியாக-	சாம்பல் மீதியாகாத
145	22	தவேத	ததேவ
149	17	பாடுங்கள்	பாருங்கள்.
144	26	தொடர்பை-	கெடுதலை
156	13	அவன்	அவள்
156	14	அவனே	அவளே
156	14	ஆவான்	ஆவாள்.
157	9	போக க்ஷேமம்	யோக க்ஷேமம்
162	25	டைரைட்டர்	டைப்ரைட்டர்
168	15	இருவகைக் கரை யேற்றம்.	இருவரைக் கரை யேற்றும்
171	20	அவ	அவர்
174	8	யானமவைஷ.	யாமைவைஷ.
176	19	வந்தமானம்	வர்தமானம்
178	11	உணவாகிய	உணர்வாகிய
189	7	சித்தா	சிந்தா
212	10	உள்ளே	உள்ள

வேண்டுகோள் . . .

சுவாமி சிவானந்தருக்கு இணங்கிய முறையில், இராயபுரம் தெய்வீக வாழ்க்கை மூலச்சங்க (*Divine Life Society*) த்தின் ஆதரவில் புத்தகங்கள் வெளியிட விரும்புவோர், பொருளுதவி செய்ய விரும்புவோர் அடியிற் காணும் முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

DIVINE LIFE SOCIETY,
21, Mannarswamy Koil Street.
ROYAPURAM.

Telephone : 51397

Paari Achakam, Madras-1.